# புரட்சியாளர் பெரியார்

நெ.து. சுந்தரவடிவேலு



# புரட்சியாளர் பெரியார்

நெ. து. சுந்தரவடிவேலு
முன்னாள் துணை வேந்தர்
சென்னைப் பல்கலைக் கழகம்

எஸ். சந்த் அண்டு கம்பெனி லிமிடெட்
152 அண்ணா சாலை சென்னை-600 002

**PURATCHIYALAR PERIYAR**

N. D. SUNDARAVADIVELU

S. CHAND & COMPANY LTD.
152 Anna Salai Madras 600 002
H. O.: NEW DELHI 110 055

எஸ். சந்த் அண்டு கம்பெனி லிமிடெட்
தலைமை அலுவலகம்: இராம் நகர் புது தில்லி 110 055

கிளைகள்:

புது தில்லி 110 002

| | | | |
|---|---|---|---|
| சென்னை: | 600 002 | கல்கத்தா: | 700 012 |
| பெங்களூர்: | 560 009 | பம்பாய்: | 400 001 |
| அய்தரபாத்: | 500 001 | நாக்பூர்: | 440 002 |
| கொச்சின்: | 682 011 | லக்னோ: | 226 001 |
| பாட்னா: | 800 004 | ஜலந்தர்: | 144 008 |

© எஸ். சந்த் அண்டு கம்பெனி லிமிடெட்—1979

மறு பதிப்பு—1980

விலை ரூ. 12·50

அச்சிட்டோர்:
டயோசீசன் அச்சகம், சென்னை–600 007—1979

# UNIVERSITY OF MADRAS

Prof. G. R. DAMODARAN,
B. Sc. Engg., C. Engg., F. I. E. E. (Lond.),
F. I. Nuc. E. (Lond.), F. I. E. (Ind.),
*Vice-Chancellor.*

UNIVERSITY BUILDINGS,
CHEPAUK, MADRAS-600 005.

## அணிந்துரை

தமிழக மெங்கும் பெரியார் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாகக்கொண்டாடும் நேரத்தில், சென்னைப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் 'புரட்சியாளர் பெரியார்' என்ற பெயரில், தமிழ் மக்களுக்கு ஓர் அரிய நூலை எளிய நடையில் உருவாக்கியிருப்பது வரவேற்கத்தக்க ஒரு நற்பணி.

இந்நூல் பெரியார் அவர்கள் பிறந்தபோதும் அதற்கு முன்பும் நிலவிய சமுதாய, அரசியல், பொருளாதாரச் சூழ்நிலைகளை விளக்கி, சமுதாயத்தில் அன்றிருந்த குறைபாடுகளை எடுத்துக் காட்டி, அவைகளை அகற்ற பெரியார் மேற்கொண்ட பணிகளை யும், போராட்டங்களையும் நன்கு விளக்குகின்றது. பெரியார் அவர்களோடு பல ஆண்டுகாலம் நெருங்கிய தொடர்புகொண்டு, அவருடைய அன்பையும் பெற்ற திரு. நெ. து. சு. அவர்கள் பெரி யாரின் தனித்தன்மைகளைத் தனியாக ஓர் இயலில் நம் மனதைக் கவரும் வண்ணம் எடுத்துச் சொல்கிறார்.

பெரியார் அவர்களின் பணிகள் பொதுவாக இந்திய நாட்டிலும், குறிப்பாகத் தமிழகத்திலும் என்னென்ன விளைவுகளை ஏற்படுத்தி யுள்ளன என்பதனை நூலின் இறுதியில் தெளிவாக எடுத்துரைக் கிறார் திரு. நெ. து. சு. அவர்கள்.

இந் நூலாசிரியர் பெரியாரின் அயல்நாட்டு அனுபவங்களைப் பற்றியும், வியப்பூட்டும் கிளர்ச்சிகளைப்பற்றியும் தெளிவாக எடுத்து விளக்கியிருப்பது ஒரு சிறப்பு. பெரியார் அவர்கள் இந் நாட்டு அரசியல், சமுதாய வளர்ச்சியில் மாற்றங்களையும், விறு விறுப்பையும் ஊட்டிய ஒரு வியக்கத்தகு ஆற்றல் எனலாம்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'பெரியார் அறக்கட்டளைத் திட்டத்'தில் திரு. நெ. து. சு. அவர்கள் கடந்த ஏப்ரல் திங்களில், 2,3,4ஆம் நாட்களில் நிகழ்த்திய மூன்று சொற்பொழிவுகளையும் அப்போது நேரில் கேட்டு மகிழ்ந்தவர்கள், அச்சொற்பொழிவு களின் விரிந்த வடிவமாக வெளிவந்துள்ள இந்த நூலைக் கண்டு பெரிதும் போற்றுவர்.

நூல் முழுதும் சொற்பொழிவு நடையிலேயே அமைந்திருப்ப தால், யாவரும் படித்து சுலபமாகப் புரிந்துகொள்ளத்தக்கதாக உள்ளது. திரு. நெ. து. சு. அவர்கள் தமக்கே உரிய இந்த எளிய நடையால் தமிழ் மக்களைக் கவர்ந்து அவர்கட்குத் தேவையான பொது அறிவை ஊட்டி வருபவர்.

இந்தப் பணியின் சிறப்பினை உணர்ந்து நான் அவரை பெரிதும் பாராட்டுகிறேன். தமிழ் மக்கள் இந் நூலைப் பெரிதும் மகிழ் வோடு வரவேற்றுப் படித்துப் பயன்பெறவேண்டும் என்றும் விரும்பு கிறேன்.

20–9–1979

# நூன்முகம்

பெரியது; உலகம் பெரியது; நாம் வாழும் உலகம் பெரியது. இதன் வயது என்ன? சில நூறு ஆண்டுகளா? இல்லை; அதற்கு மேலும், சில ஆயிரம் ஆண்டுகளா? அதுவும் குறைந்த மதிப்பீடு. நில உலகின் வயதை ஆயிரக்கணக்கில் அல்ல; பல இலட்சக்கணக்கில் மதிப்பிடுகிறார்கள். எத்தனை இலட்சம் என்பதில் அறிஞர்களுக் கிடையே உடன்பாடு இல்லை. உலகம் தொன்மையானது என்பது நமக்குப் போதும்.

தொன்மையான உலகில் உயிர் வாழும் வகைகள் சிலவா? இல்லை. பலவா? இல்லை. எத்தனையோ! புல்லாய், பூடாய், புழுவாய் தலை நீட்டிய உயிர்வகைகள், பரிணமித்து, பரிணமித்து, மக்கள் நிலைக்கு வந்துள்ளதைக் காண்கிறோம். புல் பூண்டுகள் ஓரறிவோடு கிடக்க, மாக்கள் ஐந்தறிவோடு இருக்க, மனித இனம் மட்டுமே, ஆறறிவு நிலைக்கு வளர்ந் துள்ளது. விலங்குகளுக்கிடையில் விலங்காக வாழ்ந்த மனிதன், மனித இறைச்சியையும் உண்டு பிழைத்த காட்டுமிராண்டி, விலங்குகளை வேட்டையாடி பச்சையூணைத் தின்று கிடந்த விலங்கின் பங்காளி, இன்று எவ்வளவிற்கு வளர்ந்திருக்கிறான் என்பதை நொடிப்பொழுது நினைவுகூர்வோம்.

அருள் ஏதும் பெறாத சாதாரண மனிதர்கள் இருவர்— சோவியத் விண்வெளி வீரர்கள் இருவர் எதைச் சாதித்துக் காட்டி னார்கள்? விண்வெளியில், தொடர்ந்து நூற்று நாற்பது நாட்கள், விண்கலத்தில் சுற்றி வந்து ஆய்வுகளைப் பதிந்துகொண்ட பிறகு, பத்திரமாக, சோவியத் மண்ணில் வந்து இறங்கினார்கள். மானுட அறிவும் நுண்திறனும் ஆண்மையும் ஆற்றலும் சோர்வுபடாமையும் எத்தகைய 'அற்புத'ச் சாதனையைக் கொடுத்துள்ளது பார்த்தீர் களா? 'மானுடம் புல் அல்ல' என்று பாவேந்தர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடினது மிகையல்ல.

மிருக நிலையிலிருந்து வானோர் நிலைக்கு வளர, மக்கள் இனம் எடுத்துக்கொண்ட காலம் குறுகியது அல்ல; நீண்டது; மிக மிக நீண்டது. பல இலட்சம் ஆண்டுகள் என்று அறிஞர்கள் வாதிடுகின் றார்கள்..

இந்த இலட்சக்கணக்கான ஆண்டுகளில், உலகில் பிறந்தவர்கள் எத்தனையோ ஆயிரம் கோடி பேர்கள் ஆவார். மறைந்தவர்களும் கணக்கில் அடங்கார். இன்று இருப்போர் 400 கோடி பேர்களாவார்.

எண்ணி முடியாத கோடி கோடி மக்கள் பிறந்து, இருந்து, மறைந்தார்களே! அவர்களுடைய கதை என்ன? ஒன்றுமில்லை; ஆம், சொல்ல ஒன்றுமில்லை. யார் வயிற்றிலோ பிறந்தார்கள்; எவர் உழைப்பிலோ பிழைத்தார்கள்; எப்படியோ எங்கேயோ மறைந்தார்கள். வெறும் வேடிக்கை மனிதர்கள் எத்தனையோ கோடி. அவர்கள் இருந்ததால் உலகுக்கு நன்மை இல்லை; மறைந்ததால் இழப்பும் இல்லை.

மனித மா கடலின் நடுவே, சிலர் மட்டுமே ஒளியோடு வாழ்ந்தது, ஒரு விந்தை; சிறப்பாக வாழ்ந்தார்கள்; சிந்தனையைப் பயன் படுத்தி வாழ்ந்தார்கள்; அத்தகையோர் சிந்தனையை தன்பால் குவிக்காமல், சுற்றி வாழும் மக்கள்பால் பாய்ச்சினார்கள். அவர்கள் நிலையை உணர்ந்தார்கள். பிறர் நோயை தன்னோயாகக்கொண்டார்கள். நோய் நாடி, முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடித் தொண்டாற்றினார்கள். பிறர்க்கென வாழும் தொண்டில், பருவம் நாடிக் காத்திராமல், சுகம் தேடிச் சோம்பியிராமல், ஏச்சையும் பேச்சையும் துச்சமாகத் தள்ளிவிட்டு, கருமமே கண்ணாயிருந்து, செயற்கரிய செய்த பெரியார் சிலரையே மக்கள் இன வரலாற்றில் காணலாம். அத்தகைய, 'தனக்கென முயலாது, பிறர்க்கென முயலுனர் உண்மையால் உண்டாலம்ம இவ்வுலகம்' என்னும் பழந்தமிழ் பாடல், மாற்றுக்குறையாத உண்மை. செயற்கரிய செய்த பெரியோர், மறைந்தும் மறையாது, எண்ணற்றோர் உள்ளங்களில், உணர்வுகளில், கருத்தோட்டங்களில் இரண்டறக்கலந்து வாழ்கிறார்கள்.

எப்போதோ ஓர் முறை, எங்கோ ஓரிடத்தில், தோன்றும் வழிகாட்டிகளில் ஒருவர், நம்மிடையே தோன்றினார்; நீண்ட நெடிய வாழ்வு வாழ்ந்தார்; தொண்டு நிறைந்த, இடையறாத தொண்டு செறிந்த, வாழ்நாள் முழுவதும் எதிர்நீச்சல் தொண்டில் திளைத்த, பெருவாழ்வு வாழ்ந்தார். தொண்டு செய்து பழுத்த பழமாக விளங்கிய நம் தந்தை, 'அறிவில் வயதில் பெரியார்; வாய்மைப் போருக்கு என்றும் இளையார்' என்பது உலகறிந்த உண்மை. 'அவர் மண்டைச் சுரப்பை உலகம் தொழும்' என்பதும் உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

தந்தை பெரியார் ஈ. வே. ராமசாமி நம்மோடு வாழ்ந்தவர். நம்மில் ஒருவராக வாழ்ந்தவர்; நம்மிலிருந்து விலகி உயர அமர்ந்து

வாழ மறுத்தவர். நம்மில் கோடானு கோடி மாந்தர் புனிதமாகக் கருதும் பலவற்றைச் சாடிச்சாடி வாழ்ந்தவர். அதனால் ஏற்பட்ட எரிச்சல் காரணமாக, 'பெரியார் நமக்காகவே வாழ்ந்தவர்'; அவர் தன்னுடைய ஆதாயத்திற்காக எதையும் உடைக்காத, 'பொதுநலப் புரட்சியாளர்' என்பதை பலர் மறந்துவிட்டிருக்க லாம்; பல்லாயிரவர் பெரியாரின் பெருமையினையும் அருமையினை யும் இன்று முழுமையாக உணராமல் இருக்கலாம். இருப்பினும், மக்கள் இன நோய்களுக்கு மாமருந்துகளாக பெரியாரின் கருத்து களும் அறிவுரைகளும் பயன்படும் என்பது காலம் காட்டக் காத் திருக்கும் உண்மை ஆகும்.

'தந்தை பெரியார், ஈ. வே. ராமசாமியைப் போன்ற ஒரு மாமனிதர், நம்மிடையே வாழ்ந்தார்; தொண்ணூற்று அய்ந்து வயது வரை வாழ்ந்தார்; கடைசி மூச்சுவரை, சூறாவளியெனச் சுற்றி வந்து, புரட்சிச் சிந்தனைகளை பேராறுகளாகப் பாய்ச்சி வந்தார்; வாழ்க்கையின் பல கூறுகளுக்கும் பாடம் சொல்லித் தந்த பேராசானாக விளங்கினார்' என்பதை இனி வரப்போகும் தலை முறைகள் நம்ப மறுத்தால், வியப்பில்லை. அத்தனைப் பெரிய சிந்தனையாளராகவும் சாதனையாளராகவும் இரண்டிற்கும் மேலான பண்பாளராகவும் வாழ்ந்த, பகுத்தறிவுப் பகலவன், தன்மான இயக்கத் தந்தை, சமத்துவச் சுடரொளி, பெரியார் ஈ. வே. ராமசாமியாரின் நூற்றாண்டு விழாவினை இப்போது கொண்டாடிக்கொண்டிருக்கிறோம். எந்த தலைவருக்கும் கிடைக் காத சிறப்பினை பெரியாருக்குச் செய்ய தமிழ்நாடு அரசு முன் வந்துள்ளது. ஓர் ஆண்டு முழுவதும் பெரியாருக்கு நூற்றாண்டு விழா எடுக்க முடிவு செய்து, ஒவ்வொரு திங்கள் ஒவ்வோர் மாவட்டத் தலைநகரில் சிறப்பாக விழா எடுக்கிறார்கள். அந்த வரலாற்றுச் சிறப்புடைய ஆண்டில் பெரியார் அறக்கட்டளைச் சொற்பொழிவின் முதல் தொடரினைத் தொடங்கி வைக்கும் பெரும் பேற்றினை, சென்னைப் பல்கலைக் கழகம், எனக்கு வழங்கி யுள்ளது. இச் சிறப்பினை நல்கிய என்னுடைய தாய்ப் பல்கலைக் கழகத்திற்கு என் உளமார்ந்த நன்றியினைப் படைக்கிறேன்.

'ஆண்டுதோறும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பெரியார் அறக்கட்டளை சொற்பொழிவுகள்' நிகழ்த்துவதற்கு மூலதன மாக, பத்தாயிரம் ரூபாய் கொடுப்பதென்று சுயமரியாதைப் பிரசார நிறுவனம் முடிவுசெய்தது. திராவிடக் கழகப் பொதுச் செயலாளரும், 'விடுதலை' நாளிதழின் ஆசிரியருமான, மதிப்பிற் குரிய தோழர் கி. வீரமணி அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக இருந்த நான், 17–9–1973 அன்று சென்னை பெரியார் திடலில் நடந்த பெரியார் பிறந்தநாள் விழாவின்போது, தந்தை பெரியாரிடமிருந்து பத்தாயிரம் ரூபாய்களுக்கான காசோலையை நேரில் பெற்றேன்.

என் துணை வேந்தர் பதவிக் காலத்தில் ஏற்பட்ட பல்வேறு அறக் கட்டளைகளின் விதிமுறைகளைப்போல், இக்கட்டளையின் விதிகளும் அமைவதில் சிறிது தயக்கம் ஏற்பட்டது. அதனால் தாமதம் ஏற்பட்டது. இல்லையேல், பெரியார் தொடர் சொற்பொழிவுகள், என் பதவிக் காலத்திலேயே தொடங்கியிருக்கும். அந்நிலையில், இச்சொற்பொழிவின் முதல் பொழிவை நான் ஏற்றுக்கொண்டிருக்க முடியாது. இப்பெருமை, மற்றோர் தக்காரைச் சேர்ந்திருக்கும். பொழிவு ஆங்கில மொழியில் அமைந்திருக்கவும்கூடும்.

விதிமுறைகள்பற்றி எப்படியோ முளைத்த தயக்கமும் தவக்கமும் பெரியார் சொற்பொழிவுத் தொடக்கத்தை அம் மாமனிதரின் நூற்றாண்டு விழாவோடு இணைத்துவிட்டது.

பள்ளியறியாத சிறிய பட்டிக்காட்டில் பிறந்த எனக்கு கல்லூரிப் படிப்பின்மேல் நாட்டமும் ஆர்வமும் ஊட்டி வெற்றிபெறச் செய்தவர், தந்தை பெரியார். என்னை மட்டுமா படிப்பாளியாக்கினார்? இலட்சக்கணக்கான மக்களை பெரும் பட்டங்கள் பெறும் அளவிற்கு உந்தியவர், பள்ளிப் படிப்பையும் முடிக்காத பெரியார் ராமசாமியே ஆவார்.

அறுபது வயதுவாக்கில் வாழும் நாம் அனைவரும் பிறந்தது எந்தச் சூழலில்? எட்டி இருந்து, இணையாது வாழ்ந்த, தனித் தனிச் சாதிப்பற்று சூழலில் வளர வேண்டியவர்களாக இருந்தோம். பெரிய சாதி என்னும் உணர்வில் முன்னணியில் இருந்த சிறிய தொரு பிரிவில் பிறந்து வளர்ந்தவன் நான். அப்படிப்பட்ட என்னை இளமைப் பருவத்திற்கு முன்பே ஆட்கொண்டு, புதிய மனிதனாக்கி விட்டார். எந்த அளவு புதிய மனிதனாக்கிவிட்டார், தந்தை பெரியாரே கூறட்டும்.

‘சாதியில் சைவராயிருந்தும் எந்தத் துறையிலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் சாதி உணர்ச்சியைக் காட்டினார் என்று சொல்ல முடியாத அளவுக்கு நடந்து வந்திருக்கிறார்’ என்றும் நான் சொல்லக் கூடும்.

‘அறிவுத்துறையில் பெரும் பகுத்தறிவு வாதியாகவும் சமுதாயத் துறையில் உண்மையாகவே சமதர்ம வாதியாகவும் இருந்து வந்திருக்கிறார்.’

இப்படி 1972இல் பாராட்டுவதற்கு ஆறு ஆண்டுகள் முன்ன தாகவே, பெரியார், ஈரோடு சிக்கையா கல்லூரியில், நெ. து. சுந்தரவடிவேலு பகுத்தறிவுப் போட்டிப் பரிசுகள் வழங்க அறக் கட்டளையை நிறுவினார். இச்சிறப்பினை என் ஒருவனுக்கே பெரியார் செய்துள்ளார் என்பதை இப்போது சொல்லாமல் எப்போது சொல்வது?

நெ. து. சுந்தரவடிவேலு, பகுத்தறிவு வாதியாகவும், உண்மை யான சமதர்ம வாதியாகவும் வாழ்வதன் பெருமை எனக்கா உரியது? இல்லை. தந்தை பெரியாருக்கும் அவருடைய தன்மான இயக்கத்திற்கும் உரியதாகும்.

தன்மான இயக்கத்தின் முதல் தலைமுறையினன் என்னும் உரிமை யாலும், கட்சி தாவாத தன்மான இயக்கத்தவன் என்னும் தகுதி யாலும் நான் சொல்லிக்கொள்ள விரும்புவது ஒன்றே ஒன்று. அது என்ன? தொடக்க கால சுயமரியாதை இயக்கத்தின் சாதாரணத் தொண்டரின் கனவிலும் சாதிப்பற்று எந்நேரத்திலும் பளிச்சிட்ட தில்லை. மனித இனத்தைச் சேர்ந்தவர்கள், பகுத்தறிவுப் பெருங் குடும்பத்தவர்கள், என்னும் உணர்வே எங்கள் மூச்சாகும்.

'ஓர் புரட்சியாளரின் மலர்ச்சி' என்ற தலைப்பில், 2, 3, 4–4–'79 நாட்களில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினேன். முதல் நாள் சொற்பொழி விற்குத் துணை வேந்தர் பேராசிரியர் ஜி. ஆர். தாமோதரன் தலைமை தாங்கிச் சிறப்பித்தார். அவருக்கு நன்றியுடையேன். அடுத்த இரு நாட்களும் தலைமைதாங்கிய பேராசிரியர் சி. ஏ. பெருமாள் எனது நன்றிக்கு உரியவர். சொற்பொழிவுக் கூட்டங் களுக்கு வேண்டிய ஏற்பாடு செய்த பதிவாளர் திரு. C. K. குமார சாமிக்கும் நன்றி. அதை வெளியிட்டுக்கொள்ள உரிமை தந்த சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு நன்றியுடையேன்.

அச்சொற்பொழிவுகளின் அடிப்படையில் உருவானது 'புரட்சி யாளர் பெரியார்' என்னும் இந்நூல். இந்நூலை நன்முறையில் வெளியிட முன்வந்த எஸ். சந்த் அண்டு கம்பெனியாருக்கும் அதன் நிர்வாகி திரு. M. D. கோபாலகிருஷ்ணனுக்கும் தமிழ் மக்களும் நானும் பெரிதும் நன்றியுடையவர்கள் ஆவோம்.

இந்நூலுக்கான குறிப்புகளை, தகவல்களை, செய்திகளைச் சேகரிக்க உதவியது சென்னை பெரியார் திடலில் அமைந்துள்ள பெரியார் ஆராய்ச்சி நூலகமாகும். வேண்டிய உதவிகளைத் தாராளமாகக் கொடுக்கும்படி ஆணையிட்ட திராவிடக் கழகப்

பொதுச் செயலாளர் திரு. கி. வீரமணிக்கு பெரிதும் நன்றி யுடையேன்.

உரிய செய்திகள் இங்கிங்கே உள்ளன என்று அடிக்கடி சுட்டிக் காட்டி உதவிய திரு. நா. சு. சம்பந்தம் நன்றிக்குரியவர்.

நூலகர், திரு. தமிழ்த்துரை, தன்னுடைய சொற்பொழிவுக்கு ஆயத்தஞ் செய்வதுபோல, குறிப்பெடுத்துக் கொடுத்து உதவினார். அவருடைய உதவி என் பணியை விரைவுபடுத்தியது. அவருக்கும் நன்றி. திரு. கலியன்பூங்குன்றன் அவ்வப்போது செய்த உதவியை யும் மறக்க இயலாது. அவருக்கும் நன்றி சொல்லுகிறேன். சென்னைப் பல்கலைக் கழக நூலகர் திரு. P. A. மோகன்ராசு அவர்கள், இந் நூலுக்கு 'சொல்அடைவு' ஆயத்தஞ்செய்து கொடுத்தமைக்கு என் நன்றி உரியதாகும்.

தட்டச்சுப்படிகள் முழுவதையும் பொறுமையாக இரண்டு மூன்று முறை படித்துப் பார்த்து, எதை எதை எங்கெங்கே, பகுத்து இணைக்கலாம் என்று சிந்தித்து, ஆலோசனை கூறி, இந்நூல் இவ்வுருவில் அமைய பல நாள் உடனிருந்து உதவிய திரு. உ. அய்யாசாமிக்கு எப்படி நன்றி தெரிவிப்பது? செய்தி, கருத்துக் குவியல்களை முறைப்படுத்தி, ஒழுங்காக அமைத்து நல்லுருக்கொடுத்த அவருக்குப் பெரிதும் நன்றியுடையேன்; படிப்போர் நன்றியும் உரியதாகும்.

சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தரும் என்னுடைய நெடுநாளைய நண்பருமான பேராசிரியர் ஜி. ஆர். தாமோதரன் அவர்கள் இந் நூலுக்கு சிறந்ததொரு அணிந்துரையை வழங்கிப் பெருமைப்படுத்தியதற்கு நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரி வித்துக்கொள்ளுகிறேன்.

இந்நூலை பெரியாரின் முழுமையான நீண்ட வாழ்க்கை வரலாறாகக் கொள்ளற்க. அப்புரட்சியாளரின் மலர்ச்சியை மக்க ளுக்கு விளக்கும் முயற்சியாக மட்டும் ஏற்கும்படிக் கோருகிறேன்.

சென்னை
600 030

நெ. து. சுந்தரவடிவேலு

# உ ள் ள ட க் க ம்


| | |
|---|---|
| அணிந்துரை | iii |
| நூன்முகம் | v |
| 1 அன்றைய சூழ்நிலை | 1 |
| 2 காங்கிரசு பணி | 30 |
| 3 தன்மான இயக்கப் பணி | 43 |
| 4 சமதர்மப் பணி | 72 |
| 5 'குடி அரசு' இதழ்—பெரியாரின் போர்வாள் | 86 |
| 6 நீதிக் கட்சி தலைமை | 99 |
| 7 கட்டாய இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் | 118 |
| 8 பெண்ணுரிமைப் பணி | 130 |
| 9 அயல்நாட்டுப் பயணங்கள் | 143 |
| 10 விழிப்பூட்டும் கிளர்ச்சிகள் | 151 |
| 11 பெரியாரின் தனித்தன்மை | 165 |
| 12 பெரியார் பணிகளின் விளைவு | 205 |
| சொல்அடைவு | 225 |

I

# அன்றைய சூழ்நிலை

சாதிச் சேற்றிலே பூத்த எண்ணற்ற மக்களை, மானுட மாலை யாக்கித் தொடுத்துக் கொடுத்தளித்த பெரியார், பெரியாராகவே பிறந்தாரா? பால பருவத்தில் எந்த மகானுடைய அருளாசியாவது அவர்மீது பொழிந்ததா? இல்லை. இல்லை.

எத்தனையோ சாதாரண பிள்ளைகளைப் போன்றே, ஈ. வே. ராமசாமியும் பிறந்தார். ஈரோட்டில் பிறந்தார்; எவர் வீட்டில் பிறந்தார்? வேங்கடப்பர் சின்னத்தாயம்மாள் வீட்டில் பிறந்தார். எப்போது பிறந்தார்? 1879ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17ஆம் நாள் பிறந்தார்.

ஈ. வே. ராமசாமியின் தாய், சின்னத்தாயம்மாள் வசதியான குடும்பத்தில் பிறந்தவர். அவருடைய தந்தை, வேங்கடப்பர் எளிய குடும்பத்தில் பிறந்தவர். தந்தை கூலிவேலை செய்யத்தொடங்கி, உழைப்பால், சிக்கனத்தால், படிப்படியாக உயர்ந்தார். மண்டிக் கடைக்கு உரியவராக வளர்ந்தார்; செல்வரானார்.

### சமுதாயச் சூழல்

ஒருவருடைய வளர்ச்சியின் போக்கு, அவர் வளரும் சமூக, அரசியல், பொருளியல் சூழ்நிலைகளைப் பெரிதும் சார்ந்திருக் கிறது. ஆகவே பெரியார் பிறந்த காலத்தில் நிலவிய சமுதாய அமைப்பை நோக்கினால், கோயில் இல்லாத ஊர் கிடையாது. கோயிலைச் சுற்றி பெரிய சாதி குடியிருப்பு. எட்டி இருப்பது சின்ன சாதி. ஊருக்கு அப்பால் இருப்பவர் நாட்டின் முதுகெலும்புகள், தாழ்த்தப்பட்டோர்.

'என்னாலே ஆவதொன்றும் இல்லை' என்று ஆயிரம் ஆண்டு களாகக் கேட்டுக் கேட்டுப் பொதுமக்கள் நடைபிணங்களாக மாறிக் கிடந்தார்கள். 'இராமன் ஆண்டாலென்ன; இராவணன் ஆண்டா லென்ன' என்று தொடங்கிய பொறுப்பற்ற போக்கு, கையறு நிலை, ஆற்காட்டான் ஆண்டாலென்ன, ஒரக்காட்டான் ஆண்டா லென்ன என்னும் அலட்சியப் போக்காக விரிந்து, நம்மவன்

ஆண்டாலென்ன, வெள்ளையன் ஆண்டாலென்ன என்னும் அவல நிலைக்கு இந்திய மக்களைத் தள்ளிவைத்திருந்தது.

காலகாலமாக, திதி என்றும் திவசம் என்றும் மணவிழாவென்றும் திருவிழாவென்றும் சொல்லி, பொதுமக்கள் கையில் கிடைத்த நாலு காசுகளையும் தட்டிக்கொண்டுபோன முறை அப்படியே இருந்தது. இதற்குமேல், இந்திய மன்னர்களோ, ஜமீந்தார்களோ ஈவு இரக்கமின்றி குடிமக்களிடம் எது எதற்கெல்லாமோ வரி விதித்தார்கள். மன்னன் மகளுக்குத் திருமணம். மண்ணாங்கட்டி கட்ட வேண்டியதோ கப்பம். அதற்கு மாற்றாகக் கிடைப்பதோ பட்டைச் சோறு.

சிறு நிலமுடையோர் வாழும் ஊர்களில், அர்ச்சகரோ, கர்ணமோ, மணியமோ அவர்களைப் பிரித்துவைத்து, மோதவிடுவதுண்டு. திருவிழாவில் முதல் பாக்கு வெற்றிலை யாருக்கு? இதற்காக நடந்த சண்டைகள் கணக்கில் அடங்கா. உடைந்த மண்டைகள் எண்ணற்றன. வற்றின குளத்திலே, நாலு மீன் பிடிக்க, முதல் வலை வீச, உரிமை எவருக்கு? இவ்வளவு பெரிய உரிமைக்கு, ஆண்டுக்கு ஆண்டு, அடிதடி நடத்தும் வீரத்திருவூர் பலப்பல. வழக்கு மன்றங்களில் காத்துக்கிடந்து, பாழாகும் மறத் தமிழர் எண்ணற்றோர்.

கல்லாமையிலும் இல்லாமையிலும் நோய்களிலும் வழக்குகளிலும் வாடிக்கிடந்த பொதுமக்களுக்குப் 'பிறர்' காட்டிய வழி என்ன?

'வஞ்சனை பேய்கள் என்பார்—இந்த
மரத்தில் என்பார் அந்தக் குளத்தில் என்பார்.'

'பேய்களின் சேட்டையே, பிள்ளைக்கு இழுப்புநோயாக வந்துள்ளது. அதன் ஆட்டமே, ஒருவர் மாற்றி ஒருவர் நோய்ப்பட்டுக் கிடப்பது' என்பார். இந்தப் பேயையும் அந்தப் பிசாசையும் எப்படிச் சமாளிக்க? மந்திரவாதிகளைக் கூப்பிடச் சொல்வார். மந்திர சூனியங்கள் குணப்படுத்தும் என்பார். இவ்வழியைப் பின்பற்றுவார்கள், நம் மக்கள்.

ஆயுள் ஓமம், தாயத்துகள், மந்திரத் தகடுகள், அத்தனையும் கூட்டணியாகி, இந்தியர்களுக்குக் கொடுத்த ஆயுள் எவ்வளவு? இந் நூற்றாண்டின் தொடக்கத்தில், இந்தியனின் சராசரி வயது பதினேழு.

நம் முன்னோர்கள் ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டுக் கிடந்தார்கள். அதோடு ஊர் குருக்களைக் கண்டு அச்சம்; கணக்கரைக் கண்டு நடுக்கம். வரி வாங்கியை (முன்சீப்)க் கண்டு பதைபதைப்பு.

'அப்பால் எவனோ செல்வான், அவன் ஆடையைக் கண்டு பயப்படுவார்.'

'தந்த பொருளைக் கொண்டே—ஜனம்
தாங்குவர் உலகத்தில் அரசரெல்லாம்
அந்த அரசியலை—இவர்
அஞ்சுதரு பேயென்றெண்ணி நெஞ்சம் அயர்வார்.'

ஏன் இந்த நிலைக்கு வீழ்ந்தார்கள்? அறியாமை, மூடநம்பிக்கை ஆட்சிசெலுத்தியதால்; அதோடு இங்கே, ஒன்றுபட்ட சமுதாயம் இல்லை. பின் என்ன இருந்தது?

'வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி பேர்கள் என்றால்
சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்
இங்கே அவரவரும் தனித்தனிதான்.'

அன்று மட்டுமா நாம் நெல்லிக்காய் மூட்டைகள்? இன்றுந்தான். என்றைக்குத் தொலையும் இந்நிலை? எனக்கு ஆருடம் தெரியாது. அதை நான் நம்புவதுமில்லை.

ஒன்றுபட்ட இந்தியச் சமுதாயந்தான் இல்லை. தொலையட்டும். ஒன்றுபட்ட தமிழ்ச் சமுதாயமாகிலும் உண்டா? இல்லை. நம் உடன்பிறப்புகளாகிய ஆந்திரர்களாகிலும் ஒரே சமுதாயமாகக் காட்சியளித்தார்களா? இல்லை; இல்லை. ஏன்?

தமிழ் மக்களைக்கொண்டு ஆய்வோம். நம் நிலையென்ன?

## சாதிப் பாகுபாடு

நாங்கள் தொண்டை நாட்டார் என்று மார்தட்டுவோர் அதிகமா? தமிழர் என்று தலை நிமிர்ந்து நிற்போர் அதிகமா? தொண்டை நாட்டார் என்போரே அதிகம். அவர்களில் தமிழரை, காட்டில் கலாப்பழம் தேடுவதுபோல் தேடிக் காணவேண்டும். தென்பாண்டி நாட்டார், என்று சொல்லிக்கொள்வதிலே பூரிப் படைகிற அளவு தமிழர் என்று முழங்குவதிலே பெருமிதம் கொள் வோர் அதிகமா? இல்லை. பாண்டி நாட்டார், என்று பிரித்துக் கொள்வோரே ஏராளம். எங்கள் கொங்குச் சீமை என்று கொக்கரிப்போருக்குக் குறைவேது? சோழ நாட்டார் மட்டும் சும்மா இருப்பார்களா? சோழவள நாட்டார்; கடாரங்கண்ட பெருநாட் டார், என்றே முழங்குவார்கள். நான்கு நாட்டார் பேசுவதும் தமிழ். ஆயினும், தமிழர் என்னும் உணர்வை ஆழப் புதைத்து விட்டு, நான்காகப் பிரித்து நினைப்பதல்லவா நம் சிந்தனை ஓட்ட மாக இருக்கிறது?

தமிழர் அனைவரையும் ஒன்றாக்கும் உணர்வைப் புதைத்த, பிராந்திய உணர்வாகிலும் உயிர்த் துடிப்போடு, அப்பகுதிவாழ்

மக்கள் அனைவரையும் ஒரே சமுதாயமாக இணைத்ததா? இல்லையே.

பாண்டி நாடு, சோழ நாடு, பல்லவ நாடு, கொங்கு நாடு என்பவை நைந்துபோன கோணிப்பைகளால் கட்டப்பட்ட நெல்லிக்காய் மூட்டைகளாகவே இருந்து வந்தன. எனவே, சொற்ப சாக்கு கிடைத்தால்போதும்.

'நாங்கள் சைவப் பிள்ளைகள், அவர்கள் அசைவப் பிள்ளைகள், நாங்கள் சைவ முதலியார்கள், அவர்கள் அசைவ முதலியார்கள். நாங்கள் சைவ ரெட்டியார்கள், அவர்கள் அசைவ ரெட்டியார்கள். நாங்கள் வன்னியக் கவுண்டர்கள், அவர்கள் அன்னியக் கவுண்டர்கள். நாங்கள் அருந்ததியர்கள், அவர்கள் பள்ளர்கள்.' இப்படித் தனியாகச் சாதியடிப்படையில் சிதறி ஓடுவதே, நம் வாழ்க்கை முறை. மேற்கூறிய பத்து சாதிகளாகப் பிரிந்து நின்றதோடாகிலும் நிறைவுகொண்டோமா? இல்லை. பிள்ளைக் குள்ளேயும் பல சாதிப் பிரிவுகள்; முதலியார்களுக்கும் வகை வகையான முதலியார்கள், ரெட்டியார்களுக்கும் தனித்தனி கிளைகள். வன்னியர்கள் சளைத்தவர்களா? நாயக்கர் வேறு; கவுண்டர் வேறு; படையாச்சி வேறு, அருந்ததியர்களிலும் பல பிரிவு. ஓர் உட்சாதி மற்றொரு உட்சாதிக்குப் பெண் கொடுக்கக்கூடாது; எடுக்கவும் கூடாது. உட்சாதிக்குள்ளேயே கொள்வினை, கொடுப்பினை கூடாதென்றால், சாதிக்குச் சாதி கலப்பைப்பற்றி எண்ண முடியுமா? அந்த அபசாரத்தைப்பற்றிப் பேசினால் நாக்கு அழுகிப்போகும் என்றுதானே கிழடுகள் வசைமாரி வழங்கும். அதற்கும் அஞ்சாமல், நாக்கும் அழுகிவிடாமல், மீண்டும் மீண்டும் 'மானுட சமுத்திரம், அதிற்சங்கமமாகு' என்று தொடர்ந்து சொன்னால், கூச்சல் தூற்றலாகத் தொடங்கி, மண் வாரி இறைப்பதாகத் தழைத்து, மலைப் பிஞ்சு மழையாகவே முடியும். பழைமைக்குப் பொய்மைக்கு அநீதிக்கு பஜனைபண்ண மட்டுமே, கருத்துரிமை என்னும் மேல் மூச்சுக்கு இடம் இருந்தது.

'ஆயிரம் உண்டிங்கு சாதி' என்னும் வாய்மை வாக்குமூலத்தை பறைசாற்றினார், விடுதலைக்கவி பாரதியார். 'சாதிக் கொடுமைகள் வேண்டாம்' என்று வேண்டுகோள் விடுத்தார் பாரதியார். இத் 'தவறுகளுக்காக' அவரை வறுமையில் வாட விட்டு, 'வேண்டும் இப் பிராமணனுக்கு' என்று உள்ளுக்குள் உவகை கொண்டவர்களும் உண்டு. 'சாதிக் கொடுமைகள் வேண்டாம்' என்றால் ஆத்திரம் பொங்குவானேன்?

'நாம் பார்த்து ஏற்படுத்தியதா சாதி? பகவான் படைத்த போதே இன்னின்ன சாதியான் என்று படைத்துவிட்டான். அதைப்பற்றி பேசுவது அபசாரம். அவனவனுக்கு விதித்த வருண

தர்மத்தை சரியாகக் கடைப்பிடிப்பதே பிறவிப்பயன். சூத்திரனுக்கு பகவான் விதித்த கடமையைத் தவறாமல் செய்தால், அடுத்த பிறவியிலாவது மேல்சாதியாகப் பிறக்கலாம். இப்படி, ஜன்ம ஜன்மாந்திரம், சூத்திரன் பிராமணருக்குச் செய்யவேண்டிய கடமைகளைக் குறைவற நிறைவேற்றுவது ஒன்றே, ''ஈசுவர கடாட்சத்தைப்'' பெறுவதற்கு வழி; வேறு கதியில்லை.'

இப்படி பத்து மந்திரங்களே கற்ற உள்ளூர் குருக்கள் முதல், மீனாட்சி திருமணத்தைத் தேன் சொட்டச் சொட்டக் காலட்சேபம் செய்யும் தீட்சிதர் வரை அளப்பார். மற்ற படிப்பாளிகள் சும்மா இருப்பார்களா? அவர்கள் புராணீகர்கள் ஆகி இதையும் அதையும் சேர்த்துக் கொட்டுவார்கள்.

அரைத் தூக்கத்திலே காலட்சேபம் கேட்ட ஆறுமுகம், தீட்சிதருக்குத் தனியாக வெண்சாமரம் வீசிக்கொண்டே, வாய்க்கு முன்னே ஒரு கையை வைத்துக்கொண்டு, பணிவே உருவாகி, சிறிய விளக்கத்தைக் கோருவார்.

'சாமிகாள்! இந்தக் கட்டைக்கு ஒன்று புரியவில்லை. பெரியவாளிடம் சபையில் கேட்கக்கூடாதென்று, சும்மா இருந்துவிட்டேன். இங்கே யாரும் இல்லை. தேவாளுக்குச் சிறு விஷயம், எனக்கோ சந்தேகம்...' ஆறுமுகம், சொல்லி முடிப்பதற்குள், தீட்சிதர் எள்ளும் கொள்ளுமாகப் பொரிவார்.

'உச்சிஷ்டம்; மண்டு; இவ்வளவு நேரம் கத்தினானே! எவ்வளவு அலுப்பா இருக்கும் என்று, புரியுதா உன் மர மண்டைக்கு? உன்னைக் கோபித்துக்கொள்ளுகிறனே! அதைச் சொல்லி. நீயோ சூத்திரன், அப்புறம் புத்தி எப்படியிருக்கும்?'

'ஏழேழு பிறவிக்கும் உங்கள் காலடியில் கிடந்து தொண்டு செய்ய எனக்கு ஆண்டவன் அருள்பாலிக்கணும். சாமி! நான் நினைத்ததை நீங்கள் எப்படியோ தெரிந்து சொல்லிவிட்டீர்களே சாமி!'

'ஊரில் ஒருத்தரைக் கேட்டால் பிள்ளை என்கிறார். மற்றொருவரைக் கேட்டால் முதலியார் என்கிறார்; மூன்றாமவர் அகமுடையார் என்கிறார்; நாலாவது ஆள் நாயக்கர் என்கிறார்; அய்ந்தாவது பேர்வழி செட்டியார்; ஒருவர் நாட்டார்; இன்னொருவர் நாடார். இப்படி ஆளுக்கொரு சாதி சொல்லுகிறார். என்னுடைய எண்பது வயதில் சூத்திரச் சாதிக்காரனைப் பார்க்கவில்லை. சூத்திரர் யாரு சாமி?' எங்கே இருக்கிறார் சாமி? என்று திக்கித்திக்கி வெளிப்படுத்தினார்.

'முதலியார் என்னடா முதலியார்? அவனும் முதலியார்; இவனும் முதலியார்; எவன் எவனோ முதலியார். இவன்களா வைத்துக்

கொண்டது முதலியார், பிள்ளை, நாட்டார், நாடார், நாயக்கர், நாயுடு, ரெட்டியார், செட்டியார் இவையெல்லாம்.' இவர்கள் அத்தனை பேருக்கும் சாத்திரோக்தமா ஒரே பேர்தாண்டா உண்டு. அதுதாண்டா 'சூத்திரன்' என்பது. இன்னும் புரியலை யோடா மண்டு. நீயும் சூத்திரந்தாண்டா?

'பகவான் படைத்தபோது நான்கு வருணம். இப்போது கலியுகம் இல்லையோ! இப்போது இரண்டே வருணந்தாண்டா உண்டு. பிராமணாள்; அது நாங்கள்; சூத்திராள் அது மற்றவர்களெல்லாம். நீயுந்தாண்டா தடியா?' இப்படி விளக்கம் வந்தது.

'சூத்திரன் என்றால் என்ன சாமி அர்த்தம்?' கீழ்க்குரலில் கேட்டான் ஆறுமுகம்.

'அடிமை; பிராமணாளுக்கு பணி செய்யப் படைக்கப்பட்ட வர்கள். வைப்பாட்டி மக்கள். இப்படி நான் சொல்லவில்லை. பெரியவா எழுதின சாத்திரம் சொல்லுது.' இது தீட்சிதரின் விளக்கம்.

ஆறுமுகத்துக்குச் சிற்றெறும்பு கடித்ததுபோல் இருந்தது. முதுமைக் கோடுகள் நிறைந்த முகத்திலும் வேதனை வடு தென்பட்டது. நொடியில் சமாளித்துக்கொண்டார். முறுவலை வரவழைத்துக் கொண்டார்.

'சாமி! நான் உங்க அடிமை சாமி! இப்ப மட்டுமா? எல்லாப் பிறவிகளிலும் தேவாளுக்கு அடிமையாகக் கிடக்கக் கொடுத்து வைக்கவேண்டுமே! சாமிக்கே தெரியும் நான் பணி செய்கிற சாதி என்று. ஆனால்—ஆனால்—ஊரிலே—எல்லோருமே—நான்—எங்க—அப்பாவை—உரிச்சு வைத்ததுபோல்—இருக்கேன்—என்று—சொல்லுவாங்க சாமி—அப்படியிருக்க—கடைசியாக—ஒன்று—சொல்லிவிட்டிங்களே.' இப்படிக் குறைபட்டார், எண்பது வயது ஆறுமுகம்.

நாற்பது வயது தீட்சிதர், அமைதியாக பதட்டமே இல்லாது, 'அதற்குத்தாண்டா! அப்பவே சொன்னேன்! பெரியவா எழுதிய சாத்திரம் சொல்லுது என்று சொன்னேன். பெரியவா, அவாளா நினைத்து எழுதினாளா? அப்படிப்பட்ட அபசாரம் அவாளெல் லாம் நினைக்கக்கூட மாட்டா!'

'பகவானே சொல்லச் சொல்ல, மகான்களே கேட்டுக் கேட்டு எழுதிவைத்தவை நம் சாத்திரங்கள். மற்ற மற்ற மத வேதம் போலவா நம்முடைய வேத சாத்திர புராணங்கள்? அனாதி காலந் தொட்டு வருபவை; அவற்றைப்பற்றிப் பேச நமக்கு ஏது அருகதை? எதற்கும் ஆண்டவன் இருக்கிறான். அவன் கமலத் திருவடிகளில் பாரத்தை வைத்து, சும்மா இரு ஆறுமுகம்.'

தீட்சிதருக்குத் திருப்தியில்லை. ஆறுமுகத்தின் புத்தியைத் தீட்ட முனைகிறார்.

'ஏண்டா ஆறுமுகம்! நான் சொல்லுகிறேன் கேள்: உனக்கு நான் முகன் தெரியுமில்லையோ! நான்முகன். சாட்சாத் பிரமனே நம்மையெல்லாம் மேலும் கீழுமா படைத்தான். ஏன்? அது நமக்கு எப்படிடா புரியும்?

'முகத்திலிருந்து பிராமணர்களைப் படைத்தான். அவர்களைப் பாதுகாக்க, சத்திரியர்களைப் படைத்தான். எங்கேயிருந்து படைத்தான்? தோளிலிருந்து படைத்தான். அப்புறம் தொடையி லிருந்து வைசியர்களை உண்டாக்கினான். கடைசியாக உங்களைக் காலிலிருந்து படைத்தான். நீங்கள் சூத்திரர்கள். ஞாபகமிருக் கட்டும். நாம் இருக்கும் கலியுகத்தில், பிராமணாள் உண்டு; சூத்தி ராள் உண்டு. சத்திரியர், வைசியர் என்று எவனாவது சொன்னா நம்பாதே. சாத்திரத்திற்கு மாறாகச் சொன்னால் நெருப்பாற்றிலே, மயிர்ப் பாலத்தில், பாம்பும் நட்டுவாக்களியும் கடிக்கக் கடிக்க நடக்கணும். சிவ! சிவ! நமக்கு ஏன் அந்த நரகம்? சாத்திரம் சொன்னதைக் கேட்டு நடந்துவிட்டுப் போவோம்.' இப்படி முடிப் பார் தீட்சிதர்.

பணி செய்யத்தான் ஆறுமுகங்கள். அவர்கள் முகத்தில் இருந்தவையோ புண்கள். கண்ணிருந்தும் குருடர்கள்; எழுதப் படிக்கத் தெரியாத தற்குறிகள். சிந்திக்கும் பழக்கத்தை அய்ந்து வயதோடு அவித்துவிட்ட அரும் பிறவிகள்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' கேள்விப்பட்டதுமில்லை பொதுமக்கள். தமிழ் மறையையா பொதுமக்கள் கேள்விப்பட்ட தில்லை? ஆம் ஆம். படித்தவர், எங்கோ சிலர். திருக்குறளைப் படித்தவர், அவர்களில் ஆயிரத்தில் ஒருவர்; அறிவை மற்றவர்க ளோடு பங்கிட்டுக்கொண்டவர்கள், எங்கெங்கோ தேடினால் பதினாயிரத்தில் ஒருவர் கிடைக்கக்கூடும்.

எழுத்தறிவு என்பதே, ஊர்க் குருக்கள், ஊர்க் கணக்கர், ஊர் வரித் தண்டல்காரர், அவர்களோடு கூடிக் கெட்ட யாரோ ஒருவர் இருவர்களோடு முடிந்துவிடும். புலமை என்பது புராணிகரோடு, காலட்சேபக்காரரோடு, ஜமீன்தாரை அண்டிப் பிழைத்த சில ரோடு முடங்கிவிடும். இவர்களில் படித்த பெண்களைப் பார்ப்பது அரிது; அரிதினும் அரிது.

'சூத்திரனுக்கு எதைக் கொடுத்தாலும் கல்வியைக் கொடுக் காதே' என்பது மனுசாத்திரம். இப்படிக் கேள்வி. ஏனெனில், நாம் படிக்கக்கூடாததாயிற்றே.

### சகுனத் தடை

மூடநம்பிக்கையால், அறிஞர்கள்கூட எதை எதையோ கண்டு அஞ்சுவதைப் பாருங்கள்.

கல்விக் கடல், பக்திப் பெருமலை, புலவர் புண்ணியகோடி பரந்த நெற்றி முழுவதும் வெளுத்திருக்க, அதன் நடுவே பெரிய செஞ்சுடர் பளிச்சிட, 'அப்பா, கச்சியப்பா! காத்தருளப்பா!' என்று வேண்டியபடியே, திருவுடையானின் திருவிளையாடல்பற்றி, குபேரர் வீட்டுக் குழந்தைக்கு நடக்கும் திருமணத்தில் கதாகாலட்சேபம் செய்யப் புறப்படுவார். தெருவில் காலெடுத்து வைத்ததும் வெள்ளை முக்காடுபோட்ட அம்மா ஒருவர் எதிரே வருவார்.

நல்ல பாம்பு எதிர்த்து வருவதுபோல் வியர்ப்பார்; உள்ளுக்குள் சபிப்பார்; வீட்டுக்குத் திரும்புவார்; ஒரு முடங்கு தண்ணீரைக் குடிப்பார்; மீண்டும் புறப்படுவார். மீண்டும் அதிர்ச்சி. கைகால் நடுக்கம்.

'நாசமாகப் போக' என்று சபித்தபடியே புண்ணியகோடி மீண்டும் வீட்டுக்குள் பாய்வார்.

யானையைக் கண்டா ஓடினார்? பூனையைக் கண்டு ஓடினார். புலியை முறத்தால் அடித்துக் கொன்ற தாய்க்குப் பிறந்தவராயிற்றே. பூனைக்கு அஞ்சாமல் இருப்பாரா?

விதவை எதிரே வந்தால், பூனை குறுக்கே போனால், பூணூல் போட்டவர் எதிர்ப்பட்டால்... சகுனத் தடை. 'நாள் என் செயும் கோள் என் செயும்' என்று திரும்பத் திரும்ப ஒப்புவித்தது புண்ணிய கோடியின் உதவிக்கு வரவில்லை.

சாதிக் கொடுமைபற்றி சில சொற்கள்:

### சாதி வாய்ப்பாடு

கணக்கு வாய்பாடு நமக்குத் தெரியும். சாதி வாய்பாடும் உண்டு: அது இக்கால இளைஞர்களின் காதுகளில் வீழ்ந்திருக்காது. சாதி வாய்பாடு என்ன?

நம்மில் அய்ந்தில் ஒருவர் ஊர்களுக்கு வெளியே ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள். அவர்கள் வயலுக்கோ, தோப்புக்கோ, வேலைக்கு வருவார்கள் அல்லவா? அப்போது எந்தச் சாதியார், எந்தச் சாதி யாருக்கு எவ்வளவு தூரம் வரை நெருங்கலாம். இதற்கு வாய்பாடு கற்றுக் கொடுத்திருந்தார்கள். அதைப் பின்பற்றவேண்டியது பெரிய சாதிக்காரருடைய பொறுப்பல்ல. பொறுப்பு, தாழ்த்தப்பட்டவர் தலைமேல்.

நான்கடியில் நிற்கவேண்டிய சாதி; ஆறடிக்கு அப்பால் நிற்க வேண்டிய சாதி; பத்தடிக்கு அப்பால் இருக்கவேண்டிய சாதி என்று முறைப்படுத்தியிருந்தார்கள் முன்னோர்கள். ஆறடிவரை, நாலடி வரை நெருங்கக்கூடிய சாதியார்கள், வாயொலி மூலம் தாங்கள் நெருங்குவதை அறிவிக்கவேண்டும். பத்தடி, அதற்கு மேற்பட்ட தூரத்திலேயே நிற்கவேண்டியவர்கள், பறை கொட்டியோ, கொம்பு ஊதியோ அறிவிக்கவேண்டும். அதைக் கேட்டு நம்பூதிரி யும் நாயரும் ஒதுங்கவேண்டிய தூரத்தில் ஒதுங்கிவிடுவார்கள். அறுபத்து நான்கு அடி தூரத்தில் நிற்கவேண்டிய சாதியும் இருந்தது நம் புண்ணிய பூமியில்.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் ஒரு நிகழ்ச்சி. அப்போது கொச்சி தனியரசு; இந்திய மன்னர் ஆளுகைக்கு உட்பட்டது. அங்கே, குற்றவியல் வழக்கொன்று நடந்தது. அவ்வழக்கில் சாட்சி கூற அழைக்கப்பட்டவர்களில் ஒருவர், அறுபத்து நான்கு அடி தொலைவில் நிற்கவேண்டிய சாதிக்காரர். வழக்கு மன்றங்களிலும் சாதி நெருக்க வாய்பாட்டை கைவிட முடியாது. எப்படிச் சமாளித்தார் குற்றவியல் நீதிபதி?

நீதிபதியின் இருக்கைக்கு நேர் எதிரில், அவர் கண்ணில் படும்படி, அவருக்கு அறுபத்து நான்கு அடி தொலைவில், சாட்சி நிறுத்தப் பட்டார். நீதிபதி, 'நான் சத்தியமாச் சொல்லுகிறேன்' என்று சத்தியம் செய்யக் கேட்பார். நீதிபதியின் எழுத்தர் சாட்சியிடம் சென்று அதைச் சொல்லுவார். சாட்சி சொன்னதை கேட்டுவந்து நீதிபதியிடம் ஒப்புவிப்பார். வழக்கறிஞர்களோ, நீதிபதியோ கேட்கும் கேள்விகளை, ஒவ்வொன்றாக எழுத்தர் சாட்சியிடம் கொண்டுபோவார். சாட்சியின் வாக்குமூலத்தை வழக்குமன்றத் தில் சொல்வார். எத்தனை கேள்விகள் சிதைந்தனவோ! எத்தனை பதில்கள் உருமாறினவோ! எழுத்தர், வசதிப்படி விட்டவை எத்தனையோ! சேர்த்துக்கொண்டவை எத்தனையோ! இப்படிப் பட்ட விசாரணையின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கப்பட்டது. நீதியே கிடைத்தது என்று நம்புவோம். இல்லாவிட்டால், அவமதிப்பு வழக்கில் சிக்கிக்கொள்வீர்கள்.

முற்காலத்தில் எந்த சிற்றூரிலும் ஆதி திராவிடர்கள் சொக்காய் போட்டுக்கொண்டோ காலணி போட்டுக்கொண்டோ தெருக்களில் நடக்கமுடியாது. என்னே கொடுமை. ஊருக்கு ஊர், தாழ்த்தப் பட்டோர் நடக்கக்கூடாத தெருக்கள்; போகக்கூடாத இடங்கள்; தொடக்கூடாத படித்துறைகள் என்று இருந்தன. தாழ்த்தப் பட்டவர்களுக்கு தனிக் கோயில்கள். அவர்கள் இந்துக்களே ஆயினும் சாதி இந்துக்கள் கோயில்களில் நுழையக்கூடாது. நாங்கள் சாதி இந்துக்கள்தானே என்று நாடார்கள் கமுதியிலும்

மதுரையிலும் சிவகாசியிலும் பொதுக்கோயிலில் நுழைய முயன்றது வெற்றிபெறவில்லை. வழக்குமன்றம் தடுத்துவிட்டது. முன் தங்கியவர்கள்கூட எல்லா இடங்களுக்கும் போய்விட முடியாது. 'மேல்சாதி' பார்ப்பனரல்லாதார் என்று பெருமையடித்துக் கொள்வோரும், கோயில்களில் எட்டி நிற்கவேண்டியவர்களே.

இத்தனை இழிவுகளுக்கும் வேரான சாதி முறை, நச்சுமரமாகத் தழைத்ததைக் கேளுங்கள்:

### பெண்களுக்கு அநீதி

சில சாதிப் பெண்கள் மட்டுமே முழுச் சேலை கட்டி, இரவிக்கை அணிந்து உடலை மறைக்கலாம். மற்றும் சில சாதிப் பெண்கள், சேலை அணியலாம்; இரவிக்கை அணியக்கூடாது. இது தமிழ் நாட்டின் அநீதி.

சென்ற நூற்றாண்டில், திருவிதாங்கூர் இராச்சியம் இந்த அநாகரீகத்தில் தமிழ்நாட்டைவிட முன்னணியில் இருந்தது. அப்பகுதியில் குறிப்பிட்ட சில சாதிப் பெண்கள், இடுப்பில் முண்டு அணிவதோடு நிற்கவேண்டும். மார்பை மூட இரவிக்கை போடக்கூடாது. மார்பை மூடும் உரிமை மேல்சாதிப் பெண்களுக்கே உண்டு. இது சமயத்தின்பேரால், நெடுங்கால மரபின்பேரால், நடந்துவந்த காட்டுமிராண்டித்தனம் ஆகும்.

சென்ற நூற்றாண்டில் இலண்டன் கிறுத்தவத் திருச்சபையின் சமயத்தொண்டு, நாகர்கோவில் பகுதியில் நன்றாகப் பலித்தது. மார்பை மூட உரிமையில்லாத சாதிப் பெண்களில் பலர், உயர் நிலைப் பள்ளி வரை படித்து முடித்தார்கள். கல்விக் கண் திறந்ததும் மானக் கண்களும் திறந்தன. மார்புகளை திறந்துபோட்டபடி வெளியே செல்ல அவர்கள் வெட்கப்பட்டது இயற்கை. எனவே, அப்பெண்கள், மேனாட்டு பாதிரிமார் வழியாக, திருவாங்கூர் மன்னர் பிரானுக்கு விண்ணப்பித்துக்கொண்டார்கள். மார்பை மறைத்து சேலைகட்டிக் கொள்ள கிறுத்தவப் பெண்களாகிய தங்களுக்கு உரிமை கோரினார்கள். திவான் ஆலோசனை கூறினார். அதன்படி ஆணை பிறப்பிக்கச் சொல்லிவிட்டார் மன்னர். ஆணை வந்தது. அது என்ன சொல்லிற்று.

'ஆழ்ந்து சிந்தித்தோம்; நம் முன்னோர் ஏற்படுத்திய பழக்க வழக்கங்களை மரபுகளை மாற்றுவது நல்லதல்ல; பின்பற்றுவதே நல்லது. மதம் மாறினாலும் மரபு மாறக்கூடாது. பழையபடி நடந்துகொள்ளுங்கள்.' இது ஆணையின் சாரம். விவகாரம் அதோடு முடியவில்லை.

அப்போதைய நடைமுறைப்படி, சென்னை மாகாண ஆளுநர், திருவாங்கூர் இராச்சியத்தின்மேல் ஒரு கண் வைத்திருக்க வேண்டும். எனவே, வெள்ளைப்பாதிரி, சென்னை ஆளுநர் சர் சார்லஸ் டிரெவிலியனுக்கு இதைப்பற்றி எழுதினார். பெண்கள் கோரிக்கையை ஆதரித்துப் பரிந்துரைத்தார்.

ஆளுநர் என்ன செய்தார்?

'மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணியார், இந்துக்களின் பழக்க வழக்கங்களில் தலையிடுவதில்லை என்று இந்தியர்களுக்குக் கொடுத்துள்ள வாக்குறுதி எங்கள் நெஞ்சில் பசுமையாகவே இருக்கிறது. மறந்தும் அவ்வாக்குறுதியிலிருந்து இழையளவும் விலக நாங்கள் விரும்பவில்லை. ஆயினும் இந்த நாகரீக காலத்தில் எங்காவது எந்த இனப் பெண்களாவது மார்பைத் திறந்து காட்டிக்கொள்ள இசைவார்களா? அப்படி நடக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்துவது நன்றாயிருக்குமா என்பதை மன்னர் பிரானே யோசித்து முடிவுசெய்ய விழைகிறேன்.'

அதற்குமேல், காட்டுமிராண்டி முறையை நிலைநிறுத்த எந்த மன்னருக்குத் துணிவு வரும்!

'நாஞ்சில் நாட்டு ஈழவப் பெண்கள் இடுப்பில் முண்டோடு, மார்பில் இரவிக்கையும் போட்டுக்கொள்ளலாம். ஆனால் உயர் சாதிப் பெண்களைப்போல் உடுத்தக்கூடாது.' இப்படி மன்னர் ஆணையிட்டார்.

நாகர்கோவிலில் ஈழவப் பெண்கள், இந்த ஆணைக்கு மேலே போனார்கள். உயர்சாதிப் பெண்களைப்போல், இரவிக்கை அணிந்ததோடு, முண்டுக்குப்பதில் சேலையணிந்துகொண்டு கடைத்தெருவிற்கு வந்தார்கள்.

'ஆ! எத்தனை பெரிய அக்கிரமம்! அதை தெய்வம் கேட்கட்டும்; நின்று கொல்லட்டும். அரசன் அன்று கொல்ல வேண்டாமா? போயும் போயும் பெண்களுக்கா இவ்வளவு கொழுப்பு? பெண்கள் சட்டத்தை மீற விடலாமா? நாமே ஒரு கை பார்த்துவிடுவோம்.' இப்படி எண்ணினார்கள், உயர்சாதி இந்துக்கள். காஷ்மீரில் உள்ள அவர்களில் ஒருவருக்குத் தேள் கொட்டினால், கன்னியாகுமரிக் கரையிலிருப்பவருக்கும் நெரி கட்டுமே! நொடியில் 'பெரிய' சாதிக்காரர்கள் திரண்டு வந்தார்கள்; சும்மா வரவில்லை; கம்போடும் கழியோடும் வந்தார்கள்; ஈட்டியோடும் கடப்பாறையோடும் பாய்ந்துவந்தார்கள். ஈழவப் பெண்களை விரட்டியடித்தார்கள். ஈழவர்களுக்கு மானமும் இருந்தது; ஆண்மையும் இருந்தது. அவர்கள் கூடி எதிர்த்தார்கள். சண்டை முற்றிற்று; வன்முறை வளர்ந்தது; அடிதடி மிகுந்தது; நகர் முழுவதும்

கொந்தளிப்பு. காவல்துறையால் கட்டுப்படுத்த முடியவில்லை; பட்டாளத்தின் உதவிகோரி, செய்தி பறந்தது. திருவனந்த புரத்திலிருந்து நாயர் பட்டாளம் வந்தது. அமைதியை நிலை நாட்டியது; ஊர் அடங்கிற்று. ஆனால் நியாயம் கிடைத்தது. கலகம் பிறந்தால், நியாயம் கிடைக்கும் என்பது மெய்யாயிற்று. ஈழவப் பெண்கள் காட்சிப் பொருள்களாக நடமாடியது, தொலைந்தது. சேலை உரிமை நிலைத்தது.

பானை சோற்றுக்கு இரு சோறு பதங்காட்டினேன். அங்கே தான் அப்படி என்று எண்ணிவிடாதீர்கள், இங்கே மட்டும் என்ன வாழ்ந்ததாம்? சாதிக் கொடுமைகள் எல்லா ஊர்களிலும் கோரத் தாண்டவம் ஆடின. எங்கள் ஊர்த் தெருக்கோடியை ஆதி திராவிடர்கள் நெருங்கக்கூடாது. ஏன்? தெருக்கோடியில் இரண்டு குருக்கள் வீடும் ஓர் அய்யர் வீடும் இருந்தன. ஆதி திராவிடர்கள் தெருவிலே நடந்தாலும் உள்ளே இருப்பவர்களுக்குத் தீட்டாகி விடும்.

அழுக்கை மிதித்துவிட்டால் கால்களைக் கழுவினால் தொலைந்து விடும். சாதித் தீட்டுபட்டுவிட்டால், தலை முழுகினால்தான் தீரும்.

## தாழ்த்தப்பட்டோர் நிலை

எல்லாக் கிராமங்களிலும் இதே கொடுமை. ஆதி திராவிடர் குடியிருப்புகள் ஊருக்கு வெளியே ஒதுங்கியிருப்பது மட்டுமா? அவற்றில் குடிநீர் வசதி கிடையாது, குளி நீராவது உண்டா? தொலைவில் உள்ள மடுவுக்குப் போகவேண்டும். ஆயிரம் ஆயிரம் ஊர்களில் வயல்களுக்கிடையே போகும் சேற்று நீரில் தான் உடம்பு கழுவவேண்டும். குளிக்க நீர் இல்லை; மாற்று உடை இல்லை. கோழி கூவும்முன்னே எழுந்துபோய், மையிருட்டில் சூடிசைக்குத் திரும்பும் ‘ஆதி திராவிடர்கள் அழுக்காயிருக்கிறார்கள். அவர்களை அருகில் விடாதே?’ இது சாதி நடைமுறை. எவ்வளவு அநீதி?

சந்து பொந்துகளில், புதர்களுக்கிடையில் உள்ள ஒற்றடிப் பாதைகளில் நடமாடும் ஒதுக்கப்பட்டோர் எவராகிலும் காலில் செருப்பு போட்டுக்கொண்டு நடக்க மு டி யு ம ா? முடியாது. அவருடைய தோலை உரித்துவிடுவார்கள். சோற்றுக்கில்லா விட்டாலும் சூத்திரப் பட்டந்தாங்கியிருந்தாலும் சமுதாய ஏணியில் ஆதி திராவிடர்களுக்கு மேல்படிகளில் நிற்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் வீரப் பார்ப்பனரல்லாதார்களே, அக்கொடுமைக் குப் பொறுப்பாயிருப்பார்கள். சிறு நகரங்களில்கூட எந்த நெருக் கடியிலும் ஆதி திராவிடர்கள் சைக்கிளில் செல்ல முடியாது. அதைக்

கண்டுபிடித்துவிட்டால், ஆதி திராவிடருக்கு உதை கிடைப்பது உறுதி. முற்கால கிராமங்களில் ஆதி திராவிடர்கள், சொக்காய்ப் போடலாமா? கூடாது. சொக்காய் அணிவதும் குற்றம். உள்ளூர் பெரியவர்களே தண்டிக்கும் வழக்கம் கொடுங்கோல் புரிந்தது.

கிராமங்களில் மட்டும்தான் இத்தகைய இழிநிலையா? சென்னை மாகாணத்தின் தலைநகராகிய சென்னைப் பட்டினத்திலும் தீண்டாமைக் கொடுமை தாண்டவமாடியது. தீண்டப்படாதவர்களாகக் கருதப்பட்டவர்கள், மற்றவர்கள் செல்லும் கோயில் குளங்களுக்குப் போவது தடை செய்யப்பட்டிருந்தது. காசு கொடுத்துக் கூத்து பார்க்கவும் அவர்களுக்கு உரிமை இல்லை. பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். அந்தச் சோறு இதோ:

சென்னை இந்து விநோத சபை என்னும் நாடகக் குழு, சென்னை ஆனைக்கவுனிக்கடுத்த ஒற்றைவாடைச் சாலையில் அமைந்திருந்த ஸ்ரீ லெட்சுமி விலாச நாடக சபையில் 1899ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 21ஆம் நாள் செவ்வாய்க்கிழமை இரவு முதல் 'அபிராம சுந்தரி சரித்திரத்தை' நடத்தப்போவதாக துண்டு அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் 'பஞ்சமர்களுக்கு இடமில்லை' என்று அச்சடிக்கப்பட்டிருந்தது. பெரு நகரமாகிய சென்னையிலேயே இப்படித் தடுக்கமுடியுமானால், மற்ற நகரங்களிலோ, பேரூர்களிலோ ஆதி திராவிடர்கள், மற்றவர்களோடு இருந்து கூத்து பார்க்க முடியுமா? முடியாது. மற்றும் சாதி ஏற்றத்தாழ்வின் மற்றோர் வெளிப்பாட்டை நானே துய்த்தேன். இதோ அம்மடமை; இழிவு:

ஒன்பது வயதில், என்னை, இப்போது ஆண்டர்சன் மேனிலைப் பள்ளியென்று அழைக்கப்படும், அப்போது பூ. எப். சி. எம், உயர் நிலைப் பள்ளியென்றும் அழைக்கப்பட்ட, பள்ளியில் சேர்க்க என் தந்தையும் மாமாவும் அழைத்துச் சென்றார்கள். நாங்கள் உள்ளே நுழையும் வேளை, வயதான, உயரமான அய்யங்கார் ஒருவர் எங்களுக்கு எதிரே வந்தார். தார்பாச்சு வைத்து கட்டிய வேட்டியும், உடம்பில் ஒரு துண்டும், கையில் பெரிய குடமுமாக வந்தார். என் தந்தையார் பகுத்தறிவுவாதி. எனவே இதைக் கெட்ட சகுனமாகக் கருதி அங்கலாய்க்கவுமில்லை; வீடு திரும்பவும் இல்லை.

அந்த அய்யங்கார் யார்? பள்ளிக்கூட பிள்ளைகளுக்கு குடிநீர் ஊற்றுபவர். கிறுத்தவப் பள்ளிகள் உட்பட எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் அய்யரோ, அய்யங்காரோ, ராவோதான் இவ் வேலைக்கு அமர்த்தப்படவேண்டும். இல்லாவிட்டால் பார்ப்பன பிள்ளைகள், தண்ணீர் குடியாமல் தாகத்தோடு தவிக்கவேண்டியிருக்கும்.

எங்கள் அய்யங்கார் எங்கிருந்து குடிநீர் கொண்டு வருவார்? உயர்நிலைப் பள்ளிக்கு வெளியே, வட்டாட்சி அலுவலகத் திடலில் இருந்த, நகராட்சிக் குழாயிலிருந்து. அக்குழாயை சின்ன சாதிக் காரர்கள் தொட்டிருக்கலாமல்லவா? அந்தத் தீட்டை எப்படிக் கழிப் பார் தெரியுமா? பக்கத்திலிருந்த கிணற்றில் இருந்து ஒரு குடம் தண்ணீர் மொள்ளுவார். அதை குழாயின்மேல் கொட்டுவார். நீர் ஊற்றி தீட்டுக் கழித்த பிறகு, குழாயில் தண்ணீர் பிடிப்பார். நிறைந்த குடத்து நீரை பள்ளிக்கூடத்திற்குள்ளே கொண்டுபோய் பானையில்—மன்னிக்கவேண்டும்—பானைகளில் ஊற்றிவிட்டு வரு வார். இதற்குள் யாராகிலும் குழாயைத் தொட்டுத் தீட்டாக்காத படி, பள்ளிக்கூட காவற்காரரை காவல் வைத்துவிட்டுப் போவார்.

இடைவேளையில் மாணவர் நீர் அருந்தச் சென்றால் இரு வரிசைகளில் நிற்கவேண்டும். ஒரு வரிசையில் பார்ப்பனப் பிள்ளை கள், அடுத்த வரிசையில் மற்ற பிள்ளைகள் நிற்கவேண்டும். பார்ப்பன வரிசைக்குத் தனிக் குவளை. மற்றவர் வரிசைக்கு வேறோர் குவளை.

பார்ப்பனர் பானை தனி; இதராள் பானை வேறு. இக்கால தமிழ்நாட்டுப் பிள்ளைகளுக்கு இது கதையாகத் தோன்றலாம். ஆனால், அன்று எங்கும் நடந்த இழிவுபடுத்தும் ஏற்பாடு இது.

பிள்ளைகள் வர வர, எந்த சாதிப் பிள்ளையானாலும் ஒரு வரிசையில் நின்று, தண்ணீர் வாங்கிக் குடிக்கலாமே! முதல் பானை தண்ணீர் தீர்ந்துபோனதும் அடுத்த பானைத் தண்ணீரை ஊற்ற லாமே! பார்ப்பன பானையிலிருந்து பத்து பேர்களுக்கு; அப்புறம் அதை நிறுத்திவிட்டு இதராள் பானையிலிருந்து சிலருக்கு தண்ணீர் ஊற்றுவானேன்? இப்படிக் கேட்கக்கூடும் நீங்கள்.

பார்ப்பனரல்லாதவர்களுக்கு ஊற்றிய நீரின் மிச்சத்தையோ பரிமாறிய உணவின் மிச்சத்தையோ திரும்பப் பாத்திரத்தில் சேர்த் தால் அதிலிருக்கும் நீரும் உணவும் தீட்டுப்பட்டுவிடும், இப்படி கால காலமாக சாத்திரம் கற்றவர்கள் சொல்லுகிறார்கள். அதை ஏற்றுக்கொண்டு அடங்கிக் கிடக்க, கோடிக்கணக்கான கோழைகள் இருந்தார்கள். எனவே, பள்ளிக்கூட அய்யங்கார் தனித் தனி பானைகளிலிருந்து நீர் ஊற்றுவார். குவளைக்கு வெகு உயரத்தி லிருந்தும் ஊற்றுவார்.

மாலை வேளை வீடு திரும்பும்போது, பார்ப்பன சிற்றுண்டிச் சாலைக்குள் நுழைந்தால், காலணா, அரையணாவுக்குத் தின் பண்டம் வாங்கிச் சாப்பிடுவதிலும் ஆசாரம் புகுந்துவிடும். பார்ப் பனர்கள் உண்ணுமிடம் தனி, 'சூத்திராள்' உண்ணுமிடம் என்று தனியாக இருந்த காலமும் எனக்குத் தெரியும். அப்புறம்

'சூத்திராள்' என்பதற்குப் பதில் 'இதராள்' என்று பிரிவினையை அறிவித்து வந்தார்கள்.

நான் படித்த பள்ளிக்கூடம் தனியாருடையது. நான் போன சிற்றுண்டிச்சாலைகள், தனியார் நடத்தியது. தனியார் துறை எல்லாஞ் செய்ய உரிமை பெற்றதல்லவா? அவற்றைத் தள்ளிவிட்டு, மாவட்ட ஆட்சிக்குழுக்களால் நடத்தப்பட்ட, உயர்நிலைப் பள்ளிகளுக்குச் சென்றாலும் இதே நிலைதான். பூனைக்கு யார் மணி கட்டுவது? சாதிக் கொடுமையின் கொம்பை ஒடிக்க யார் வருவார்? சாமி பேரால் செய்த இந்த இழிவுகளை உடைக்க முன் வருவார் இல்லை?

பின்னர் பெரிய சென்னைப் பட்டினத்துக்கு வந்து, விக்டோரியா மாணவர் விடுதியில் நுழைந்தால், அங்கேயும் சாதிச் சனியன் வெகு காலம் ஆட்சி புரிந்தது. மரக்கறி உண்பவர்களைக்கூட இரு பிரிவுகளாகப் பிரித்து வைத்திருந்தார்கள். பார்ப்பனருக்குத் தனிச் சமையல், உணவுக்கூடம். பார்ப்பனரல்லாதவர்களுக்கு வேறு சமையல்; வேறு உணவுக்கூடம்.

முன்னர் நம் நாட்டின் முதுகெலும்புகளான உழவரும் உழைப் போரும்—பெரும்பாலானோர்—எங்கே நுழைந்தாலும் எப்பக்கம் திரும்பினாலும் நீ தாழ்த்தப்பட்டவன், நீ சின்ன சாதி, நீ சூத்திரன் என்று இடித்துக்காட்டும் இழிநிலையே. அத்தனையையும் பொறுத்துக்கொண்டு, கோழைகளாக, அடிமைகளாக, அடிவருடிகளாக, சோற்றுத் துருத்திகளாக வாழ்வதைவிட வேறு வழியில்லை, தன்மானப் பகலவன் ஈ. வே. ராமசாமி எழுந்து ஒளி வீசிக் காய்ச்சும் வரையில்.

### பொருளாதார நிலை

இத்தகைய சமூக அமைப்பின் அடிப்படையில் கிளைத்த அக் காலப் பொருளியல் நிலையை ஆராய்ந்தால், ஈரோடு போன்ற வணிக நகரத்திலும் வீடுகளைவிட குடிசைகளே அதிகம். சிற்றூர்களில் வீடுகள் வெகு சில; குனிந்து நுழையவேண்டிய குடிசைகளோ ஏராளம் ஏராளம். அக்குடிசைகளின் நிலை என்ன? கூறை ஒன்றிருக்கும்; அதைக் கரையான் தின்றிருக்கும். இப்பவோ, சற்று நேரத்திலோ விழக் காத்திருக்கும்.

குடிசைவாழ் மக்களோ வள்ளல் பரம்பரை, ஏழு மாட கோயில் கட்டிய பரம்பரை. அவர்களுக்கு இடுப்பில் கோவணம், தலையில் முண்டாசு. போதாதா இவை?

வீட்டரசிக்கோ, கந்தல் புடவை ஒன்றே ஒன்று. மாற்றுப் புடவை மகராசிகள் நினைக்கவேண்டிய ஒன்று. மார்பை மறைக்க

இரவிக்கை இல்லை என்பது மட்டுமல்ல; கூடாது என்பதே கட்டளை.

உழவன் கணக்குப் பார்த்தால் உழக்கும் மிஞ்சாது. எனவே, அவர்களுக்கு கூழே பாயசம். உழவுக்கு அடுத்தது நெசவு அல்லவா? ஊரார் மானத்தைக் காக்கும் நெசவாளிகளின் நிலை என்ன? ஆறு திங்கள் பாவடி; அடுத்த ஆறு திங்கள் காவடி. ஏன் இப்படி? துணிந்து கேட்க முடியாது. கேட்டுவிட்டால், பூசாரியின் சாபம், புராணிகரின் வசை, ஊராரின் பொல்லாப்பு.

'அது அது, அவன் அவன், வந்த வழி என்று எப்போதோ, எவனோ, எதற்கோ சொன்னானே அதுவே முடிந்த முடிவு; அதை மாற்ற நம்மைப் படைத்த பிரம்மாவாலும் முடியாது' என்று சொல்லும்போது தலையாட்டிக்கிடந்தால், சிலவேளை கஞ்சி ஊற்றுவார்கள்.

குடிமக்களுடைய நீண்ட, தொடர்ச்சியான அலட்சியப் போக்கு அரசியல் அடிமைத்தனத்திற்குத் துணைசெய்தது. புராண காலத்தில், அய்ம்பத்தாறு நாடுகளாக இருந்த இந்தியா, ஆங்கிலேயரும், பிரஞ்சியரும், டச்சுக்காரர்களும், போர்த்துக் கீசியர்களும் இந்திய மண்ணில் கால் எடுத்து வைத்தபோது, எப்படி இருந்தது? தோழமையில்லாத, முடிந்தால் ஒருவர் காலை ஒருவர் வாரிவிடும் அழுக்காறும் வெறுப்பும் பின்னிப் பிணைந்த, நூற்றுக்கணக்கான சின்னஞ்சிறு நாடுகளாகச் சிதறிக் கிடந்தன.

யவனத்திற்கும் ரோமாபுரிக்கும் முத்தும் பவளமும் சந்தனமும் தேக்கும் அரிசியும் ஏலமும் அனுப்பிப் புகழ்பெற்றிருந்த நிலை, உட்பூசலாலும் உள்நாட்டுப் போர்களாலும் குலைந்தது. பறங்கியர் கொண்டுவந்த சோப்பையும் சீப்பையும் கண்டு சொக்கிப் போயினர். அப்பாவிக் குழந்தை, அய்ந்து காசு பஞ்சு மிட்டாய்க்கு கையிலுள்ள அய்ம்பது காசையும் கொடுத்துவிட்டு, ஓடுவதுபோல், நம் 'மன்னர்கள்' அன்னியர் ஊடுருவலுக்கு வழி திறந்துவிட் டார்கள். பிழைக்க வந்தவர்களிடம் உதவிகோரி, தூது அனுப்பி னார்கள், நம் மன்னர்கள். மெல்ல மெல்ல, அன்னிய ஆட்சி வலை இறுகிற்று. தன்னாட்சி தொலைந்தது. ஆங்கில ஆட்சி நிலைத் தது. அவர்கள் தயவில் சில நூறு பொம்மை மன்னர்கள், இந்தி யர்கள், சிறு சிறு திட்டுகளை உறிஞ்சும் உரிமை பெற்றார்கள்.

## ஜமீந்தாரி முறை

சுதேச மன்னர்கள் மட்டுமா உறிஞ்சும் உரிமை பெற்றவர்கள்? இல்லை. ஜமீந்தார்கள் என்னும்மற்றோர் வகை புல்லுருவிகளும்

தழைத்தார்கள். ஜமீந்தாரி முறை ஆங்கிலேயர் கண்டுபிடித்த தல்ல. ஆனால், அவர்கள் ஆட்சிக் காலத்தில் அது தழைத்தது. அம்முறை என்ன?

என்றோ ஓர் நாள், எவனோ ஓர் முரடன், சிற்றரசுகளுக்கிடையிலோ, பேரரசுகளுக்கிடையிலோ ஏற்பட்ட போருக்கு ஆள் சேர்த்துக்கொண்டுபோயிருப்பான். ஓர் அரசிற்குள் நடந்த உள் நாட்டுக் குழப்பத்தை, கலாட்டாவை அடக்க, அடியாட்களோடு போய் இருப்பான். இன்னும் எது எதற்கோ, சொல்லக்கூடிய உதவிகளும் சொல்லக்கூடாத உதவிகளும் செய்தவர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு எப்படிக் கைமாறு செய்தார்கள்? அரசனோ, குறுநில மன்னனோ, தனக்குரிய சில ஊர்களையோ பல ஊர்களையோ, உதவி செய்தவர்களுக்கு நன்கொடையாக அளிப்பர். சிலவேளை அவ்வூர்கள் வரியிலியாகவே வழங்கப் படும். ஆண்டுக்கு ஆண்டு, குறிப்பிட்ட சிறு தொகையொன்று மன்னனுக்குக் கப்பமாகக் கட்டிவிட்டு, முடிந்த அளவு வரியை மக்களிடமிருந்து சுரண்டிக்கொள்ளும் உரிமையோடு ஜமீந்தாரி கொடுக்கப்படுவது உண்டு. பல ஜமீந்தார்கள் கால ஓட்டத்தில் அட்டைகளாகிக் குடிமக்களைப் பெருமளவு உறிஞ்சினார்கள். வன்முறைத் தலைவர்களாகி, காட்டு தர்பார் நடத்தினார்கள். ஜமீந்தார்கள் அட்டகாசம் சொல்லமுடியாது.

ஆங்கிலேயரின் நேரடியில் இருந்த பகுதிகளின் நிலை என்ன? பண்ணையார் ஊர்களில், மற்றவர்கள் அடிமைகள், ஊமைகள்; பிழைக்கத் தெரிந்த கணக்குப்பிள்ளையும், மணியக்காரரும் அவரோடு கூட்டணி அமைத்துவிடுவார்கள். பலவேளை அது உடைக்க முடியாத கூட்டணியாகவே தொடரும்.

வணிகர்களைப் பார்ப்போம். வணிகர் ஒற்றுமை மக்களைச் சுரண்டும். இந்திய வணிகர் ஆங்கில வணிகரோடு கூட்டாகிவிட்டால் சுரண்டலோ சுரண்டல். கேட்கமுடியாது. தப்பித்தவறி விவகாரம் எழுந்தால், வெள்ளையர்களின் 'கிளப்பு'களில் முடிவாகிவிடும்.

பயிர்த் தொழில் நிலை? இவ்வாண்டு காய்ந்துபோகும். அடுத்த ஆண்டு புயலால் அழியும். மூன்றாம் ஆண்டு பூச்சி நாசம். எப்போதோ ஓராண்டு விளைச்சல் வீடு வந்து சேரும். பஞ்சம், பட்டினி, சாவு, நாடு தழுவிய கேடுகள்; அடுத்தடுத்து வரும் கேடுகள், காருண்ய ஆட்சி, வாழவைத்த அவரித் தொட்டிகளைக் கஞ்சித் தொட்டிகளாக மாற்றும். ஊத்தும் கஞ்சியிலும் மோசடி செய்வோர், இன்றிருப்பதைப்போல் அன்றும் இருந்தார்கள். எனவே, பொதுமக்கள், 'கஞ்சி குடிப்பதற்கிலார்—அதன் காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்.' பட்டினி, இளைப்

பாக மாறும். இளைப்பு, நோய்களின் தாயகம். ஆகவே, 'எண்ணிலா நோயுடையார்—இவர் எழுந்து நடப்பதற்கும் வலிமை யிலார்.'

இப்படி அல்லல்பட்டு, நம் பொதுமக்கள், 'கண்ணிலாக் குழந்தை கள்போல்—பிறர் காட்டிய வழியிற் சென்று மாட்டிக்கொள்வார்.'

### நிறவெறி

வறுமையால் வாடும் இந்தியர்களை ஆளும் இனமாகிய வெள்ளையர்கள் நிற அடிப்படையில் இழிவுபடுத்தினார்கள்.

இந்தியர், ஆங்கிலேயர் ஆட்சியில் சிக்கி, அவர்களுடைய அட்ட காசங்களையும் ஆணவ நடவடிக்கைகளையும் சுரண்டலையும் பொறுத்துக்கொண்டு, ஊமையர்களாக, குருடர்களாக, புழுக் களாக இருந்து வந்தார்கள். தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வரும் நோயான தலைவிதிக் கொள்கை, நம்மிட மிருந்து ஆன்மையை, தீமைகளைக் கண்டு கொதிக்கும் இயற்கை யான தன்மையை, அழித்துவிட்டதுபோலும்.

ஏறத்தாழ தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு, சென்னை மாநகரில் கிரிக்கெட் விளையாட்டுப் பந்தயம் நடந்தது. சென்னை மாநிலக் கல்லூரிக் குழுவும், பெங்களூர் மையக் கல்லூரிக் குழுவும் எதிர் எதிராக விளையாடினார்கள். அவ்விளையாட்டைக் காண, சில 'இந்திய பெரிய மனிதர்'களுக்கு அழைப்பு வந்தது. எவர் பெயரில் அழைப்பு? சென்னை விளையாட்டு மன்றத் தலைவர், உறுப்பினர்கள் பெயரில் அழைப்பு அச்சடிக்கப்பட்டிருந்தது.

பெரிய இடத்து—ஆளும் இனத்து அழைப்பைத் தள்ளமுடியுமா? காலை விளையாட்டிற்குச் சில இந்தியர் சென்றிருந்தார்கள்; சிம்காணா மண்டபத்தில் உட்கார்ந்து விளையாட்டைப் பார்த் தார்கள். இந்த சமத்துவம் சில மணிகளில் பறந்துவிட்டது. விளையாட்டு மன்றச் செயலர், திரு. சாட்டர்டன் வந்தார். ஆணையிட்டார். என்ன ஆணை?

இந்தியப் பார்வையாளர்கள் மண்டபத்தில் இருக்கக்கூடாது. தொலைவில் போடப்பட்டுள்ள கூடாரங்களுக்குப்போய் அங் கிருந்து விளையாட்டைப் பார்க்கட்டும் அல்லது மர நிழலி லிருந்து காணட்டும் என்பது வெள்ளையரின் ஆணை? இதற்குக் காரணஞ் சொன்னாரா? சொன்னார், என்ன காரணம்?

பிற்பகல், வெள்ளைக்கார ஆண்களும் பெண்களும் இவ் விளையாட்டைப் பார்க்க வரலாம். அவர்களோடு சுதேசி ஆண்கள் இருப்பது ஆகாது.

இன ஒதுக்கல் எப்படி? நம் நாட்டில் நாம் ஒதுங்கிப் போக வேண்டும். இதைப்பற்றி அப்போதைய 'இந்து' நாளிதழ் மனக் குறைபட்டது. மனக்குறை நியாயம். எல்லா வகை இன ஒதுக்கலும் கண்டனத்துக்கு உரியதே.

அதே திராசை இந்தியர்களுக்குள்ளும் பயன்படுத்த வேண்டாமா? நாம், நெடுநாளைய பழக்கவழக்கம், பெரியவர்கள் வழி, சமயக் கொள்கை, சாத்திரத்தின் கட்டளை, என்று சொல்லி ஒருவரோடு ஒருவர் புழங்க முடியாமல், ஒருவரை ஒருவர் நெருங்க முடியாமல், கோடிக்கோடி மக்களை 'தீண்டத்தகாதவர்' என்று பிரித்து ஒதுக்கி வைத்திருந்தோமே அது எந்த நீதியின்பாற் பட்டது? இன்றும் சாதி முனை மழுங்கிற்றே ஒழிய அது அடியோடு ஒழியவில்லையே! இதைப்பற்றி குமுறவேண்டாமா? இதைத் தகர்க்கவேண்டாமா?

1893ஆம் ஆண்டு; அக்டோபர் திங்கள் நான்காம் நாள். குண்டக்கல், ஓர் எளியவரின் தியாகத்தைப் பதிவு செய்தது.

நீலகிரியில் உள்ள வெல்லிங்டனில் இருந்து சில ஆங்கிலேயப் படை வீரர்கள் அணி செகந்திராபாத்திற்குச் சென்றுகொண்டிருந்தது. வழியில் குண்டக்கல்லில் தங்கி இளைப்பாறினார்கள். படை வீரர்களில் சிலர், ஊரைச் 'சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்போது, இரு இளம் பெண்கள், தங்கள் கிராமத்திற்குத் திரும்பிப் போவதைக் கண்டார்கள். படை வீரர்கள் சிலர் நாய்களானார்கள். அப் பெண்களைத் துரத்திப் பிடிக்க ஓடினார்கள். வெள்ளை சிப்பாய்கள் துரத்த, அவ்விரு இளம் பெண்களும் ஓடோடிப்போய் வழியிலிருந்த இரயில்வே வாசல் காப்போரிடம் தஞ்சமடைந்தார்கள். அவர் நொடிப்பொழுதில் அப் பெண்களை தன் அறையில் புகவிட்டு, கதவைப் பூட்டி விட்டார். துரத்தி வந்த வெள்ளை வெறியர்கள், அம்பண்ணா என்ற அக் காவலாளியைப் பார்த்து, அறையைத் திறந்துவிடும்படி மிரட்டினார்கள். காவலாளி, மசியவில்லை. வெள்ளையரில் ஒருவரான கார்ப்பரல் ஆஷ்போர்டு, தனது துப்பாக்கியை எடுத்து அம்பண்ணாவைச் சுட்டுவிட்டார். குண்டடிபட்ட அம்பண்ணா இறந்துவிட்டார்.

ஆஷ்போர்டு கைது செய்யப்பட்டார். குற்றஞ்சாட்டப் பட்டார். உயர் நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது. முடிவு? 9-2-1894 அன்று ஆஷ்போர்டை விடுதலை செய்துவிட்டது, உயர் நீதி மன்றம். ஆளும் இனத்தைச் சேர்ந்த ஆஷ்போர்டு தற்காப்புக்காக, வெறும் கைத்தடி மட்டும் வைத்திருந்த காவலாளியைச் சுட்டார் என்ற வாதத்தை ஏற்றுக்கொண்டு, அக் கொலைகாரக்

காமுகன் விடுதலை செய்யப்பட்டான். இது நீதி தேவனின் மயக்கம் என்றால் தவறா?

'சுதேசிகளுக்கு எங்கே பாதுகாப்பு. ஆளும் ஆங்கிலேயருக்குத் தனி நீதியா?' என்று அப்போது 'இந்து' நாளிதழ் கண்டித்தது.

அதிகார வர்க்கத்தின் எதிர்ப்பையும் சூழ்ச்சிகளையும் முறியடித்து, அம்பண்ணா குண்டடிபட்ட இடத்திற்கு அருகில் ஒரு துண்டு நிலத்தை வாங்கி, அங்கே அவருக்கு நடுகல் நாட்டி சிறப்பித்தார்கள். இதை முன்னின்று செய்தவர், குத்தி கேசவ பிள்ளை ஆவார்.

### மற்றும் சில சான்றுகள்

1911ஆம் ஆண்டு ஜி. எச். பி. ஜேக்சன், ஐ.சி.எஸ். என்பவர் செங்கற்பட்டின் இணை குற்றவியல் நடுவராக இருந்தார். அவர் ஒருநாள் ஈருருளியில் போய்க்கொண்டிருந்தபொழுது ஏழு வயது மாணவன் ஒருவன் அவரைப் பார்த்து 'காலை வணக்கம்' என்று கத்தினானாம். உரத்த குரலில் சொன்னதால் 'துரை'க்கு மரியாதை குறைந்துவிட்டது. அப்பாலகனை, வழக்கு மன்றத்திற்கு இழுத்து வரச் செய்து, அய்ந்து ரூபாய் அபராதம் அல்லது ஒரு வாரக் கடுந் தண்டனை என்று தண்டித்தார். அதிகார போதை பொல்லாதது ஆயிற்றே.

சென்னை மாகாணத்தில் அரசுப் பண்ணை ஒன்றில் ஓர் இந்தியக் கிறுத்தவர் வேலை பார்த்து வந்தார். அவர், வெள்ளைக்காரர்களைப்போல 'ஹாட்' அணிவது வழக்கம். வேளாண்மைத் துறையின் இயக்குநர் திரு எம். ஈ. கௌச்மேன் என்பவர் இதைப் பார்த்துவிட்டார். இந்தியன் இப்படி வருவது பிடிக்கவில்லை. 'ஹாட்'டை விட்டுவிட்டு, தலைப்பாகை அணிந்து வரும்படி சொன்னார். இந்திய ஊழியர் கீழ்ப்படியவில்லை. விளைவு? அந்த இந்திய கிறுத்தவர் பதவி இறக்கம் செய்யப் பட்டார்.

1919ஆம் ஆண்டில் ஜனவரி திங்களில், வெள்ளையர் இறுமாப்பைக் காட்டும் நிகழ்ச்சி ஒன்று நடந்தது.

பீகார் அரசின் செயலாளர்களில் ஒருவர், திரு. பிராங்கிளேடன், ஐ.சி.எஸ். என்பவர். அவர் ஒரு முதல் வகுப்பு ரெயில் பெட்டியில் ஏறினார். அப்போது ஓர் இருக்கையில் இந்தியர் ஒருவர் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தார். தூங்கும் இந்தியரைக் கண்டதும் ஆளும் வர்க்கத்தாருக்கு கோபம் பொங்கிற்று. நேரே தூங்குபவரிடம் சென்றார். அவருடைய இடது தொடையின்

மேல் உட்கார்ந்தார். தூங்கியவர் விழித்துக்கொண்டார். அவர் யார்? கல்கத்தா உயர்நீதிமன்ற நடுவராக இருந்து, ஓய்வுபெற்ற, திரு. சையத் ஆசன் இமாம் ஆகும். இன்னார் என்று தெரிந்ததும், அவரிடம் மன்னிப்புக் கோரினார். அதிகாரம் யாரையும் நிலை தடுமாறச் செய்யும்போலும்.

இந் நிலையில் சிலர் படித்து பட்டம் பெற்றார்கள். படித்த இந்தியர்களுக்கும் நிர்வாகத்தில்—ஆட்சியில் அல்ல—சில பதவிகள் வேண்டும் என்னும் எண்ணம் எழுந்தது. இக் கருத்தினை தனித் தனியே வெளியிடுவதைவிட அமைப்பின் வழியாக வெளியிடுவது பலன் அளிக்கக்கூடும் என்று கருதினார்கள். 'ழூம்' என்னும் ஆங்கிலேயர் தலைமையில் சென்ற நூற்றாண்டில் அனைத்திந்திய காங்கிரசு முளைத்தது; வளர்ந்தது; அப்போதைக்கப்போது அனைத்திந்திய காங்கிரசு மாநாடாகக் கூடியது. முதலில், நிர்வாகப் பதவிகளில் பங்கு கேட்டது. காலவோட்டத்தில் ஆட்சியிலும் பங்கு கேட்கும் நிலைக்கு உருவாகியது. கோரிக்கை வளர்ந்தது. தன்னாட்சி உரிமை கோருவதாக வளர்ந்தது.

'விடுதலை எங்கள் பிறப்புரிமை'; இது, துடிப்புடையோர் முழக்கம்.

'பிரிட்டிஷ் பேரரசில் சுயாட்சி உடைய இந்தியா'—மிதவாதி களின் இம் முழக்கமும் கேட்டது.

இரு பிரிவினருக்கும் அரசியல் செல்வாக்கிற்குப் போட்டி கடுமையாக இருந்தது.

### பதவிகளில் பாகுபாடு

நிர்வாகப் பதவிகளில் இந்தியர்கள் பெற்ற இடங்கள் பெருகிக் கொண்டே இருந்தன. ஆனால் இந்திய சமுதாயத்தில் உள்ள எல்லாப் பிரிவினருக்கும் எட்டவில்லை. பெரிய பதவிகளெல்லாம் மிகச் சிறுபான்மையான பார்ப்பனர்களோடு முடங்கிவிட்டன.

1912ஆம் ஆண்டில் பல்வேறு பதிவுப் பெற்ற அரசாங்க பதவி களில் பார்ப்பனர்களுக்கும் மற்றவர்களுக்கும் எத்தனை இடங்கள் கிடைத்திருந்தன என்பதை பின்வரும் பட்டியல் பளிச்சென்று காட்டுகிறது.

## பட்டியல் 1

### 1912இல் முக்கிய அரசு பதவிகளின் பகிர்வு

| | எண்ணிக்கை | மக்கள் தொகையில் ஆண்கள் விழுக்காடு | பதவிகளில் விழுக்காடு |
|---|---|---|---|
| **துணை ஆட்சியாளர்** | | | |
| பார்ப்பனர்கள் | 77 | 3·2 | 55 |
| பார்ப்பனரல்லாத இந்துக்கள் | 30 | 85·6 | 21·5 |
| முஸ்லீம்கள் | 15 | 6·6 | 10·5 |
| இந்திய கிறுத்துவர்கள் | 7 | 2·7 | 5 |
| அய்ரோப்பியர்களும் யூரோசியர்களும் | 11 | 0·1 | 8 |
| **சார்-நீதிபதி** | | | |
| பார்ப்பனர்கள் | 15 | | 83·3 |
| பார்ப்பனரல்லாத இந்துக்கள் | 3 | | 16·7 |
| முஸ்லீம்கள் | — | | |
| இந்திய கிறுத்துவர்கள் | — | | |
| அய்ரோப்பியர்களும் யூரோசியர்களும் | — | | |
| **மாவட்ட முன்சிப்** | | | |
| பார்ப்பனர்கள் | 93 | | 72·6 |
| பார்ப்பனரல்லாத இந்துக்கள் | 25 | | 19·5 |
| முஸ்லீம்கள் | 2 | | 1·6 |
| இந்திய கிறுத்துவர்கள் | 5 | | 3·9 |
| அய்ரோப்பியர்களும் யூரோசியர்களும் | 3 | | 2·4 |

SOURCE: Great Britain, Parliamentary Papers, Vol. XXI (*Reports from Commissionars, etc*., Vol. XI), "Royal Commission on the Public Services," Appendix Vol. II, Minutes of Evidence relating to the Indian and Provincial Services taken in Madras from the 8th to the 17th of January, 1913, Cd. 7293, 1914, pp. 103,104.

1912ஆம் ஆண்டு, டெப்டி கலெக்டர்களில் நூற்றுக்கு அய்ம்பத்தைந்து பேர்கள் பார்ப்பனர்கள். சப் ஜட்ஜ்களில் நூற்றுக்கு எண்பத்து மூன்று விழுக்காட்டினர்கள், பார்ப்பனர்கள். டிஸ்டிரிக்ட் முன்சீப்களில் நூற்றுக்கு எழுபத்து மூன்று பேர்கள் பார்ப்பனர்கள். பார்ப்பனரல்லாதாருக்கு எவ்வளவு பங்கு?

நூற்றுக்கு தொண்ணூறு மக்களாக இருந்த பார்ப்பனரல்லாதவர்களுக்கு:

| | |
|---|---|
| டெப்டி கலெக்டர் பதவிகளில் | 21·5% |
| சப் ஜட்ஜ்களில் | 16·7% |
| டிஸ்டிரிக்ட் முன்சீப்களில் | 19·5% |

1914இல், தாசில்தார், டெப்டி தாசில்தார் பதவிகளில், 349 இடங்களில் பார்ப்பனர்களும், 154 இடங்களில் பார்ப்பனரல்லாத இந்துக்களும் இருந்தார்கள். அதுபற்றிய பட்டியலைப் பார்ப்போம்.

பட்டியல் 2

1917இல் முக்கிய அரசு பதவிகளின் பகிர்வு

| பதவி | பார்ப்பனர் | பார்ப்பனரல்லாத இந்துக்கள் | இந்திய கிறுத்துவர் | முஸ்லீம்கள் | பார்ப்பனரல்லாதார் விழுக்காடு |
|---|---|---|---|---|---|
| தாசில்தார் (சிரஸ்ததார் உட்பட) | 135 | 69 | 14 | 12 | 41·3 |
| துணை தாசில்தார் | 214 | 65 | 21 | 10 | 30·9 |
| ஆங்கில தலைமை எழுத்தர் | 16 | 5 | 2 | 1 | 33·3 |
| மாவட்ட வழக்கு மன்ற சிரஸ்ததார் | 13 | 6 | 1 | 2 | 40·9 |
| சார்பு வழக்கு மன்ற சிரஸ்ததார் | 15 | 4 | 1 | — | 25 |

ஆதாரம்: எம்.ஆர்.ஓ. உள்துறை (பலவகை) சாதாரண இணைப்பு. அரசு ஆணை.

மாவட்ட வழக்கு மன்றங்களில், கோட்ட வழக்கு மன்றங்களில், ஆங்கில தலைமை எழுத்தர், ஷெரிஸ்ததார் என்ற பதவிகள் இருந்தன. அவற்றிலும் எல்லா சாதிகளுக்கும் சரியான பங்கு கிடைக்கவில்லை. சமுதாயத்தில் நூற்றுக்கு மூவராகிய பார்ப்பனர்களுக்கு 44 பதவிகளும் மிகப் பெரும்பாலோருக்கு 16 பதவிகளும் கொடுக்கப்பட்டிருந்த கொடுமையைக் கண்டார்கள்.

ஒரு காலகட்டத்தில் நெல்லூர் மாவட்ட தண்டல் நாயகரின் அலுவலகத்தில் ஓர் பார்ப்பனர், தலைமை எழுத்தராகப் பணி புரிந்துகொண்டிருந்தார். அது ஒட்டகத்திற்கு இடம் கொடுத்தது மாதிரி இருந்தது. அவர் விரைவாக, எங்கெங்கோ இருந்த பங்காளிகளை, தாயாதிகளை, நெருக்கமான உறவினர்களை மாவட்ட, வட்ட வருவாய்த் துறைகளில் நுழைத்துவிட்டார். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நாற்பத்தி மூவர் இப்படி இடம் பெற்று விட்டார்கள். மாவட்ட நிர்வாகம், அந்த ஒரே குடும்பத்தின் விருப்பு வெறுப்புப்படி நடந்தது. இப்படி சில ஆண்டுகள் நடந்த பிறகே, அந்த மாவட்டத் தண்டல் நாயகம் விழித்துக்கொண்டார்.

நீதிக் கட்சி தோன்றுவதற்கு முன்னரே, ஆதி திராவிடர்கள் ஓரளவு விழித்துக்கொண்டார்கள். வெள்ளைக் கிறுத்தவப் பாதிரிகள், அவர்களில் பலருக்கு எழுத்தறிவு கொடுத்தார்கள். அது மட்டுமா? தங்கள் வீட்டுச் சமையல்காரர்களாக வைத்துக்கொண்டார்கள். தங்கள் வீடுகளில் 'தாழ்த்தப்பட்டோர்' தாராளமாகப் புழங்கவிட்டார்கள். அதைக் கண்டபோது, சொந்த நாட்டுக்காரர்கள், கொடுமையாக நடத்துவது உள்ளத்தில் தைத்தது.

காவல், தோட்ட வேலைகளே, தங்களுக்கு ஒதுக்கப்படுவதைப் பற்றி ஆதி திராவிடர்கள் குறைபட்டார்கள். சென்ற நூற்றாண்டின் கடைசி பத்தாண்டுகளில், 'தாழ்த்தப்பட்டவர்கள்' பெருமளவு இல்லாவிட்டாலும் ஓரளவு விழிப்புற்று, தங்கள் உரிமைகளைப்பற்றி பேசத் தலைப்பட்டார்கள். அவர்களுக்காக 'பறையன்' என்னும் தமிழ் இதழும் நடந்தது.

### நீதிக் கட்சி தோற்றம்

பதவிகளை இழந்து பரிதவிக்கும் பொதுமக்கள், பல்வேறு காரணங்களால் விழிப்படையவும் பதவிகளில் பங்கு கேட்கவுமான நிலை உருவானபோது, நீதிக் கட்சி தோன்றியது. அதைத் தோற்றுவித்த டாக்டர் டி. எம். நாயரோ, திரு. தியாகராயச் செட்டியாரோ, டாக்டர் நடேசனாரோ, பிற தலைவர்களோ, தங்கள் வீட்டுப் பிள்ளைகள் பிற்காலத்தில் வேலையில்லாது திண்டாடுமே என்று அஞ்சி, அதற்கு முன்னேற்பாடாக நீதிக் கட்சியைத் தொடங்கவில்லை.

பங்கா இழுக்கும் வேலையையும் கடைநிலை ஊழியத்தையும் மற்றவர்களுக்கு விட்டுவிட்டு, எழுத்தர் முதல் நீதிபதிவரை ஒரு சிறு பிரிவினர்கள் அதாவது பார்ப்பனர்கள் ஆக்கிரமித்துக்கொண்டதோடு அவர்களில் சிலர் ஆட்டியபடியே எல்லாம் நடக்கும் நிலை அவர்களுடைய பிறவிப் பெருமையை அகந்தையாக்கிவிட்டது. இத்தனையும் சேர்ந்து நீதிக் கட்சியை வளர்த்தது.

### மாணவன் ஈ.வே.ரா.

இத்தகைய சமூக, பொருளியல், அரசியல் சூழலில் ஈ. வே. ராமசாமி பிறந்து வளர்ந்து உருவானார்.

வழி வழி செல்வராக வருவோர்க்கு இருக்கும் பக்தியைக் காட்டிலும் புதுச் செல்வம் பெற்றோர்க்கு பக்தி மேலிடல் இயல்பு. வேங்கடப்பர் குடும்பம் இதற்கு விலக்கல்ல. அவர் வீட்டை நாடி பரதேசிகள், துறவிகள், புலவர்கள், புராணீகர்கள் வருவது நாள் தவறாத நிகழ்ச்சி. இத்தகையோர் கூடினால் ஊமையாக இருப்பார்களா? இருக்கமாட்டார்கள். வாழ்த்துக்கள், வாதங்கள்; அறிவுரைகள், விளக்கவுரைகள், ஒரே சொற்றொடர்க்கு வெவ்வேறு பொருள்கள், இப்படியாகக் கொட்டுவார்கள். சின்னஞ்சிறு ராமசாமியின் காதுகளில் இவை வீழ்கின்றன. வீழ்ந்த சொற்கள், கருத்துகள், எண்ண அலைகளை எழுப்புகின்றன; அடுத்தடுத்து எழுப்புகின்றன.

இந்நிலையில் உங்களுக்குத் தெரிந்த குழந்தையை நினைவு படுத்திக் கொள்ளுங்கள். தாய் தந்தையரை, தாத்தாவை பாட்டியை, அத்தையை மாமாவை, எதிர்வீட்டுக் கூட்டாளியை அடையாளம் தெரிந்துகொள்ளும் நிலைக்கு வந்துவிட்டது. கேட்கும் சொற்களின் வேறுபாடுகளை உணரும் தன்மையைப் பெற்று விட்டது. அந்நிலையில் அது என்ன செய்யும்?

புதிய சொற்களின் பொருட்களைத் தெரிந்துகொள்ளத் துடிக்கும், 'சர்க்கஸ்' என்றால் என்ன? நாடகம் என்றால் என்ன? கண்காட்சி என்பது என்ன? இப்படிக் கேள்விமேல் கேள்வி போட்டுத் துளைக்கும். இவற்றோடு நிற்குமா? மேலே பார்க்கிறது. கண்ணுக்கு எட்டாத உயரத்திற்கு வளர்ந்துள்ள மலையைக் காண்கிறது. அது என்ன என்று வியப்போடு கேட்கும். அங்கே போகலாம் என்று நச்சரிக்கும். அங்கே விளையாட இடம் இருக்குமா? அங்கேயும் பஸ்ஸும் லாரியும் பாய்ந்து வருமா? மலை உயர்ந்து நிற்பானேன்? கடல் தாழ்ந்திருப்பானேன்? இப்படி கேள்விமேல் கேள்வி அடுக்கிக்கொண்டே போகும்.

விளக்கைத் தொடாதே சுடும் என்று தாய் எச்சரிக்கிறாள். பெரும்பாலான குழந்தைகள் அப்படியே அடங்கிக் கிடக்கின்றன. எப்போதோ ஓர் முறை துடுக்குக் குழந்தையொன்று திறந்த விளக்கைத் தொட்டுவிட்டுத் துடிக்கிறது. அதேபோல், வீட்டுக் கொசு, கடித்தால் கதறும் குழந்தை, கொசுவை அண்டவிடக்கூடாது என்று தெரிந்துகொள்ளும்.

இப்படி, ஏன், எப்படி, எதனால் என்று கேட்பதன் வாயிலாக அறிவிலே வளரும் குழந்தைக்கு வீட்டிலுள்ள முதியோர், புதிய ஆணையொன்றை இடுகிறார்கள். இதோ வீடு பெருக்கும் வேலைக் காரியைத் தொடாதே; அவள் கழுவிவைத்த பாத்திரத்தை எடுக் காதே; நான் தண்ணீர் ஊற்றிப் புனிதப்படுத்திய பிறகு தொடு; அந்த பெண் பிள்ளை கையில் தண்ணீர் குடிக்காதே. சோறு உண் ணாதே. இப்படி, செய்யக்கூடாத, தொடக்கூடாதவற்றின் பட்டியல் வளர்கிறது. முதல் இரண்டொன்றை அச்சத்தாற் கேட்டுக்கொண்ட குழந்தையும் பின்னர் கேள்வி கேட்கத் தலைப் படும். கொசு, என்மேல் உட்கார்ந்ததும் கடிக்கிறது; உடனே எனக்கு வலிக்கிறது. வேலைக்கார அம்மா என்னைத் தொட் டால் அப்படி வலிக்கவில்லை; அப்படியிருக்க அந்த அம்மாவை ஏன் தொடக்கூடாது?

அன்றைக்கு தம்பி, பூரானை மிதித்துவிட்டான். அது வெடுக் கென்று கடித்துவிட்டது. வலியால் நெடுநேரம் அலறினான்.

'அப்படி, அந்த அம்மாள் கைபட்டதால் எந்தக் குழந்தைக்கு விஷமேறிற்று; வலியெடுத்தது. அந்த அம்மா, தேளா, பூரானா, தொடாமல் போக?'

'வீடு பெருக்கும் அம்மா பேரன்தானே, கிணறு மூழ்கிக் கொடுத் தார். அந்த தண்ணியைத்தானே நாம் குடிக்கிறோம். குடத்தை நாமே இழுத்துக் குடித்தால் தீட்டு இல்லை; அந்த அம்மாள் இழுத்துத் தொட்டுவிட்டால் எப்படித் தீட்டாகும்?' இப்படியாக வகை வகையான கேள்விகளைப்போடுவது குழந்தைகளின் இயல்பு. அவை, இடக்கான கேள்விகளைக் கேட்டு திண்டாட வைப்பது, நம் பட்டறிவின்பாற்பட்டதே. இவை மதிநுட்பத்தின் அடையாளங்கள்; போக்கிரித்தனத்தின் வெளிப்பாடுகள் அல்ல. ஆயினும் பொறுமைக் குறைவாலும் திறமைக் குறைவாலும் முதிய வர்கள், குறுக்கு வழியே பாய்கிறார்கள். அடக்கி வளர்க்கத் தலைப்படுகிறார்கள். வாயடைப்பதே வளர்ப்பு முறையாக நினைத்து விடுகிறார்கள்.

'சும்மா! சொல்வதைக் கேட்டுக்கொண்டிரு. தொண தொண வென்று கேட்டுத் தொல்லைப்படுத்தாதே. இன்னொரு தரம் கேட்டே, பளார் பளார் என்று . . .' சொற்றொடர் முடியாது. ஆனல், குழந்தை புரிந்துகொள்ளும். மெல்ல, மெல்ல, எதைச் சொன்னாலும் பதிந்துகொள்ளும் பதிவு நாடாவாக மாறிவிடும். ஆல்போல் தழைக்கவேண்டிய அறிவு, அருகுபோல் குன்றிக் கிடக்கும்.

ஓரோர் வேளை, மிரட்டலுக்கும் அஞ்சாத, அடி உதையையும் பொருட்படுத்தாத, தற்சிந்தனை வற்றாத, சிலர் வளர்வதுண்டு.

காரிருளைப் பிளந்துகொண்டு, வெளிவந்து, சுடர்விடும் பகலவனை ஒப்பார் அத்தகையோர். ஈ. வே. ராமசாமி, அத்தகைய ஒருவராக விளங்கினார்.

ஈ. வே. ராமசாமி, செல்லப் பிள்ளை; செல்வர் பிள்ளை; கட்டுக் கடங்காத பிள்ளை. பள்ளிப் பருவத்திலே, வகுப்பறையில் அளந்து கொடுக்கும் பாடங்களைக் காட்டிலும் தானே தோண்டியெடுத்துச் சேர்த்துக்கொள்ளும் அறிவுச் செல்வத்தின்மேல் நாட்டமுடையவ ராக விளங்கினார். எனவே, வகுப்பறைகளில் கிடைக்கும் கிளிப் பிள்ளை பாடங்கள் குமட்டின. 'இந்தப் பிள்ளைகளோடு மட்டுமே சேர்ந்து உட்காரலாம். அந்தப் பிள்ளைகளிடமிருந்து விலகி உட்காரு,' இக்கட்டளைகள் கசந்தன; பொருளற்றனவாகத் தோன்றின.

'ஆசிரியர் மேல்சாதி. அவர் வீட்டில் தண்ணீர் வாங்கிக் குடிக்க லாம். பள்ளிக்கு அருகில் உள்ள வேதக்காரர்கள், வணிகர்கள் வீட்டில் தண்ணீர் குடிக்கக்கூடாது. ஏனென்றால், அவர்கள் நமக்கு மட்டமான சாதி'—இப்படிப்பட்ட ஆணைகளோடு, ஈ. வே. ராமசாமி தொடக்கப் பள்ளியில் சேர்ந்தார். மேல் சாதி, கீழ் சாதி, என்பதை ஏற்றுக்கொள்ள, ராமசாமியின் மனம் இடந்தரவில்லை. இம்முறை அநீதியானது என்று அந்தப் பிஞ்சு உள்ளத்தில் பட்டது. எப்படியோ, பல்லைக் கடித்துக்கொண்டு, சில நாட்கள் மட்டும் ஆசிரியர் வீட்டில் தண்ணீர் குடிக்கலாம் என்ற கட்டளைப்படி நடந்து பார்த்தார். அம்முறையை பல நாள் பின்பற்ற முடிய வில்லை. ஏன்?

ஆசிரியர் மேல்சாதிக்காரர். ஆகவே, அவர் வீட்டில் நீர் அருந்த லாம் என்பது நாட்டு மரபு. அம்மரபின் விளைவு என்ன? ஈ. வே. ராமசாமி தொட்டுவிட்ட குவளை தீட்டாகிவிட்டது. அதை அப்ப டியே தொட்டால், ஆசிரியர் வீட்டாரும் தீட்டாகி விடுவார்கள். மாற்று என்ன? ஒரு செம்பு தண்ணீரை, ராமசாமி தொட்ட குவளை மேல் ஊற்றினால், தீட்டு ஓடிவிடும். அப்புறம் குவளையைத் தொடலாம். இது இந்தியப் பண்பாட்டின் ஆணிவேர். நம் கலாச் சாரம் என்பது பெரிதும் சாதி ஆசாரந்தானே.

நம்முடைய நெடுநாளைய மரபுப்படி, ஆசிரியர் வீட்டு பெண், ராமசாமி பயன்படுத்திய குவளையை, செம்பு நீரால் குளிப் பாட்டிய பிறகே, அதை எடுத்து வைப்பதை மாணவர் ராமசாமி கண்டார்; நெஞ்சில் தைத்தது; இழிவு பதிந்தது.

'நாம் பலரை இழிவுபடுத்த உரிமைகொண்டாடுவதால், சிலர் நம்மை இழிவுபடுத்திக் காட்டுகிறார்கள். நாம் யாரையும் இழிவு படுத்தக்கூடாது; நம்மை யாரும் இழிவுபடுத்த ஒப்புக்கொள்ளக்

கூடாது. அத்தகைய சமத்துவ நிலையே சரியான நிலை.' இப்படிக் கருதினார், துடுக்குப் பிள்ளை ராமசாமி, கருத்து செயல்பட்டது. தண்ணீர் அருந்தக்கூடாத வீடுகளுக்குச் சென்றார். அவரே, நீரை வாங்கிக் குடித்தார். அதோடு நின்றாரா? இப்புரட்சியை வெளிப்படுத்தினார். பெற்றோரால் தடுக்கமுடியவில்லை. சாதி யொழிப்பு நடவடிக்கை ராமசாமியின் பத்துப் பன்னிரெண்டு வயதிலேயே முளைத்துவிட்டது. அதைக் கிள்ளி எறிய எவராலும் முடியவில்லை; எதனாலும் முடியவில்லை. பள்ளிப் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்க மட்டுமே முடிந்தது.

## பொது வாழ்வு

பாடங்களைக கவனிக்காத ஈ. வே. ராமசாமியை 12 வயதிலேயே வாணிகத்தைக் கவனிக்க ஈடுபடுத்தினர், அவருடைய பெற்றோர். மக்களைக் கவனித்து, அவர்களிடமிருந்து நேரடியாக உலகியல் பாடங்களை கற்றுத் தேர்ந்திருந்த ஈ. வே. ராமசாமி, தொழில் திறன் மிகுந்தவராக வளர்ந்தார். வாணிகத்தைச் செழிக்கச் செய் தார். பலரோடும் கலகலப்பாக, அகந்தையின்றி பழகும் இயல்பினை உடைய ராமசாமியின் புகழ் பரவிற்று. ஈரோட்டு நகரெங்கும் பரவிற்று. அப்பாலும் மணம் வீசியது. அதன் விளைவாக, ஈரோட்டு நகராட்சியின் உறுப்பினர் ஆனார். பிறகு தலைவரானார். தலைவராக சிறப்பு முத்திரையைப் பதித்தார். காவிரி ஆற்றிலிருந்து ஈரோடு நகரத்திற்கு குடிநீர் கொண்டு வந்து வழங்கும் திட்டத்தை நிறைவேற்றினார். ஈரோட்டு வட்டத்திலும் கோவை மாவட்டத்திலும் கோயில் காப்புக் குழுக்கள், வணிகர் மன்றம், பாதுகாப்புக் குழுக்கள் போன்ற பல்வேறு குழுக்களில் உறுப்பினராக, செயலராக, தலைவ ராக, பொதுத்தொண்டு ஆற்றினார். அப்போது சீமான் ராமசாமிக்கு, நாற்பதை நெருங்கும் வலிமைப் பருவம்; சுகத் தைத் தேடி அலையும் வசந்தம்.

ஏறத்தாழ அதே காலகட்டத்தில், தென்னாப்பிரிக்காவில் இன ஒதுக்கக்கொள்கையை எதிர்த்து, இந்தியர்களின் சம உரிமையை நிலை நாட்டப் போராடி, சிறைத் தழும்போடும் புகழொளி யோடும் இந்தியா திரும்பிய மோகன்தாஸ் கரம்சந் காந்தியாரின் தலைமையை தேசிய காங்கிரசு ஏற்றுக்கொண்ட நிலை.

காங்கிரசு அமைப்பு, காந்தியாரின் தலைமையின்கீழ் இவ்வாறு வந்து பிறகு, அது மக்கள் இயக்கமாகத் தழைத்தது. படித்த, பதவிகளின்மேல் கண்ணோட்டமுடைய கூட்டத்தின் கூடாரமாக இருந்த காங்கிரசு, உரிமை உணர்வுடைய இந்தியப் பொதுமக்கள்

இயக்கமாகிவிட்டது. வீறுடைய இயக்கமாகக் கிளைத்துவிட்டது. ஒற்றை நாடியாக விளங்கினாலும் காந்தியெனும் பெருங்காந்தம், நாட்டின் மூலைமுடுக்குகளிலிருந்து எண்ணற்ற 'இரும்பு'களை இழுத்தது. ஈரோட்டின் இரும்பு மனிதர், ஈ. வே. ராமசாமியையும் இழுத்தது. 1919இல் நகராட்சித் தலைவர் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு, ஈ. வே. ரா. அனைத்திந்திய காங்கிரசில் சேர்ந்தார்.

2

# காங்கிரசு பணி

ஈ. வே. ராமசாமியின் பிறவிக் குணங்களில் ஒன்று, எதையெடுத்துக்கொண்டாலும் அதில் ஒருமனப்பட்டு, ஆர்வத்தைப் பொழிந்து, ஆற்றலை ஒருமுகப்படுத்தி, இதைவிடச் சிறப்பாகப் பிறர் எவரும் செய்யமுடியாது என்னும் வகையில் செயல்படுவது ஆகும்.

## ரௌலட் சட்ட எதிர்ப்பு

ஈ. வே. ராமசாமி, காங்கிரசில் சேரும் சமயம், இந்திய நாடு முழுவதும் ஒருவகை கொந்தளிப்பில் மூழ்கியிருந்தது. நாட்டின் நாலா பக்கங்களிலும் விடுதலை உணர்வு கொழுந்துவிட்டு எரிவதைக் கண்ட ஆங்கிலேய 'ஆட்சிக்கு கிலிபிடித்தது. அக்கிலி, அடக்குமுறையைக் கையாளத் தூண்டிற்று. அதற்காக, 'ஆள் தூக்கிச் சட்டம்', 'செய்தித்தாள், சஞ்சிகை, அச்சகக் கட்டுப்பாடு சட்டம்' முதலிய கொடிய சட்டங்கள் உருவாயின. அக்கொடிய சட்டங்களை பொதுமக்கள் வெறுத்தார்கள். ஆயினும், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகப் பொதுமக்களின் உணர்வுகளைப் பொருட்படுத்தாமலே வளர்ந்த பரம்பரைகளைச் சேர்ந்த சிலர் அடக்குமுறைகளுக்குத் துணை நின்றார்கள். தமிழ்நாடும் தன் பங்கிற்கு ஒரு துரோகியை வழங்கிற்று. திரு. குமாரசாமி சாஸ்திரி என்பது அவர் பெயர். அவரும் அவருடைய சகாக்களுமாகச் சேர்ந்து உருவாக்கிய 'ரௌலட்' சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்க, காந்தியார் நாளொன்றைக் குறித்தார். குறிப்பிட்ட நாளன்று நாடு முழுவதும் கண்டனக் கூட்டங்கள் நடந்தன.

பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த அமிர்தசரஸ் என்னும் நகரில், ஜாலியன் வாலாபாக் என்னும் பூங்கா ஒன்று இருந்தது. அதன் மூன்று பக்கங்களிலும் உயர்ந்த சுவர்கள். ஒரே பக்கந்தான் நுழைவாயில், அப்பூங்காவில், ஏராளமான பொதுமக்கள் கண்டனம் தெரிவிக்கக் கூடினார்கள்.

அந்நகரின் சட்டம் ஒழுங்கைக் காக்கவேண்டிய பொறுப்பில் இருந்த ஓடையர் என்னும் இரத்தவெறியன் அங்கு வந்து சேர்ந்

தான்; இருந்த ஒரே நுழைவாயில் வழியாக மக்கள் கலைந்து போவதற்கும் போதிய நேரம் கொடாமல், சுட்டுத்தள்ள கட்டளையிட்டான். வெளியேற முடியாது கூண்டுக்குள் சிக்கிய குருவிகளின் நிலைக்கு மக்கள் ஆளானார்கள். கையலுக்கும் மட்டும் சுட்டுக் கொன்றார்கள்.

அதே அமிர்தசரசில், அனைத்திந்திய காங்கிரசு மாநாடு, மோதிலால் நேருவின் தலைமையின்கீழ் கூடிற்று. ஈ.வே.ராமசாமி, அம்மாநாட்டுக்குச் சென்று பங்குகொண்டார். திரு. வி. கல்யாண சுந்தரம், என். தண்டபாணி ஆகியோரும் உடன் சென்றார்கள். கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் அவ்வமயம் நொடிந்து போயிருந்தார். அமிர்தசரசு வரை சென்று வர பணமில்லை. ஈ. வே. ராமசாமி, கொள்கைப் பற்றாளரை என்றும் கைவிட்டதில்லை. தன்னுடைய செலவில் அறிஞர், தியாகி, வ. உ. சி.யை அழைத்துச் சென்றார்.

எங்கே சென்றாலும் வழக்கு ஒன்று காத்திருக்கும் பெரியாருக்கு. பெரியார் விரும்பியபடி, சென்னை ஆலைத் தொழிலாளர் சார்பில் திரு. தண்டபாணியின் தலைமையில் பத்து பிரதிநிதிகள் சென்றார்கள். தொழிலாளர்கள் சார்பில் யாரையும் பிரதிநிதிகளாக ஏற்கக்கூடாதென்று இங்கிருந்து சென்ற பிரமுகர் ஒருவர் வழக்காடினார். ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பெரியார் போராடினார். இந்த ரகளையில் மோதிலால் நேருவே தலையிட்டு, பெரியார் விரும்பியபடி முடிவு சொன்னார்.

## ஒத்துழையாமை இயக்கம்

1920ஆம் ஆண்டு, காந்தியார், ஒத்துழையாமை இயக்கத்தை உரிமைப்போர் முறையாக அறிவித்தார். அதன் முதற்கூறு, காங்கிரசு இயக்கத்தைச் சேர்ந்த அனைவரும், ஆங்கில ஆட்சியின் தயவால் கிடைத்த பொறுப்புகளை விட்டுவிடவேண்டும். அன்னிய ஆட்சியோடு தொடர்புடைய எப்பதவியையும் ஏற்கக்கூடாது. ஈ. வே. ராமசாமிக்கு, தியாகம் என்பது இளமையிலேயே கைவந்த கலை. பொது நிலையங்களில் வகித்து வந்த இருபத்தொன்பது பதவிகளையும் துச்சமெனக் கருதி, தூக்கி எறிந்துவிட்டார். காங்கிரசுக்கும் இந்தியாவின் விடுதலைக்கும் முழு நேரம் தொண்டாற்ற வேண்டுமென்னும் ஆர்வத்தில், ஆண்டிற்கு இருபதாயிரம் ரூபாய் வருமானம் தந்த—அந்தக்கால இருபதாயிரம் ரூபாய்—வாணிபத்தையும் நிறுத்திவிட்டார். இரவு பகல் பாராது, பெரிய நகரம், சிறிய பட்டிக்காடு என்று பொருட்படுத்தாமல், பம்பரம் போன்று சுழன்று சுழன்று, தற்குறித் தமிழர்களிடையே நாட்டுப்

பற்றை எழுப்பினார்; உரிமை வேட்கையை வளர்த்தார்; தியாக மனப்பான்மையைப் பரவலாகப் பயிரிட்டார்.

ஈ. வே. ராமசாமி செல்வத்தில் வளர்ந்தவர், செல்வக் களியாட்டில் திளைத்தவர், நண்பர்கள் நிறைந்தவர். அத்தகைய ஈ. வே. ராமசாமியின் காங்கிரசுக் கோலம் என்ன கோலம்! பளபளக்கும் வேட்டியெங்கே! ஒளிவிடும் 'கோட்டு' எங்கே! மின்னும் தலைப்பாகை எங்கே!

'இதுவா ஈரோட்டுப் பெரு வணிகர், நகர மன்றத் தலைவர் ராமசாமி! கோணிப்பையோடு போட்டியிடும் முரட்டு கதர் வேட்டி. சொக்காயிலும் சேராத கோட்டிலும் சேராத தொள தொள கதர்ச் சொக்காய். சுமையான கதர் அங்கவஸ்திரம். 'ஏன் சாமி உங்களுக்கு இந்தத் தலைவிதி?' என்று கண்டோர் மலைக்கும் மாற்றுக்கோலம் ஈ. வே. ரா.வுக்கு எளிதாகக் கைவந்துவிட்டது,

ஈ. வே. ராமசாமியின் பேச்சில் உண்மை ஒளிவிட்டது. திண்மை மிளிர்ந்தது. தெளிவு பளிச்சிட்டது. எளிமை பொங்கிற்று. எனவே ராமசாமியைக் கேட்க, நெடுந்தொலைவிலிருந்தும் வந்து ஆயிரக் கணக்கில் குழுமினர். அது காங்கிரசை வளர்த்தது; காந்தியத்தை விதைத்தது; விடுதலைச் சுடரைத் தூண்டியபடியே இருந்தது.

'கேட்டார் பிணிக்கும் தகையவாய் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்.'

நாவன்மைக்கு இப்படி இலக்கணம் வகுத்தான் வள்ளுவன். அதற்கு இந்நூற்றாண்டின் நடமாடும் இலக்கியமாக விளங்கியவர் ஈ. வே. ராமசாமி ஆவார்.

காந்தியத் திட்டங்களில் ஒன்று அன்னிய ஆடைகளை விலக்குதல்; கதரைப் பரப்புதல்.

ஈ. வே. ராமசாமி அன்னிய ஆடைகளைக் களைந்துவிட்டார். கதராடை அணிந்தார். இதை முன்னரே கூறிவிட்டேன். இவர், தன் குடும்பம் முழுவதையுமே கதரணியச் செய்தார். எண்பது வயது மூதாட்டியாக விளங்கிய தனது தாயார் சின்னத்தாய் அம்மாளையும் கதர் அணியவைத்தார். இதைப் பெரியாரின் கொள்கை வெறி என்பதா? தனயனின் தொண்டிற்கு துணை நிற்கத் தயங்காத தாய்மைப் பண்பு என்று போற்றுவதா?

ஈ. வே. ராமசாமி, கதர் மூட்டைகளை, ஊர் ஊராகக் கொண்டு சென்று, விற்பனை செய்தார். சீமான் வீட்டுப் பிள்ளையே வந்து விட்ட பிறகு அக்கால மக்கள் மறுப்பார்களா? கதர் உற்பத்தி செய்ய கதரை அணிய முன் வந்தார்கள். கதர் இயக்கத்தைத் தமிழகத்தில் பரப்பியதில் பெரியாருக்கு சிறந்த பங்கு உண்டு. திருச்செங்கோட்டுக் கதர் ஆசிரமத்தை ஈ. வே. ராமசாமியே திறந்து வைத்தார்.

## தியாகம்

ஒத்துழையாமையின் மற்றோர் கூறு, வழக்கு மன்றங்களை ஒதுக்குதல். ஆங்கில ஆட்சியின்கீழ் நடக்கும் வழக்கு மன்றங்களுக்குச் சென்று வழக்காட மறுப்பதன் வழியாக, நாட்டு மக்கள் தங்கள் உரிமை உணர்வை உலகறியச் செய்யவேண்டுமென்று காந்தியார் விரும்பினார். ஈ. வே. ராமசாமிக்கு அது ஆணை. அவருடைய குடும்பத்திற்கு, கடன் பத்திரம், அடமானப் பத்திரம் ஆகியவற்றின் மூலம் அய்ம்பதாயிரம் ரூபாய்கள்போல் வசூலாக வேண்டும். அவை, காலாவதியாகும் நாட்கள் நெருங்கிக் கொண்டிருந்தன. உடனடியாக, வழக்குத் தொடராவிட்டால், அவ்வளவு பணமும் தொலைந்துவிடும்.

ஈ. வே. ராவுக்கு வேண்டிய, சேலம் விஜயராகவாச்சாரியார் முந்தியவருக்கு ஓர் ஆலோசனையைக் கூறினார். அது என்ன?

'அப்பத்திரங்களை நம்பிக்கையான ஒருவருக்கு மாற்றிக் கொடுத்துவிடுங்கள். அத்தகைய நண்பரை நான் அழைத்து வருகிறேன். அவர் தன் பொறுப்பில் வழக்காடி, சேரவேண்டிய தொகையைப் பெற்றுத் தருவார். உங்களுக்குப் பழி வராது. பணத்திற்கு நான் பொறுப்பு' என்றார், அந்தப் பெரிய மனிதர்.

ஈ. வே. ராமசாமி, கரவு அறியாத பெருந்தகை; எனவே, தானும் வழக்கு மன்றத்திற்குப் போகவில்லை. மற்றொருவர் பெயருக்கு மாற்றிக் கொடுத்து, சூதாகத் தொகைகளைப் பெறவும் இல்லை. வழக்கு மன்றங்களுக்குப் போகக்கூடாது என்ற காந்தியத் திட்டத்தைப் பின்பற்றியதால், ஈ. வே. ராவுக்கு ரூபாய் அய்ம்பதாயிரம் இழப்பு நேரிட்டது. சிக்கனக்காரராகிய பெரியார், தேவைப்படும்போது எவ்வளவு பெரிய இழப்பிற்கும் பின்னடைய மாட்டார் என்பது தெளிவாயிற்று.

## மதுவிலக்கு

மதுவிலக்கு காந்தியத் திட்டங்களில் ஒன்று. அது ஈ. வே. ராவுக்குப் பிடித்தமானது. 1921இல் ஈரோட்டில் ஈ. வே. ரா. கள்ளுக்கடை மறியலுக்குத் தலைமை தாங்கி நடத்தினார். அரசு வழக்கம்போல் 144 தடை உத்தரவைப் போட்டது. பெரியாரின் தொண்டர்களோ அதைப் பொருட்படுத்தவில்லை. எண்ணற்ற தொண்டர்கள் சிறை சென்றார்கள். அதே ஆண்டு நவம்பரில் ஈ. வே. ராமசாமியும், அவரோடு கிட்டத்தட்ட நூறு தொண்டர்களும் சிறைப்பட்டார்கள். பெரியார் ஒரு மாத தண்டனை

பெற்றார். மதுவிலக்குப் போராட்டத்தில்தான் பெரியார் முதன் முறை சிறைப்பட்டார் என்பதை இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

சிறையிலிருந்து வெளிவந்ததும் மீண்டும் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டார். அதோடு மனைவி நாகம்மையாரும், தங்கை கண்ணம்மாளும் ஈடுபடச் செய்தார். இவர்களுடன் பல பெண் மணிகளும் மறியலுக்குச் சென்றார்கள். நாகம்மையாரையும் அவருடன் சென்றவர்களையும் சிறைப்படுத்தினால் பதினாயிரக் கணக்கானவர்களைச் சிறைப்படுத்த நேரிடும்; ஈரோட்டின் நிலைமை கட்டுக்கடங்காது என்று அதிகாரிகள் அஞ்சினார்கள். எனவே சென்னையில் உள்ள அரசுக்குத் தந்தி கொடுத்து முன் உத்தரவுப் பெற்று தடையுத்தரவை நீக்கினார்கள். வாய்தா காலம் முடிவதற்குள் தடையுத்தரவை நீக்கியது இதுவே முதன் முறையாகும்.

ஆங்கில ஆட்சிக்கு மண்டையிடி அதிகமாயிற்று. எனவே சர் சங்கரன் நாயரை காந்தியாரிடம் தூது அனுப்பிற்று. அவர்கள் பேசியவற்றில் ஒன்று, ஈரோட்டில் கள்ளுக்கடை மறியலை 'நிறுத்துவதுபற்றியாகும்.

'கள்ளுக்கடை மறியலைத் தொடர்வதா நிறுத்துவதா என் பதைப்பற்றி முடிவுசெய்யவேண்டியவர்கள் ஈரோட்டிலுள்ள நாகம்மாள், கண்ணம்மாள் என்னும் இரு பெண்மணிகளே ஆவார்' என்று காந்தியடிகள் பதில் கூறிவிட்டார். ஏன்?

பொது வாழ்க்கைக் கிளர்ச்சியில் அதுவும் கள்ளுக்கடை மறியலில் பங்குகொண்ட இந்திய மாதர்களில் நாகம்மாளும் கண்ணம் மாளுமே முன்னவர்கள் ஆவார்கள்.

மதுவிலக்குப் போராட்டத்தில் ஈ. வே. ராமசாமி மற்றொரு தியாகமும் செய்யவேண்டியதாயிற்று.

அவர் குடும்பத்திற்குச் சொந்தமான தென்னந்தோப்பை முன்னரே, கள்ளிறக்க விட்டிருந்தார்கள். குத்தகைக்காரருக்கு இழப்பு ஈடு கொடுப்பதாகவும் அதைப் பெற்றுக்கொண்டு கள் ளிறக்குவதை விட்டுவிடவும் ஈ. வே. ரா. வேண்டினார். அரசின் அதிகாரிகள், குத்தகைக்காரரை வேறு பக்கம் நெருக்கினார்கள். ஆகவே குத்தகைக்காரர் ஈ. வே. ராவின் கருத்திற்கு ஒப்பவில்லை. ஆனால் ஈ. வே. ராவோ தோப்பிலுள்ள அய்நூறு மரங்களையும் இரவோடு இரவாக வெட்டி வீழ்த்த ஏற்பாடு செய்துவிட்டார். அதனால் முப்பது நாற்பது ஆண்டுகளின் வருமானம் பாழ். தெரிந்தே, ஈ. வே. ரா. இத் தியாகத்தை மேற்கொண்டார்.

## குருகுலப் போராட்டம்

ஒத்துழையாமை இயக்கத்தில் ஆங்கிலேய ஆட்சியின் கண்காணிப்பில் நடக்கும் கல்வி நிலையங்களைப் புறக்கணிக்கும்படி காந்தியார் பணித்தார். சிற்சில இடங்களில் மாற்று கல்வி நிலையங்கள் தொடங்க முயன்றார்கள். திருநெல்வேலி மாவட்டம் சேரன்மகாதேவி என்னும் ஊரில் காங்கிரசின் நிதி உதவியோடு முன்னணிக் காங்கிரசுக்காரராகக் கருதப்பட்ட வ. வே. சு. அய்யர் பொறுப்பில் குருகுலமொன்று தொடங்கப்பட்டு, நடந்துகொண்டிருந்தது. அக்குருகுலம் எதற்காக நிறுவப்பட்டது? காந்தியடிகளின் கட்டளைப்படி, ஆங்கிலேய ஆட்சியின் இயக்கத்தில் நடந்த பள்ளிகளுக்குப் போகாமல் நின்றுவிடும் சிறுவர்களுக்கு, இந்தியப் பண்பின் அடிப்படையிலான கல்வி அளிப்பதற்காக நிறுவப்பட்டது. உறையுள் பள்ளியான அதில் பார்ப்பன பிள்ளைகளும் பார்ப்பனரல்லாத பிள்ளைகளும் சேர்ந்து படித்தார்கள். பிற்காலத்தில், சென்னை மாநிலத்தின் முதல் அமைச்சராகி, நல்லாட்சி நடத்திய, திரு. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரின் மகனும் சேர்ந்து படித்தார்.

வெளியே இருந்த பீடை, குருகுலத்திற்குள்ளும் நுழைந்துவிட்டது. பார்ப்பனப் பிள்ளைகள் தனியாகவும் மற்றவர்கள் வேறு பந்தியாகவும் உணவருந்தும் இழிவு நடைமுறையானது. தமிழர்கள் அத்தனைபேரும் தடித்த தோலர்கள் அல்லர். எனவே உணவு உண்பதில் பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்று பிரித்து வைப்பதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர்.

அதன் விளைவாக பெரியார், திரு. வி. க., டாக்டர் வரதராசலு ஆகியோர், தனிப் பந்தி முறையை எதிர்த்தும், சமபந்தி உணவு முறையை ஆதரித்தும் போராட்டம் நடத்தினார்கள். வ. வே. சு. அய்யர் அடம்பிடித்தார். குருகுலம் மூடப்பட்டது.

## வைக்கம் போர்

தீண்டாமை, இந்தியாவில் பன்னெடுங்காலமாகத் தொடரும் கொடுமை. புத்தருக்குப் பிறகு எவரும் அதை ஒழிக்க, இயக்கம் நடத்தவில்லை எனலாம். காந்தியத் திட்டத்தில் தீண்டாமையொழிப்பு சேர்ந்திருந்தது. ஈ. வே. ரா. இயற்கையான உந்துதலால் சிறுவயதிலேயே, சாதி வேற்றுமைத் தடைகளுக்கு மாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார். எனவே தீண்டாமையொழிப்புப் பணி, ஈ. வே. ராவுக்கு தித்தித்தது. அதில் அவருக்கிருந்த ஆழ்ந்த பற்றைச் சோதிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

கேரளத்தில் உள்ள வைக்கம் என்னும் ஊரில் கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களில் தாழ்த்தப்பட்டவர்கள் நடக்கக்கூடாது என்பது நெடுநாளைய கட்டுப்பாடாக இருந்து வந்தது. அங்கிருந்த தாழ்த்தப்பட்ட மக்களாகக் கருதப்பட்டவர்கள் சுயமரியாதை உணர்ச்சிகொண்டனர். தெருவில் நடக்கும் உரிமைபெற விரும்பினார்கள். அதற்காக ஒரு சத்தியாக்கிரகத்தைத் தொடங்குவதென்று கேரள காங்கிரசு தலைவர்கள் முடிவு செய்தார்கள். அப்படியே தொடங்கினார்கள். காலஞ்சென்ற ஜார்ஜ் ஜோசப் உள்பட பத்தொன்பது பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். தலைவர் இல்லாத திண்டாட்டத்தால் மறியல் நின்றுவிடும் போலாகிவிட்டது. அந்நிலையில் தமிழ்நாடு காங்கிரசு தலைவர் ஈ. வே. ராமசாமியின் உதவி தேவைப்பட்டது.

ஈடு இணையற்ற தியாகங்களைச் செய்துவிட்டு காங்கிரசில் சேர்ந்த ஈ. வே. ரா., தன்னேரிலாத, காங்கிரசுத் தொண்டு ஆற்றினார். எனவே தமிழ்நாடு காங்கிரசின் குழுவிற்கு ஈராண்டு செயலாளராகவும், ஈராண்டு தலைவராகவும் விளங்கினார். தலைவராகச் சூறாவளிப் பயணஞ் செய்துகொண்டிருந்த ஈ. வே. ராவுக்குக் கேரளப் பகுதியிலிருந்து தந்தி ஒன்று வந்தது. அது, அழைப்புத் தந்தி. ஈ. வே. ரா. எதற்கு அழைக்கப்பட்டார்? தீண்டாமை ஒழிப்புப் போர் நடத்த அழைக்கப்பட்டார். அழைத்தது எவர்? குரூர் நீலகண்ட நம்பூதிரிபாத் என்பவர். 4–4–1924 அன்று அவரிடமிருந்தது அழைப்புத் தந்தி வந்தது. ஒப்புக்கொண்ட நிகழ்ச்சிக்குப் போகாமல் வேறு நிகழ்ச்சிக்குப் போவது, பெரியார் அறியாத பழக்கம். எனவே முன்னரே ஒப்புக்கொண்ட, குளித்தலையில் நடந்த, திருச்சி மாவட்ட மாநாட்டிற்குச் சென்றுவிட்டார்.

'நான் வந்துதான் ஆகவேண்டுமென்றால், நான் புறப்படுகிறேன்' என்று பதில் தந்தி கொடுத்துவிட்டு குளித்தலைக்குச் சென்றுவிட்டார். திரும்பி வந்தபோது, அழைப்புக் கடிதம் காத்திருந்தது. தமிழ்நாட்டு காங்கிரசுத் தலைவர் என்ற நிலையில் கொள்ளை வேலை காத்திருந்தது. எனவே பழைய பதிலையே எழுதினார்.

12–4–1924 அன்று மறுபடியும் நம்பூதிரிபாத் இடமிருந்து தந்தி வந்தது. 'வைக்கம் போராட்டம்பற்றிய பொதுக்கூட்டம் திங்கட்கிழமை நடக்கிறது, கலந்துகொள்ள வேண்டுகிறோம். பதில் தந்தி கொடுக்கவும்.' கொச்சியிலிருந்து மற்றோர் தந்தி வந்தது. திரு. டி. ஆர். கிருஷ்ணசாமி அய்யர், 'ஜோசப் கைது செய்யப்பட்டுவிட்டார். தங்கள் வருகை தவிர்க்கமுடியாதது. உடனே புறப்படுக. கொச்சியில் தங்களுக்காகக் காத்திருப்பேன்' என்று தந்தி கொடுத்தார்.

அன்றே புறப்படுவதாக ஈ. வே. ரா. தந்தி கொடுத்தார். திருச்சூர் புகை வண்டி நிலையத்தில் வந்து காணும்படி நீலகண்ட நம்பூதிரிபாத்துக்கு தந்தி போயிற்று.

ஈ. வே. ரா. புறப்படும் முன், மூன்றாவது தந்தி வந்தது. என்ன சொல்லிற்று?

'நிலைமை மிக மோசமாகிவிட்டது. எல்லாத் தலைவர்களும் கைது செய்யப்பட்டுவிட்டார்கள். பதினெட்டு சத்தியாக்கிரகிகள் உண்ணா நோன்பு மேற்கொண்டுள்ளார்கள். நான் வைக்கத்திற்குப் புறப்படுகிறேன். என்னை உடனடியாகக் கைது செய்யலாம். போராட்டத்திற்குத் தலைமை ஏற்றுக்கொள்ளுங்கள். தந்தி வழி அறிவுரை தருக.'

'தமிழ்நாட்டில் நிறையப் பொறுப்புகள் உள்ளன. இடர்ப்பாடுகளும் நிறைய. எவ்வித தீங்கும் விளைவிக்கக்கூடாத கதர் இயக்கத்திற்குக்கூட எதிர்ப்பும் இடையூறும் கிளம்பியுள்ளது நினைவில் இருக்கிறது. இவற்றையெல்லாம் போட்டுவிட்டு, அங்கே போவதைப்பற்றி தவறாகக் கருதவேண்டாம்.

பக்கத்திலுள்ள கேரளத்தின் அழைப்பை ஆணையாகவே கொள்கிறேன். காந்தியத் திட்டங்களில் முக்கியமான தீண்டாமையொழிப்பில் ஜோசப் போன்ற தலைவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். அங்கே அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது. நிலைமை மிக மோசமாகியுள்ளது. இவை என்னை அங்கே போக வைக்கிறது. நானும் கைது செய்யப்படலாம். அதைப் பொருட்படுத்த மாட்டேன்.

'தலைவர்களே! பிரசாரகர்களே! தொண்டர்களே! அனுதாபிகளே! உடனே வைக்கத்திற்கு வந்து சேருங்கள். வர இயலாதவர்கள் பொருள் உதவி செய்யுங்கள். இப்புனிதப் போராட்டத்தில் பங்குகொள்ளும் அரிய வாய்ப்பினை சிக்கெனப் பற்றுங்கள்' என்ற விளக்கத்தையும் வேண்டுகோளையும் இந்து நாளிதழுக்கு அனுப்பிவிட்டு, வைக்கம் நோக்கிப் புறப்பட்டார் பெரியார்.

வைக்கம், அன்றைய திருவிதாங்கூர் இராச்சியத்தைச் சேர்ந்தது. அந்த இராச்சியத்தின் மன்னர், ஈ. வே. ராவுக்கு மிகவும் வேண்டியவர். கொள்கை என்று வரும்போது, எத்தகைய தாட்சண்யத்திற்கும் கட்டுப்படாத இயல்பினர், ஈ. வே. ரா.

தனக்கு வேண்டிய மன்னருக்குத் தொல்லை கொடுப்பதைப் பற்றி கவலைப்படாது, இங்கே வேலை நிறைய என்று சாக்குச் சொல்லாமல், வைக்கம் போராட்டத்திற்குத் தலைமைதாங்க போனார் ஈ. வே. ரா. இச்செய்தி மன்னருக்கு எட்டியது. மன்னர்

சார்பில், சிறப்பான வரவேற்பு அளிக்க, காவல் துறையின் தலைமை அலுவலரையே அனுப்பி வைத்தார். தலைமை அலுவலர் இதை ஈ. வே. ராவிடம் பணிவோடு தெரிவித்தார். ஈரோட்டுச் சிங்கம் என்ன முழங்கிற்று?

'இவ்வேளை மன்னருடைய நண்பராக நான் இங்கு வரவில்லை. தாழ்த்தப்பட்டவர்களின் உரிமைக்காகப் போராடவே வந்துள்ளேன். எனவே மன்னரின் அருளான உபசரிப்பை ஏற்றுக் கொள்ள முடியாமைக்கு மன்னித்தருள வேண்டுகிறேன்'. இது ஈ. வே. ராவின் பதில். அப்புறம்?

வைக்கம் போராட்டத்தை நடத்தினார். மறியலுக்கு தலைமை தாங்கினார். சட்டம் செயல்பட்டது. ஈ. வே. ராவுக்கு ஒரு மாத சிறைத் தண்டனை அளித்தது. இருந்தால் என்ன? கேரளத்திலிருந்தும் தமிழ்நாட்டிலிருந்தும் மறியல் தொண்டர்கள் குவிந்தார்கள். போராட்டம் சூடு பிடித்தது. கு. காமராசர் அப்போராட்டத்தில் பங்குகொண்டார். ஈரோட்டிலிருந்து நாகம்மையாரும் கண்ணம்மாளும் வைக்கம் சென்று, போராட்டத்தில் பங்கு கொண்டார்கள்.

ஒரு மாத சிறைத் தண்டனை முடிந்ததும் வெளியே வந்த ஈ. வே. ரா. சிறிது இடைவெளிக்குப்பின் மீண்டும் மறியல் செய்து சிறைப்பட்டார். இம்முறை ஆறு திங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இதற்கிடையில் வைதீகப் பார்ப்பனர்கள் 'சத்துரு சங்கார' யாகத்தை நடத்தினார்கள். அந்த யாகம் வைக்கம் போராட்டத்தை நடத்தும் சத்துருகளைச் சங்காரம் செய்யவில்லை, மாறாக, யாகம் முடிவதற்குள் மன்னரே இறந்துவிட்டார்.

காந்தியடிகளின் தலையீட்டை நாடினார்கள். இவர் இராணியோடு பேசி, உடன்படிக்கை ஏற்படுத்த முயன்றார். வைக்கம் போராட்டம் ராஜிக்கு உட்படாது என்று குடியரசு தலையங்கம் தீட்டியது'. முழு வெற்றி கிட்டியது. வைக்கம் தெருக்களில் எல்லா சாதியினரும் நடக்கலாம் என்னும் உரிமை கிடைத்தது. வெற்றியோடு தமிழகம் திரும்பிய ஈ. வே. ராவை, 'வைக்கம் வீரர்' என்று அழைத்தார், பாராட்டினார், தமிழ்த் தென்றல் திரு. வி. கல்யாண சுந்தரனார்.

1929இல் கேரளத்தைச் சேர்ந்த முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி திரு. எம். கோவிந்தன் அவர்கள் ஈ. வே. ராமசாமியைப் பின்வருமாறு பாராட்டினார்: 'வைக்கம் சத்தியாக்கிரகத்திற்கு இவரே உயிராக இருந்தார். அந்த நீண்ட, தொடர்ச்சியான போரை சித்தியேற்படும்படியான முடிவிற்குக் கொண்டுவந்து

விட்டு, திரு. ராமசாமி சுயமரியாதை இயக்கத்தைத் துவக்கினார். அவரது மனம் இதுபோது மிகவும் முக்கியமான சமுதாயத் துறையில் ஈடுபட்டிருக்கிறது. எனது நாட்டில் சுயமரியாதைக் கருத்து விதைகள் இவரால் முதன் முதலாக ஊன்றப்பட்டன. மிகுந்த விளைவு கட்டாயம் ஏற்படும்.'

சாதி ஒழிப்பிற்காகவும் தீண்டாமை ஒழிப்பிற்காகவும் அயராது பாடுபட்ட பெரியாரைப்பற்றி சென்னை சட்டமன்றத்தில் தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதியாக விளங்கிய திரு. என். சிவராஜ், பி.ஏ., பி.எல். 1928இல் கூறும்போது, 'தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்காக மகத்தான வேலை செய்திருக்கும் திரு. ஈ. வே. ராமசாமி அவர்களை எங்கள் சமூகத்தார் என்றும் மறக்கவேமுடியாது. வைக்கத்தில் அவர் செய்துள்ள வேலை, அளவிடற்பாலது. அவர் ஒரு காலத்தில் தேசியப் போராட்டத்தில் அமிதவாதக் கொள்கை உடையவராக இருந்தார். சீர்திருத்தக்காரர்கள் பின்பற்றத்தக்க தலைவர் ஈ. வே. ராமசாமி ஒருவரே யாவர்.'

வைக்கம் வீரர் ஈ. வே. ராமசாமி, உரிமைப் போரில் வெற்றி வாகை சூடி, தமிழகத்தை வலம் வந்தார். 'வெள்ளம்போல் தமிழர் கூட்டம், வீரங்கொள் தமிழர் கூட்டம்' அவரை மொய்த்துக்கொண்டது. அந் நிலையில், மற்றோர் துறவுக்கு புயல் உருவாகியது.

'விடுதலை; விரைவான விடுதலை; என் தாய்த் திருநாட்டிற்கு முழு விடுதலை.' கனவிலும் நனவிலும் இதுவே, ஈ. வே. ராமசாமியாரின் சிந்தனை; இதுவே அவருடைய பேச்சு; இதுவே அவருடைய எழுத்து. இப்படி, விரைவில் விடுதலை பெற்றாகவேண்டுமென்னும் ஒரே நினைப்பில் மூழ்கியிருந்த ஈ.வே. ராமசாமி, விடுதலைக்குத் தடைகளாக இருப்பனவற்றைப்பற்றி சிந்திக்கத் தலைப்பட்டார்.

பொதுமக்களிடம் உரிமை உணர்வு இல்லாமையைக் கண்டார். தமது சொல்லாலும் எழுத்தாலும் அதை வளர்க்கப் பாடுபட்டார்; முழு மூச்சோடு பாடுபட்டார். அடுத்து சென்னை மாகாணத்தில் நீதிக் கட்சியும் பிற மாகாணங்களில் சிற்சில நிறுவனங்களும் 'மெல்ல மெல்ல அரசியல் உரிமைபெறுவதே நல்லது' என்று குரல் எழுப்புவதைக் கண்டார். அதன் காரணத்தை ஆய்ந்தார். அச்சம் என்னும் வேரிலிருந்து அவநம்பிக்கை என்னும் கிளையாக அந்தக் குரல் எழும்புவதை அறிந்தார். ஏன் அச்சம் என்று துருவிப் பார்த்தார்.

சாதிகள் நிறைந்த நாட்டில், ஒரு சில பிரிவினரே பெரும் பதவிகளில் நிறைந்து கிடந்தார்கள். சமவாய்ப்பு இல்லாமையும், சம

வாய்ப்புகளைப்பற்றி பேசவும் அனுமதியாத நிலையும் பொது மக்களிடம் அச்சத்தையும் அவ நம்பிக்கையையும் வளர்த்திருந்தன. ஆங்கிலேய ஆட்சியின்போதே நமக்குரிய பங்கைக் கொடுக்க மறுப்பவர்கள், நாளை தன்னாட்சி கிடைத்துவிட்டால், நம்மை அண்டவும் விடமாட்டார்கள் என்னும் அச்சமும் அவநம்பிக்கையும் படித்த பார்ப்பனரல்லாதாரிடமும் முஸ்லீம்களிடமும் பரவலாக இருந்தன. அவர்கள் அச்சம் அடிப்படை இல்லாதது அல்ல; அவநம்பிக்கை பொருளற்ற பீதியல்ல.

எல்லா வகுப்பார்களுக்கும் பொதுத் தேர்தல் பதவிகளிலும் வேலைகளிலும் ஓரளவு நியாயமான பங்கு போட்டுக் கொடுக்க வேண்டும் என்பது நீதிக் கட்சியின் கொள்கைகளில் உயிர் நாடியானதாகும். அப்படிப்பட்ட முறை, நடைமுறையாவதற்கு முன்பு வெள்ளையர் வெளியேறிவிட்டால், மேல் சாதிக்காரரர் ஆதிக்கமும் ஆக்கிரமிப்பும் அதிகமாகிவிடும் என்று பொதுமக்கள் அஞ்சினார்கள். அதையே நீதிக் கட்சி எடுத்துரைத்தது.

இவற்றைப்பற்றி ஈ. வே. ராமசாமி ஆழ்ந்து சிந்தித்தார். தேசிய உணர்வுடைய பார்ப்பனரல்லாதாரை ஓரணியில் கொண்டு வருதல் நல்லது என்று கருதப்பட்டது. சென்னை மாகாண சங்கம் என்ற பெயரில் ஒரு சங்கம் அமைக்கப்பட்டது. தொடக்கத்தில் திரு. குத்தி. கேசவப் பிள்ளை என்பவரைத் தலைவராகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட சென்னை மாகாண சங்கத்திற்கு ஈ. வே. ரா. ஆதரவு தந்தார். நீதிக் கட்சி பற்றாளர்களை அச்சங்கம் மாற்ற முடியவில்லை. ஈ. வே. ரா. தளரவில்லை. தொடர்ந்து சிந்தித்தார்.

## வகுப்புரிமை

'விரைவில் தன்னாட்சி உரிமை பெற, ஏராளமானவர்கள் ஒன்று சேர்ந்து போராடவேண்டும். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை, கொள்கை அளவில், காங்கிரசு ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால், நீதிக் கட்சி, வேரற்றுப்போகும். அந்நிலையில் பார்ப்பனரல்லாதவர்கள் பெருவாரியாக காங்கிரசையும் அதன் விடுதலைப் போராட்டத்தையும் ஆதரிப்பார்கள்.' இந்த முடிவுக்கு வந்தார், ஈ. வே. ராமசாமி,

எனவே, காங்கிரசு மேடைகளிலும் மாநாடுகளிலும் வகுப்புரிமைக்கு ஆதரவாகப் பேசி வந்தார். 1920இல் திருநெல்வேலியில் மாகாண காங்கிரசு மாநாடு நடந்தது. ஈ. வே. ரா. அங்கே, வகுப்புரிமை தீர்மானத்தைக் கொண்டுவந்தார். விஷயாலோசனைக் குழுவில் அது நிறைவேறியது. ஆனால் பொது மாநாட்டிற்குத்

தலைமை தாங்கிய திரு. எஸ். சீனிவாச அய்யங்கார், 'இது பொது நலத்திற்குக் கேடு' என்று கூறி அனுமதிக்காமல் மறுத்துவிட்டார்.

அடுத்து 1921இல் மாகாண மாநாடு, தஞ்சாவூரில் கூடியது. வகுப்புரிமை தீர்மானத்தை, ஈ. வே. ரா. கொண்டுவந்தார். அப்போது, இராஜாஜி தலையிட்டு, 'கொள்கையாக வைத்துக் கொள்வோம்; தீர்மான உருவில் வேண்டாம்' என்று கூறி சமாளித்தார்.

1922இல் திருப்பூரில் மாகாண மாநாடு நடந்தது. மீண்டும் ஈ. வே. ரா. வகுப்புரிமை தீர்மானத்தைக் கொண்டுவந்தார். வாதம் கடுமையாயிற்று. ஈ. வே. ரா. மனுதர்ம சாஸ்திரத்தையும் இராமாயணத்தையும் கொளுத்த வேண்டுமென்று அம் மாநாட்டி லேயே முழங்க நேரிட்டது. வகுப்புரிமை பெறுவதற்காக அவ்வளவு தொலைவு போகத் தயாராக இருந்தார். ஆனாலும் தீர்மானம் நிறைவேறவில்லை.

மீண்டும் 1923இல் சேலத்தில் கூடிய மாகாண மாநாட்டில் ஈ. வே. ரா. அதே தீர்மானத்தை முன் மொழிந்தார். கலகம் ஆகும் அளவிற்கு நிலைமை முற்றிவிட்டது. ஓட்டுக்கு விடாமல் சமாளித்துக்கொண்டார்கள்.

1924இல் திருவண்ணாமலையில் கூடிய மாநாட்டுக்கு ஈ. வே. ராமசாமி தலைமை ஏற்றார். அவர் தலைமையுரையில்,

'தென்னிந்தியாவில் இந்து முஸ்லீம் ஒற்றுமை குலையா திருப்பினும் இந்துக்களுக்குள் ஒற்றுமை குலைந்து வருவது, உண்மை. முதலாவது பிராமணர்—பிராமணரல்லாதார் நிலையைச் சிறிது சிந்திப்போம். ஒரு மதத்தைச் சேர்ந்த இவர்களுக்குள் வேற்றுமையுணர்வு தோன்றுவானேன்? வேற்றுமைக்கு அடிப்படையான காரணங்கள் இருத்தல்வேண்டும். அக் காரணங்களை உணர்ந்து ஒற்றுமைக்கு உழைக்க தேச பக்தர்கள் முயலவேண்டும்.

காங்கிரசுவாதியாயிருந்த டாக்டர் நாயர், திடீரென, ஒரு கட்சியைத் தோற்றுவிக்க காரணங்களாய் நின்றவைகள் எவைகளோ, அவைகள் இன்னும் நிற்கின்றனவா இல்லையா என்பதை நேயர்கள் கவனிப்பார்களாக. அக்காரணங்கள் அழிந்துவிட்டதாக எனக்குத் தோன்றவில்லை. அவைகள் தமிழ்நாட்டில் ஊர்ந்துகொண்டிருக்கும்வரை, தமிழ்நாட்டில் பிராமணர்—பிராமணரல்லாதார் ஒற்றுமை நிலவுதல் அரிதே. தேச சேவையில் ஈடுபட்டுத் தமிழ்நாட்டுக் காங்கிரசில் காரியதரிசியாகவும் தலைவராகவும் இருந்து பெற்ற அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டே நான் இங்கே பேசுகிறேன்' என்று வெளிப்படையாகக்

கூறினார். இம் மாநாட்டிலும் வகுப்புரிமைத் தீர்மானம் நிறைவேறவில்லை.

அடுத்து 1925ஆம் ஆண்டு நவம்பரில் காஞ்சிபுரத்தில் தமிழ் மாகாண மாநாடு கூடியது. திரு. வி. கலியாண சுந்தரம் தலைமை ஏற்றார். தலைவர், வகுப்புரிமைத் தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கே அனுமதிக்கவில்லை. ஆறாவது முறையாக, வகுப்புரிமை நிராகரிக்கப்பட்டது. ஈ. வே. ராமசாமி வெகுண்டு வெளியேறினார்; காங்கிரசைவிட்டு விலகினார்.

அப்போது தமிழ்நாட்டில் காங்கிரசின் நிலை என்ன? 'குடியரசு' தலையங்கம் (1–4–1925) அதைப் படம் பிடித்துக் காட்டுகிறது. அப் படம் இதோ.

'ஒத்துழையாமை இயக்கம் காந்தியடிகளால் இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில், தமிழ்நாடுதான் அவ்வியக்கத்திற்கு முதன் முதலாக ஆதரவு அளித்தது. எண்ணிக்கைக்குக் கிடைக்காத ஏதோ சிலர் சொந்த முன்னேற்றத்திற்கு அல்லது வேறு பல காரணங்களைக்கொண்டு பின்வாங்கியிருந்தபோதிலும் தமிழ் மக்கள் சாதி, வகுப்பு, வித்தியாசமின்றி ஒத்துழையாமையின் திட்டங்களில் உடல் பொருள் ஆவி மூன்றையும் சிறிதும் மதியாது தியாகமே கடவுள், தியாகமே வீட்டைப் பெற வைப்பது, தியாகமே உலகம் என நினைத்து எல்லாவற்றையும் துறந்த துறவிகள்போன்று தொண்டாற்றி வந்ததை உலகம் கண்டு வியக்கிறது.

இந்த நிலைக்குப் பெரிதும் காரணமாக இருந்தவர் பெரியார். இருப்பினும் தான் வளர்த்த, நம்பிக்கை வைத்திருந்த இயக்கத்தை விட்டு தயங்காது வெளியேறினார்.

# 3

## தன்மான இயக்கப் பணி

**கா**ங்கிரசைவிட்டு வெளியேறிய ஈ. வே. ராமசாமி, 1926இல் நடந்த மாகாண சட்டமன்ற பொதுத் தேர்தலில், எந்தக் கட்சிக்கும் ஆதரவு தராமல் விலகி இருந்தார். ஆனால், அத்தேர்தலில் நீதிக் கட்சி தோல்வி கண்டபின், அதற்கு ஆதர்வுகொடுக்க முன் வந்தார். காரணம்?

### நீதிக் கட்சியின் சாதனை

நீதிக் கட்சி, மாகாண இரட்டை ஆட்சி முறையில், ஆறாண்டு காலம் அமைச்சரவை அமைத்தது; திறம்பட ஆட்சி செய்தது. நீதிக் கட்சியின் ஆட்சியின்போதுதான் சென்னை மாகாண தொடக்கக் கல்விச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தை நிறைவேற்றியதின்மூலம், நீதிக் கட்சி, கல்வி வளர்ப்பில் முன்னோடியாகத் திகழ்ந்தது. அச்சட்டம் கொடுத்த வாய்ப்பினைப் பயன் படுத்தி, சென்னை மாநகராட்சி, நீதிக் கட்சியின் கையிலிருந்த போது, கட்டாய இலவசக் கல்வியைப் புகுத்தியது. இக் கொள்கை. ஈ. வே. ராமசாமிக்குப் பெரிதும் பிடித்தமானது.

அடுத்து, சென்னை மாகாண இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தை நீதிக் கட்சி அமைச்சரவை நிறைவேற்றியது. அச்சட்டத்தின் நோக்கம் என்ன? கோயில், சத்திரம் முதலிய இந்து அறநிலையங்களைப் பராமரிப்போர் அந்நிலையங்களின் வரவு செலவுக்கு, சொத்துக்கு பொதுமக்களுக்குக் கணக்குச் சொல்லவேண்டும். பொதுமக்கள் சார்பில், பெரிய அரசு அதிகாரி அவற்றைக் கண் காணிப்பார். ஈ. வே. ராமசாமி காங்கிரசில் சேர்வதற்குமுன் ஈரோட்டிலும், கோவை மாவட்டத்திலும் அறநிலையக் குழுக்களில் பொறுப்பு வகித்திருந்தார். அப்போது, கோயில்களில் நடக்கும் பணஞ் சுருட்டல்களைக் கண்டு, தடுத்து, பல கோயில்களில் வரும்படிகளையும் சொத்துக்களையும் பெருக்கினார். ஆகவே, இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தின் தேவையை ஈ. வே. ராமசாமியால் புரிந்துகொள்ள முடிந்தது. அது செம்மையாகச் செயல்பட்டால், நல்ல நன்மைகள் விளையக்கூடும் என்பது அவருக்குப் புலனாயிற்று.

மூன்றாவதாக, நீதிக் கட்சி பலசாதி மக்களுக்கும் அரசின் அலுவலகங்களில் பங்கு கிடைப்பதற்காக, வகுப்புரிமை ஆணைகளைப் போட்டு நியாயம் வழங்க முனைந்தது.

நான்காவதாக, அன்றிருந்த அரசியல் கட்சிகளில் நீதிக் கட்சியில் தான் சாதி வேற்றுமையுணர்ச்சி குறைவாக இருந்தது. ஆகவே ஈ. வே. ராமசாமி நீதிக் கட்சிக்கு ஆதரவாகக் குரல் எழுப்பினார். நீதிக் கட்சியோடு சேர்ந்து வகுப்புரிமைக்குப் போராடினார். தீண்டாமை ஒழிப்பிற்கு முரசொலித்தார். சமத்துவத்திற்கு வாதாடினார். பார்ப்பனரல்லாதார் விடிவெள்ளியைக் கண்டது போன்று எழுந்தனர்.

ஈ. வே. ராமசாமியின் நாட்டம் மனிதர்களை மனிதர்களாக வாழவைப்பதில் முனைந்தது. அதன் விளைவே தன்மான இயக்கம்.

தன்மான இயக்கம் ஏன் தேவைப்பட்டது? இன்றும் தேவைப் படுகிறது? அவ்வியக்கம் எதற்காகப் பாடுபட்டது? இன்றும் பாடு படுகிறது?

## முதல் சுயமரியாதை மாநாடு

திருவாளர் பி. டி. ராஜன் அவர்களை எவரும் தீவிரவாதி யென்றோ, புரட்சியாளர் என்றோ குற்றஞ்சாட்ட முடியாது. செங்கற்பட்டில் 1929ஆம் ஆண்டு பிப்ரவரி 17, 18 நாட்களில் நடந்த முதல் சுயமரியாதை மாநாட்டில் கொடியேற்றி வைத்து அவர் உரையாற்றியதாவது:

'மனிதனுக்கு மனிதன் வேற்றுமையையும் வகுப்புக்கு வகுப்பு பிரிவினையையும் உண்டாக்குகிற ஒரு சமுதாய கட்டுப்பாட்டை யும் பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் ஒரு முறையையும் சமூகத்தில் பெரும்பாலோரை ஆடு மாடுகளுக்கும் கேவலமாய் நடத்துவதற்கு ஏதுவான நடைமுறையையும் கோயில்களுக்குள் சாதியின் அடிப்படையில் பக்தர்களில் பலரைக்கூட செல்லக்கூடா தென்று தடுக்கும் கட்டுப்பாட்டையும் பெண்களை தட்டு முட்டு சாமான்களைப்போல் கருதும் சமுதாய முறையையும் ஒழிப்பதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும்.

'எல்லார்க்கும் சம வாய்ப்பு தருதல்; ஆண்களும் பெண்களும் சட்டத்தின்முன்பும் வாழ்க்கையிலும் சமமாக வாழவைத்தல், எல்லோர்க்கும் சம வளர்ச்சி வாய்ப்புகளை அளித்தல், குடி மக்களுக்குள் ஒற்றுமையை வளர்த்தல், நாட்டின் இன்பதுன்பங் களில் எல்லோர்க்கும் சமபங்கு இருக்கச் செய்தல், குடிமக்கள்

தங்கள் கடமைகள், உரிமைகள், இரண்டையும் உணரவைத்தல், ஆகியவை இயக்கத்தின் நோக்கங்கள் ஆகும். இத்தகைய இயக்கத்திற்காக நெடுநாட்களாகக் காத்திருந்தோம்.

'காரிருள் கௌவியுள்ள வேளையில்தான், இந்த மின்னொளிக் கீற்று வந்துள்ளது. தன்னலம், சோம்பல், அளவுக்கு மேற்பட்ட அச்சம், ஆற்றாமை, ஆகியவை விலகி, தன்னலமின்மை, ஆர்வம், ஆற்றல், துணிவு, நம்பிக்கை, ஆகியவற்றிற்கு இடம் கொடுக்கத் தொடங்கியுள்ளன.

'நம்முடைய சென்றகால வரலாற்றுக்கு மாறுபட்ட புதிய எதிர் கால வரலாற்றை உருவாக்குவது, இளைஞர்களின் பெரும் பொறுப்பாகும்.

இயக்கம் மறைந்தால் எவரே வாழ்வர்?
இயக்கம் வாழ்ந்தால் எவரே மடிவர்?'

என்று பி. டி. ராஜன் முழங்கியது, சோர்ந்த உள்ளங்களுக்கு உணர்வூட்டியது.

அந்த முதல் சுயமரியாதை மாநாட்டைத் தொடங்கிவைத்த முதல் அமைச்சர் டாக்டர் சுப்பராயன், தமது உரையில்,

'அரசியல் எதேச்சதிகாரத்தை எதிர்த்து ஆயிரம் பேர்கள் முழுங் கும்போது, ஒருவர்கூட, சமுதாய மறுமலர்ச்சிக்காகப் பாடுபட முன் வருவதில்லை. சமுதாயத்தில் மக்களுடைய உரிமைகளைக் கட்டுப்படுத்தும் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் தன்னாட்சி நாட்டைத் தாங்கி நிறுத்தமுடியாது என்னும் உண்மையை நாம் உணரவேண்டும்.

'புரோகிதர்கள், அதிகார வர்க்கமாக எளிதில் மாற முடிவது வியப்பிற்குரியது அல்ல. சமுதாயத்துறையில் நம்முடைய குறை பாடுகளை நன்கு உணர்ந்தவர்கள் புரோகிதர்கள். அதை ஆதாய மாகக்கொண்டு வளர, தங்கள் திறமைகளை தீட்டி வைத்திருப்ப வர்கள் புரோகிதர்கள். அவ்வுணர்வையும் திறமைகளையும் அரசியல் துறைக்கு மாற்றுவது ஒன்றே, அவர்கள் செய்யவேண்டிய வேலை. மக்களுக்குச் சமூக நீதி வழங்க மறுக்கும் சமுதாயத்தி லிருந்து பொருளாதார அரசியல் சமத்துவத்திற்குப் போராடக் கூடிய தலைவர்கள் உருவாதல் அரிது.

'அரசியல் தன்மானத்திற்காக வேலை நிறுத்தஞ்செய்யும் கல்லூரி மாணவர்களில் எவர் நாள்தோறும் நடக்கும் சமூக இழிவு களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தாரென்று அறிய விரும்புகிறேன்.

'அரசியல் விடுதலை கிடைத்தாலும் நாம் புரோகிதர்களுக்கு அடிமைகளாகவும் சாதியால் பிரிந்தவர்களாகவும், குழந்தை மணம்,

விதவைக் கொடுமை ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு, ஏழைகளும் ஒடுக்கப்பட்டோரும் வந்தால், தீட்டாகிப்போகும் கடவுள்களைக் கும்பிடுவோர்களாகவும் மூட நம்பிக்கைகளில் மூழ்கியவர்களாகவும் இருக்கும்வரை, பிற நாடுகளுக்குச் சமமாக வளர முடியாது.'

இவ்வெழுச்சிமிகு மகாநாட்டில் ஆறு ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் கூடினார்கள். அவர்களில் பாதிப் பேர்கள் சாதாரண பொதுமக்கள். சமத்துவ மனித வாழ்வை நாடி, நெடுந் தொலைவில் இருந்து வந்தவர்கள். அவர்கள் பிள்ளைகள் அக் காலகட்டத்தில், பள்ளிகளில் மழைக்கும் ஒதுங்காதவர்கள். அந்நிலையில், திருக்கோயிலூரிலும், கள்ளக்குறிச்சியிலும், பண்ருட்டியிலும், அருப்புக்கோட்டையிலும், பரமகுடியிலும், சிவகெங்கையிலும் இருந்து குழுமக் காரணம் என்ன? 'தீண்டத் தகாதவராக', 'கீழ்சாதியாக' இருக்கும் நிலைக்கு முடிவு காலத்தைக் காணப்போகிறோம் என்னும் நம்பிக்கையால் உந்தப் பட்டே, செங்கற்பட்டில் கூடினார்கள். முதல் சுயமரியாதை மாநாட்டில் ஏராளமான பெண்களும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

அம் மாநாட்டிற்கு உணவு சமைத்தவர்கள் யார்? விருதுநகர் நாடார் சமையற்காரர்களே. அச்சாப்பாட்டை எல்லோரோடும் சேர்ந்து உண்ண உடன்படுவோரே மாநாட்டுப் பிரதிநிதிகளாக வரலாம் என்று முன்கூட்டியே அறிவிக்கப்பட்டது. அப்படியே நடந்தது. இத்தகைய புரட்சியை, அதுவரை, தமிழ்நாட்டின் பொது இயக்கங்களில், கண்டதில்லை. எவர் சமைத்தாலும் எவர் பரிமாறினாலும் எல்லோரும் சேர்ந்து உண்பதை தன்மான இயக்கமே முதன் முதல் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தியது. செங்கற்பட்டு முதல் தன்மான இயக்க மாநாட்டில், எல்லா சாதியாரோடும் சேர்ந்து உண்டவர்களில் நானும் ஒருவன் என்பதை நினைக்குந்தோறும், 'அப்ப நான் மனிதனாகிப்போனேன்' என்று பாடத் தோன்றுகிறது.

'மக்கள் பிறவியினால் உயர்வு தாழ்வு உண்டென்ற கொள்கையை இம் மாநாடு அடியோடு மறுப்பதுடன் அதை ஆதரிக்கும் மதம், வேதம், சாஸ்திரம், புராணங்களையெல்லாம் பொதுமக்கள் பின்பற்றக்கூடாதென்றும்,

'வருணாசிரமமென்ற கொடுமையான கட்டுப்பாட்டையும் சமுதாய முறையில் காணப்படும் பிராமணர், சத்திரியர், சூத்திரர், பஞ்சமர் முதலிய ஆட்சேபகரமான பிரிவுகளையும் ஏற்றுக் கொள்ளக்கூடாதென்றும் ''மனித நாகரீகத்திற்கும் தேச முன்னேற்றத்திற்கும் தடையான தீண்டாமை'' என்பதை ஒழித்து, எல்லாப் பொது வழிகள், குளங்கள், கிணறுகள், பாடசாலைகள்,

சத்திரங்கள், தண்ணீர்ப் பந்தல்கள் முதலிய பொது ஸ்தாபனங்களைத் தட்டு தடங்கலின்றி அனுபவிக்க சகல மக்களுக்கும் சம உரிமை கொடுக்கவேண்டுமென்று அம் மாநாடு முடிவுசெய்தது.'

சாதி அல்லது சமயப் பிரிவுகளைக் காட்டும் குறிகளை யாரும் அணிந்துகொள்ளக் கூடாதென்று கேட்டுக்கொள்வதாகவும் முடிவு செய்தது.

கடவுள் பற்றி என்ன முடிவு செய்தது என்று அறியத் துடிப்பீர்கள். இதோ:

'கடவுள் பேரால், கோயில்களிலாவது அல்லது வேறு இடங்களிலாவது ஒரு பைசாவாவது ஒரு பைசா பெறும்படியான பொருளாவது செலவழிக்கக் கூடாதென்றும்,'

'வணங்குகிறவனுக்கும் வணங்கப்படுபவனுக்கும் மத்தியில் தரகனாவது வடமொழியாவது இருக்கக்கூடாதென்றும்' இம் மாநாடு கருதியது.

'இனிமேல் புதிதாய்க் கோயில்கள் கட்டக் கூடாதென்றும் இப்போதிருக்கிற கோயில், மடம், சத்திரம், வேத பாடசாலை முதலியவைக்காக விட்டிருக்கும் சொத்துகளை, கைத்தொழில், வணிகம், ஆராய்ச்சி முதலிய கல்விகளுக்காகவும் கைத்தொழில்களுக்காகவும் செலவழிக்க முயற்சி செய்ய வேண்டுமாய் பொது மக்களை இம் மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது' என்பது மற்றொரு முடிவு.

அடுத்த ஆண்டு 10–5–30ஆம் தேதி ஈரோட்டில் அறிஞர் எம். ஆர். ஜெயகர் என்பவர் தலைமையில் நடைபெற்ற இரண்டாவது சுயமரியாதை மாநாட்டில்,

'வணங்குவோருக்கும் வணங்கப்படுவதற்கும் நடுவில் தரகரையோ, பூசாரியையோ ஏற்படுத்துவது தன்மானத்திற்கு விரோதமென்றும் தெய்வ வணக்கத்திற்குப் பணச் செலவு தேவையற்றதென்றும் இம் மாநாடு கருதுகிறது.

'பூசாரிகளுக்கு தற்காலம் விடப்பட்டிருக்கும் மானியங்களை ரத்து செய்யவேண்டுமென்றும் இம் மாநாடு முடிவு செய்கிறது' என்பவை கடவுள் வழிபாடுபற்றிய முடிவுகளாகும்.

இரண்டாவது சுயமரியாதை மாநாடுவரை, கடவுள் மறுப்பு முன்னே நிற்கவில்லை.

சமத்துவப் போரில், தடை கற்களாக, கடவுள் நம்பிக்கை, கடவுள் கட்டளை, நால் வருணம், சாத்திரம், இதிகாசங்கள், புராணங்கள், ஆகியவற்றை இணைத்து நிறுத்தி வைக்கும் முயற்சியில் பழமை விரும்பிகளும் உயர் சாதியார்களும் முனைந்தார்கள்.

எனவே, கடவுள் உண்டா இல்லையா? மக்களில் பலரைத் தாழ்ந்தவர்களாகவும் சிலரை மட்டும் உயர்ந்தவர்களாகவும் படைக்கும் கடவுள் எப்படி வேண்டுதல் வேண்டாமை இலானாக இருக்கமுடியும்? என்று கேட்க முனைந்தார்கள்.

இதுபற்றி பெரியார் கூறியதைக் கவனிப்போம்: 'கழுதையில், நாயில், குரங்கில், எருமையில், பறக் கழுதை, பற நாய், பறக் குரங்கு, பற எருமை என்றும்; பார்ப்பாரக் கழுதை, பார்ப்பார நாய், பார்ப்பாரக் குரங்கு, பார்ப்பார எருமை என்றும் இருக் கிறதா? மனிதனில் மாத்திரம் இப்படி இருப்பதற்குக் காரணம் மதமல்லாமல் வேறு என்ன? இந்து மதம் ஏற்பட்டு எத்தனை காலம் ஆயிற்று? இதுவரை மனித சமூகத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் என்ன? கடவுள் அவதாரமான ராமனது ராஜ்யம் என்னும் காலத்தில் இருந்த கீழ் ஜாதியும், சத்தியகீர்த்தி அரிச் சந்திரன் ராஜ்யம் என்னும் காலத்தில் இருந்து வந்த சுடுகாட்டுப் பறையனும், பெண் ஜாதி விற்பனையும் பதினாயிரக்கணக்கான வருடங்கள் ஆகியும் இன்னமும் ஒழியவில்லை என்றால், மதத் தினால் மக்கள் முன்னேறுகிறார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்?

**மதம்**

'மதம் மனிதனுக்கு எவ்வளவு முட்டாள்தனத்தைக் கற்பிக்கிறது பாருங்கள்! செத்துப் பொசுக்கப்பட்டு அந்தச் சாம்பலைத் தண்ணீரில் கரைத்து விடப்பட்ட மனிதனுக்குப் பசி தீரவும் அகமகிழவும் அரிசி, பருப்பு, காய்கறி, செருப்பு பார்ப்பான்மூலம் பரலோகத்துக்கு அனுப்பிக் கொடுப்பதென்றால் மனிதனுக்குச் சிறிதாவது பகுத்தறிவு இருக்கிறதென்பதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?

பெற்றோர்களை—இறந்துபோனவர்களை மதிக்கவேண்டாம் என்று நான் சொல்ல வரவில்லை. அதற்காகப் பார்ப்பானுக்கு ஏன் அழவேண்டும்? அவன் காலில் ஏன் விழவேண்டும்? இது மதக் கட்டளை, மதத் தத்துவம் என்றால், இப்படிப்பட்ட மதம் ஒழிய வேண்டாமா? என்று கேட்கிறேன்.

கல்யாணம், கருமாதி கல்லெடுப்பு, முதலிய சடங்குகள் பார்ப் பானுக்கு அழவே கற்பிக்கப்பட்டிருக்கின்றனவே ஒழிய, அவற்றி னால் வேறு பலன் என்ன இருக்கிறது?'

இதுபோன்ற ஆய்வுகளில் பெரியாரின் தன்மான இயக்கம் தள்ளப்பட்டது. டார்வினுடைய கூர்தல் அறம், இங்கர்சாலின் நாத்திகவாதம், பெட்ரண்ட் ரஸலின் 'நான் ஏன் கிறுத்தவனல்ல',

வால்டேர், ரூசோவின் கருத்துகள், ஆகியவை துணைக்கு வந்தன. இயற்கையான பகுத்தறிவை, அச்சமின்றி பயன்படுத்திய தன்மான இயக்கத்தவர்கள், 1931 ஆகஸ்டில் நடைபெற்ற விருதுநகர் சுயமரியாதை மாநாட்டில்,

'மனிதத் தன்மையைத் தடைப்படுத்துவதற்கு மதங்களின் பேரால் ஏற்பட்டுள்ள பழக்கவழக்கங்களே காரணமாயிருப்பதால், அப்படிப்பட்ட எல்லா மதங்களும் மறைந்து போகவேண்டு மென்றும் மதங்கள் ஒழியும்வரை மனிதர்களுக்குள் சகோதரத் துவம் வளராதென்றும் இம் மாநாடு கருதுகிறது' என்று முதல் முடிவாகவே நிறைவேற்றியது.

'இந்திய நாட்டில் தோன்றியுள்ள மத வேற்றுமைகளும் பகை களும் அழிய வேண்டுமானால் அறிவுள்ள இந்தியர்கள் முதலில் மத உணர்ச்சியை புறக்கணிக்க வேண்டுமென்று முடிவு செய்கிறது.' இது இரண்டாவது முடிவு.

1931 முதல் தன்மான இயக்கம், மத மறுப்பு, கடவுள் மறுப்பு இயக்கமாகவே இயங்கி வருகிறது என்றால் மிகையாகாது.

### தீண்டாமை ஒழிப்பு

செங்கற்பட்டு மாநாட்டில் தீண்டாமை ஒழிப்பு முடிவு எடுத்தது போன்றே, ஈரோட்டிலும்,

'தீண்டாமை என்னும் கொடுமை, மனித தர்மத்திற்கு விரோத மென்று இம் மாநாடு கருதுவதுடன், மக்கள் சமூகத்தில் எந்த வகுப்பாருக்கும் பொது உரிமைகளை மறுக்கும் பழக்கவழக்கங் களை உடனே ஒழிக்கவேண்டுமென்றும் பொது வழிகள், குளங்கள், கிணறுகள், தண்ணீர்ப் பந்தல்கள், கோயில்கள், சத்திரங்கள், முதலிய இடங்களில் சகலருக்கும் சம உரிமை வழங்க வேண்டு மென்றும் இம் மாநாடு முடிவு செய்கிறது' என்பதை ஒருமனதாக ஏற்றுக்கொண்டோம்.

அடுத்தாண்டு விருதுநகரில், 'தீண்டாமை என்பது இந்து சமூகத்திலுள்ள எல்லா சாதிகளையும் பிடித்த நோயென்றும், தீண்டாமை ஒழியவேண்டுமானால் பிராமணீயம் ஒழியவேண்டு மென்றும் மாநாடு முடிவு செய்தது.

பொது வாழ்க்கை தொடக்க காலம் முதல், தந்தை பெரியார் ஆண் பெண் சமத்துவத்தில் நம்பிக்கையுடையவர். பொது வாழ்க்கையில், தன் மனைவியும் தங்கையும் உரிய பங்கு கொள்ளச் செய்தவர். பெண்கள் உரிமைக்காக வாழ்நாள் முழு வதும் போராடியவர்.

எக் காரணத்தை முன்னிட்டும் திருமணத்தை ஒரு நாளைக்கு மேலாவது ஒரு விருந்துக்கு மேலாவது நடத்தக்கூடாதென்றும், முதல் சுயமரியாதை மாநாட்டின் வழிகாட்டலை இரண்டாவது சுயமரியாதை மாநாடு ஒரு முடிவாக நினைவுபடுத்தியது.

### கலப்புத் திருமணம்

கலப்புத் திருமணம், புரோகிதமொழிந்த சிக்கனத் திருமணம் இவற்றை ஆதரிப்பதை முன்னுரிமை திட்டங்களாகவே தன்மான இயக்கம் கருதி வருகிறது.

செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டின் முடிவுப்படி தமிழ் நாட்டில், இவ்வியக்க சார்பில், கலப்புத் திருமணங்கள் பல நடந்தன; நடக்கின்றன. இயக்கத்தின் முதல் கலப்புத் திருமணம் சு. குருசாமி, சு. குஞ்சிதம் ஆகியோரின் கலப்புத் திருமணமாகும். அதையடுத்து சிவகாமி சிதம்பரனார், அன்னபூரணி ரத்தின சபாபதி, மரகதவல்லி முருகப்பா, மஞ்சுளாபாய் வை.சு. சண்முகம், நீலாவதி இராமசுப்ரமணியம், சுந்தரி அழகப்பா என பலர் கலப்புத் திருமணங்கள் செய்துகொண்டதோடு, பல்லாண்டு காலம் தன்மான இயக்கத்தின் உயிர் நாடிகளாக இயங்கி வந்தார்கள். அத் திருமணங்கள் அனைத்தும் புரோகிதமற்ற வாழ்க்கை ஒப்பந்தங்களாக இருந்தன.

1928இல் பெரியாரின் 'குடி அரசில்' சேர்ந்த குத்தூசி குருசாமி சிந்தனை, சொல், செயல் அனைத்திலும் பெரியாரின் அச்சாகவே வாழ்ந்தார். ஈராண்டு காலம்போல, பெரியார் நடத்திய 'ரிவோல்ட்' என்ற ஆங்கில வார இதழுக்கு முதுகெலும்பாக இருந்தார். இது தன்மான இயக்கத்தைப் பரப்பியது. பெரியாரின் 'விடுதலை' நாளிதழில் குத்தூசி என்ற புனைப் பெயரில் 'பல சரக்கு மூட்டை'யென்ற தலைப்பில், தோழர் குருசாமி, பல்லாண்டு, நாள் தவறாமல் எழுதியக் கட்டுரைகள் அக் கால சமுதாயத்தை, ஆட்சியை உலுக்கின. பெரியாரின் அணுக்கத் தொண்டராக, தோழராக, தளபதியாக குத்தூசியார் இருந்த அளவு, எவரும் அந் நாள்வரை இல்லையென்பதை நான் நேரில் அறிவேன்.

### கடவுள் மறுப்பு

ஈரோட்டில் 12–5–1930இல் நடந்த சுயமரியாதை இளைஞர் மாநாட்டில் 'எந்தப் பொதுக் கூட்டங்களிலும் தொடக்கத்திலாவது, முடிவிலாவது ராஜ வணக்கம், கடவுள் வணக்கம், தலைவர்கள் வணக்கம் ஆகியவைகள் செய்யும் செயலை விட்டுவிட

வேண்டுமென்று' ஒரு முடிவு எடுத்தார்கள். அதன்படியே இயக்கம் நடந்து வருகிறது. தன்மான இயக்கக் கூட்டங்களில், நெடுங் காலம், தொடக்கத்திலோ, இறுதியிலோ, எவ்வித வணக்கப் பாட்டும் தலை காட்டியதில்லை.

முப்பத்தேழு ஆண்டுகளுக்குப் பிறகு கடவுள் மறுப்பு ஒலியோடு இயக்கக் கூட்டங்கள் தொடங்கும் நிலை உருவாயிற்று. விடய புரத்தில் 1967இல் நடந்த இளைஞர் பகுத்தறிவுப் பயிற்சிப் பாசறையில், 'கடவுள் இல்லை; கடவுள் இல்லை; கடவுள் இல்லவே இல்லை', போன்ற கடவுள் மறுப்பு வாசகங்களை எல்லாக் கழகக் கூட்டங்களிலும் தொடக்கத்தில் முழங்க வேண்டுமென, பெரியார் அறிவித்தார். அப்படித் தொடங்கவேண்டுமென்று 14—6—1967இல் அவர் ஆணையிட்டார். அது முதல் கழகக் கூட்டங்களில், முதல் நிகழ்ச்சியாக கடவுள் மறுப்பு முழக்கம் இடம் பெறுகிறது.

'இன்றைக்கு எவ்வளவு முட்டாள்கள் கோயில் கட்டுகிறான், கதா காலட்சேபம் செய்கின்றான். திருவிழா கொண்டாடு கின்றான். இவைகளெல்லாம் எதற்காக? நம் மடமையையும் இழிவையும் நிலை நிறுத்துவதற்காகத்தானே. நமது பிரச்சாரம் அதிகமாக அதிகமாக இப்போது கச்சேரிகளிலெல்லாம் கோயில் கட்டுகிறான். திருச்சியிலுள்ள கலெக்டர் அலுவலகத்தின் மரத்தி லிருந்த ஒரு குரங்கு அக் கிளை ஒடிந்து கீழே விழுந்ததில் சிக்கி செத்துவிட்டது. அதற்காக அந்த கலெக்டர் கோயில் கட்ட முற் பட்டான். நாங்கள்தான் கோர்ட்டில் ''ஸ்டே'' கேட்டோம். ''ஸ்டே'' வருவதற்குள் கோயிலை கட்டி முடித்துவிட்டார்கள். சிலை மட்டும் வைக்கவில்லை. மேடை மட்டும் கட்டி வைத்திருக் கிறார்கள். இன்றைக்கும் அதற்கு பூசை நடந்துகொண்டிருக் கிறது.

'வேலூரிலிருக்கிற கோட்டையிலுள்ள கோயிலுக்குள் சிலை வைக்கவேண்டுமென்று இதற்கு முன்னிருந்த அரசாங்கம் முற் பட்டது. அதை நாம்தான் தடுத்து நிறுத்தினோம். இப்போது எவனோ ஒருவன் புதிதாக கோயிலே கட்டப்போகிறானாம். இப்படி ஒவ்வொரு ஊரிலும் புது புது கோயில் கட்டுகிறான். அதற்கு அவ்வூரிலிருக்கிற கலெக்டர் ஆதரவாக இருக்கிறார். பணம் வசூல் செய்கிறார்—இதை அரசாங்கத்தால் தடுக்கமுடிய வில்லை.

'அதற்கு மாறாக நாம் வீதிகள்தோறும் இதுபோன்று சிலை வைக்காவிட்டாலும் மண்ணில் சிமெண்டில் செய்து சிறு பொம்மைகளையாவது வைத்து அதனடியில் ''கடவுள் இல்லை; கடவுள் இல்லவே இல்லை; கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்; கடவுளை பரப்பியவன் அயோக்கியன்; கடவுளை வணங்குகிறவன்

காட்டுமிராண்டி; கோயிலுக்கு போகிறவன் மடையன்'' என்று எழுதவேண்டும். இது தவறோ குற்றமோ இல்லை. இது அவன் மனதைப் புண்படுத்துகிறதென்றால் நம்மைப் பற்றி, கடவுளை நம்பாதவனைப் பற்றி தேவாரம், நாலாயிர பிரபந்தம் முதலிய நூல்களிலெல்லாம் மிகக் கேவலமாக இழிவாக பாடியிருக்கிறான். கடவுளை நம்பாதவனை கொலை செய்யவேண்டும், கழுவேற்ற வேண்டும், அவனது மனைவியின் கற்பை சூறையாடவேண்டும், அவன் வீடுகளுக்கு தீயிடவேண்டும் என்றெல்லாம் எழுதியிருக்கின்றான். இதெல்லாம் நமது மனதைப் புண்படுத்தாதா என்று கேட்கின்றேன்.

'வேதத்தில் சாஸ்திரத்தில் நம்மையெல்லாம் சூத்திரன் என்றும் நமது பெண்களை சூத்திரச்சி என்றும் குறிப்பிட்டிருக்கிறான். சூத்திரன் என்றால் பார்ப்பானுக்கு வைப்பாட்டி மகன் என்று பொருள். சூத்திரச்சி என்றால் பார்ப்பானுக்கு வைப்பாட்டி என்று பொருள். நமது இயக்கம் தோன்றுகிற வரை இது நடப்பிலும் இருந்ததே! இன்றைக்கும் சாஸ்திரத்தில் மட்டுமில்லாமல் இந்து ''லா''ப்படி நாமெல்லாம் சூத்திரர்கள்தானே. நமக்கு மான ரோசமிருந்தால் பொறுத்துக்கொண்டிருப்போமா? தீயிட்டல்லவா கொளுத்தி இருக்கவேண்டும்.

'நம் நாட்டிலிருக்கிற பத்திரிகைக்காரனெல்லாம் அயோக்கியனாதலால் இவற்றையெல்லாம் வெளியிடாமல் பொய்யையெல்லாம் எழுதுகிறான். நாம் நம்பாவிட்டாலும் மற்ற நாட்டுக்காரன் நம்பட்டும் என்று எழுதுகிறான். அவனுடைய எண்ணமெல்லாம் மக்களை மடையர்களாக்கவேண்டும். மக்கள் அறிவு பெறாமல் தடுக்கவேண்டுமென்பதேயாகும்.'

கடவுள் மறுப்புபற்றி பெரியாரின் கருத்துக்களை மேலேக் கண்டோம்.

**சிலை எடுப்பு**

இவற்றை முறியடிக்க நமது மக்களுக்கு அறிவுவர நமது மக்கள் அவரவர்களால் கூடுமானவரை சிலைகள் வைக்கவேண்டும். முடியாவிட்டால் 'கல்லில் கடவுள் இல்லை, கடவுளைக் கற்பித்தவன் முட்டாள், கடவுளை பரப்பினவன் அயோக்கியன், கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி, கோயிலுக்குப் போகிறவன் மடையன் என்று செதுக்கி ஆங்காங்கு வைக்கவேண்டும். இது எப்போதும் அழியாமலிருக்கும். நமக்கு பின் சந்ததியினர் இதனைப் பார்த்து அறிவு பெறவேண்டும். இந்த சிலைக்கு பத்து, இருபது ஆயிரத்திற்கு மேல் செலவிட்டிருப்பார்கள். இவ்வளவு பணம் செலவானது வேதனையாக இருக்கிறது. நண்பர் ஜி. டி. நாயுடு அவர்கள் சொன்னது போல

செலவு செய்ததில் பகுதியல்ல, கால்வாசி கொடுத்தால்கூட மகிழ்ச்சியடைந்திருப்பேன் என்றாலும் இதன் மூலம் பின் சந்ததி இது ராமசாமி சிலை என்று சொல்லாது சாமி இல்லை என்று சொன்னவன் சிலை என்று சொல்லும், அதனால் நம் சந்ததியாவது அறிவு பெற வாய்ப்பு ஏற்படும் என்றே கருதுகிறேன்.

மடமை, முட்டாள்தனம், மூடநம்பிக்கை, அறிவற்றத் தன்மை, இந்தக் கோயில், கடவுள் ஆகியவைகளுக்கு எதிராக ஒரு எதிர்ப்புக் காரியம் செய்தாகவேண்டும். நாம் ஒருவர் மட்டும் பலன் பெற்றால் போதும், மற்றவன் எப்படியானால் என்ன என்கின்ற எண்ணம் நமது மக்களுக்கு இருக்கக்கூடாது, அந்த எண்ணத்தினாலேயே நாம் இழி மக்களாக, சூத்திரர்களாக, நாலாம் சாதி மக்களாக இருக்கிறோம். நமது சமுதாயம் பலன் பெறவேண்டும். நாம் செய்கிற இக்காரியத்தால் நமது சமுதாயத்திற்கு ஏற்படும் பலன் என்னவென்பதை சிந்திக்க வேண்டும், நம் மக்களுக்கு சமுதாய உணர்வு ஏற்பட வேண்டும். நமது மக்களை திருப்ப இந்த சிலை, கல்வெட்டு இவைகள்தான் நிலையான வழியாகும். ஒவ்வொரு ஊரிலும் கடவுள், மதம் ஆகியவைகளை மறுத்து கல்லடித்துப் போடவேண்டும்.

அவன் கோபித்துக்கொள்வானே, இவன் கோபித்துக்கொள்வானே என்கிற அச்சம் கூடாது. நம் எதிரிகள் (பார்ப்பனர்கள்) நாம் கோபித்துக்கொள்வோமே என்று எதை விட்டுவிட்டான்? பூனூல் மாட்டுவதை விட்டானா, வேறு எதையாவது விட்டானா?

நம் சமுதாயத்திலிருக்கிற இழிவைப் பற்றிய கவலையில்லாமல் அரசியல் பெயரால் அயோக்கியர்களெல்லாம் வயிறு வளர்த்துக் கொண்டும், சில காலிப் பசங்களெல்லாம் அதன் மூலம் பலன் அனுபவித்துக்கொண்டுமிருந்தால் போதுமா? நம் இழிவு, மடமை, முட்டாள்தனம் இவை நீங்கி நாமும் மற்ற உலகமக்களைப்போன்று இழிவற்று, அறிவு பெற்று சமத்துவமாக வாழவேண்டாமா?'

### கல்வி வாய்ப்பின்மை

அறிவுடையார் எல்லாம் உடையார்: அவ்வறிவினைப் பெறும் வழி கல்வி. இப்படி ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவர் அறுதி இட்டுக் கூறினார். ஈ. வே. ராமசாமி தம் வாழ்நாள் முழுவதும் இவற்றை பொதுமக்களுக்கு எடுத்துரைத்து வந்தார்.

பெரியார் பொது வாழ்க்கைக்கு வந்த காலத்தில், எத்தனையோ பள்ளிக்கூடங்களில், அதுவும் நாட்டுப்புறப் பள்ளிக்கூடங்களில், ஆதி திராவிடர் பிள்ளைகளைச் சேர்க்கவேமாட்டார்கள். ஆகவே

அய்ம்பது ஆண்டுகளுக்கு முன்பு தாழ்த்தப்பட்டவர்கள் சிலராவது படித்தால்தான், பள்ளிக்கூடம் அங்கீகரிக்கப்படும் என்று அரசு ஆணையிட நேர்ந்தது, அது பல்லாண்டு ஏட்டளவில் நின்றது. ஏன்? சிற்றூர்களில் ஆதி திராவிடப் பிள்ளைகள் மற்றவர்களோடு இருந்து படிக்க முயன்றால், பல பகுதிகளில், மற்ற சாதிக்காரர்கள் தாழ்த்தப்பட்டவர்களை பலவகையான துன்பங்களுக்கு ஆளாக்கு வார்கள். ஆசிரியர்கள், சிலவேளை, சில ஆதி திராவிடர்களை பதிவேட்டில் எழுதிவைப்பார்கள். ஆனால் பள்ளிக்கு வரவிடுவ தில்லை. ஆய்வாளர், ஆண்டு தணிக்கைக்கு வரும்போது, அப் பிள்ளைகளைக் கொண்டுவந்து எவரையும் தொடாமல், ஒரு மூலையில் உட்காரவைத்து அனுப்பிவிடுவார்கள். பெரும்பாலான ஆய்வாளர்கள் அதற்கு உடந்தையாக இருப்பார்கள்.

கோவைக்கு அருகில் உள்ள சிங்காநல்லூரிலும் இருகூரிலும் பள்ளிகளில் தாழ்த்தப்பட்ட பிள்ளைகளை 1930ஆம் ஆண்டு தொடக்கம் வரையில் சேர்க்காமல் இருந்தார்கள். பிறகு, கோவை சமூகத் தொண்டு சங்கத்தாரின் தலையீட்டால், சில பிள்ளைகள் சேர்ந்தார்கள். பார்ப்பனர்கள், உள்ளூர் பார்ப்பன ரல்லாத காவல்துறை 'சப்-இன்ஸ்பெக்டரை' வசப்படுத்திக் கொண்டு, பார்ப்பனத் தெரு வழியே பிள்ளைகள் போகக்கூடா தென்று விரட்டினார்கள்.

திரு. ஆர். கே. சண்முகம், எம். எல். ஏ., சிங்காநல்லூர் சென்று சப்-இன்ஸ்பெக்டரிடம் பேசினார். பலனில்லை. கோவை, டெப்டி சூப்பரின்டெண்டை அழைத்து வந்து ஆணையிடச் செய்தார். இருப்பினும் பழமை தொல்லை கொடுத்தது. திரு. ஆர்.கே. சண்முகம் கட்டி வந்த நூற்பாலை கட்டுமான வேலைக்கு ஆள் போகாதபடி கட்டுதிட்டம் செய்தார்கள். மீண்டும் ஆர்.கே. சண்முகம் சிங்காநல்லூருக்கு வந்தார். 'பார்ப்பனத் தெருவில் தீண்டப்படாதவர்கள் நடந்ததற்காகச் செய்யப்படும் கட்டுப்பாட் டால், நீங்கள் கூலி இழந்து பட்டினி கிடக்கப் போகிறீர்களே ஒழிய, எந்தப் பார்ப்பனனாவது தன் வேலையை விட்டுவிட்டு சும்மா இருக்கப் போகின்றானா?' என்று ஆர். கே. சண்முகம் கேட்டார். அப்புறம் பார்ப்பனரல்லாதாருக்குத் தெளிவு ஏற்பட்டது; வேலைக்கு வந்தார்கள்.

தொடக்கப் பள்ளியில் ஆதி திராவிடர்களைச் சேர்ப்பதற்கு இத்தனைப் பாடு! இந்திய சட்ட மன்ற உறுப்பினர் ஆர்.கே. சண்முகமே, தலையிட்டு சேர்க்கவேண்டிய நிலை.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், தாழ்த்தப்பட்டவர் களுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் நசுக்கப்பட்டவர்களுக்கும்

முதலில் குரல் கொடுத்தது, நீதிக் கட்சியாகும். அக்கட்சித் தலைவர்கள், 'இவரைத் தொடலாம், அவரைத் தொடக்கூடாது' என்னும் மனப்பான்மையில் இருந்து விடுபடத் தொடங்கிய முன்னோடிகள் ஆவார்கள்.

## சமபந்தி

ஈ. வே. ராமசாமிக்கு சாதிக் கட்டுப்பாடு உடைப்பு, சிறு வயதிலேயே இயற்கையாகிவிட்டது. அப்போக்கை வைக்கம் போராட்டம் முடுக்கிவிட்டது. எனவே அவரது தன்மான இயக்கத்தைச் சேர்ந்த என் போன்றோர்களுக்கு புழங்குவதிலோ, உண்பதிலோ, எவ்வித சாதிக் கட்டுப்பாடும் நினைவுக்கு வந்ததில்லை. தன்மான இயக்கமே, சமபந்தி உணவை பொது நடவடிக்கை ஆக்கிற்று. நாம் அரசியல் விடுதலை பெறுவதற்கு முன்பு வரை, தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டோரின் மெய்யான பாதுகாப்பு தன்மான இயக்கமே; உண்மையான தோழர்கள், பெரியாரின் சீடர்களே! அந்நிலை எப்படி உருவாயிற்று?

*19–1–36*இல் வெளியான குடியரசு தலையங்கம் தெளிவுபடுத்துகிறது. அத்தலையங்கம், எதையும் மிகைபடுத்தவில்லை. உள்ளதை உள்ளபடியே உரைக்கிறது. அது காட்டும் கசப்பான உண்மைகள் இதோ:

'எந்த காங்கிரசு கூட்டத்திலாவது, பிராமணர்கள் வேறு; மற்றவர்கள் வேறு என்கிற பிரிவு இல்லாமல், உட்கார்ந்து சாப்பிட்டு இருக்கிறார்களா?'

'காங்கிரசு கான்பரன்ஸ்' முதலிய எந்தக் கூட்டங்களிலும் பார்ப்பனர்களைக்கொண்டுதான் சமையல் செய்திருக்கிறார்களே ஒழிய, மற்ற சாதிக்காரர்களை சமையல் வீட்டில், நுழைய விட்டிருக்கிறார்களா?

'சுயமரியாதை மகாநாடுகளையோ, கூட்டங்களையோ எடுத்துக் கொள்ளுங்கள். நாடார், நாயுடு, முஸ்லீம், தீண்டாப்படாதார் என்கின்றவர்கள் எல்லோரும் கலந்து சமையல் செய்கிறார்கள். இவர்கள் எல்லோருமே கலந்து பரிமாறுகிறார்கள். சைவர் முதல் பெரிய சாதிக்காரர்கள் என்பவர்களும் ஒன்றாய் உட்கார்ந்துதான் சாப்பிடுகிறார்கள்.'

மனிதர்களை மனிதர்களாக நடத்தியதோடு, அந்நிலை சமுதாயத்தின் பொது நடைமுறையாகிவிட வேண்டுமென்பதற்காக, ஏச்சையும் பேச்சையும் தாங்கிக்கொண்டு, தொண்டு புரிந்தது தன்மான இயக்கம். பல்லாண்டு காலம் அவ்வியக்கத்

தைச் சேர்ந்தவர்கள் கலந்துகொள்ளாத, 'தாழ்த்தப்பட்டோர் அல்லது ஆதி திராவிடர்' நடத்தும் நிகழ்ச்சிகள் இரா.

பெருந்துறைக்குப் பதினாறு கிலோ மீட்டர் தொலைவில் ஓர் ஆதி திராவிட குடியிருப்பு அமைக்கப்பட்டது. 8–3–31 அன்று அதன் முதல் ஆண்டு விழாவிற்கு ஈ. வே. ராமசாமி சென்றார். எப்படி? ஒற்றை மாட்டு வண்டியில் அத்தனை தூரப் பயணம்; வேறு வழியில்லை. அப்போது பெரியாருக்கு வயது அய்ம்பத்து இரண்டு. செல்வத்தில் திளைத்த ராமசாமி அவ்வயதிலும் காட்டு வழியில், ஒற்றை மாட்டு வண்டியில், அவ்வளவு தூரம் சென்றார். ஆதி திராவிடர்களுக்கு நம்பிக்கை சுரப்பதில் வியப்பேது. பெரியார் ஈ. வே. ராமசாமி தலைமை வகித்த அல்லது கலந்துகொண்ட ஆதி திராவிட மாநாடுகளும் ஆண்டு விழாக்களும் பொதுக்கூட்டங்களும் ஏராளம் ஏராளம். அவர் போனால், பேளுக்குறிச்சி மிட்டாதார் ஜே. பி. சோமசுந்தரம், மீனாம்பள்ளி நிலக்கிழார் சப்தரிஷி ரெட்டியார், திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம், டி. பி. வேதாசலம், பூவாளூர் பொன்னம்பலம், பட்டிவீரன்பட்டி W.P.A. சௌந்தரப் பாண்டியன், சர் பி. டி. ராஜன், குத்தூசி குருசாமி, குஞ்சிதம் குருசாமி, பட்டுக்கோட்டை அழகிரிசாமி, சிவகங்கை வழக்கறிஞர் ராமசந்திரன், ஆகிய பெரியவர்களில் சிலரோ, பலரோ உடன் சென்றனர். சேலம் மாவட்டம் ஓமலூர் ஆதி திராவிட மாநாட்டில் திரு ஆ. இராமசாமி முதலியாரும் கலந்துகொண்டார்.

தன்மான இயக்கத்தவர்கள் மனிதர்களை சமமாக நடத்துவதில் பழைய சூட்டோடு இருக்கிறார்கள் என்று என்னால் சொல்ல முடியும். இருந்தும் இன்னும் கொடுமைக்கு ஆளாகி வரும் ஆதி திராவிடர்கள் வெவ்வேறு கூடாரங்களில் சிதறிப்போய் வலி விழந்து உள்ளார்கள். ஏன் அப்படி?

## தனித் தொகுதி

தன்னாட்சி இந்தியாவில், தேர்தலில், பொதுத் தொகுதிகளில், ஒதுக்குத் தொகுதிகள் உள்ளதை நாம் அறிவோம். இன்றைய நிலையில் தேர்தல் வெற்றிக்கு பழமை விரும்பிகளின் தயவு பெரிதும் உதவியாகும். சமுதாயக் கண்ணோட்டத்தை இழந்து, தனி மனித வளர்ச்சி வலைக்குள் வீழ்வது, மனிதனுடைய இயற்கையான குறைபாடாகும். நெடுங்காலமாகத் தாழ்த்தப்பட்டவர்கள், இத்தகைய ஆதாயங்களுக்காகச் சிதறிக் கிடக்கிறார்கள். எனவே, அம்பேத்காரோ, இரட்டமலை சீனிவாசனோ, என். சிவராஜோ, மீனாம்பாள் சிவராஜோ, மதுரகவி முருகேச பாகவதரோ, வீ. வீராசாமியோ, ஆதி திராவிடர்களுக்குப் போராடிய அளவு, போராடும் வலிமை, இக்காலத் தலைவர்களுக்கு இல்லை.

தாழ்த்தப்பட்டோர் என்று அழைக்கப்படுவோர், பீகார் மாநிலத்தில் 'பெல்சி' போன்ற இடங்களில் கொடுமைகளுக்கு ஆளாகும்போதும் சரி, விழுப்புரம், கூடலூர், ஆகிய ஊர்களில் கொல்லப்படும்போதும் சரி, ஒதுக்குத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர்களும் கொதிப்பை அடக்கிக்கொண்டு, பொறுமையை மேற்கொள்ளும் நெருக்கடியில் சிக்கிக் கிடக்கிறார்கள்.

'நாங்கள் கண்டிப்பதுபோல் கண்டிக்கிறோம்; நீங்கள் வருந்துவது போல் காட்டுங்கள்' என்று பேசி உடன்படிக்கை செய்துகொண்டது போல், பயன் விளையாத பேச்சோடு நிற்பது பரிதாபம். மற்ற சிறுபான்மையோரைப்போல், இவர்களால், நெருக்கடியை உருவாக்க முடிவதில்லை. எனவே, தன்மான இயக்கம்தான் தாழ்த்தப்பட்டவர்களுக்காக தொடர்ந்து போராடவேண்டும். சாதி ஒழிப்பு பணியும், சமபந்தி உணவு முறையும் பழைய சூட்டோடு, முனைப்போடு, விழிப்போடு, தொடருதல் தேவைப் படுகிறது.

### கலையில் தீண்டாமை

தீண்டாமையின் தீக்கரம் அருங்கலைகளையும் சுட்டெரிக்கத் தயங்கவில்லை என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு இதோ:

நாயனக் கலை நுட்பமான கலை; தமிழர்களுக்கே உரிய தனிக் கலை. இதைக் கற்க, நீண்ட, கடுமையான பயிற்சி தேவை. இக் கலையில் தேர்ச்சிபெற்று, பெரிய இடங்களில், நாயனக் கச்சேரி நடத்தும் நிலைக்கு உயர, அரும்பாடு தேவை. அத்தனை பாடு பட்டு, கடுமையான பயிற்சிபெற்று, சிறந்து விளங்கிய, நாதசுர கலைஞர்கள் சிலர் ஒவ்வொரு தலைமுறையிலும் ஒளிவிட்டார்கள். இருபதாம் நூற்றாண்டின் இருபதுகளில் மதுரை சிவக்கொழுந்து என்னும் கலைஞர் புகழ்பெற்று விளங்கினார். எனவே, பெருஞ் செல்வர்களே, அவரை அழைக்கமுடியும்.

1924ஆம் ஆண்டு, கானாடு காத்தான் என்னும் ஊரில், ஒரு தன வணிகர் வீட்டில் திருமணம். திருமண ஊர்வலத்தில், சிவக் கொழுந்து வாசித்துக்கொண்டு வந்தார். மக்கள், இசையின் நயத் தில் மயங்கியிருந்தார்கள்.

சிவக்கொழுந்து இடுப்பில் விலை உயர்ந்த சரிகைக்கரை வேட்டி அணிந்திருந்தார். உடம்பில் சொக்காய் இல்லை. ஏன்? நாயனக் கலைஞர்கள், வாசிக்கும்போது, சொக்காய் அணியக்கூடாது என்பது மரபு. சிவக்கொழுந்துவின் தோளில் மட்டும், சிறிய துண்டொன்று இருந்தது.

குறிப்பிட்ட அந்த நாள், பெரியார் ஈ. வே. ராமசாமி, டாக்டர் வரதராசுலு, திரு. வை. சு. சண்முகம், திரு. ஏ. வி. தியாகராசன் ஆகியோர், கானாடு காத்தானில் திரு. வை. சு. சண்முகம் வீட்டில் கூடியிருந்தார்கள். எதற்காக? முன்னர் குறிப்பிட்ட சேரன் மகாதேவி குருகுல போராட்டத் திட்டமிட.

ஈ. வே. ராமசாமியோடு, அஞ்சா நெஞ்சன், தன்மான இயக்கத்தின் பெருந்தூண், சொல்லின் செல்வர், பட்டுக்கோட்டை அழகிரிசாமி சென்றிருந்தார். பொதுவாக, தஞ்சை மாவட்டத்தாருக்கு இசைப்பித்து அதிகம். அழகிரிசாமியோ, நல்ல நாயனக் கச்சேரி கேட்க நெடுந்தூரம் போகக்கூடியவர். கானாடு காத்தானில் நடந்துகொண்டிருந்த, சிவக்கொழுந்துவின் நாயன இசைப் பொழிவைக் கேட்கச் சென்றார். சில மணித் துளிகள் சென்றன.

வாலிபர் ஒருவர், சிவக்கொழுந்துவை அணுகினார். தோளின் மேல் போட்டுள்ள சிறு துண்டை எடுத்து இடுப்பில் சொருகிக் கொள்ளச் சொன்னார். 'போட்டிருப்பதோ சிறு துண்டு. வாசிப்பு, வியர்வையைத் தள்ளும். அதைத் துடைக்க, தோளில் கிடப்பதே வசதி. மேல் துணியையல்ல; துண்டையே போட்டுள்ளேன்' என்று கூறி அமைதிப்படுத்த முயன்றார், சிவக்கொழுந்து.

'பெரிய சாதி' என்னும் நினைப்போடு நாலு காசும் சேர்ந்தால், அட்டகாசம் இயற்கை. வாலிபர் ஒப்பவில்லை. துண்டைத் தோளில் போட்டபடி வாசிக்கவிடமாட்டேன் என்று மிரட்டினார்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த அழகிரிசாமி, சிவக்கொழுந்துவிடம் போனார். உரத்த குரலில், 'துண்டை எடுக்கவேண்டாம்; இடுப்பில் கட்டவேண்டாம்; இப்படியே வாசியுங்கள். கேட்கிறவர்கள் கேட்கட்டும்; விரும்பாதவர்கள் போகட்டும்' என்று ஆணையிட்டார். பெரியாரின் ஆண்மையல்லவா முழங்கிற்று?

எதிர்ப்புத் தெரிவித்த வாலிபரோடு, மேலும் சிலர் சேர்ந்து கொண்டு மிரட்டினார்கள். திருமண ஊர்வலம் நடுத்தெருவில் நின்றது.

இதற்குள், அழகிரிசாமி, யார் என்பதை அடையாளம் கண்டு கொண்டார்கள். அவருடைய குருநாதர் ஈ. வே. ராமசாமி, வை. சு. சண்முகம் வீட்டில் தங்கியிருப்பது தெரிந்துவிட்டது. தூது பறந்தது. மானுடத்தின் பேருருவை, சமத்துவத்தின் மேருவை, ஈ. வே. ராமசாமியைக் கண்டு முறையிட்டார் தூதுவர். செய்தியைக் கேட்பதில் பொறுமையைக் காட்டினார் பெரியார். பதிலில் சமத்துவப் பெருந் தீச்சுடர் விட்டது. இதோ அந்த பதில்:

'உங்களுக்கிருக்கின்ற பணக்கொழுப்பை காட்டுவதுதானே, இம்மாதிரியான அவமரியாதை எல்லாம்; ஆனதினால்தான் நாங்கள்

சிவக்கொழுந்துவை அழைத்துக்கொண்டு வந்துவிடுகிறோம். நீங்கள் பாட்டிலே ஊர்வலம் போங்களேன்' என்று கடுமையாகச்சொல்லி அனுப்பிவிட்டார்கள். இதிலே பெரியாருக்கு என்ன ஆதாயம்? என்ன பெருமை? சமத்துவக் கொள்கையிலிருந்த பற்றன்றோ எரிமலையாக, அப்போதும் எப்போதும் வாழ்நாள் முழுவதும் முழங்கவைத்தது.

இப்போது திருமண ஊர்வலத்திற்குச் செல்வோம். வைத்த மேளத்தை நிறுத்திவிட்டு, திருமண ஊர்வலம் வருவது பெரும் இழிவு. எனவே, திருமண வீட்டுச் செட்டியார், துணிச்சலை, வலிந்து வரவழைத்துக்கொண்டார். 'நாயனக்காரரர் விருப்பப்படி துண்டை போட்டுக்கொண்டே வாசிக்கட்டும். விருப்பமுள்ளவர்கள் கேட்கலாம்; போகிறவர்கள் போகட்டும்' என்று அறிவித்துவிட்டார்.

இழிவு துடைக்கப்பட்டது. மக்கள் ஒருநிலை நிலைநாட்டப் பட்டது. கலைஞர் சிவக்கொழுந்து, இன்பப் பெருக்கில், இனிமையின் சிகரத்திலே நடமாடி வாசித்துப் பெருமைப்பட்டார்.

## சாதி வெறி

பெரியார் காங்கிரசைவிட்டு வெளியேறக் காரணமாயிருந்த, விலகத் தூண்டிய உயர் ஜாதி உணர்வு வ. வே. சு. அய்யரிடம் மட்டுமா இருந்தது? அது, மற்ற பெரிய மனிதர்களைக்கூட ஆட்டிப் படைத்தது தெரியுமா? காந்தியார், முதன்முறை சென்னைக்கு வந்தபோது, எஸ். சீனிவாச அய்யங்கார் வீட்டில் தாழ்வாரத்தில் தான் உட்கார்ந்திருக்கவேண்டியதாயிற்று. இரண்டாம் முறை வந்தபோது காந்தியார் எப்படி நடத்தப்பட்டார்?

16–9–27இல் காந்தியாரை, நீதிக் கட்சித் தலைவர்களான திருவாளர்கள் பன்னீர்செல்வம், உமாமகேசுவரம் பிள்ளை, கார்குடி, சின்னையா, சையத் தாஜுதின், ஆகியோர் தஞ்சையில் கண்டு, பார்ப்பனர்–பார்ப்பனரல்லாதார் விவகாரம்பற்றி உரையாடினார்கள். பார்ப்பனரல்லாதார் போராட்டத்தின் காரணங்களை தமிழ்த் தலைவர்கள் விளக்கினார்கள். பார்ப்பனர்கள் மாறி வருவதாக மதிப்பிட்ட காந்தியார், அதற்குச் சான்றாகக் காட்டியதைக் காண்போம்:

'பிராமணரல்லாதாரே, இந்த இயக்கத்தைப்பற்றி பலவிதமாகக் கூறுகிறார்கள். பிராமணர்–பிராமணரல்லாதாருக்கிடையே இப்போது வேறுபாடுகள் இருந்தாலும் சிறிது காலத்தில் அவை மறைந்துவிடும் என்று டாக்டர் வரதராஜுலு நாயுடு கூறுகிறார்.

என்னைப்போன்றவர்கள் இதில் தலையிட வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார். ஆனால் ஈரோட்டு ராமசாமி, தென்னாட்டில் பிராமணர் கொடுமை அதிகமாக இருக்கிறதென்றும் என்னைப் போன்றவர்கள் இதில் அவசியம் தலையிட்டு மனநிறைவு தரக் கூடிய ஒரு முடிவை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் என்றும் கூறுகிறார். இப்போது பிராமணர்களிடத்து முற்போக்கான கொள்கைகள் பரவி வருவதைக் காண்கிறேன்.

சில ஆண்டுகளுக்குமுன், நான் சென்னைக்கு வந்தபோது, எஸ். சீனிவாச அய்யங்கார் வீட்டின் தாழ்வாரத்தில்தான் உட்கார்ந்திருந்தேன். இப்போது, அவர் வீட்டை என் வீடாகவே, நினைத்துப் பழகிவருகிறேன். என் மனைவி அவர்களுடைய அடுப்பங்கரை வரை செல்கிறாள்.

அன்று (16-9-1927) மாலை தஞ்சையில் காந்தியார் பேசிய பொதுக்கூட்டத்தில் பின்வருமாறு உரைத்தார்: 'ஒரு பிராமணனோ அல்லது வேறு யாரோ, தாம் உயர்ந்தவர் என்று உரிமை கொண்டாடும்போது பிராமணரல்லாதார் அதை எதிர்த்துப் போரிட்டால் அதை முழுக்க முழுக்க நான் ஆதரிக்கிறேன். நான் உயர்ந்தவன் என்று உரிமை கொண்டாடுபவன் மனிதன் என்று அழைக்கப்படுவதற்கு உரியவன் அல்லன். ஒரு பிராமணன் பணம் சம்பாதிப்பதில் இறங்கிவிட்டால் அவன் பிராமணன் அல்லன்!'

இப்படிக் காந்தியார் கண்டித்தார்; நம்பிக்கையொளியைக் காட்டினார். மின்னுவதெல்லாம் பொன்னல்ல; எல்லா மின்னலும் மழையில் முடிவதில்லை. இதை இன்றும் நாம் நாள்தோறும் உணருகிறோம். காவிரிக்கரையில், சாதிப் படித்துறைகள் தனித் தனியே. ஏன் சுடுகாட்டிலும் தனித்தனி சுடுகாடுகள்; தனித்தனி இடுகாடுகள்; தனித்தனி புதுக் குடியிருப்புகள். இன்றைக்கும் இவைகளைப் பொறுத்துக்கொண்டிருக்கவேண்டுமா? பிறர் மனம் புண்படுமே என்று எண்ணி, சூத்திரர்களாகவே ஒதுங்கிப்போக வேண்டியதுதானா?

ஈ. வே. ராமசாமி, காந்தியின் உண்மைச் சீடராக விளங்கி, காங்கிரசின் சார்பில் தீண்டாமை விலக்கைப்பற்றி வன்மையாகப் பேசியதை உங்கள் நினைவுக்குக் கொண்டுவருதல் என் கடமை. இதோ ஈ. வே. ராவின் முழக்கம்:

'மனிதனுக்கு மனிதன் தொடக்கூடாது; கண்ணில் படக்கூடாது; தெருவில் நடக்கக்கூடாது; கோயிலுக்குள் போகக்கூடாது; குளத்தில் தண்ணீர் எடுக்கக்கூடாது என்கிறவை போன்ற கொள்கை தாண்டவமாடும் ஒரு நாட்டைப் பூகம்பத்தால் அழிக்காமலோ எரிமலையின் நெருப்புக் குழம்பால் எரிக்காமலோ, சமுத்திரம்

பொங்கி மூழ்கச் செய்யாமலோ, பூமிப் பிளவில் அமிழச் செய்யாமலோ, சண்டமாருதத்தால் துகளாக்காமலோ விட்டிருப்பதைப் பார்த்த பிறகும்கூட, கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும் அவர் நீதிமான் என்றும் சர்வதயாபரர் என்றும் யாராவது சொல்ல வந்தால் அவர்களை என்னவென்று நினைப்பது என்பதை நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள். இம்மாதிரி கொடுமைப்படுத்தித் தாழ்த்தப்பட்ட ஒரு மாபெரும் மக்கள் சமூகம் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் பொறுமையோடும் சாந்தத்தோடும் அஹிம்சா தர்மத்தோடும் இருக்கவேண்டுமென்று விரும்புகிறீர்கள்? இம்மாதிரியான மக்கள் ஒரு நாட்டில் இருந்துகொண்டு உயிர் வாழ்வதைவிட, அவர்கள் இம்முயற்சியில் உயிர் துறப்பதை உண்மையிலே தப்பு என்று யாராவது நினைக்கிறீர்களா?' என்று பெரியார் கேட்டது, முப்பத்திரண்டு ஆண்டு தன்னாட்சிக்குப் பிறகும் எவ்வளவு பொருத்தமானதாக இருக்கிறது?

எண்ணற்ற தாழ்த்தப்பட்டோர் கூட்டங்களில் கலந்துகொண்ட பெரியார் ஈ. வே. ராமசாமி, 1928இல் ஒரு தாழ்த்தப்பட்டோர் மாநாட்டில் ஆற்றிய உரையின் பகுதியைப் படியுங்கள்:

'உங்களை யாராவது கிராமவாசிகள் துன்புறுத்தினால், இழிவாய் நடத்தினால், எதிர்த்து நிற்கவேண்டும். முடியாவிட்டால் வேறு பட்டணங்களுக்கு குடியேறிவிடவேண்டும். அங்கும் ஜீவனத்திற்கு மார்க்கம் இல்லாவிட்டால், இம்மாதிரி கொடுமையான இந்து மதத்தை உதறித் தள்ளிவிட்டு சமத்துவம் உள்ள மதத்திற்கு போய் விடவேண்டும். அதுவும் முடியாவிட்டால், வெளி நாடுகளுக்காவது கூலிகளாய்ப் போய் உயிரையாவது விடவேண்டும்.'

தீண்டாமை ஒழிப்பிற்கு ஆதரவாக பிரசாரம் செய்துகொண்டும் மாநாடுகளில் அத்தகைய முடிவுகளை நிறைவேற்றிக்கொண்டும் வந்த தன்மான இயக்கம் தொலைவிலிருந்த குறிக்கோளை சாக்காகக் காட்டி, உடனடி உதவிய சலுகைகளை மறுக்கவில்லை.

1929இல் முதல் சுயமரியாதை மாநாட்டிலேயே, 'மற்ற வகுப்புப் பிள்ளைகளுக்குச் சமமாக கல்வி அடைகிறவரையிலும் தீண்டாதவர்கள் என்று சொல்லப்படுகிற வகுப்பினரின் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடங்களில், புத்தகம், உண்டி, உடை முதலியவற்றை இலவசமாக அளிக்கவேண்டுமென்று' முடிவு செய்தது.

அதையொட்டி நடந்த பார்ப்பனரல்லாத இளைஞர் மாநாட்டிலும் அத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

செங்கற்பட்டில் நடந்த பார்ப்பனரல்லாத இளைஞர் மாநாடு, 'தீண்டாதார் எனப்படுவோருக்கு சர்க்காரில் காலியாகும் உத்தி யோகங்களில் முதல் உரிமை கொடுக்கவேண்டுமென்று' முடிவு செய்தது.

ஈ. வே. ராமசாமி, உத்தியோகங்களில் மட்டுமா வகுப்புரிமை கோரினார்? இல்லை; தேர்ந்தெடுக்கப்படும் பதவிகளிலும் வகுப் புரிமைக்குப் பாடுபட்டார். தாழ்த்தப்பட்டோர்க்குத் தனித் தொகுதி கோரினார்; அதற்காக ஆதரவு திரட்டினார். தாழ்த்தப் பட்டவர்களுக்கு தனித் தொகுதி வேண்டுமென்ற ஆலோசனையை டாக்டர் அம்பேத்கார் வட்ட மேசை மாநாட்டில் வற்புறுத்தினார். தொடர்ந்து ஆதரவு திரட்டினார். ஆங்கிலேயே அரசு, அதை ஏற்றுக்கொள்ள சித்தமாக இருந்தது. ஆனால் காந்தியடிகள் தனித் தொகுதி முறையை எதிர்த்து உண்ணா நோன்பிருந்தார். சாகும்வரை உண்ணா நோன்பென்று தொடர்ந்தார். பொது வாழ்க்கையில் முன்னணியில் இருந்த பலர், டாக்டர் அம்பேத் காரை, நெருக்கினார்கள், கெஞ்சினார்கள். கடைசியில் ஓர் உடன் படிக்கை ஏற்பட்டது. அதற்குப் பூதனா ஒப்பந்தம் என்று பெயர். அதன்படி, தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித் தொகுதி கிடை யாது; ஆனால் பொதுத் தொகுதியில் அவர்களுக்கு சில தொகுதிகள் ஒதுக்கப்படும். எத்தனை என்பதை, அந்தந்த மாநிலங் களில் தாழ்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை விழுக்காட்டு அடிப் படையில் முடிவுசெய்யப்படும். இதுவே உடன்படிக்கையின் சாரம்.

தனித் தொகுதி முறைக்கும் ஒதுக்குத் தொகுதி முறைக்கும் என்ன வேறுபாடு? தனித் தொகுதியென்றால், வேட்பாளர்கள், தாழ்த்தப்பட்டவர்களின் தயவை—வாக்குகளை—மட்டுமே நாட வேண்டும். மற்ற சாதியார் அத்தொகுதியில் வாக்களிக்க முடி யாது. அப்படியிருந்தால், தாழ்த்தப்பட்டவர்களுக்கு இழைக்கும் கொடுமைகளை சில பிரதிநிதிகளாவது, துணிந்து எதிர்க்கமுடியும். போதிய சூட்டோடு எதிர்க்க இயலும். பொதுத் தொகுதியில் ஒதுக்குத் தொகுதி என்றால் வேட்பாளர்கள் ஆதி திராவிடர்க ளாக இருப்பார்கள். மற்ற சாதிக்காரர்களின் வாக்குகளை நிறையப் பெற்றால்தான் வெற்றிபெற முடியும். எனவே, தங்கள் மக்க ளுடைய நலனுக்குப் போராடுவதற்குத் துடிக்கமாட்டார்கள் என்பது பட்டறிவு தெளிவுபடுத்திய பாடம். சமுதாயத்தின் மொத்த நலனைக் கருதி, பிறப்பின் பேரால் கற்பிக்கப்படும் ஏற்றத் தாழ்வுகளை சட்டத்தின்மூலம் ஒழிக்கவேண்டும். அது வரையில் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித் தொகுதி தேவை.

அடுத்து 1931இல் விருதுநகரில் மூன்றாவது மாநாடு ஆர். கே. சண்முகம் தலைமையில் கூடியது. தீண்டாமை என்பது இந்து சமூகத்திலுள்ள சகல சாதிகளையும் பிடித்த நோயென்றும், தீண்டாமை ஒழியவேண்டுமானால் பிராமணீயம் ஒழியவேண்டு மென்றும் அம் மாநாடு முடிவு செய்தது.

## உலக வியப்பு

தன்மான இயக்கத்தின் தீவிரக் கொள்கைகளின் எதிரொலி உலகெங்கும் கேட்டது. இங்கிலாந்தில், ஆர். பி. ஏ. (ரேஷனலிஸ்ட் பிரஸ் அசோசியேசன்) என்னும் அமைப்பு—பகுத்தறிவு வெளியீட்டுக் கழகம்—'லிட்டரரி கைய்ட்' (அறிவு விளக்கம்) என்னும் திங்கள் இதழை நடத்திவந்தது. 1931ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அவ் விதழில் 'இந்தியாவில் அறிவு இயக்கம்' என்னும் கட்டுரை வெளியாயிற்று. அக்கட்டுரையின் ஒரு பகுதி இதோ:

'இந்திய வரலாற்றில் வியக்கத்தக்கபடி, சென்ற அய்ந்து ஆண்டு காலத்தில் ஒரு பெரிய புத்துணர்ச்சி வெள்ளம் இருகரையும் புரண்டு போய்க்கொண்டிருக்கிறது. அதாவது, சுயமரியாதை இயக்கம் என்பதாக ஓர் இயக்கம் சென்ற அய்ந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு சென்னை மாகாணத்தில் தொடங்கப்பட்டு, மக்களால் நெடுங் காலமாக மரியாதை செய்யப்பட்டுவந்த கருத்துகளுக்கும் நம் பிக்கைகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் அடிப்படையிலே ஆட்டம் ஏற் படும்படி செய்துவிட்டது.'

உள்நாட்டுச் செய்தி நிறுவனங்கள் எவ்வளவுதான் மூடிமறைத்தா லும், சுயமரியாதை இயக்கத்தின் புரட்சிகரமான சாதனையை பத்தாயிரம் கிலோ மீட்டர்களுக்கு அப்பால் வாழ்ந்தவர்கள், அடையாளம் கண்டு, உலகுக்குக் காட்டினார்கள்.

தாழ்த்தப்பட்டோருக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் பொது உணவுச்சாலைகளையும் ஊடுருவியது. அய்ம்பது ஆண்டுகளுக்கு முன்பு இரயில்வே ஒட்டல் உட்பட தனியார் நடத்திய ஒட்டல்களி லும் சிற்றுண்டிச்சாலைகளிலும் தாழ்த்தப்பட்டோரை அனு மதிப்பதில்லை. அனுமதிக்கப்பட்ட சாதிகளிலும் பார்ப்பனர் களுக்குத் தனியிடமும் மற்றவர்களுக்குத் தனியிடமும் ஒதுக்கி வைப்பார்கள். அம்முறையை தன்மான இயக்கம் ஏற்றுக்கொள்ள முடியுமா?

முதல் சுயமரியாதை மாநாட்டிலேயே சிற்றுண்டிச்சாலைகளில் கடைப்பிடிக்கப்பட்ட வகுப்பு பேத முறைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப் பட்டது.

## வகுப்பு பேதம்

'வகுப்பு பேதம் காண்பிக்கப்படுகிற எல்லா ஓட்டல்களையும் காப்பி கிளப்புகளையும் இந்த மாநாடு கண்டிப்பதுடன், இவ்வித விஷமத்தனமான பேதங்கள் உள்ள ஓட்டல்களுக்கும் காப்பி கிளப்புகளுக்கும் அவ்வவ்விடத்திலுள்ள அதிகாரிகள் லைசென்ஸ் கொடுக்கக்கூடாதென்றும் கேட்டுக்கொள்ளுகிறது.

'இரயில்வே அதிகாரிகள் தங்கள் வசத்திலும் மேற்பார்வையிலும் உள்ள, சாப்பாட்டுச்சாலைகளிலும் சிற்றுண்டிச்சாலைகளிலும் சாதி, மதம், வகுப்பு, நிறம், முதலியவற்றைப் பொறுத்து எவ்வகையிலும் வேற்றுமையாகப் பயணிகளைப் பாராட்டாமலிருப்பதற்குரிய நடவடிக்கையை உடனே கைக்கொள்ளுமாறும் இவ்விழிவான வேற்றுமையை ஒழிக்க, இரயில்வே ஆலோசனைக் குழுக்களும் இந்திய சட்டசபை மெம்பர்களும் ஏற்பாடுகள் செய்யுமாறும் இம் மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது' என்றும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

இரண்டாவது உலகப் போரின்போது, சர் ஆ. இராமசாமி முதலியார், இந்திய அமைச்சராக இருந்தபோது, பெரியார் முனைந்து நின்று, இரயில்வே ஓட்டல்களில் பிராமணாள் என்று பிரித்து வைப்பதை ஒழித்தார்.

இரயில் நிலையங்கள் அல்லாத இடங்களில் பார்ப்பனர்கள் நடத்தும் சிற்றுண்டிச்சாலைகளிலும் உணவுச்சாலைகளிலும் 'பிராமணாளுக்கு' என்று இடம் ஒதுக்குவது பல்லாண்டுகளாக வந்த பழக்கம். அதோடு, அந்தக் கடைக்கு வெளியே 'பிராமணாள் ஓட்டல்' என்று பெயர்ப் பலகையில் எழுதிவைப்பதும் பழைய பழக்கம். இது பொதுமக்களைப் பிரித்துக்காட்டி இழிவுபடுத்துவதாகும். இம்முறையைப்பற்றிக் குறிப்பிடும்போது,

'ஒருத்தி தன் தெருவில், தன் வீட்டில்: ''இது பதிவிரதை வீடு'' என்று போர்டு போட்டுக்கொண்டால் மற்றவர்கள் வீடு என்ன என்று அர்த்தம்?' என்று நெஞ்சில் தைக்கும்படி கேட்டார்.

உணவுச்சாலை அறிவிப்புகளில் 'பிராமணாள்' என்னும் சொல்லை நீக்கிவிட்டு, மரக்கறி உணவுச்சாலை என்று போடும்படி பெரியார் வேண்டுகோள் விடுத்தார். போதிய அவகாசம் கொடுத்து, அதற்குள் பொதுமக்கள் மனதை புண்படுத்தும் அச்சொல்லை நீக்கிவிடும்படி வேண்டிக்கொண்டார். பல இடங்களில் உரிமையாளர்கள் காலத்தின் போக்கையறிந்து ஒத்துழைத்தார்கள். 'பிராமணாள்' என்னும் சொல்லை நீக்கிவிட்டார்கள். ஆனால் சிலர் வீம்பு பண்ணினார்கள்; எடுக்க மறுத்தார்கள். எடுக்க

மறுத்த ஓட்டல்களில் ஒன்று சென்னை, திருவல்லிக்கேணியில் உள்ள 'முரளீஸ் கபே' என்பதாகும்.

முரளீஸ் கபே ஓட்டலின்முன் நாள்தோறும் அமைதியான முறையில் மறியல் செய்யும் போராட்டத்தை பெரியார் அறிவித்தார். அப்படியே ஒன்பது திங்கள்போல் நடந்தது. ஒவ்வொரு நாளும் மறியல் தொண்டர்கள் கைதுசெய்யப்பட்டார்கள்; சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்கள், கடைசியில் வெற்றி கிட்டியது. அறுநூறுக்கு மேற்பட்டவர்கள் சிறைப்பட்ட பிறகு, உரிமையாளர் அந்த ஓட்டல் பலகையில் 'பிராமணாள்' என்ற சொல்லை எடுத்துவிட்டார்.

10–5–30இல், ஈரோட்டில் கூடிய இரண்டாவது மாநாடு தீண்டாமை பற்றி செய்த முடிவு வருமாறு:

தீண்டாமை என்னும் கொடுமை மனித தர்மத்திற்கு விரோதமென்று இம் மாநாடு கருதுவதுடன் மக்கள் சமூகத்தில் எந்த வகுப்பாருக்கும் பொது உரிமைகளை மறுக்கும் பழக்க வழக்கங்களை உடனே ஒழிக்கவேண்டும். பொது வழிகள், குளங்கள், கிணறுகள், தண்ணீர்ப் பந்தல்கள், கோவில்கள், சத்திரங்கள் முதலிய இடங்களில் சகலருக்கும் சம உரிமை வழங்க வேண்டுமென்று இம் மாநாடு முடிவுசெய்கிறது. அதோடு,

பிறப்பின் பேரால் ஏற்பட்ட சமூகக் கொடுமைகளையும் வேற்றுமைகளையும் அடியோடு ஒழிப்பதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள், பெரிதும் அவைகளை காப்பாற்ற ஏற்பட்டவர்களின் தீவிர முயற்சிகளால் வெற்றிபெறாத நிலையில் இருப்பதால் பொதுமக்கள் முன்னேற்றத்தைக் கருதி அவற்றை சட்டத்தின் மூலம் ஒழிக்கவேண்டுமென்று இம் மாநாடு கருதுகிறது என்று மற்றோர் முடிவினை ஏற்றுக்கொண்டது.

நெடுங்காலமாக நடைமுறையில் உள்ள சாதி உயர்வு தாழ்வு முறையைத் தகர்த்தெறியப் பாடுபட்ட பெரியாரை, பார்ப்பன வெறுப்பாளர் என்று குற்றஞ் சாட்டினர். அதற்கு பெரியார் பதில் என்ன? இதோ அப் பதில்:

'கொசுவலை உபயோகிப்பதால் நாம் கொசுக்களுக்குத் துவேஷிகளாகி விடுவோமா? மூட்டைப்பூச்சி கடிக்காமலிருப்பதற்கு நம் வீட்டை அடிக்கடி சுத்தஞ்செய்வதால், நாம் மூட்டைப்பூச்சி துரோகிகள் ஆகிவிடுவோமா? இப்படிப்பட்ட துவேஷத்திற்கும் துரோகத்திற்கும் நாம் ஆளாகக்கூடாது என்று பயந்து, பயந்து, பார்ப்பனர் தூஷணைகளுக்கு நடுங்கி, நடுங்கி, நம் குறைகளை வெளியில் எடுத்துச் சொல்வதற்கும் அவைகளை நிவர்த்திப்பதற்

கும் இயலாத அவ்வளவு மோசமான பயங்காளிகளாக ஆகி விட்டோம்.'

1928 நவம்பரில் சென்னையில், பெரியார் ஈ. வே. ராமசாமி தலைமையில் ஒரு சீர்திருத்த மாநாடு கூடிற்று. அம் மாநாட்டை செல்வி ஜோதிர்மாயி கங்குலி என்பவர் தொடங்கிவைத்தார். அந்த அம்மையார் அப்போது, பஞ்சாபில் இருந்த சாதி ஒழிப்பு மன்றத்தின் தலைவராக இருந்தார். இம் மாநாட்டில் சமபந்தி உணவுமுறை பின்பற்றப்பட்டது. இம் மாநாட்டிலும் சமபந்தி உணவிலும் நானும் பங்குகொள்ளும் வாய்ப்பு பெற்றேன்.

தலைவர் பெரியார், தமது முன்னுரையில் கூறியதாவது:

'ஒரு பெரிய கிணறு இருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். அந்தக் கிணற்றிற்கு மிகப் பழமையானதும் விசேஷமானதுமான ஒரு புராணம் இருப்பதாகவே வைத்துக்கொள்ளுங்கள். அதாவது, அந்தக் கிணற்றுத் தண்ணீரில் ஒரு துளி தண்ணீரைச் சாப்பிடுவ தனாலோ அல்லது மேலே தெளித்துக்கொள்வதனாலோ நம்முடைய எல்லாப் பாவமும் மகா பாதகமான காரியம் என்று சொல்லப்பட்ட செய்கைகளைச் செய்தாலும் மன்னிக்கப்படுவ துடன் மோட்சலோகம் என்பது கிடைக்கும் என்று எழுதியிருப்ப தாகவே வைத்துக்கொள்ளுங்கள். ஆனால் இப்போது அந்தக் கிணற்றுத் தண்ணீரில் ஒரு சிறிது சாப்பிட்டால் விஷபேதி காணக் கூடியதாகவும் ஸ்நானம் செய்தால் சரீரமெல்லாம் சொறிசிரங்கு வரக்கூடியதாகவும் இருந்தால், அதற்காக நாம் செய்யவேண்டிய வேலை என்ன? அந்தத் தண்ணீரில் விஷப்பூச்சிகள் உண்டாகித் தண்ணீரைக் கெடுத்துவிட்டது என்று கருதி, அந்த விஷப்பூச்சிகள் சாகத்தக்க மருந்தை அந்த கிணற்றுக்குள் போடுவோம். அப்படிப் போட்ட பிறகும் அந்தத் தண்ணீரின் குணம், அப்படியே முன்போலவே இருக்குமானால் மேற்கொண்டு என்ன செய்வோம்? மருந்துக்கும் கட்டுப்படாத அளவு கெடுதி, அந்தத் தண்ணீரில் உண்டாய்விட்டதாகக் கருதி, அந்தக் கிணற்றுத் தண்ணீர் முழுவதையும் இறைத்து, வெளியில் ஊற்றி, அந்தக் கிணற்றையும் நன்றாகக் கழுவி விடுவோம். அந்தப்படி செய்த பிறகும் மறுபடியும் அந்தத் தண்ணீரின் குணம் அப்படியே இருக்குமானால், அதன் காரணம் என்ன? அந்தக் கிணற்றுக்குத் தண்ணீர் வரும் ஊற்றே விஷத்தன்மை பொருந்தியது. அதாவது விஷநீர் ஊற்றுக் கிணறு என்றுதானே ஏற்படும்?

அப்படிப்பட்ட விஷநீர் ஊற்றுக் கிணற்றை என்ன செய்வீர்கள்? பழைய புராணத்தையும் அதில் உள்ள அந்தக் கிணற்றுப் பெருமையையும் மதித்து, அதிலேயே குளித்து, அந்த நீரையே

சாப்பிட்டு, விஷ பேதியையும் சொறிசிரங்கையும் அடைந்து கொண்டிருப்பீர்களா? அல்லது அந்தக் கிணற்றை மண்ணைக் கொட்டி மூடிவிடுவீர்களா என்பதை யோசித்துப் பாருங்கள்' என்று கூறினார்.

நான் சொன்னேன் என்பதற்காக எதையும் ஏற்றுக்கொள்ளாதே; உங்கள் சிந்தனைக்குச் சரியென்றுபட்டால் மட்டுமே ஏற்றுக் கொள்ளுங்கள் என்று ஒவ்வொரு கூட்டத்திலும் கூறும் பெரியார், நம்மை யோசித்துப் பார்க்கவே சொல்லுகிறார். துணிந்து யோசிப் போர் அவர் முடிவிற்கே வரக்காண்கிறோம்.

**பக்தியா? ஒழுக்கமா?**

கடவுள் நம்பிக்கை, கடவுள் பக்தி முதலியவற்றைவிட, ஒழுக்கமே இன்றியமையாதது என்று பெரியார், வாழ்நாள் முழுவதும் ஊர்தோறும் முழங்கிவந்தார். ஏன் என்று அவரே விளக்கம் தந்தார்.

'கடவுள் நம்பிக்கை இல்லாவிட்டால் என்ன கெடுதி? நம்பிக்கை யாளர்கள் சொல்லுகிறபடி பார்த்தாலும் நம்பிக்கையில்லாத வர்க்கு மோட்சம் கிட்டாது. ஆகவே அந்த ஒருவருக்கே, அவருடைய நலனுக்கே கெடுதி.

'ஒழுக்கமில்லாவிட்டால், அது ஒழுக்கங்கெட்டாரைவிட சமு தாயத்தையே அதிகம் தாக்கும். ஒருவர் திருடராக, புரட்டராக, ஏமாற்றுகிறவராக இருந்தால், அதனால் சமுதாயத்திலுள்ள பலருக்கு இழப்பு நேரிடும்; பலர் தொல்லைப்படுவார்கள். ஆகவே ஒழுக்கத்தைக் காப்பதற்கே முன்னுரிமை தரவேண்டும். பன்னெடுங் காலமாக, சமயத்தின் பேரால் பாடுபட்டது வீணாகிவிட்டது. ஒழுக்கக்கேடு வளர்ந்துகொண்டே இருக்கிறது. குற்றம் புரிவோரில் ஏராளமானவர்கள் கடவுள் நம்பிக்கையாளர்களாகவே இருப்பதை பார்க்கிறோம். எனவே, பழைய கோட்பாடுகளையே நம்பி யிராமல், மோட்சம், நரகம் என்னும் பூச்சாண்டிகளே மக்களை நெறிப்படுத்தும் என்று ஏமாந்துவிடாமல், ஒழுக்கத்தின் தேவையை, சமுதாயப் பலனை எடுத்துக்காட்டி, மக்களை நெறிப்படுத்த வேண்டுமென்பது பெரியாரின் கருத்தாகும்.

'சாதிக்கொரு ஒழுக்கம் கற்பிப்பது நம் இந்து சமயம். ஆண்களுக்கு கூறும் ஒழுக்கம் வேறு; பெண்களுக்குக் கூறும் ஒழுக்கம் வேறு. பெரியாருக்கு இத்தகைய மாறுபட்ட ஒழுக்கநெறி உடன்பாடல்ல.'

8–12–1929இலேயே ஈரோட்டில் பேசிய பெரியார்,

'ஒரு நாடு சுபிட்சத்துடன் வாழவேண்டுமானால், அந்நாட்டு மக்கள் ஒரே ஒழுக்கமுள்ளவர்களாக இருத்தல் அவசியம். ஒழுக்க

மென்பதோ, கற்பென்பதோ, ஆண் பெண் இருபாலாருக்கும் சொந்தமானதேயன்றி பெண்களுக்கு மட்டுமல்ல. இன்றைய சீர்கேடான நிலைக்குப் பெண்மக்கள் மிருகங்களிலும் கேவலமாகக் கருதப்பட்டதும் அவர்கள் பிள்ளைபெறும் இயந்திரங்களாக எண்ணப்பட்டதும் மனித ஜென்மத்திற்கும் பெண்களுக்கும் சம்பந்தமே இல்லை என ஆண்கள் மதித்து வந்ததும் இவைகளின் சௌகரியத்தினால் இவன் ஒழுக்கம் என்பதை விட்டு விட்டு நாளாவட்டத்தில் வெகுதூரம் விலகி, அதற்கும் இவனுக்கும் சம்பந்தமில்லாது, இன்று வாழ்வதுமே காரணமாகும்' என்றுரைத்தார்.

'பழக்கத்தால் மாடுகளும் செக்கைச் சுற்றும்' என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடினார். பழக்கம் மாடுகளை மட்டும் இயக்கவில்லை; மக்களினத்தையும் இயக்கிவருகிறது. எடுத்துக் காட்டிற்கு 'ஆத்மா' என்னும் சொல்லைப் பார்ப்போம். பழக்கத்தின் காரணமாக, 'ஆத்மா' என்னும் சொல்லை நாம் பயன்படுத்துகிறோம். ஆனால் அதைப்பற்றி கணமேனும் சிந்தித்துப் பார்த்ததில்லை. பெரியார், சிந்தித்தார்; முடிவுக்கு வந்தார்; அதை 9–9–1934ஆம் நாளைய 'பகுத்தறிவு' வார இதழின் தலையங்கத்தில் வெளியிடுகிறார். இதோ அக்கருத்து:

'ஆத்மா' என்பதை இதுவரை ஒரு மனிதனும் அர்த்தத்தோடு உறுதிப்படுத்தவேயில்லை.

$4+3=10$ என்று சொல்லிவிட்டு, அந்த 10அய்ப்பற்றியே விவகரித்துக்கொண்டிருப்பதுபோலவே, அதாவது 10அய், யார் யாருக்கு எப்படி பங்கிடுவது என்று வேண்டுமானால் பேசு; அதற்கு மேல், $4+3=$எப்படி பத்து என்று மாத்திரம் கேட்கக்கூடாது என்கிற நிலையில்தான் ஆத்ம தத்துவம் இருக்கிறது.' இவ்வாதத்தின் அடிப்படையை மறுக்கமுடியுமா?

மக்கள் வாழ்க்கையின் ஒரு துறைக்கோ, பல துறைகளுக்கோ, வழி காட்டும் சீரிய சிந்தனையாளர்களை பொதுமக்கள், 'மகானாக' 'கண்கண்ட தெய்வமாக' ஆக்கி வணங்கத் தலைப்பட்டுவிடுவது உண்டு. அவர்களைப் புதிய கடவுள்களாக்கி வழிபட முற்படுவதும் உண்டு.

அறிவைப் பயன்படுத்தி, நல்லதை அறிந்து, நல்லதைச் சொல்லி, நல்லதைச் செய்து, வாழும்படி மக்களினத்திற்கு வழிகாட்டியவர் புத்தர் ஆவார். ஆனால், அவர் மறைந்தபின், அவரை அவதாரமாக்கி, கோயில் கட்டி, வழிபட பலர் முனைந்துவிட்டார்கள். 'கடவுள் கவலை நமக்கு வேண்டாம்' என்று அறிவுறுத்திய புத்தரையே கடவுளாக்கி வழிபடுதல் எவ்வளவு முரண்பாடு. இத்தகைய வழிபாட்டு நிலை தனக்கு வந்துவிடக்கூடாது என்பது

பெரியாரின் விருப்பம். அதை 11–10–1931 நாளைய 'குடி அரசு' வாயிலாக வெளியிட்டார். அதைப் படிப்போம்:

'எனது வேலையானது ராமசாமி என்று ஒரு மகாத்மாவோ, மற்றும் தெய்வத்தன்மை பொருந்திய ஒரு ஒப்பற்ற மனிதர் இருந்தார் என்று மூட ஜனங்கள் சொல்லிக்கொள்ளவோ, எனது படத்தை பூஜையில் வைத்து பூஜிக்கவோ, தேரில் வைத்து இழுக்கவோ, கோவிலில் என் பேரில் விக்கிரகம் செய்து பூசை உற்சவம் செய்யவோ நான் கருதவில்லை. அந்தக் குணத்தை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று கருதி வெளியிட்டவன். ஆகவே, என்னை அக்கதிக்கு ஆளாக்காதவர்களே எனது நண்பர்களாவார்கள். எனது கொள்கைகளுக்கும் துணைபுரிந்தவர்களாவார்கள்.

ஏனெனில் வண்ணான், நாவிதன், பறையன், பள்ளன், செட்டி, நாயக்கன், நாடார் என்று சொல்லப்பட்ட 'இழிகுல' மக்கள் என்பவர்கள் எல்லாம் இன்று ஆழ்வார்கள், நாயன்மார்களாகியும், பூசித்தும், உற்சவம் செய்யப்பட்டும் நாட்டுக்கோ, அச்சமூகங்களுக்கோ, ஏற்பட்ட பலன் என்ன? என்று கேட்கிறேன். அதன் பேரால் அவர்கள் கதைகளைச் சொல்லி, சிலர் வயிறு வளர்க்கின்றார்கள். சிலர் சோம்பேறிகளாய் வாழ்கின்றார்கள் என்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

எந்தக் காரணத்தைக்கொண்டும் மனிதத்தன்மைக்கு மீறிய எந்த குணத்தையும் என்மீது சுமத்திவிடாதீர்கள்.'

### கலை உணர்ச்சி

இராமாயணம் போன்ற இலக்கியங்களை, பெரியார் ஈ. வே. ராமசாமி குறைகூறுவதுபற்றி பலர் குறைபடுவதுண்டு. அத்தகைய இலக்கியங்களை கலையுணர்ச்சிக்காகவும், சொல் நயத்திற்காகவும் போற்ற வேண்டுமென்று, அடிக்கடி, இவரும் அவரும் பேசுவதுண்டு. அவர்களுக்கு என்ன பதில் சொன்னார் பெரியார் என்று பார்ப்போம்:

'நான் கலையுணர்ச்சியையும் தமிழ் உணர்ச்சியையும் வேண்டாம் என்று கூறவில்லை. தங்கக் கிண்ணத்தில் அமேத்தியம் (மலம்) இருந்தால் தங்கக் கிண்ணம் என்பதற்காக அமேத்தியத்தைப் புசிக்கமுடியுமா? அதுபோல், கம்பராமாயணப் பாட்டுகள் சிறந்தவைதான். அவைகளில் உள்ள மூடநம்பிக்கைக்கும் தமிழர் இழிவுக்கும் ஆரியர் உயர்வுக்கும் ஆதாரமானவைகளை வைத்துக் கொண்டு எப்படி அவைகளைப் பாராட்டமுடியும்?' இது பெரியார் பதில்.

## சுயமரியாதையும் சுதந்திரமும்

சுயமரியாதையும் சுதந்திரமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை அல்ல என்பது பெரியார் முடிவு. சுயமரியாதை இயக்கத்தின் தத்துவம் என்ன? 'எந்தக் காரியமானாலும் காரண காரியமறிந்து செய்; சரியா, தப்பா என்பதை அந்தக் காரண காரிய அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் விட்டுவிடு; எந்த நெருக்கடியிலும் அதன் முடிவுக்கு மரியாதை கொடு' என்பதாகும். மனிதன் சரியென்று கருதிய எண்ணங்களுக்கும் முடிவுகளுக்கும் மரியாதை கொடுப்பதுதான் சுதந்திரமாகும். ஆகவே, சுதந்திரத்திற்கும் சுயமரியாதைக்கும் அதிக தூரமில்லை என்று பெரியார் தெளிவுபடுத்தினார்.

'இன்றைய சுதந்திரவாதிகள் சுயமரியாதையை அலட்சியம் செய்கிறார்கள். இது உண்மையிலேயே மூடவாதம். ஏன்? சுயமரியாதை அற்றவர்களுக்குச் சுதந்திரம் பலனளிக்காது.

'காந்தியார், இந்துமதம் புனருத்தாரணம் ஆவதும் பழைய முறைகள் உயிர்ப்பிக்கப்படுவதும் சுதந்திரம் என்கிறார்.

'பண்டித ஜவஹர்லால் நேரு, இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுபடுவது சுதந்திரம் என்கிறார். இவர்கள் இருவரும் கோரும் சுதந்திரங்களில் எது வந்தாலும் அல்லது இரண்டுமே வந்தாலும் மனித சமூக வாழ்க்கையில் உள்ள துன்பங்களில் எது ஒழிக்கப்பட்டு விடும் என்று ஆராய்ந்து பார்த்தால் சுதந்திரம், சுயமரியாதை அளிக்காது என்பது விளங்கும். எவ்வளவு சுதந்திரம் ஏற்பட்டாலும் சுயமரியாதைக்குத் தேவை இருந்துகொண்டுதான் இருக்கும்' என்பது பெரியாரின் முடிவு ஆகும்.

'சுயமரியாதை என்பதற்கு நிகர் உலகில் மனிதனுக்கு உயிரைத் தவிர வேறு ஒன்றுமே இல்லையென்று சொல்லவேண்டும்' என்பது பெரியார் கருத்து. இது பொதுமக்கள் கருத்தாகவும் பரவிவிட்டால் குறைகள் பல தொலைந்துவிடும்.

சுயமரியாதைத் தத்துவம் என்ன என்பதை விளக்கிய பெரியார் சுயமரியாதை இயக்கத்தின் பணிகளை மதிப்பிட்டார். அம்மதிப்பீட்டை பெரியாரின் சொற்களிலேயே காண்போம்:

'தமிழ்நாட்டில் சுயமரியாதை இயக்கம் தோன்றி வெகு சாதாரண முறையில், எவ்வளவோ எதிர்ப்புக்கிடையில், நேரப்போக்குப் பிரச்சாரமாக நடந்துவந்திருந்தபோதிலும் அதற்கு எத்தனையோ இடையூறுகள் பல கூட்டங்களிலிருந்து வந்தும், சுயமரியாதை இயக்கம், தமிழ்நாடு, மலையாளநாடு, ஆந்திரநாடு ஆகியவைகளை சமுதாய இயலில் ஒரு கலக்குக் கலக்கிவிட்டிருக்கிறது. மத

இயலிலும் மகா பண்டிதர்கள், ஞானிகள், ஆச்சாரியார்கள், என்பவர்களையெல்லாம் மாறிக்கொள்ளச் செய்திருக்கிறது. தோழர் காந்தியாரையே பல கரணங்கள் போடச் செய்துவிட்டது.

'பெண்கள் உலகில், உண்மையான சுதந்திர வேட்கையைக் கிளப்பிவிட்டது. கீழ்சாதி, மேல்சாதி என்பவைகள் ஓடுவதற்குப் பந்தயம் போடுகின்றன.

'கிறுத்தவர்களும் முஸ்லீம்களும் பைபிளுக்கும் குர்ஆனுக்கும் புதிய வியாக்கியானங்கள் செய்யத் தலைப்பட்டுவிட்டனர். காங்கிரசு தொல்லை இல்லாமல் இருந்திருக்குமானால், இந்தியா பூராவையும் சுயமரியாதை இயக்கம் இன்னும் அதிகமாகக் கலக்கியிருக்கும் என்பதோடு, பார்ப்பனீயம் அடியோடு மாண்டிருக்கும் என்றே சொல்லலாம்.'

மேற்கூறியபடி மதிப்பிட்ட பெரியார், சுயமரியாதை இயக்கத்தின் எதிர்காலப் பணிக்குத் திசைகாட்டினார்.

சுயமரியாதை இயக்கம் இந்தியா முழுமைக்கும் பிரச்சாரம் செய்யப்போகின்றது. அது, தனது பழைய வாலிபர்கள் பெரும்பாலோர் வாழ்க்கைப் பருவம் அடைந்துவிட்டதால், புதிய வாலிபர்களைச் சேகரித்துக்கொண்டு வருகிறது. ஏராளமான வாலிபர்கள் இருக்கிறார்கள். எனக்கு ஒரு சமயம் 'குறை' ஏற்பட்டாலும் சுயமரியாதைக்குக் குறை ஏற்படாது. 'வாலிபர்களே தயாராய் இருங்கள்' என்று ஆணையிட்டார் பெரியார். அவ்வாணை செயல்படும் காலம் விரைந்து வருகிறது.

சுயமரியாதை இயக்கத்தின் எதிர்காலப் பணிக்குப் பெரியார் காட்டிய திசை என்ன? சமதர்மத் திசையை பெரியார் காட்டினார்.

4

## சமதர்மப் பணி

மனிதர்கள் அனைவரும் வாழவேண்டும்; பிறவி ஏற்றத்தாழ்வு அற்று வாழவேண்டும்; எல்லோரும் சமத்துவமாக வாழவேண்டும்; இக்குறிக்கோளோடு தொடங்கிய தன்மான இயக்கம், சமுதாய ஏற்றத்தாழ்வுகளைத் தாக்குவதோடு நிற்கமுடியுமா? முடியாது.

கோடானுகோடி மக்களுக்கு வேலை இல்லை; வேலை கிடைத்தாலும் போதிய ஊதியம் இல்லை. ஆகவே, பொதுமக்களுக்குச் சோற்றுப் பஞ்சம்; உடையில்லாமை; வானமே கூரையாக, திறந்த வெளிக் குடியிருப்பு. இந்நிலை நீடிக்கும்வரை, மனிதர்கள் முழு வாழ்வு, ஏற்றத்தாழ்வு அற்ற வாழ்வு, வாழமுடியாது. இதைத் தன்மான இயக்கத்தின் தந்தை. ஈ. வே. ராமசாமி கடிதில், எளிதில் உணர்ந்தார். 1930ஆம் ஆண்டு மே திங்கள் நடந்த ஈரோட்டு சுயமரியாதை மாநாட்டில், அவர் நன்றியுரை ஆற்றினார். அவ்வுரையில்:

'இந்த இயக்கமானது இன்றைய தினம் பார்ப்பனரையும் மதத்தையும் சாமியையும் பண்டிதர்களையும் கண்டித்துக்கொண்டு மூடப் பழக்க வழக்கங்களையும் எடுத்துக்காட்டிக்கொண்டு, மூட மக்களைப் பரிகாசம் செய்துகொண்டிருப்பதுபோலவே, என்றைக்கும் இருக்குமென்றோ அல்லது இவைகள் ஒழிந்தவுடன் இயக்கத்திற்கு வேலையில்லாமல் போய்விடுமென்றோ யாரும் கருதிவிடக் கூடாது' என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

'மேற்சொன்னவைகளின் ஆதிக்கங்கள் ஒழிவதோடு, ஒருவன் உழைப்பில் ஒருவன் நோகாமல் சாப்பிடுவது என்கிற தன்மை இருக்கிறவரையிலும், ஒருவன் தினம் ஒரு வேளைக் கஞ்சிக்கு மார்க்கமில்லாமல் பட்டினிகிடந்து சாவதும், மற்றொருவன் தினம் அய்ந்து வேளை சாப்பிட்டுவிட்டுச் சாயுமான நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, வயிற்றைத் தடவிக்கொண்டிருக்கிறதும் ஆகிய தன்மை இருக்கிறவரையிலும், ஒருவன் இடுப்புக்கு வேட்டியில்லாமல் திண்டாடுவதும் மற்றொருவன் மூன்றுவேட்டி போட்டுக்கொண்டு உல்லாசமாக திரிவதுமான தன்மை இருக்கிறவரையிலும், பணக்காரர்கள் எல்லாம் தங்களது செல்வம் முழுமையும் தங்களுடைய சுக வாழ்வுக்கே ஏற்பட்டது என்று கருதிக்கொண்

டிருக்கிற தன்மை இருக்கிறவரையிலும் சுயமரியாதை இயக்கம் இருந்தேதான் தீரும்' என்று தன்மான இயக்கத்தின் எதிர்காலப் பணியைக் கோடிட்டுக் காட்டினார்.

'சமதர்ம இயக்கம், உலக மக்கள் எல்லோரையும் பொருத்த இயக்கம்; சாதி, மதம், வருணம், தேசம் என்கின்ற கற்பனை நிலைகளை எல்லாம் தாண்டிய இயக்கம். பிராமணன், சத்திரியன், சூத்திரன், அரிசனன் என்கிற வருணங்களை ஒழித்து எல்லோரும் எப்பொழுதும் மனிதரே என்று கூவும் இயக்கம். ஏழை என்றும் பணக்காரன் என்றும் முதலாளி என்றும் தொழிலாளி என்றும் எசமான் என்றும் கூலி என்றும் ஜமீந்தார் என்றும் குடியானவன் என்றும்—உள்ள சகல வகுப்புகளையும் வேறுபாடுகளையும் நிர்மூல மாக்கித் தரைமட்டமாக்கும் இயக்கம்.

மற்றும் குரு என்றும் சிஷ்யன் என்றும் பாதிரி என்றும் முல்லா என்றும், முன்ஜென்மம், பின்ஜென்மம், கர்மபலன் என்றும், அடிமையையும் எஜமானனையும் மேல்சாதிக்காரனையும் கீழ்சாதிக்காரனையும் முதலாளியையும் தொழிலாளியையும் ஏழையையும் பணக்காரனையும் குடிகளையும் மகாத்மாவையும் சாதாரண ஆத்மாவையும் அவனுடைய முன்ஜென்ம கர்மத்தின் படி அல்லது ஈஸ்வரன் தன் கடாட்சப்படி உண்டாக்கினான் என்று சொல்லப்படும் அயோக்கியத்தனமான, சுயநலங்கொண்ட, சோம்பேறிகளின் கற்பனைகளையெல்லாம் வெட்டித் தகர்த்துச் சாம்பலாக்கி, எல்லோருக்கும் எல்லாம் சமம், எல்லாம் பொது என்ற நிலைமையை உண்டாக்கும் இயக்கம். சாதி, சமய, தேசச் சண்டையற்று, உலக மக்கள் யாவரும் தோழர்கள் என்று சாந்தியும் ஒற்றுமையும் அளிக்கும் இயக்கம்; இன்று உலகமெங்கும் தோன்றித் தாண்டவமாடும் இயக்கம்' என்று முரசு கொட்டினார்.

### தோற்றுவாய்

பெரியார் சமதர்ம இயக்கத்தின் தோற்றுவாய்பற்றி கூறியதைக் கவனிப்போம்.

'சமதர்ம உணர்ச்சி ஒரு எண்ணமாய் ஏற்பட்டு, அதன் தத்துவங் களைப்பற்றியும் கொள்கைகளைப்பற்றியும் வெளியில் எடுத்து மக்களுக்குத் தெரியும்படியாக மாநாடுகள் மூலமும் அறிக்கை மூலமும் வெளிப்பட்டிருப்பதாக நமக்கு விளங்கும்படியாகக் காணப் படும் காலமே, இன்றைக்கு சுமார் 80, 90 வருஷங்களுக்கு முன்பு என்று தெரிகிறது. அதாவது 1847ஆம் ஆண்டிலேயே இலண்டன் மாநகரத்தில் உலகத்திலுள்ள சமதர்மவாதிகளுடைய மாநாடு ஒன்று நடந்திருப்பதாகவும், அதன் பலனாய் அறிக்கை வெளியிட்

டிருப்பதாகவும் தெரியவருகின்றது. ஆனால் அதைச் சீக்கிரத்தில் கையாளப்படவும் அனுபவத்தில் கொண்டுவரவும் முயற்சித்த நாடு ரஷியாவாக ஏற்பட்டுவிட்டது. இது சிலருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடியதாயிருந்தாலும் அந்தப்படி ஏற்படுவதற்கு நியாயம் இல்லாமல் இல்லை.

'எங்கு அளவுக்கு மீறிய தாங்கமுடியாத கொடுமை நடைபெறுகின்றதோ அங்குதான் சீக்கிரத்தில் பரிகார முயற்சி வீறுகொண்டெழவும் சீக்கிரத்தில் இரண்டிலொன்று காணவுமான காரியங்கள் நடைபெறும். இந்த நியாயப்படி பார்ப்போமேயானால் உலக அரசாங்கங்களில் எல்லாம், ரஷிய ஜார் அரசாங்கமே, மிகக் கொடுங்கோன்மையாக நடைபெற்று வந்திருக்கின்றது. அதனாலே அங்கு சமதர்ம முறை அனுபவத்திற்குக் கொண்டுவரவேண்டியதாயிற்று.'

சமதர்ம முறையின் தோற்றத்தைக்காட்டிய பெரியார், அது இந்தியாவில் தோன்றாமைக்கு காரணங்களைக் காட்டுகிறார். 'இந்த நியாயப்படி பார்த்தால் அவ்வித சமதர்ம உணர்ச்சி உலகில் ரஷியா தேசத்தைவிட இந்தியாவுக்கே முதன்முதலாக ஏற்பட்டு இருக்கவேண்டியதாகும். ஆனால் அந்தப்படி ஏற்படாமல் இருப்பதற்கு இங்கு அநேகவித சூழ்ச்சிகள் நடைபெற்று வந்திருப்பதாலும் சூழ்ச்சிக்காரர்கள் இந்திய மக்களை வெகு ஜாக்கிரதையாகவே, கல்வி, அறிவு, உலகஞானம், சுயமரியாதை உணர்ச்சி, முதலியவைகள் பெறுவதற்கு மார்க்கம் இல்லாமல் காட்டுமிராண்டித் தன்மையில் வைத்து வந்ததோடு கடவுள்பேரிலும் மதத்தின்பேரிலும் ஏற்படுத்தப்பட்ட உணர்ச்சியானது அடிமையாக இருப்பதே கடவுள் சித்தமென்றும் மோட்ச சாதனமென்றும் புகட்டிவந்ததாலும் அதே சூழ்ச்சிக்காரர்கள், அடிக்கடி, வேற்றரசர்களை அழைத்துவந்து மக்களை மிருகத்தனமான ஆதிக்கத்தால் அடக்கி ஆளச்செய்து வந்ததாலும், உலகில் சமதர்ம உணர்ச்சி, முதன் முதல் இந்தியாவிலேயே ஏற்பட்டிருக்கவேண்டியது மாறி, ரஷியாவுக்கு முதல் ஸ்தானம் ஏற்படவேண்டியதாயிற்று.'

சமதர்ம ஆட்சிக்கு மிகவும் தேவை இயந்திரமயமான தொழில் முறை. அத்தகைய தொழில் முறை இந்தியாபோன்ற மக்கள் பெருகிய நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பெருக்கும் என்று பலர் சொல்வதுண்டு. அதுபற்றி பெரியாரின் கருத்து இதோ:

'இயந்திரம் பெருகுவதால், தொழிலாளிக்கு வேலை இல்லாமல் போய்க் கஷ்டம் வரும் என்பதற்குச் சமாதானம் சொல்லியாக வேண்டும். தொழிலாளி என்று ஏன் ஒரு கூட்டம் இருக்க

வேண்டும்? முதலாளி என்று ஏன் ஒரு கூட்டம் இருக்கவேண்டும்? இது யார் கட்டளை? என்ன அவசியத்தைப் பொறுத்தது?

'மற்றும் பாடுபடுபவன்—சோம்பேறி, கஷ்டப்படுகிறவன்—சுகம் அனுபவிக்கிறவன், ஏமாற்றுபவன்—ஏமாறுபவன் என்பனபோன்ற பிரிவுகள், மனித வாழ்க்கையில் இருக்கும்படியாகவே வாழ்க்கைத் திட்டத்தை வகுக்கவேண்டும் என்பதற்கு ஏதாவது அவசியமும் ஆதாரமும் உண்டா?

மனிதன் தொழில் செய்வது என்பது மனித வாழ்க்கையின் நலம் அல்லது தேவையின் அவசியம் என்பதற்காகவா? அல்லது முதலாளி, மிராசுதாரன், ஆகியவர்கள் வேலை செய்யாமல் சம்பாதிக்கவோ, பணம் சேர்க்கவோ வேண்டிய அவசியத்திற்காகவா?

'இந்த மூன்று கேள்விகளுக்கும் பதில் அறிந்தோமானால் வேலை என்பதும் வேலையில்லாத் திண்டாட்டம் என்பதும் ஒருவனை ஒருவன் கொடுமைப்படுத்துவதால்தான் இந்த முறைகள் என்பதும் விளங்கிவிடும்.

'சாதாரணமாக நம்முடைய ஏழ்மை நிலையை எடுத்துக்கொண்டால் கடந்த யுத்தத்திற்கு முன் எவ்வளவு ஏழ்மை நிலை இருந்ததோ, அதைவிட அதிகமான ஏழ்மை நிலையும் சோற்றுக்கும் துணிக்கும் வீட்டுக்கும் பண்டங்களுக்கும் கஷ்டமும் தரித்திரமும் இருப்பதோடு பணக்காரர்களின் நிலையைப் பார்த்தால் முன்புள்ள பணக்காரர் நிலையும் இப்போதுள்ள பணக்காரர் நிலையும் முன்பு பத்தாயிரக்கணக்கில் வைத்திருந்த பணக்காரர்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இப்போது அவர்கள் இலட்சக்கணக்கிலும், இலட்சக்கணக்கில் வைத்திருந்தவர்கள் பல இலட்சக்கணக்கிலும், பல இலட்சக்கணக்கில் வைத்திருந்தவர்கள் கோடிக்கணக்கிலும் பணக்காரராய் இருக்கிறார்கள்.'

பிறகு இயக்கப் பிரச்சாரம் சமதர்மக் கொள்கையையும் சேர்த்துக்கொண்டது.

## பகத்சிங்கின் சமதர்மப் பிடிப்பு

இதற்கிடையில் 1931ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27ஆம் நாள் லாகூர் மத்திய சிறையில் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகிய மூவரும் தூக்கிலிடப்பட்டனர். என்ன குற்றத்திற்காக? ஆங்கில ஆட்சியை எதிர்க்கும் வகையில், லாகூரின் ஆங்கிலேய துணை சூப்பிரண்டெண்ட் சாண்டர்சை இம்மூவரும் சதிசெய்து கொன்றார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டார்கள். அக்குற்றச்

சாட்டு மெய்ப்பிக்கப்பட்டதாக வழக்கு மன்றம் முடிவு சொல்லிற்று; தூக்கு தண்டனை கொடுத்தது.

பகத்சிங் தூக்கிலிடப்பட்டதைப்பற்றி ஈ. வே. ராமசாமி 29—3—1931 நாளைய 'குடி அர'சில் தலையங்கம் எழுதினார். அத்தலையங்கத்தில் 'அவர் (பகத்சிங்) தனது கொள்கையை நிறைவேற்றக் கைக்கொண்ட முறைகளில் சிறிது தவறு நேர்ந்துவிட்டது என்பதாக நம் புத்திக்குத் தோன்றியபோதிலும் அவருடைய கொள்கை குற்றமுடையது என்று சொல்ல, நாம் ஒருக்காலும் துணியவே மாட்டோம். அதுவேதான் உலகத்தின் சாந்த நிலைக் கொள்கையுமாகும். நாம் அவரை (பகத்சிங்கை) ஒரு உண்மையான மனிதர் என்று சொல்லுவோம்' என்று பாராட்டினார். மேலும் 'இந்தியாவுக்கு பகத்சிங் கொள்கைதான் உண்மையாக வேண்டியது என்பது நமது பலமான அபிப்பிராயம் ஆகும்' என்று பறை சாற்றினார்.

பகத்சிங்கின் கொள்கை என்ன? சமதர்மமும் பொது உடைமையுந்தான் அவருடைய கொள்கை. பகத்சிங் கடவுள் நம்பிக்கை இல்லாதவர். பகத்சிங்கின் பொது உடைமைக் கொள்கையை ஏன் ஆதரிக்கவேண்டுமென்பதற்கு பெரியார் அருமையான விளக்கங்கொடுத்தார். இதோ அவ்விளக்கம்:

'நாம் தீண்டாமை ஒழிய வேண்டுமென்று சொல்லுவதில் என்ன தத்துவம் அடங்கி இருக்கின்றதோ, அதுதான் மக்களின் ஏழ்மைத் தன்மையை ஒழிக்கவேண்டுமென்பதிலும் அடங்கி இருக்கின்றது.

தீண்டாமை ஒழிவதாயிருந்தால் எப்படி மேல் சாதி, கீழ் சாதி தத்துவம் அழிந்துதான் ஆகவேண்டும் என்கிறோமோ, அது போலவே தான் ஏழ்மைத் தன்மை ஒழிவதாயிருந்தால், முதலாளித் தன்மை, கூலிக்காரத் தன்மை ஒழிந்துதான் ஆகவேண்டும் என்கிறோம். ஆகவே, இந்தத் தன்மைகள் மறைபடுவதுதான், சமதர்மத் தன்மை, பொது உடைமைத் தன்மை என்பவைகளே ஒழிய வேறில்லை.'

இப்படி விளக்கிய பெரியார் 'பகத்சிங் இந்திய மக்களுக்கு ஏன் உலக மக்களுக்கே உண்மையான சமத்துவமும் சாந்தியும் அளிக்கத்தக்க பாதையைக் காட்டுவதற்குப் பயன்படத்தக்கதாக தனது உயிரைவிட நேர்ந்தது சாதாரணத்தில் வேறு எவரும் அடையமுடியாத பெரும் பேறு என்றே சொல்லி, பகத்சிங்கை மனமார வாயார கையாரப் பாராட்டுகின்றோம்! பாராட்டுகின்றோம்!! பாராட்டுகின்றோம்' என்று எழுதினார். இது ஆங்கில ஆட்சியின் கண்களை உறுத்துவது இயற்கைதானே.

*1931ஆம் ஆண்டு ஆகஸ்டில் விருதுநகர் மூன்றாவது சுயமரி யாதை வாலிபர் மாநாட்டில் நிறைவேறிய முதல் முடிவு என்ன?*

'சமதர்ம தத்துவமும் பொது உடைமைக் கொள்கையும் நாட்டில் ஓங்கவேண்டும் என்பதே நமது இலட்சியமாயிருக்கின்றபடியால், விதி, கடவுள் செயல் என்பனபோன்ற உணர்ச்சிகள் மக்கள் மனதி லிருந்து ஒழிக்கப்படவேண்டும்' என்பது.

'வர்ணாசிரமத்திலும் கடவுள் செயலென்பதிலும் நம்பிக்கை கொண்டிருக்கிற யாராலும் மக்களுக்கு சமத்துவமும் விடுதலையும் அடையும்படி செய்யமுடியாது என்று இந்த மாநாடு உறுதியாகச் சொல்லுகிறது'—இது மூன்றாம் முடிவு.

### சமதர்மம்: நீண்டகால குறிக்கோள்

*சீரிய சிந்தனையாளராகிய ஈ. வே. ராமசாமி, காங்கிரசை விட்டு விலகிய பிறகு, வகுப்புரிமை கோரிக்கையில் ஓரளவு வெற்றி பெற்று விட்டார். ஆயினும் அது, இடைக்கால நிவாரணமே; நீண்டகால மருந்து, சமதர்மம், என்பதை அவர் விரைவில் உணர்ந்துவிட்டார். அவ்வுணர்வு, ஈ. வே. ராமசாமியின் சோவியத் நாட்டுப் பயணத் திற்குப் பின் கொழுந்துவிட்டு எரியத் தலைப்பட்டது.*

*1932ஆம் ஆண்டு சோவியத் நாட்டிலிருந்து திரும்பி வந்த பிறகு அந்நாட்டில் சமதர்ம முறையின் சிறப்புகள்பற்றி அரிய செய்திகளை, உண்மைகளை 'குடி அரசு' வாயிலாக தமிழ் மக்க ளிடையே பரப்பி வந்தார்.*

*சோவியத் நாட்டிலிருந்து திரும்பிய ஈ. வே. ராமசாமி, 1932 டிசம்பர் 28,29 நாட்களில் ஈரோட்டில், சுயமரியாதை இயக்க ஊழியர்கள் கூட்டத்தைக் கூட்டினார். இந்திய கம்யூனிஸ்ட் இயக்க முன்னோடிகளில் ஒருவராகிய, தோழர் மா. சிங்கார வேலரை அழைத்துச் சேர்த்துக்கொண்டார். எல்லோருடனும் கலந்து சுயமரியாதை இயக்கத்தின் அரசியல் பிரிவாக, சமதர்மக் கட்சி ஏற்படுத்த முடிவுசெய்யப்பட்டது. அக்கூட்டத்தில் 'சுயமரி யாதை இயக்க சமதர்ம'த் திட்டம் உருவாயிற்று. அப்புரட்சிகர மான திட்டத்தின், முதல் முடிவைப் பாருங்கள்.*

பிரிட்டிஷ் முதலிய எந்தவித முதலாளித் தன்மைக் கொண்ட ஆட்சியிலிருந்தும் இந்தியாவை பூரண விடுதலை அடையச் செய்வது.

*அடுத்து என்ன? சுதேச சமஸ்தானங்கள் என்பவைகளையெல் லாம் மாற்றி இந்தியா முழுவதையும் தொழிலாளிகள், குடியான*

வர்கள், சரீர வேலைக்காரர்கள் என்பவர்களுடைய நேரடியான ஆட்சிக்குக் கொண்டுவருவது.

அப்புறம்? எல்லா தொழிற்சாலைகளையும், ரயில்வேக்களையும், பாங்கிகளையும், கப்பல், படகு, நீர்வழி, போக்குவரத்து சாதனங்களையும் பொதுமக்களுக்கு உரிமையாக்குவது.

எந்தவிதமான பிரதிப் பிரயோசனமும் கொடுபடாமல் தேசத்தில் உள்ள எல்லா விவசாய நிலங்களையும் காடுகளையும் மற்ற தாவர சொத்துகளையும் பொதுமக்களுக்கு உரிமையாக்குவது.

குடியானவர்களும் தொழிலாளிகளும் லேவாதேவிக்காரர்களிடம் பட்டிருக்கும் கடன்களையெல்லாம் செல்லுபடியற்றதாக ஆக்கிவிடுவது.

அடிமை ஒப்பந்தங்களை ரத்து செய்துவிடுவது.

தொழில் செய்பவர்கள் ஏழு மணி நேரத்திற்குமேல் வேலை செய்யக்கூடாது. அவர்களின் வாழ்க்கை நிலை உயர்த்தப்படுவது.

தொழில் இல்லாமல் இருக்கின்றவர்களை சர்க்கார் போஷிக்கும்படி செய்வது.

மேற்கூறிய இலட்சியங்களை அடைவதற்காக, சுயமரியாதை இயக்கத்தாருக்குள், சமதர்ம கட்சி என்பதாக ஓர் அரசியல் பிரிவை ஏற்படுத்தித் தொண்டாற்ற முடிவுசெய்யப்பட்டது. ஊழியர்கள் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்ட இவற்றை, சுயமரியாதை இயக்கத்தின் சிறப்பு மாநாடு ஒன்றைக் கூட்டி, அதில் நிறைவேற்றி, செயல்படுத்த முடிவு செய்தார்கள்.

உற்பத்திச் சாதனங்கள் நாட்டுடமையாதல், சமதர்மத்தின் கடைக்கால். சமதர்மத் திட்டத்தை பொதுமக்களிடையே தீவிரமாகப் பரப்ப, ஈ. வே. ராமசாமியும் அவருடைய இயக்கமும் முனைந்தது.

இவ்வேளையில் மீரத் சதி வழக்கின் தீர்ப்பு வெளியானது. இவ் வழக்கின் வரலாறு சுவையானது.

## மீரத் சதி வழக்கு

1929ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 20ஆம் நாள் இந்தியாவை அடக்கியாண்டுகொண்டிருந்த ஆங்கில ஆட்சி, மார்க்சிச—லெனினிச கொள்கைக்காரர்களாகிய தோழர்கள் எஸ்.ஏ.டாங்கே, அதிகாரி, தேசாய் முதலிய முப்பத்திரெண்டு பேர்களை கைது செய்தது. அவர்களில் பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் இயக்கத்தவர் இருவர் இருந்தார்கள். இந்தியாவில் பிரிட்டானிய மன்னரின்

ஆட்சியைக் கவிழ்க்கச் சதி செய்ததாக, அனைவரும் குற்றஞ் சாட்டப்பட்டார்கள். மீரத் கம்யூனிஸ்ட் சதி வழக்கு என்று அழைக்கப்பட்ட அவ்வழக்கு நாற்பத்தைந்து திங்கள் நீண்டது. அவ்வளவு காலமும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் சிறையில் வாடினார்கள்.

கடைசியாக, மீரத் சதி வழக்கில் முடிவு சொல்லப்பட்டது. இருபத்தேழு தோழர்கள் தண்டிக்கப்பட்டார்கள். தண்டனைக் காலம், மூன்று ஆண்டு சிறை முதல் இருபது ஆண்டு சிறைவரை இருந்தது. ஐவர் விடுதலை செய்யப்பட்டார்கள். அம் முடிவு தெரிந்ததும் 22–1–1933ஆம் நாளைய 'குடி அரசி'ல் தோழர் ஈ. வே. ராமசாமி தலையங்கம் எழுதினார். அதில், 'இந்த 27 பேர் மாத்திரமல்ல; இன்னும் ஒரு 270 பேர்களைச் சேர்த்துத் தூக்கில் போட்டிருந்தாலும் சரி, நாம் அதற்காகக் கவலைப்படப் போவதில்லை.

'ஏனென்றால், இந்தத் தோழர்கள் சிறையிலிருப்பதாலோ, தூக்கிலிடப்படுவதாலோ, அவர்களது கொள்கையாகிய பொது உடைமைக் கொள்கை என்பது அதாவது முதலாளிகளின் ஆட்சியைச் சிதைத்து நசுக்கி, சரீரத்தினால் பாடுபடுகின்ற மக்களுடைய ஆட்சிக்கு உலக அரசாங்கங்களையெல்லாம் திருத்தியமைக்க வேண்டும் என்கின்ற கொள்கையோ உணர்ச்சியோ அருகிப்போய் விடும் பயம் நமக்கில்லை.

'இத்தொண்டர்கள் சிறையில் வதியும் ஒவ்வொரு வினாடியும் அவர்களது கொள்கையானது, 1, 10, 100, 1000 கணக்கான தொண்டர்களைத் தட்டி எழுப்பி ஊக்கப்படுத்திக்கொண்டே தான் இருக்கும்.

'பொது உடைமைக் கொள்கை என்பதை 27 பேரைத் தண்டித்தோ அல்லது 27,00,000 பேரை ''சமணர்களைக் கழுவேற்றியதுபோல'' நடுத் தெருவில் நிறுத்திக் கழுவேற்றிக் கொன்றோ செய்வதன்மூலம் அடக்கிவிடலாம், என்று நினைப்பது, கொழுந்துவிட்டெரியும் பெரும் நெருப்பை நெய்யைவிட்டு அணைத்துவிடலாம் என்று எண்ணுவதுபோல்தான் முடியும்.

'ஆகவே மீரத்து முடிவை நாம் மேளதாளத்தோடு வரவேற்பதுடன் தண்டனை அடைந்த தோழர்களை மனமார, வாயார, கையாரப் பாராட்டுகின்றோம். முக்காலும் பாராட்டுகின்றோம். நமக்கும் நம் போன்ற வாலிபர்களுக்கும் இப்பெரும் பேறு கிடைக்கப் பெறும் நிலையை அடைய முடியவில்லையே என்று வருந்தி, மற்றுமொரு முறை பாராட்டுகின்றோம்' என்று முழங்கினார்.

இப்படியாக, ஈ. வே. ராமசாமியின் பேச்சிலும் எழுத்திலும் பொது உடைமைக் கொள்கை கனல் விட்டுக்கொண்டிருந்தது. இது ஆட்சியாளரை ஆத்திரமூட்டியது.

தன்மான இயக்கத்தின் முதற் கவிஞராம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல்களில் சமதர்ம ஒளிவீசத் தலைப்பட்டது. எடுத்துக்காட்டாக 30–4–1933 நாளிட்ட 'குடி அரசில்', 'குடி அரசு ஒன்பதாம் ஆண்டு' என்னும் பாரதிதாசனின் பாடல் வெளியிடப்பட்டது.

'போர்முகத்தில் அணி வகுக்க இன்றழைத்தாய்
பொது உடமை முரசறையக் கோலெடுத்தாய்
ஓர்முகத்தில் சந்தோசம் ஒன்றில் வாட்டம்
உண்டாக்கும் அரசியலை விழி நெறித்தே
ஊர் முகத்தில் நிற்காதே என முழக்க
ஒன்பதாம் ஆண்டினிலே உயர்ந்தாய் இந்நாள்
பார் முகத்தைச் சமப்படுத்த ஓகோகோ கோ
பறந்தேறுகின்றாய் நீ வாழி நன்றே'

என்று பாரதிதாசன் வாழ்த்தினார்.

அக் 'குடி அர'சில் பொது உடமை இயக்கத்தின் முன்னோடி மா. சிங்காரவேலர், 'சமதர்ம விஜயம்' என்று எழுதிய ஒரு கட்டுரையைக் காணலாம். அதில்,

'நமது ''குடி அரசு'' யாதொரு சுயநலமும் கருதாது தேசநலத்திற்கே உழைத்து வந்ததின் முக்கிய பயன்களில் நமது நாடு முழுமையும் சமதர்மப் போரொலி முழங்குவதே பெரும் பயனாகும்.

'ஒரு காலத்தில் உலகம் முழுமையுமே பரவப்போகிற சமதர்ம இயக்கத்தை தமிழ் நாட்டில் இவ்வளவு சிறு காலத்தில், நாடு முழுமையும் விளங்கச் செய்துவருவது ''குடி அர''சின் மகத்துவமே யாகும். நமது காலத்தில், இதற்கு இணை இல்லை என்றே சொல்லலாம்.

'தேசிய பத்திரிகைகளும் அயல்நாட்டார் பத்திரிகைகளும் ஒரு கூட்டத்தார் நலத்தைக் கோரி, அவர்களை ஆதரித்து வந்திருக்க, ''குடி அரசு'' ஒன்றே ஏழைத் தொழிலாளர்பாலும் விவசாயிகள் பாலும் திக்கற்றவர்கள்பாலும் தாழ்த்தப்பட்டவர்கள்பாலும் பரிந்து பேசி வந்திருக்கின்றது. சுருங்கச் சொல்ல வேண்டுமானால் பாமர மக்களை ஆதரித்துப்பேச, தமிழ் நாட்டில் ''குடி அரசு'' ஒன்றே உள்ளது.

'எங்கும் பல்லாயிரம் மக்களது அறிவை விசாலப்படுத்தியும் பகுத்தறிவைத் தூண்டியும் மதப்பற்றையும் மதவைராக்கியத்தை

யும் குறையச் செய்து வந்திருக்கிறது. உயர்ந்த சீர்திருத்தங்களுக் கெல்லாம் உதவியாக நின்றுவருவது நம் ''குடி அர''சே.'

அடக்குமுறை

'மதங்களின்மேல் வைத்துள்ள பற்று ''குடி அர''சின் கட்டுரை களால் குறைவு பெற்று வருவதற்கு சந்தேகமில்லை.

'இன்று நமது இயக்கம் தமிழ் நாட்டிற்கு ஒரு பெரும் சண்ட மாருதமெனக் கருதும்படி ஆயிற்று' என்று பாராட்டி எழுதினார்.

'குடி அர'சில் சமதர்ம உள்ளடக்கம் அதிகமாக, அதிகமாக, இந்திய அரசும் சென்னை மாகாண ஆட்சியும் கலக்கம் கொண்டன. சமதர்மப் பிரசாரத்தைத் தடை செய்ய விரும்பியது.

'குடி அரசு' அலுவலகம் காவல்துறையால் சோதனை இடப் பட்டது. அதற்கு காப்புப் பணம் கேட்கப்பட்டது. பெரியார் 'குடி அரசு'க்குக் காப்புப் பணம் கட்ட விரும்பவில்லை. எனவே 'குடி அரசை' நிறுத்திவிட்டு 'புரட்சி' என்ற வார இதழைத் தொடங் கினார். அது தன் பெயருக்கேற்ப, சமதர்மக் கொள்கைக்காக சூடான கட்டுரைகளைத் தாங்கி வந்தது. அதுவும் அடக்கு முறைக்கு ஆளானது. எனவே, அதற்குப் பதில் 'பகுத்தறிவு' வார இதழ் வெளியாயிற்று.

இன்றைய ஆட்சி ஏன் ஒழியவேண்டும்? என்று எழுதியதற்காக ராமசாமிப் பெரியாரும், கண்ணம்மாளும் கைது செய்யப் பட்டார்கள். அவர்கள்மேல் 'அரசு வெறுப்பு' வழக்குத் தொடரப் பட்டது. 30–12–1933இல் தண்டிக்கப்பட்டார்கள். மீண்டும் பெரியார் சிறை வாழ்க்கை மேற்கொண்டார்.

1933ஆம் ஆண்டு பெரியார்மீது இ.பி.கோ. 124-A செக்ஷன்படி பொது உடமைப் பிரச்சாரத்திற்காகவும் 'இராஜ நிந்தனை' என்பதற்காகவும் கோவையில் வழக்கு தொடர்ந்தது, அன்றைய அரசு. மாவட்டத் தலைவர்முன் பெரியார் தாக்கல் செய்த அறிக்கை, அவர் கொள்கை நடைமுறை விளக்கம் தருவதாக அமைந்துள்ளது. 'நான் 7, 8 ஆண்டுகளாகச் சுயமரியாதை இயக்க சமதர்மப் பிரச்சாரம் செய்துவருகிறேன். சமூக வாழ்வி லும், பொருளாதாரத்திலும் மக்கள் யாவரும் சமத்துவமாய் வாழ வேண்டுமென்பது அப்பிரச்சாரத்தின் முக்கிய தத்துவமாகும்.

'நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களை நாட்டு மக்கள் அனை வரும் சமமாய் அனுபவிக்கவேண்டுமென்பதும் அவ்வுற்பத்திக்காக செய்யப்படவேண்டிய தொழில்களில் நாட்டு மக்கள் எல்லோரும்

சக்திக்குத் தக்கபடி பாடுபடவேண்டுமென்பதும் அத்தத்துவத்தின் கருத்தாகும்.

'பல நூற்றாண்டுகளாக உலக வாழ்க்கையில் கடவுள் செயல் என்றும், இயற்கை என்றும் கருதும்படியாகச் செய்து நிலைநிறுத்தப்பட்டு நடைபெற்றுவரும் சமூக அமைப்பையும் பொருளாதார முறையையும் மாற்றுவது என்பது சிலருக்கு விரும்பப்படாத காரியமாய் இருந்தாலும் அவற்றை மாற்றி அமைத்தாலொழிய மக்கள் வாழ்க்கையிலுள்ள அநேக இன்னல்களும், குறைகளும் நீங்கி நலமாகவும் திருப்தியாகவும் வாழமுடியாதென்பது உறுதி.

'இப்படிப்பட்ட ஒரு மாறுதல் உண்டாக ஆசைப்படுவதும் அதற்காகப் பலாத்காரம், துவேஷம், இம்சை ஆகியவைகள் இல்லாமல் பிரச்சாரம் செய்வதும் குற்றமாகாது' என்று விளக்கினார்.

ஈ. வே. ரா. பெரியார் 1933இல் சுயமரியாதை சமதர்மத் திட்டத்தை தீட்டிப் பரப்பியது அனைத்திந்திய அரசியல் வட்டாரங்களைக் கவர்ந்தது. திரு. ஜெயப்பிரகாச நாராயண், ஈரோட்டிற்கு வந்து, பெரியார் வீட்டில் தங்கி, கலந்துரையாடி, பெரியாரை தமது கட்சியில் சேரும்படி அழைத்தார் என்பதை இங்கே குறிப்பிடுவது பொருத்தம்.

ஈ. வே. ராமசாமி சுயமரியாதை இயக்க சமதர்மத் திட்டத்தை 23-9-34இல் சென்னையில் நடந்த நீதிக்கட்சி மாநாட்டுக்கு அனுப்பி வைத்தார். அதன் படியை இராசகோபாலாச்சாரியாருக்கு அனுப்பினார். இத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் கட்சிக்கு சுயமரியாதை இயக்கம் ஆதரவு தரும் என்று ஈ. வே. ரா. அறிக்கை வெளியிட்டார். காங்கிரசு ஏற்றுக்கொள்ளவில்லை. நீதிக் கட்சி 1934ஆம் ஆண்டு நடந்த மாநாட்டில் இத்திட்டத்தை பரிசீலிக்க ஒரு குழுவை நியமித்தது. அக்குழு இதை ஆய்ந்தது. பின்னர் 1935ஆம் ஆண்டு நீதிக் கட்சி ஏற்றுக்கொண்டது. ஏமாற்றமடைந்த இராசகோபாலாச்சாரியாரால் 'நீதிக் கட்சியால் இதை எப்படி ஜீரணிக்க முடியும்' என்று கிண்டல் செய்யமட்டுமே முடிந்தது.

இதற்கிடையில் இந்திய அரசின் முடிவுப்படி சென்னை மாகாண ஆட்சி சமதர்ம இயக்கமாக விரைந்து வளர்ந்து வரும் தன்மான இயக்கத்தை அடக்கி ஒடுக்கிவிடுவதென்று முடிவுசெய்துவிட்டது.

அதையொட்டி 29-1-35இல் சென்னை மாகாண அரசு பெரியாரின் 'பகுத்தறிவு' பத்திரிகைக்கும் உண்மை விளக்கம் அச்சகத்திற்கும் 2000 ரூபாய் ஜாமீன் கேட்டது. அலுவலகம் சோதனைக்குள்ளாகியது. பெரியாரின் அண்ணன் ஈ. வே. கிருஷ்ணசாமியின்மேல் வழக்குப் போட்டு தண்டனை கொடுத்தார்கள்.

சமதர்மப் பிரச்சாரத்தை அடக்கும் அரசின் நடவடிக்கைகள் இயக்கத்திற்கு ஒரு நெருக்கடியை உருவாக்கியது. சமதர்மப் பிரச்சாரத்தைத் தொடர்ந்து செய்ய முயன்று சிறைக்குள் அடை பட்டு, பழைய தொண்டையும் செய்யமுடியாமல் நின்றுவிடுவதா? சாதியொழிப்பு, தீண்டாமையொழிப்பு போன்ற சமூக தொண்டு களுக்கும் இடையூறாகிவிடுவதா? இக்கேள்விகள் எழுந்தன.

1936ஆம் ஆண்டு மார்ச் திங்கள், தஞ்சை மாவட்ட அய்ந்தாவது சுயமரியாதை மாநாட்டில் பேசிய, ஈ. வே. ராமசாமிப் பெரியார், 'நான் ரஷியாவுக்குப் போவதற்கு முன்பே, பொது உடமைத் தத்துவத்தை சுயமரியாதை இயக்கத்துடன் கலந்து பேசிவந்தது உண்மைதான். ரஷியாவில் இருந்து வந்தவுடனும் அதை இன்னும்தீவிரமாகப்பிரச்சாரம்செய்ததும்உண்மைதான். ஆனால், சர்க்கார் பொது உடமைக் கொள்கைகள் சட்ட விரோதமானது என்று தீர்மானித்து நமது சுயமரியாதை இயக்கத்தையும் அடக்கி ஒடுக்கி ஒழித்துவிடவேண்டும் என்று கருதியிருக்கிறார்கள் என்று உணர்ந்த பிறகு, எனக்குப் புத்திசாலித்தனமாக சில காரியம் செய்யவேண்டியதாக ஏற்பட்டுவிட்டது.

'இந்த நிலையில், சுயமரியாதை இயக்கத்தை ஒழித்துவிட்டு, நான் மாத்திரம் வீரனாக ஆவதற்கு ஜெயிலுக்குப்போய் உட் கார்ந்துகொள்ளுவதா?' என்று கேட்டார்.

'அஸ்திவாரத்தில் கையை வைத்து சாதிகளை ஒழிப்பதற்கு இன்று இந்த நாட்டில் சுயமரியாதை இயக்கத்தைத் தவிர வேறு எந்த இயக்கமும் இல்லை என்பதை நன்றாய் ஞாபகத்தில் வையுங்கள்' என்று 23–3–36இல் பட்டுக்கோட்டையில் பெரியார் பேசினார்.

'சமதர்ம வளர்ச்சிக்குப் பிற பக்கங்களிலும் ஆட்கள் கிடைக்க லாம். சாதியொழிப்புக்குத் தன்மான இயக்கம் மட்டுமே போராடுவ தால், அவ்வியக்கத்தைக் காப்பாற்றிப் பயன்படச் செய்வது அப்போதைக்கு முன்னுரிமை உடையதாகுமென்று பெரியாராலும் சுயமரியாதை இயக்கத்தாலும் முடிவுசெய்யப்பட்டது. அதன் படியே சில ஆண்டுகள் இயங்கிவந்தது.

விடுதலை பெற்ற இந்தியாவில், சென்னை மாநிலத்தில், பொது உடமைவாதிகளை அடக்கி ஒடுக்கிவிட, அப்போதைய காங்கிரசு ஆட்சி 1948–49 ஆண்டுகளில் மும்முரமாகப் பாடுபட்டது. அந் நிலையில் பொது உடமைவாதிகள் சொல்லொணாக் கொடுமை களுக்கு ஆளானார்கள். சேலம் சிறையில் குருவிகளைச் சுடுவது போல் சுட்டார்கள். வேலூர், கடலூர், மத்திய சிறைகளிலும் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. அக்கொடுமைகளை

எதிர்த்து, பெரியாரும் அவருடைய கட்சியும் அவருடைய நாளிதழாகிய 'விடுதலை'யும் தொடர்ந்து போராடின. 'தேச பக்தர்கள்' ஆதரிக்க அஞ்சிய நிலையில், தன்மான இயக்கத்தவர்கள் பொது உடமைவாதிகளில் பலரை ஆதரித்து காப்பாற்றி வைத்தார்கள்.

எனவே, இரு கட்சிகளுக்கிடையே நேசமும் பாசமும் வளர்ந்தது. அதன் எதிரொலியை அடுத்து வந்த பொதுத் தேர்தலில் காண முடிந்தது.

ஏறத்தாழ பத்தாண்டு காலம் செல்வாக்கோடு விளங்கும் ஒரு மக்கள் இயக்கம்—சுயமரியாதை இயக்கம்—சமதர்மத் திட்டத்தை உருவாக்கி, வெளியிட்டு, பரப்பி, நீதிக் கட்சியை ஏற்றுக்கொள்ள செய்துவிட்டதென்றால் என்ன பொருள்? அக்காலகட்டத்தில், அனைத்திந்திய காங்கிரசு, அமைப்பாக, சமதர்ம முறையை ஏற்றுக்கொள்ளவில்லை. சுயமரியாதை இயக்கம், சமுதாயச் சமத்துவத்திற்கு மட்டும் பாடுபட்டுக்கொண்டிருந்த நிலையைத் தாண்டி வளர்ந்துவிட்டது. பொருளியல் மாற்றத்திற்கு, சமதர்மத் திற்குப் பாடுபடப்போகும் முழு நிலைக்கு வளர்ந்துவிட்டது. இது எங்கே கொண்டுபோய் விடும்?

நாம் எவ்வளவு அலட்சியப்படுத்தி வைத்திருந்தும், நாலு பேரிடையே விரித்துரைக்க முன்வராதிருந்தும், 'திருக்குறள்' என்னும் நூல், மேனாட்டு அறிஞர்களின் காட்சியால், மாட்சியால், முயற்சியால், இன்று உலகம் போற்றும் நூலாக மிளிர்கிறது. அதேபோல், தமிழர்களாகிய நாம்—எவ்வளவு அலட்சியப்படுத்தி னாலும் எவ்வளவுதான் தமிழ்நாட்டோடு நின்றாலும், சமதர்மத் திட்டத்தை உருவாக்கிய முன்னோடி இயக்கமாக தன்மான இயக்கம் வளர்ந்த பிறகு, அனைத்திந்திய இயக்கமாக வளர்ந்து விடும். அதன் சாதியொழிப்புக் கொள்கை மற்ற மாநிலங்களுக்கும் தேவையான ஒன்றாக இருப்பதுபோலவே, அதன் சமதர்மத் திட்டமும் இந்திய நாட்டிற்குத் தேவை. ஆகவே, சுயமரியாதை இயக்கம் இந்திய நாடு முழுவதையும் கவர்ந்துவிடக்கூடுமென்று பலர் அஞ்சினர்.

கால ஓட்டத்தில் குறுக்கிட்ட அடக்குமுறைகளும் நிகழ்ச்சிகளின் திணிப்புகளும் திசை திருப்பங்களும் பெரியாரின் தொண்டை, சாதி, சமய, மூடநம்பிக்கை ஒழிப்பில் தேக்கியபோதிலும் அவர் சமதர்ம முறையே மெய்யான சமத்துவத்தைக் கொடுக்கும் என்னும் முடிவி லிருந்து மாறவில்லை; அக்கொள்கையை என்றும் மறுக்கவில்லை; மறைக்கவில்லை. வாழ்நாள் முழுவதும் அவருடைய பேச்சும் எழுத்தும் மக்கள் மனதைச் சமதர்மப் பயிருக்குப் பண்படுத்தி வந்தன.

*13–10–1968*இல் 'விடுதலை' தலையங்கத்தில் 'தனி உடமை ஏகபோக ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் கடவுள் மதக் கற்பனைகள். பொது உடமைத் தத்துவத்தில் அவற்றிற்கு வேலையில்லை' என்று குறிப்பிட்டுள்ளார். அவருடைய கடவுள், மத ஒழிப்பு முயற்சியே சமதர்மத்திற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குவதற்கே ஆகும் என்பது வெளிப்படை.

அந்நாளில் மண்ணோடு மண்ணாய் மக்கிக் கிடந்த மக்களைத் தட்டி எழுப்பி அடிதெரியக் கலக்கியதற்கு பெரியார் பயன்படுத்திய முதற் கருவி 'குடி அரசு' என்ற வார இதழாகும்.

# ‘குடி அரசு’ இதழ்—பெரியாரின் போர்வாள்

காங்கிரசில் செல்வாக்கோடு இருந்த ஈ. வே. ராமசாமி, 1925ஆம் ஆண்டு மே திங்கள் 2ஆம் நாள் ‘குடி அரசு’ என்னும் வார இதழைத் தொடங்கினார். பெரியார் வார்த்தெடுத்த அப்படைக் கருவியின் நோக்கமென்ன? ஈ. வே. ராமசாமியின் சொற்களாலேயே அதை அறிவோம்.

### நோக்கம்

‘மற்ற பத்திரிகையைப்போல் இல்லாமல், மனதில் பட்டதைத் தைரியமாய் பொதுஜனங்களுக்கு உள்ளது உள்ளபடி தெரிவிக்க வேண்டும் என்பது எனது அபிப்பிராயம்’ என்று தொடக்கவிழாவில் கூறினார்.

‘குடி அரசு’ எதற்காகப் பாடுபடும் என்பதையும் ஈ. வே. ராமசாமி முதல் இதழிலேயே விளக்கினார். ‘ஒவ்வொரு வகுப்பும் முன்னேற வேண்டும். அதை அறவே விடுத்து, வெறும் தேசம் தேசம், என்று கூக்குரலிடுவது எமது பத்திரிகையின் நோக்கமன்று.’

‘மக்களுக்குள் சுயமரியாதையும் சமத்துவமும் சகோதரத்துவமும் ஓங்கி வளரவேண்டும்.’

‘உயர்வு, தாழ்வு என்னும் உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்து வரும் சாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால் இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென்று எண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளரவேண்டும்.’

### கோட்பாடு

‘குடி அர’சைத் தொடங்கிவைத்தவர் எவர்? சிறந்த தமிழறிஞரும் செஞ்சொற் கொண்டலுமாக விளங்கிய திருப்பாதிரிப்புலியூர் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமி என்ற ஞானியார் சுவாமிகள் ஆவார். அப்பெரியவர், தமது தொடக்கவுரையில்,

'நமது நாட்டில், உயர்வு தாழ்வு, என்ற ஆணவம் மிகுந்திருக்கின்றது. சமத்துவம் என்ற உணர்ச்சி எங்கும் பரவவேண்டும். ''குடி அரசு''வின் கருத்தும் அதுவேயென நான் அறிந்துகொண்டேன். சமயத்தில் இருக்கும் கேட்டை முதலில் அழிக்கவேண்டும். இவை ''குடி அர''சின் முதல் கொள்கையாய் விளங்கவேண்டும். இப்பத்திரிகையில் திரு. நாயக்கருக்கு எவ்வளவு சிரத்தை உண்டோ, அவ்வளவு எனக்கும் உண்டு' என்று வெளிப்படையாகவே வழிகாட்டினார்.

ஞானியார் சுவாமிகளுக்கு சீடர்கள் ஏராளம். அவரால் உருவான தமிழ்ப் புலவர் பலர் ஆவார். இவர்கள் அனைவரும் தங்கள் குருநாதருடைய குறிப்புகளை ஏற்று, உயர்வு தாழ்வு ஒழிப்பிற்கும் சமயத்தில் உள்ள கேடுகளைப் போக்கவும் முயன்றிருந்தால், தமிழ் மக்களிடையே ஒற்றுமை வளர்ந்திருக்கும். அடிகளாரைக் கும்பிடக் கூசாதவர்கள், பின்பற்றுவதில் போதிய அளவு முன்னே நிற்கவில்லை. எனவே 'குடி அரசு' எதிர்ப்புகளுக்கிடையில் வளரவேண்டியதாயிற்று. இருந்தால் என்ன? ஈ. வே. ராமசாமி, கைவல்ய சாமியார், சந்திரசேகர பாவலர், கோவை அய்யாமுத்து, சாமி சிதம்பரனார், சாத்தான்குளம் ராகவன், சு. குருசாமி போன்றவர்களின் ஆணித்தரமான எழுத்துகள், அதைப் பசுமையாகவும் பயனுள்ள வகையிலும் வளர்த்தன.

அக்காலக் 'குடி அரசு' இராமாயண ஆராய்ச்சி, பெரிய புராண ஆராய்ச்சி, பாரத ஆராய்ச்சி, முதலியவைபற்றி சிறந்த கட்டுரைகளை வெளியிட்டது. இவை பொதுமக்களின் சிந்தனையைத் தூண்டின. பழைமை விரும்பிகள், அக்கட்டுரைகளைப் படித்து அதிர்ச்சி அடைந்தார்கள். ஒரு காலகட்டத்தில் தன்மான இயக்கத்தை எதிர்த்து ஒழிக்கவேண்டுமென்று பதைபதைத்தார்கள். அத்தகையோர் சிலர், மறைமலை அடிகளாரை அணுகினர். சைவத்தைப் பாதுகாக்கும்பொருட்டு, தன்மான இயக்கத்தை எதிர்த்தாக வேண்டுமென்றனர். அதை மறைமலை அடிகளார் முன்னின்று நடத்த அழைத்தனர்.

அடிகளார் தெளிந்த அறிவுடைய தமிழ் மலை. தமிழர்கள் சூத்திரர்கள் அல்ல என்று எடுத்துக்காட்டிய சைவத் தலைவர். தனித் தமிழ் வளர்ச்சியில், மக்கள் சமத்துவத்தில், நாட்டங் கொண்டிருந்தவர்.

எனவே அடிகளார், 'சைவம் போனாலும் போகட்டும். பிறகு உயிர்ப்பித்துக்கொள்ளலாம்; ஆனால் நம் நாட்டைப் பிடித்திருக்கும் பார்ப்பனீய தொழுநோயை அடியோடு ஒழிப்பதென்றால் அந்த வேலை இந்த நாயக்கர் தவிர வேறு யாராலும் முடியாது.

ஆதலால் நாம் அவர் முயற்சிக்கு எந்தவித இடையூறும் செய்யக் கூடாது' என்று தெளிவுபடுத்தி அனுப்பினார். மறைமலையடிகளாருக்கு ஏற்பட்ட தெளிவு, மற்ற தமிழர்களுக்கும் ஏற்பட்டிருந்தால், சாதி ஏற்றத்தாழ்வு பழங்கதையாகியிருக்கும்.

ஈ. வே. ராமசாமியார் நடத்திவந்த 'குடி அரசு' இதழ் இலட்சக் கணக்கிலோ, பல்லாயிரக் கணக்கிலோ விற்பனையான இதழ் அல்ல. பத்தாயிரமே விற்பனை. அதை வாங்கிப் படிப்போரைக் கண்டால்? பொதுச் சமுதாயம் உறுமும்; மேட்டுக் குடியினரோ? தொழுநோயரைப் பார்ப்பதுபோல் வெறுப்புப் பார்வையை வீசுவார்கள். இருப்பினும் அது வல்லமைமிக்க போர்வாளாகப் பயன்பட்டது.

அப்போர்வாள் எவருக்குப் பயன்பட்டது? நலிந்தோர்க்கெல்லாம் பயன்பட்டது. நாதியற்றவர்க்கெல்லாம் பயன்பட்டது. இந்நூற்றாண்டின் இருபதுகளிலும், முப்பதுகளிலும் எங்கே, எவர், கொடுமைக்கு ஆளானாலும் அத்தகையோர்க்குப் புகலிடம் 'குடி அரசு'ம் அன்றைய நீதிக் கட்சியின் நாளிதழான 'திராவிட'னுமே. பிற்காலத்தில் 'விடுதலை' அப்பணியை திறம்படவும் வெற்றிகரமாகவும் ஆற்றிவந்தது; வருகிறது. பிற செய்தித் தாள்கள் வெளியிடத் துணியாத, விரும்பாத, இருட்டடிப்புச் செய்த செய்திகளை இப்பத்திரிகைகளில் காணலாம். கவர்ச்சியானவற்றை, விளம்பிப் பிழைக்கவில்லை இவ்விதழ்கள். மாறாக, கொடுமைகளை ஊரறியச் செய்து, மக்களிடையே புத்துணர்வை, வளர்த்தன இவை. 'குடி அரசு' அம்பலப்படுத்திய செய்திகள் பல.

## தீண்டாமை ஒழிப்புப் பணி

சான்றுக 28–6–1925 'குடி அர'சின் தலையங்கம் தீண்டாமையை இவ்வாறு இடித்துரைத்தது:

'பறையன், சக்கிலி, முதலியோரை நாம் ஏன் தொடக்கூடாது. பார்க்கக்கூடாது என்கிறோம் என்பதை சற்று கவனித்தால் அவன் பார்வைக்கு அசிங்கமாயிருக்கின்றான். அழுக்குடை தரிக்கிறான். அவன்மீது துர்நாற்றம் வீசுகிறது. அவன் ஆகாரத்திற்கு மாட்டு மாமிசம் சாப்பிடுகிறான்; மாடு அறுக்கிறான்; மற்றும் சிலர் ''கள்'' உற்பத்தி செய்கிறார்கள் என இத்தனைக் குற்றங்கள் பிரதானமாகச் சொல்லப்படுகிறது. இவற்றை நாம் உண்மை என்றே வைத்துக்கொள்ளுவோம். இதற்கு யார் பொறுப்பாளியென்று யோசியுங்கள்.

'அவர்களை நாம் தாகத்திற்கே தண்ணீர் குடிப்பதற்கில்லாமல் வைத்திருக்கும்போது, குளிக்கவோ வேஷ்டி துவைக்கவோ வழி

எங்கே? நாம் உபயோகிக்கும் குளமோ, குட்டையோ, கிணறோ இவர்கள் தொடவோ கிட்ட வரவோ கூடாதபடி கொடுமை செய்கிறோம். அதனால் அவர்கள் அப்படியிருக்கிறார்களே அல்லாமல் அது அவர்கள் பிறவிக் குணமாகுமா? நம்மை யாராவது குளித்துவிடாமலும், வேஷ்டி துவைக்கவிடாமலும் செய்து விட்டால் நம்மீது துர்நாற்றம் வீசாதா? நம் துணி அழுக்காகாதா? நாம் பார்வைக்கு அசிங்கமாய் காணப்படமாட்டோமோ! அவர்களுக்குக் குளிப்பதற்கும், துணி துவைப்பதற்கும் நாம் சவுகரியம் செய்துகொடுத்துவிட்டால் பின்னும் இவ்விதக் குற்றமிருக்குமா? ஆதலால் நாம்தான் அவர்களின் இந்நிலைக்குக் காரணமாய் இருக்கிறோம்.'

உழைப்பே செல்வம்; அதுவே விளைச்சலுக்கு நீர்; உற்பத்திக்கு வேர். எனவே உழவுக்கும் தொழிலுக்கும் மதிப்புக் கொடுப்பது இயற்கை. உழைப்பை, உழைப்பாளிகளைப் போற்றுவதால்தான் பல நாடுகளும் சமுதாயங்களும் முன்னேறியுள்ளன. ஆனால், நம் இந்தியாவில், எவனோ, எப்போதோ, எழுதிவிட்டுப் போனதாகக் கூறப்படும் காட்டுக் கால கருத்துகள், இருபதாம் நூற்றாண்டிலும் போற்றப்படுகின்றன. அக்கருத்துகள் உழைப்பை இழிவு என்று கூறுகின்றன. சோம்பேறி வாழ்க்கையைப் பெருமைப்படுத்துகின்றன. பழைமையின் கொடிய கரங்கள் செய்யும் தீமைகளுக்கு ஓர் எடுத்துக்காட்டு இதோ:

1921ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் இரு அய்யர்கள் உழவுத்தொழிலை மேற்கொண்டார்கள். பார்ப்பன சமூகம் பொறுக்குமா அதை? அவ்விருவரையும் பார்ப்பன சாதியிலிருந்து விலக்கிவைத்தார்கள். என்னே அவர்களது குறுகிய மனப்பான்மை!

சங்கராச்சாரியார் அப்பகுதிக்கு வந்திருந்தபோது, அவ்விரு அய்யர்களும் அவருக்குக் காணிக்கை செலுத்த விரும்பினார்கள். சங்கராச்சாரியார் அதை ஏற்றுக்கொண்டாரா? இல்லை. சாதி உயர்வு தாழ்வைக் காப்பதற்காகவே உயிர் வாழ்கிற சங்கராச்சாரியார், 'பிழைப்பிற்காக உடலால் உழைப்பதென்பது பாவ காரியமாகும். அந்தப் பாவத்தைச் செய்ததால் அவர்கள் பிராமணத் தன்மையைக் கெடுத்துக்கொண்டார்கள். அவர்களிடமிருந்து காணிக்கை பெற்றுக்கொள்ளமாட்டேன்' என்று கூறி மறுத்து விட்டார்.

அந்த இரு அய்யர்களும் காந்தியாருக்குக் கடிதம் எழுதி விளக்கம் கேட்டார்கள். என்ன பதில்?

'ஒருவன் கலப்பையை கையாலே தொடுவது பாவம் என்று கூறி னால் இது உழைப்பையே கேலி செய்வது ஆகும்' என்று பதில் அளித்தார்.

விளக்கம் கிடைத்தது; விடுதலை கிடைக்கவில்லை; சாதிக் கொடுமையிலிருந்து இன்றும் விடுதலை கிடைக்கவில்லை.

'உத்தமபாளையம் வட்டம் சீலையம்பட்டில் தேர்ந்தெடுக்கப் பட்ட பஞ்சாயத்து கோர்ட்டு மெம்பர்களை, சாதி அடிப்படையில் கீழே உட்கார வைக்கிறார்கள். தாசில்தாருக்குப் புகார் செய்து யாதொரு முடிவும் ஏற்படவில்லை.' இப்படி திருவாளர்கள் எம். செல்லதுரை, முத்துவேலு ஆகிய இருவர், 'குடி அரசு'க்கு எழுதினார்கள். அதை 27–1–29இல் வெளியான 'குடி அரசு' வெளியிட்டுள்ளது.

சங்கர மடத்தைப்பற்றி மற்றொரு செய்தி. கும்பகோணத்தில் சங்கராச்சாரியார் குடியிருக்கும் தெருவில் கிறுத்தவர்கள் பஜனை செய்துகொண்டு போகக்கூடாது என்று தடுத்துவிட்டார்கள் என்னும் செய்தி 23–6–29 'குடி அர'சில் வந்துள்ளது.

திருப்புவனம், ஆவியூர், பெரிய கருப்பக் குடும்பன் என்பவர் ஆதி திராவிடர். அவர் தொழில் தெருக் குப்பை வாருதல்; அவர் குப்பைகளை வண்டியில் கொட்டி நிரப்பிக்கொண்டு, மாட்டு வண்டியை ஓட்டி வந்தார். வரும்போது, குப்பை வண்டியின்மேல் உட்கார்ந்து ஓட்டி வந்தார். அவ்வூரார் கண்ணோட்டத்தில், இது பெருங்குற்றம். அவருக்கு என்ன தண்டனை கிடைத்தது தெரியுமா?

வண்டியின்மேல் உட்கார்ந்து ஓட்டி வந்த அவரைக் கீழே தள்ளி அடித்தார்கள். சினம் ஆறவில்லை. குடும்பனின் பயிர் பச்சை களை, ஆடு மாடுகளை விட்டு மேய்த்தார்கள். அப்போதும் தணிய வில்லை. வெகுளி, குடும்பனின் வீட்டிற்கே தீ வைத்தார்கள். குடும்பன், கலெக்டருக்கு மனுச் செய்தார். நடவடிக்கை இல்லை. மனுப்போட்ட செய்தி ஊராருக்குஎட்டிற்று. மீண்டும் தண்டனை. குடும்பனைக் கட்டி வைத்து அடித்தார்கள். ஐம்பது ரூபாய் அபராதம் போட்டார்கள்.

இச்செய்தியை 24–11–29 'குடி அரசு' 'கொடுமை! கொடுமை!' என்ற தலைப்பில் வெளியிட்டது. அதோடு ஆசிரியர் குறிப்பாக 'கலெக்டர் இதை கவனிக்கவேண்டும். அகமுடையவர்கள், இப்படி கெட்ட பெயர் எடுக்கக்கூடாது' என்று எழுதப்பட்டது.

ஒருவேளைக் கஞ்சிக்கும் வழியற்ற இந்திய வறியவர்களை, இந்திய அரசும் வெள்ளைக்காரர் குடியேறிய நாடுகளும் கூடிப்பேசி,

மலிவான ஒப்பந்தக் கூலிகளாக, பிஜி, தென்னாப்பிரிக்கா, மோரிஸ் தீவுகள், இலங்கை, மலேசியா ஆகிய நாடுகளுக்கு, கப்பலேற்றி அனுப்பின. பல இலட்சக்கணக்கான நம் மக்கள், கொத்தடிமைகளாகப் போனதற்குக் காரணம் வறுமை மட்டுமல்ல; கொடுமையும் ஆகும். நம் நாட்டில் சாதியின் பேரால் கோடிக்கணக்கானவர்களை, ஊர்க் கோடிகளில், எவ்வித வசதியுமில்லாத குடியிருப்புகளில் வைத்து சித்திரவதை செய்ததும் பெரும் காரணமாகும். எனவே, தாழ்த்தப்பட்டவர்களும் பின்தங்கிய வகுப்பார்களுமே பெருமளவு வெளியேறினார்கள். அவர்களில் சிலரை, வீட்டு நினைப்பும், நாட்டு நினைப்பும் விட்ட பாடு இல்லை. எனவே, அப்போதைக்கப்போது, சிலர் தாயகம் வந்துபோவது உண்டு. அப்படி வரும்போது, வளத்தோடு வந்தாலும் அவர்களுக்குப் பழைய கொடுமைகள் காத்திருக்கும். தீண்டப்படாதவர்களாகவே, சட்டையணியக்கூடாதவர்களாகவே, செருப்பு போடக்கூடாதவர்களாகவே நடந்துகொள்ளவேண்டும். வெளி நாட்டு பழக்கக் கொடுமையால், சொக்காய் அணிந்தோ, செருப்பு போட்டுக் கொண்டோ வெளியே வந்தால், அடியும் உதையும் காத்திருக்கும். அக்காலத்தில் இது எல்லா ஊர்களிலும் நடந்த அநீதிகள்.

26-4-31 நாளிட்ட 'குடி அர'சில் 'எங்களின் கதி இதே கதிதானா?' என்ற தலைப்பில், 'பொட்டைக் கோட்டை கிராமத்து தாழ்த்தப் பட்டவர்களின் கண்ணீர் கடிதம்' என்ற துணைத் தலைப்பில் ஒரு வேதனைச் செய்தி வெளியாயிற்று. அதைப் படியுங்கள்.

'படிக்கத் தெரியாத எங்கள் தலைமக்காரர்கள், நினைத்ததே சட்டம். மலேயாவிலிருந்து திரும்பினால், பனை மரத்தில் கட்டி அடிக்கிறார்கள். பொட்டைக் கோட்டை இலவசப் பள்ளியிலும் கொடுமை. கல்வி இலாகா கவனிப்பதில்லை.'

24–4–32 நாளைய 'குடி அரசு' வெளியிட்ட 'இழிவுச் செய்தி' இதோ:

பச்சப்பட்டி நகராட்சி தொடக்கப் பள்ளி ஆசிரியர், ஆதி திராவிடர், திரு. என். பெரியதம்பி 21–4–32 காலை 11 மணிக்கு சித்திரச்சாவடி மோட்டார் நிற்கும் இடத்திற்கு தன் பெண்சாதி, பிள்ளைகள் நான்குடன் சென்று, எஸ். 579 பி. எஸ். 210 நெம்பருள்ள காரில், காடையாம்பட்டி போக, ஒரு மணி உட்கார்ந்திருந்தார். ஒரு மணி கழித்து வண்டி புறப்படும்போது, அவருடைய சாதியை விசாரித்து, 'பறையனுக்குக் கார் வேண்டுமா? நடந்து போடா' என்று அவமானமாகப் பேசி, இறக்கப்பட்டனர். இப்படி, பெரிய தம்பியே எழுதியுள்ளார்.

### ஊர்திகளில் சாதிக் கொடுமை

முன்பெல்லாம் எல்லாப் பேருந்து வண்டிகளும் தனியார் துறையில் ஓடின. அவை, அந்தந்த மாவட்ட ஆட்சிக் குழுக்கவிடம் 'லைசென்ஸ்' பெறவேண்டும். சுயமரியாதைச் சுடர், திரு. சௌந்தரபாண்டியன், சில காலம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சிக் குழுவின் தலைவராகத் தொண்டாற்றினார். அப்போது சில பேருந்து அமைப்புகள், வண்டிகளில் 'பஞ்சமருக்கு இடம் இல்லை' என்று அறிவிப்புகளை எழுதித் தொங்கவிட்டதோடு, பயணச்சீட்டுகளில், அப்படியே அச்சிட்டிருந்தார்கள். இப்படி, மனித உரிமையொன்று பறிக்கப்பட்டது தலைவர் சௌந்தர பாண்டியன் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அவர் உடனடியாக நடவடிக்கை, எடுத்தார். பேருந்து அமைப்புகளுக்கு எச்சரிக்கை சுற்றறிவிப்பை அனுப்பினார். குறிப்பிட்ட சாதியார்களை ஏற்றிச் செல்ல மறுக்கும் பேருந்து வண்டிகளுக்கு 'லைசென்ஸ்' ரத்து செய்யப்படுமென்று கண்டிப்பான எச்சரிக்கை விடுத்தார். எச்சரிக்கை பலன் கொடுத்தது. இந்த எச்சரிக்கையை அக்காலக் 'குடி அரசு' பெரிய கண்டிப்பான செய்தியாக வெளியிட்டது. மற்றொரு கொடுமையைப்பற்றிய தகவல்:

'கரூர் தாலுக்காவில் ஓடும் மோட்டார் வண்டிகளில் தாழ்த்தப் பட்ட மக்களை ஏற்றிக்கொண்டு போக மறுப்பதை கோட்டக் குறிச்சி தேவேந்திரகுல வாலிபர் சங்கம் 7–1–35 அன்று கூடி கண்டித்ததோடு, சர்க்காரை உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டது என்ற செய்தி 20–1–35இல் 'குடி அர'சில் வெளியானது.

### பிற மதத்திலும் சாதிக் கொடுமை

சாதி ஏற்றத்தாழ்வு நோய் இந்நாட்டு கிறுத்தவர்களையும் விட்டபாடில்லை. திருநெல்வேலி பகுதியில் கிறுத்தவம் பரவத் தொடங்கியபோது ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த ஒருவர், 'பங்குக் குருவாக' நியமிக்கப்பட்டபோது, மற்ற சாதி கிறுத்தவர்கள் எதிர்த்தார்கள்.

கிறுத்தவ மதத்திற்குப் போனாலும் சாதி இழிவு தொடர்கிறது என்பதற்கு மற்றோர் எடுத்துக்காட்டு: ஈரோட்டில் கிறுத்துவ ஆதி திராவிடர்களை அவர்கள் கிறுத்துவ மேல் சாதிக் காரர்கள் தொழும் இடத்தில் வந்து தொழுததற்காக மேல் சாதிக் காரர்கள் செருப்பால் அடித்துவிட்டதாக கோர்ட்டில் வழக்குத்

தொடர்ந்துள்ள செய்தியை 15–3–36 நாளைய 'குடி அரசு' வெளியிட்டது.

பல்லாவரம் கொளத்துமேட்டு வீதி வாசியான ஆதி திராவிடக் கிறுத்தவர் அந்தோனிராஜ் 24–4–36 அன்று அக்கிரகாரத்தில் வசிக்கும் ஒரு பிராமண ஆசிரியரிடம் பாடம் கற்றுக்கொண்டிருக்கும்போது, அதே வீதி ரங்கசாமி அய்யர், அவரை, பார்ப்பனத் தெருவிற்குள் நுழைந்ததற்காக செருப்பால் தாக்கியதாகக் கேள்விப்பட்டு, பல்லாவரம் திருச்சூளம் வாலிபர் சங்கம் கண்டித்த செய்தியை 3–5–36 நாளைய 'குடி அரசு' வெளியிட்டது.

சில இடங்களில், தனி மாதா கோவில். கான்வெண்டுகளில் தனி இருக்கை; தனி புதை இடம் ஆகிய தீமைகள் இடம் பெற்றிருந்தன. அதைப்பற்றி சென்னை கவர்னரிடம் திரு. எம். தேவதாசன் எம். எல். சி.யும், திரு. ஜி. ஆர். பிரேமையா, எம். எல். சி.யும் புகார் மனு கொடுத்தார்கள். இதை 'கிறுத்தவ மதத்தில் தீண்டாமை' என்னும் தலைப்பில் 24–5–36 'குடி அரசு' வெளியிட்டது.

3–5–36 'குடி அரசு', சென்னை நகர ஓட்டல்களில், 'பஞ்சமர்களும் நாய்களும் பெருநோய்க்காரர்களும் நுழையக்கூடாது' என்று அறிவிப்பு போட்டிருப்பதையும் இரயில்வே ஓட்டல்களில் 'பிராமணாள் மாத்திரம்' என்று அறிவிப்புப் பலகைகள் தொங்குவதையும், மேட்டுப்பாளையம் இரயில்வே ஓட்டலில் 'சூத்திரருக்கு' என்று அறிவிப்பு போட்டிருப்பதையும் அம்பலப்படுத்திற்று.

தென்னாற்காடு மாவட்டம் சாத்தப்பாடியில் சகஜானந்தம், ஆதி திராவிட மகா நாட்டை நடத்த ஏற்பாடு செய்திருந்தார். சாதி இந்துக்கள் மாநாட்டை நடத்தவிடவில்லை; அதைத் தடுத்துவிட்டார்கள். வியாசர்பாடி சமதர்ம இளைஞர் கழகம் கூட்டம் போட்டு கண்டித்தது. அதை 19–7–36 'குடி அரசு' வெளியிட்டது.

1938ஆம் ஆண்டின் தொடக்கத்தில், நீடாமங்கலத்தில், காங்கிரசின் சார்பில் அரசியல் மாநாடு ஒன்று நடத்தப்பட்டது. மாநாட்டுக்குப்போனவர்களில் தேவசகாயம், ரத்தினம், ஆறுமுகம் ஆகிய மூன்று ஆதி திராவிடர்கள் இருந்தார்கள்.

சாப்பாட்டு வேளையில், எல்லோரும் வரலாம், என்று சொல்லி சாப்பாட்டிற்கு அழைத்தார்கள். இம்மூவரும் போய் மற்றவர்களோடு உணவு அருந்திக்கொண்டிருந்தார்கள். அவ்வமயம் உடையார் பண்ணை ஏஜெண்ட் அவர்களைப் பார்த்துவிட்டார். அவர்களை அடித்தார். அவர்கள் ஓட ஓட விரட்டப்பட்டார்கள்.

அடுத்த நாள் அவர்கள் அறுவடை செய்துகொண்டிருந்த வயலுக்கு அனுமந்தபுரம் பண்ணை கிருஷ்ணமூர்த்தி அய்யர் வந்தார்.

'நேற்று மாநாட்டில் போய் சாப்பிட்ட பயல்களையெல்லாம் இங்கே உதைத்துக்கொண்டுவா' என்றார். அப்படியே அவர்களை உதைத்து மரத்தில் கட்டினார்கள். உடனே ஏறத்தாழ இருபது பேர்களை மொட்டையடித்தார்கள். திருமணமாகாதவர்களுக்கு அரை மொட்டையடித்தார்கள். சாணிப்பால் ஊற்றினார்கள். சாணியைக் கரைத்து, மனிதன் வாயில் ஊற்றிக் குடிக்கும்படி அடிப்பது, தஞ்சைத் தரணியின் தனிக் கொடுமை. இக் கொடுமையை 6—2—38 நாளைய 'குடி அரசு' வெளியிட்டு அம்பலப் படுத்தியது.

பெரியார் ராமசாமி 'குடி அரசு' வாயிலாக கொடுமைகளை நாடறியச் செய்ததோடு நின்றாரா? இல்லை. முற்போக்குச் சிந்தனைகளையும் நடவடிக்கைகளையும் சாதாரண பொது மக்களுக்கு அறிவிக்கும் கருவியாகக் 'குடி அர'சை பயன்படுத்தினார்.

அய்ம்பது ஆண்டுகளுக்கு முன்பே, உலகப் புகழ் நாத்திகர், இங்கர் சாலின் கருத்துகளை தமிழில் தந்தது 'குடி அரசு.' பெட்ரண்ட் இரஸலை தமிழில் காட்டியது தன்மான இயக்கம். லெனினுடைய சிந்தனைகளை முதலில் தமிழில் வெளியிட்டது 'குடி அரசு.' மற்றும் வால்டேர், ரூசோ, போன்றவர்களின் கருத்துகளை தமிழாக்கிப் பரப்பியது பெரியாரின் 'குடி அர'சாகும். அது, இந்தியச் சிந்தனையாளர்களையும் நமக்கு அறிமுகப்படுத்தியது. சர் பி. சி. ராய் என்னும் அறிஞர் 1929 நவம்பரில் சென்னைக்கு வந்தார். மைலாப்பூரில் ரானடே மண்டபத்தில் உரையாற்றினார். அவ் வுரையில்,

'சென்னைவாசிகள் எவ்வளவு புத்திசாலிகளாயிருந்தும் உபயோகமற்ற விஷயங்களில், விதண்டாவாதமும் குதர்க்க புத்தியும் காட்டுகிறார்கள்.

'சீனாவில் சாதி வேற்றுமை கிடையாது. உயர்ந்தோர் தாழ்ந்தோர் கிடையாது. சீன மக்களிடையே தீண்டாமையே கிடையாது.

'சென்னையில்தான் சாதி வருண வேற்றுமை மிகக் குரூரமாக இருக்கிறது. பிராமணர் உயர்வு; பிராமணரல்லாதார் அவருக்குக் கீழ் என்று பேதம் பாராட்டும் நம் நாட்டவரை, தென்னாப் பிரிக்காவில் வெள்ளையர் வேற்றுமை பாராட்டக்கூடாது என்று கிளர்ச்சி செய்பவர்களை உங்கள் நாட்டில் என்ன ஒழுங்கு நடக்கிறது என்று அவர்கள் திருப்பிக் கேட்டார்களாம். இதை,

நாமறிந்து, நம் சமூகத்தில் ஒருவர்,, பிறவியில் உயர்வு, மற்றொருவர் தாழ்வு என்பதை மறக்க, வாலிபர்கள் வேலை செய்யவேண்டும்.

'கோயிலுக்குள் எல்லா இந்துக்களும் சென்று தரிசனம் செய்ய நடத்தப்படும் இயக்கத்திற்கு ஆதரவு அளிக்கவேண்டும்.

'தீண்டாதவர்களுக்கும் பெண்களுக்கும் நம் நாட்டார், சர்வ சுதந்திரம் கொடுக்கவேண்டும்.

பால்ய விவாகம் தடுக்கப்பட வேண்டும்' என்று அழுத்தந்திருத்த மாகக் கூறினார்.

இக்கருத்துகளை 24–11–29 அன்றைய 'குடி அரசு' நன்றாக வெளியிட்டது. அய்ம்பது ஆண்டுகளுக்குப் பிறகும் நாம், பயனற்ற விதண்டாவாதங்களிலும் குதர்க்கங்களிலும் தனியார்வம் காட்டுவது குறைந்தபாடில்லை. சாதி உயர்வு தாழ்வு உணர்வு இன்னும் தொலைந்தபாடில்லை.

ஈ. வே. ராமசாமி, எல்லா சாதியாரும் பொது இடங்களில் நடக்க லாம் என்னும் உரிமைக்காக வைக்கத்தில் போராடி வெற்றி கண்டதை முன்னரே கண்டோம். அவ்வெற்றியின் எதிரொலி, பல இடங்களில் கேட்டது. பாலக்காட்டைச் சேர்ந்த கல்பாத்தி யிலும் எதிரொலித்தது.

'கல்பாத்தி தேர்விழாவில், தீண்டப்படாதவர், என்று விலக்கி வைக்கப்பட்டிருந்த ஈழவ சகோதரர்கள், எவ்வித ஆட்சேபணை யும் இல்லாமல் கல்பாத்தி அக்கிரகாரத்திலும் கோவில் தெருக் களிலும் கூட்டம் கூட்டமாகச் சென்றார்கள். யாரும் தடுக்க வில்லை.' இப்படியொரு செய்தியை 24–11–29 'குடி அரசு' வெளி யிட்டது. கேரளப் பார்ப்பனர்களும் மேல்சாதிக்காரர்களும் ஐந்தே ஆண்டுகளில் காலமாற்றத்திற்கு ஏற்பத் திருந்திவிட்டார்கள். தமிழ்நாட்டின் நவக்கிரகங்கள் அய்ம்பதாண்டுகளுக்குப் பிறகும் திருந்த மறுக்கின்றனவே!

19–1–30இல் 'பால்கன் பெண்கள் வெற்றி' என்னும் தலைப்பில் துருக்கி கமால் பாட்சாவின் தலைமையில் பலதார மணத்தை ஒழித்துவிட்டதையும் 'கோஷா' முறையை அகற்றிவிட்டதையும் கிரீஸும் பலதார மணமுறையை சட்ட விரோதமாக்கியதையும் 'குடி அரசு' வெளியிட்டுள்ளது.

### நம்பூதிரிகளின் மன மாற்றம்

6–4–30இல் திருவிதாங்கூரிலுள்ள கிடாங்கூரில், நாராயண நம்பூதிரிபாத் தலைமையில், நம்பூதிரி வகுப்பு சீர்திருத்த மாநாடு

நடந்தது. ஒரு அரை நூற்றாண்டுக்கு முன்பே, கேரள நம்பூதிரிகள், அம் மாநாட்டில் 'பூணூல் அணிவது இக்காலத்திற்கு ஏற்றதாக இல்லை. பூணூல் தரிப்பதை விட்டுவிடவேண்டும்' என்று முடிவு செய்தார்கள். அங்கேயே பலர் பூணூல்களைக் கழற்றி சாம்பலாக்கினார்கள். எத்தனை இனிக்கும் செய்தி! ஏனோ, இந்த ஆர்வத்தை, பிற்காலத்தவர், திசை திருப்பிப் பாழாக்கி விட்டார்கள். ஏட்டிக்குப் போட்டியாக, மக்களைப் பிரித்துக் காட்டும் தேவையற்ற நடைமுறைகளைக் காப்பதில், சில முற்போக்காளர்கூட இன்றும் முனைவது வேதனை ஊட்டுவதாகும்.

அதே நம்பூதிரி வகுப்பு சீர்திருத்த மாநாட்டில், நம்பூதிரி பெண்கள் கோஷா முறையை விட்டுவிடவும், நம்பூதிரி பெண்களுக்கு மேனாட்டுக் கல்வி கொடுக்கவும் முடிவு செய்தார்கள். இதைக் 'குடி அரசு' நாடறியச் செய்தது.

இத்தகைய செய்திகள் தமிழ் மக்களைத் தட்டி எழுப்பும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அப்போதும் தமிழ் மக்கள் தூக்கம் கலையவில்லை.

## கல்வி நிலை

பார்ப்பனரல்லாதாரே, எழுத்தறிவை அலட்சியப்படுத்திய போது, அவர்களைவிட வறுமையில் வாடிய ஆதி திராவிடர் என்போர் கல்வியைப்பற்றி கனவிலும் நினைக்கவில்லை. நாட்டுப் புறங்களில் பெரும்பாலான தொடக்கப் பள்ளிகள், சாதி இந்துக்கள் குடியிருந்த பகுதிகளில் இருந்தன. எனவே, ஒடுக்கப்பட்டவர்கள், ஊருக்கு வெளியே ஒதுக்கப்பட்டவர்கள், பெரும்பாலும் ஊர்ப் பள்ளிகளுக்குப் போக முடியவில்லை. இதனால் அரசு, தாழ்த்தப் பட்டோர் என்று அழைக்கப்பட்டோர் குடியிருப்புக்கு அருகிலேயே, தனிப் பள்ளிகள் ஏற்பாடு செய்தது. 1934–35ஆம் ஆண்டின் பொதுக் கல்வி வளர்ச்சியை மதிப்பீடு செய்த சென்னை மாகாண ஆட்சி, அவ்வாண்டில் 46,554 பேர், ஆதி திராவிடர்களுக்கான பள்ளிகளில் படித்ததாகவும் அது அதற்கு முந்தைய ஆண்டைவிட 3,458 அதிகமென்றும் சுட்டிக்காட்டியது.. அதோடு,

ஒடுக்கப்பட்டுள்ளவர்களுக்குப் பிரவேச உரிமை 'உடைய பொதுப் பள்ளிகளில் பாதியில் மட்டுமே ஒடுக்கப்பட்டிருப்பவர்கள் சேர்க்கப் பட்டிருக்கிறார்கள்.

'ஒடுக்கப்பட்டவர்கள் பிரவேசிக்க முடியாத இடங்களில் 674 பொதுப் பள்ளிகள் இருந்தன. அவைகளை, ஒடுக்கப்பட்டவர்களும் சேர்வதற்குத் தகுதியான இடங்களுக்குக் கூடிய விரைவில்

மாற்றிவிடும்படி மாவட்ட ஆட்சிக் கழகத் தலைவர்களும் நகராட்சி ஆணையர்களும் ஏற்பாடு செய்யவேண்டும்.

‘சில பொதுப் பள்ளிகளில் ஒடுக்கப்பட்டவர்களைச் சேர்த்ததால், சாதி இந்து மாணவர்கள் அப்பள்ளிகளிலிருந்து நீங்கிவிட்டதாகத் தெரிகிறது. தல அதிகாரிகள் உறுதியாக நடந்துகொண்டதை அரசு பாராட்டுகிறது’ என்று மதிப்பீடு செய்தது.

இதை ‘குடி அரசு’ வெளியிட்டு ஒடுக்கப்பட்டவர்களுக்கு நீதியும் வாய்ப்பும் கிட்டவில்லை என்பதை பெரியார் ஊரறியச் செய்தார்.

28–6–36 நாளிட்ட ‘குடி அரசு’ மகிழ்ச்சியூட்டும் செய்தியொன்றை வெளியிடுகிறது. ‘ஆம்பூர் இந்து உயர்நிலைப் பள்ளிக் குழுவினர், பள்ளியில் ஆதி திராவிடப் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளுவதாக வாக்குறுதி கொடுத்ததற்காக, ஆம்பூர் கஸ்பா ஆதி திராவிட அபிவிருத்திச் சங்கம் நன்றியறிதலைச் செலுத்துகிறது. இப்பிள்ளைகளுக்கு பள்ளிக்கூட சம்பளம் இல்லாமல் சேர்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறது.’ அக்காலத்தில் ஆதி திராவிடர்களுக்குக்கூட முழு இலவசக் கல்வி கிடையாது.

கைவல்ய சாமியார் ‘குடி அர’சில் பல்லாண்டுகாலம் வாரம் தவறாமல் ‘அவியல்’ என்ற தலைப்பில் கட்டுரைகள் எழுதி வந்தார். நல்ல தமிழ்ப் புலமையும் ஆழ்ந்த இந்து சமய அறிவும் பெற்றிருந்த அவருடைய எழுத்துக்கள் தமிழ் மக்களுக்கு விழிப்பூட்டின.

‘குடி அர’சின் வீச்சு எவ்வளவு பரவலாக இருந்தது என்பதைக் காட்டும் அக்கால நிகழ்ச்சி ஒன்று இதோ:

அவ்வமயம், ஈ. வே. ராவின் நண்பராகிய கோவை டி. ஏ. இராமலிங்கம் செட்டியார், ஈ. வே. ராவைக் காண நேர்ந்தது. டி. ஏ. இராமலிங்கனாருக்கு பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்தில் அக்கறை உண்டு. ஈ. வே. ராவின் கை ஓங்க ஓங்க, பார்ப்பனரல்லாதாரின் நலன்கள் பாதுகாக்கப்படும் என்பது அவருடைய அசையாத நம்பிக்கை. ஈ. வே. ராவின் செல்வாக்கு எவ்வகையிலும் குறையக்கூடாது என்னும் ஆர்வத்தில்,

‘அய்யா! இப்போதைக்கு பார்ப்பனீய எதிர்ப்போடு நிறுத்திக் கொள்ளுங்கள். கடவுள் நம்பிக்கை, சமய நம்பிக்கை முதலியவற்றை எதிர்ப்பதை சிறிது காலத்திற்குத் தள்ளிப் போடுங்கள். பார்ப்பனீய எதிர்ப்பு வெற்றி பெறும்போது, மற்ற எதிர்ப்புகளைச் சேர்த்துக்கொள்ளலாம். ‘‘குடி அர’’சை அம் முறையில் நடத்தினால், பலரும் வாங்கிப் படிப்பார்கள். நானும் என்னால் ஆன உதவியைச் செய்கிறேன்’ என்றார்.

ஈ. வே. ரா. புன்முறுவலோடு 'அய்யா சொல்வது புரிகிறது. நான் ''குடி அரசை'' நடத்துவது என்னுடைய புகழையோ செல்வாக்கையோ வளர்த்துக்கொள்ள அல்ல; அதை வைத்துப் பிழைப்பு நடத்தவும் அல்ல.

'தமிழ் மக்களுக்குத் தேவையான சில கருத்துக்களைச் சொல்லிப் பதிந்தாகவேண்டும். இன்று ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் நாளை ஒருநாள் ஏற்றுக்கொள்ளும் நிலை வரும்.

'இக் கருத்துக்களைச் சொல்லும் நிலையில் நான்தான் இருக்கிறேன். சொல்லவேண்டிய கருத்துக்களை, நானே எழுதி, நானே அச்சுக் கோத்து, நானே அச்சிட்டு, நானே படித்துக்கொள்ளும் நிலைக்குப் போனாலும் இழப்பைப் பொருட்படுத்தாது ''குடி அரசை'' வெளியிட்டு, என் கருத்தை வரும் தலைமுறைகளுக்கு விட்டுச் செல்லவேண்டியது என்னுடைய கடமை' என்று பெரியார் பதில் கூறினார்.

இவ்வாறு கொள்கைப் பிடிப்பால் எவ்வித தன்னலமும் கருதாது கட்டிக் காக்கப்பட்ட 'குடி அரசு' வாயிலாகவும், தன்மான இயக்கத்தின் வழியாகவும் சமூகக் கொடுமைகளை ஒழிப்பதற்கும், குறிப்பாக எல்லோருக்கும் சமநீதி கிடைப்பதற்கும் போராடி வந்த பெரியாரிடம் அக் கொள்கைகளுக்காகத் தொடங்கப்பட்ட நீதிக் கட்சியின் தலைமைப் பொறுப்பு, காலத்தின் உந்துதலால், 1938ஆம் ஆண்டு வந்தடைந்தது.

# 6

# நீதிக் கட்சி தலைமை

நீதிக் கட்சியின் தோற்றுவாய்பற்றி முன்னரே, முதல் அத்தியாயத்தில், பெரியாரின் இளமைப் பருவ அரசியல் சூழலைப் பற்றி விளக்கும்போது குறிப்பிடப்பட்டது. பெரும்பான்மையோர், சிறுபான்மையோருக்குப் பெரிய பதவிகளையும் அலுவல்களையும் இழந்துவிட்டுப் பரிதவித்தனர். சமுதாயத்தின், பழக்க கொடுமையால் கீழ் சாதிகளாக நடத்தப்பட்டனர். இவ்விரு தீங்குகளையும் உணர்ந்து விழிப்படையத் தொடங்கியபோது அவ்விழிப்பு நீதிக் கட்சியை உருவாக்கிற்று.

## தோற்றம்

சென்னை மாநகரில் படித்து வந்த, விரல் விட்டு எண்ணக்கூடிய பார்ப்பனரல்லாத மாணவர்களை ஒன்றுபடுத்தி அவர்களின் நலன்களைப் பேணும் பொருட்டு, டாக்டர் சி. நடேசனார் தோற்றுவித்த 'திராவிடர் சங்கம்' நீதிக் கட்சிக்கு முன்னோடி ஆகும்.

1916ஆம் ஆண்டு டாக்டர் டி. எம். நாயர், திரு. பிட்டி தியாகராயச் செட்டியார், டாக்டர் நடேசனார் ஆகியோர் கூடி 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' என்னும் பெயரால் ஓர் அமைப்பை உருவாக்கினார்கள். இச் சங்கம், பார்ப்பனரல்லாதாருக்கு கல்வியிலும் அலுவல்களிலும் பதவிகளிலும் மக்கள் தொகை விழுக்காட்டில் பங்கு கோரிப் பெறுவதை நோக்கங்களில் ஒன்றாகக் கொண்டிருந்தது. எனவே, மக்கள் வழக்கில் அதை நீதிக் கட்சி என்று எல்லோரும் அழைக்கத் தலைப்பட்டார்கள்.

## இதழ்கள்

நீதிக் கட்சியின் பணி, சென்னை மாகாணம் முழுவதும், பரவத் தொடங்கியது. எனவே, கட்சிக் கொள்கைகளை, நோக்கங்களை, திட்டங்களை பொதுமக்களிடையே பரப்பும் பொருட்டு 'ஜஸ்டிஸ்' என்ற ஆங்கில நாளிதழையும், 'திராவிடன்' என்ற தமிழ்

நாளிதழையும், 'ஆந்திர பிரகாசினி' என்னும் தெலுங்கு இதழை யும் தொடங்கி நடத்தி வந்தார்கள். தொடக்கத்தில் ஆங்காங்கே பொதுக் கூட்டங்களை, மாநாடுகளை நடத்தி, பொதுமக்களுடைய கண்களைத் திறந்தார்கள். சென்னை மாகாணத்தின் நாலா பக்கங் களிலும் முன்னர் காணாத விழிப்பும், எழுச்சியும் உண்டாயின. 'இல்லார்க்காக'ப் பாடுபடும் பொதுமக்கள் இயக்கம், அக்கால கட்டத்தில், நீதிக் கட்சி ஒன்றே.

## இரட்டை ஆட்சி முறை

இந்தியாவில் எழுந்த விடுதலைக் கோரிக்கையை முழுமையாக ஒப்புக்கொள்ளும் பக்குவத்தில் அக் கால ஆங்கில ஆட்சி இல்லை. அதே நேரத்தில் அடியோடு மறுப்பதும் நல்லதல்ல என்று அன்னிய ஆட்சி உணர்ந்தது. எனவே, 'இரட்டை ஆட்சி முறை' என்னும் புதிய ஆட்சி முறை ஒன்றைக் கண்டுபிடித்து, 1919ஆம் ஆண் இந்திய அரசுச் சட்டத்தின்மூலம் செயல்படுத்தினார்கள்.

இம் முறைப்படி ஆங்கில ஆளுநர், அவரால் நியமிக்கப்படும் நிர்வாக அவை உறுப்பினர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சில அமைச்சர்கள், ஆகியோர் கூட்டாக மாகாணங்களை ஆட்சி செய்யவேண்டும். அந்த ஆட்சிக் குழுவில், அமைச்சர்கள் சிறு பான்மையோராகவே இருப்பார்கள். மேலும் காவல், நிதி, நீதி, சட்டம் முதலிய துறைகளை அமைச்சர்களிடம் ஒப்படைக்காது, நிர்வாக அவை உறுப்பினர்களிடமே ஒப்படைப்பார்கள். அமைச்சர் களிடம் கல்வி, மக்கள் உடல் நலம், உள்ளாட்சி, வேளாண்மை போன்ற துறைகள் இருக்கும். அதாவது, ஆட்சிக் குழு இரு பகுதி களைக் கொண்டது. சிறு பகுதி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் ஆகியது. பெரும் பகுதி, ஆளுவோரால் நியமிக்கப்பட்டவர்கள். அவர்கள் ஆங்கில அரசுக்கும் அதன் பிரதிநிதிகளுக்கும் பொறுப்புச் சொல்லவேண்டியவர்கள். ஆட்சி குழுவுக்கு அமைச்சர்களின் துறைகளை, நடவடிக்கைகளை கண் காணித்து கட்டுப்படுத்தவும் உரிமை இருந்தது. இப்படியிருந்த ஆட்சி முறைக்கே இரட்டை ஆட்சி முறை என்று பெயர்.

இரட்டை ஆட்சி முறையின்கீழ் 1920ஆம் ஆண்டு சென்னை மாகாணத்தில் பொதுத் தேர்தல் நடந்தது. அப் பொதுத் தேர்தலில் நீதிக் கட்சிக்கு பெரும்பான்மை கிடைத்தது. எனவே, அக் கட்சித் தலைவராகிய திரு. பிட்டி தியாகராயச் செட்டி யாரை அமைச்சரவை அமைக்கும்படி அப்போதைய ஆளுநர் அழைத்தார். தியாகராயரோ பதவிப் பித்து இல்லாதவர். எனவே, தான் முதல் அமைச்சராக மறுத்துவிட்டார். எனவே,

நீதிக் கட்சியின் சார்பில், கடலூர் திரு. ஏ. சுப்பராயுலு ரெட்டியார் முதல் அமைச்சரவையை அமைத்தார். அதில், பின்னர் பனகால் அரசராகப்போகும் ராஜா ராமராயநிங்காரு, திரு. கே. வி. ரெட்டி ஆகிய இருவரும் இடம் பெற்றனர். திரு. ரெட்டியார் உடல் நலக் குறைவினால் 1921ஆம் ஆண்டு சூலைத் திங்கள் முதலமைச்சர் பதவியை விட்டுவிட்டார். எனவே, ராமராயநிங்காரு முதலமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டார். அப்போது, திரு ஏ. பரசுராமபாத்ரோ அமைச்சரானார்.

அக் கால சட்டசபையில், நீதிக் கட்சி உறுப்பினர்கள், சமுதாயத்தில் மேனிலையில் இருந்தவர்கள். தங்கள் சொந்த பணத்தைச் செலவு செய்து, பொதுத் தொண்டு என்னும் பெருமையைப் பெற்றவர்கள். பாமர மக்கள் எதை விரும்புவார்கள் என்று எண்ணி அதைச் சொல்வதற்குப்பதில், அவர்களை எவை முன்னேற்றும் என்பதை உணர்ந்து, அவற்றை வெளிப்படையாகச் சொல்ல முன்வந்தார்கள்.

### வகுப்புரிமை ஆணைகள்

நீதிக் கட்சியின் முதல் அமைச்சரவை, பார்ப்பனரல்லாதார்க்கு வேலை வாய்ப்புகள் பெருகும், முன்னரே கூறியபடி, வகுப்புரிமை ஆணைகளைப் போட்டது. அவை, அரசாங்கத்தின் பதவிகளில், பல நிலைகளில், சமுதாயத்தின் 2·7 விழுக்காட்டினர், 35 முதல் 40 விழுக்காடு வரை பதவிகளைப் பெற்றுக் காத்துக்கொண்டிருந்த அவல நிலையை மாற்றியது.

முதன்முதல் வருவாய்த் துறை பதவிகளுக்கு ஆட்களை நியமிக்கும் போது, பல சாதியாருக்கும் வாய்ப்பு கொடுக்கவேண்டுமென்று வருவாய்த் துறை வாரியம் நிலையான ஆணை 128 (2) சுற்றறிக்கை அனுப்பியது. பிறகு அரசு ஆணை 613, தேதி 16–9–1921இல் மேற்படிக் கொள்கையை எல்லாத் துறைகளுக்கும் விரிவுபடுத்தி அலுவல்களில் பார்ப்பனரல்லாதார் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்று அறிவிக்கப்பட்டது.

ஒவ்வோர் ஆண்டும் சனவரி 15-க்கும் சூலை 15-க்கும் முந்திய அரையாண்டில், எத்தனை பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், கிறுத்தவர்கள், இஸ்லாமியர்கள், ஆங்கிலோ-இந்தியர் மற்றும் பிறர் நியமிக்கப்பட்டார்கள் என்று பட்டியல் அனுப்ப வேண்டுமென்றும் அவ்வாணை கட்டளையிட்டது.

இருப்பினும் பார்ப்பனரல்லாதாருக்கு 48 விழுக்காடும், பார்ப்பனர்களுக்கு 22 விழுக்காடும் புதுப் பதவிகள் கிடைத்தன. பொது மக்களின் குறை குறையவில்லை.

மீண்டும் 1922 ஆகஸ்ட் 15 நாளிட்ட அரசு ஆணை எண் 658 வெளியிடப்பட்டது. அதன்படி இரு அறிவிப்புகள் ஒவ்வோர் அரை ஆண்டும் அனுப்பவேண்டும். 35 முதல் 99 ரூபாய் வரை சம்பளம் உடைய பதவிகளுக்கு நியமன சாதி அறிவிப்பு; 100-க்கு மேற்பட்ட சம்பளமுடைய பதவிகளுக்கு நியமனம் பற்றிய சாதிப் பட்டியல் அனுப்பவேண்டும்.

அதோடு, தற்காலிக பதவி உயர்வுகளிலும் எல்லோர்க்கும் பதவி என்னும் கொள்கையைக் கருத்தில்கொள்ள வேண்டுமென்பது அரசின் ஆணை. ஏன் அவ்வளவு தூரம் போகவேண்டியிருந்தது? நியமன அதிகாரிகள் பெரும்பாலும் பார்ப்பனர்களாக இருந்ததால், பல பதவிகளுக்கு தற்காலிக உயர்வு அடிப்படையில் நியமித்துவிட்டு, நிலையான பதவி நியமனங்களைக் குறைத்து விட்டார்கள். வகுப்புரிமையின் விளைவைக் குறைத்துவிட்டார்கள். எனவே இவ்வுத்திரவு தேவைப்பட்டது.

மேற்கூறிய ஆணைகளும் ஆட்சி முறைகளும் நீதிக் கட்சியின்பால் பொதுமக்கள் கொண்டிருந்த நம்பிக்கையை வளர்த்தது. எனவே 1923ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலும் நீதிக் கட்சியே பெரும்பான்மையான இடங்களைப் பெற்றது. இரண்டாம் முறையாக நீதிக் கட்சி அமைத்த அமைச்சரவைக்கு ராமராயநிங்காருவே முதல் அமைச்சராகத் தொடர்ந்தார். திரு. ஏ. பரசுராம பாத்ரோ அமைச்சராக நீடித்தார். திரு. கே. வி. ரெட்டிக்குப்பதில் திரு. தி. ந. சிவஞானம் பிள்ளை அமைச்சரானார்.

## இரண்டாவது அமைச்சரவை

இரண்டாவது அமைச்சரவை 1924ஆம் ஆண்டு ஆந்திரப் பல்கலைக்கழகச் சட்டத்தை இயற்றியது. முன்னர் குறிப்பிட்டபடி, இந்து அறநிலைய பாதுகாப்புச் சட்டத்தை 1926ஆம் ஆண்டு நிறைவேற்றியது. இச்சட்டம் பரபரப்பான எதிர்ப்புகளைத் தூண்டியது. அறநிலையக் காவலர்கள், தங்கள் செல்வாக்கு குறைந்துவிடும் என்று அஞ்சினார்கள். எனவே, பொதுமக்களிடையே குழப்பத்தை வளர்த்தார்கள். செய்தித்தாள்கள், அக்குழப்பத்திற்குத் துணை நின்றன. கடைசியில், இந்து அறநிலைய வாரியத்தின் முதல் தலைவராக, ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நடுவர் திரு. டி. சதாசிவ அய்யரை நியமித்ததன்மூலம் ஓரளவு எதிர்ப்பைத் தணித்தார்கள்.

முழு உரிமையில்லாத இரட்டை ஆட்சி முறையில், எவ்வளவு நன்மைகள் செய்யமுடியுமோ அவ்வளவு நன்மைகளை ஆணைகளின் வழி, நீதிக் கட்சியின் அமைச்சரவை செய்தது. நேர்மை

யைப் பொறுத்தமட்டில், நல்ல பெயரோடு இயங்கினார்கள். இருப்பினும் சில குறைப்பாடுகள் புக நேர்ந்தது.

**குறைபாடுகள்**

நீதிக் கட்சி செய்தித்தாள்களைப் பரவலாக்கத் தவறிவிட்டது. 'நல்லதைச் செய்கிறோம்; நேர்மையாகச் செய்கிறோம். இவை போதும்' என்றெண்ணி கொள்கைப் பரப்பிலும் கவனம் குறையத் தொடங்கியது. ஆட்சியில் இருந்தோரால், ஒருவர் பதவி பெற்றால் ஒன்பதின்மர் முயன்று தோற்றார்கள். அது, எரிச்சல் உடையோர் எண்ணிக்கையை நாள்தோறும் பெருக்கிற்று. பதவி, அதிகாரம், செல்வாக்கு உடையோர்பால், மற்றவர்களுக்கு அழுக்காறு ஏற்படுவது இயற்கை. இது சற்று அதிகமாகவே, விரைவாகவே, நம் சமுதாயத்தில் வளரும். இந்தப் போக்கும் நீதிக் கட்சிக்கு இடையூறாக வந்தது. இத்தனையும் சேரவும் மக்கள் ஆதரவு குறைந்தது. 1926ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் நீதிக் கட்சி தோற்றது. அதன் தலைவர்கள் தோற்றார்கள்.

நீதிக் கட்சியின் தொடக்க காலத்தில், பெரியார் அதற்கு தூரத்தில் இருந்தார். காங்கிரசு இயக்கத்தில் அருந்தொண்டு ஆற்றிய போது வகுப்புரிமைக் கொள்கையை முழங்கினாலும் நீதிக் கட்சி அரசியலுக்கு துணை நிற்கவில்லை. 1925ஆம் ஆண்டு, பெரியார், காங்கிரசைவிட்டு விலகிய பிறகே, மேற்கூறிய மூன்றாவது பொதுத் தேர்தல் வந்தது. அப்போதும் பெரியார் தேர்தலிலிருந்து விலகியே நின்றார். ஆனால் நீதிக் கட்சி தோற்றுவிட்டதால், பொதுமக்களின் நன்மைக்கான வகுப்புரிமைக்குத் தீங்கு வரக்கூடும் என்று கருதிய பெரியார் துவண்ட நிலையில் இருந்த நீதிக் கட்சிக்கு ஆதரவு அளிக்க முன்வந்தார். அவர் கொடுத்த ஊக்கம் ஒரு மாநாடாக உருவெடுத்தது. 1926ஆம் ஆண்டு டிசம்பர் 25,26ஆம் நாட்களில், மதுரையில், மாகாண பார்ப்பனரல்லாதார் மாநாடு கூடிற்று. சர் ஏ. பரசுராம பாத்ரோ தலைமையில் கூடிய அம் மாநாட்டினால், பார்ப்பனரல்லாதார் இயக்கம் புத்துயிர் பெற்றது, மீண்டும் வளர்ந்தது.

நீதிக் கட்சியினரும் பெரியாரின் தொண்டை, ஆதரவை நாடினர். அதனால், நீதிக் கட்சிப் பொதுக்கூட்டங்களிலும் மாநாடுகளிலும் பெரியார் கலந்துகொள்ள தலைப்பட்டார். அதேபோல், தன் மான இயக்க பொதுக்கூட்டங்களிலும் மாநாடுகளிலும் நீதிக் கட்சித் தலைவர்களும் பிறரும் கலந்துகொள்வது பழக்கமாகிவிட்டது. இரு சாராருக்குமிடையே தொடர்புகள் பெருகின; நெருக்கமாயின.

## வரலாற்றின் திருப்புமுனை

தன்மான இயக்கமும் நீதிக் கட்சியும் மேற்கூறியபடி இணைந்து பணிபுரிந்தது, வகுப்புரிமைக் கோட்பாட்டிற்கு வலுவூட்டியது. முன்னர் போட்ட ஆணைகளை முனை மழுங்கும்படி நிர்வாகிகள் செய்துவிட்டார்கள். 'எல்லார்க்கும் பதவி' என்னும் ஆணை எதிர்பார்த்த பலனை முழுமையாகக் கொடுக்கவில்லை. இதைச் சுட்டிக்காட்டி, டாக்டர் சுப்பராயன், திரு. எஸ். முத்தையா, திரு. எம். ஆர். சேதுரத்தினம் ஆகிய மூவர்கொண்ட அமைச்சரவை புதிய, விரிவான, எல்லா வேலைகளையும் உள்ளடக்கும் ஆணை பிறப்பிக்கச் செய்தது. அந்த அரசு ஆணை எண் 1129, நாள் 15–12–28இன்படி பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், கிறுத்தவர், இஸ்லாமியர், தாழ்த்தப்பட்டோர் ஆகியோருக்கு உரிய பங்கு திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டது. அதிலும், பார்ப்பனர்களுக்கு, மக்கள் தொகை அடிப்படையில் எவ்வளவு உண்டோ அதைப்போல ஆறு மடங்கு ஒதுக்கப்பட்டது. அதாவது பன்னிரெண்டு பதவிகளில் இரண்டு இடங்கள் பார்ப்பனருக்கு. இந்த ஆணைதான், சமுதாய வரலாற்றுத் திருப்புமுனையாக அமைந்த வகுப்புரிமை ஆணையாகும்.

'1928இல் அரசுப் பதவிகளில், வகுப்புவாரி இடம் ஒதுக்கியது சரி பங்காக இல்லை. பார்ப்பனருக்கு நூற்றுக்குப் பதினாறு இடம் கொடுப்பது தவறு. தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பின் தங்கியவர்களுக்கும் அதிக பங்கு ஒதுக்கவேண்டும்' என்ற கோரிக்கை அடிக்கடி எழுந்தது.

ஆனால் வகுப்புரிமை அடிப்படையில் பதவிகளுக்குப் பொறுக்கியெடுக்கவெண்டுமென்னும் அரசு ஆணை இருந்தும் 1937ஆம் ஆண்டு, பொதுப்பணிக்கு ஆள் பொறுக்கும் கழகம், கால்நடை மருத்துவப் பணிக்கு இருபத்தியாறு பேர்களைத் தேர்ந்தெடுத்தது. அதில் பார்ப்பனரல்லாதவர் அய்வருக்கே இடம். முஸ்லீம்களுக்கு ஒன்று, கிறுத்தவர்களுக்கு ஒன்று, யாகப் பரம்பரைக்கு பத்தொன்பது இடங்கள். இத்துறையில்தான் இப்படி என்று எண்ணிவிடாதீர்கள்.

## கல்வியில் ஆதிக்கம்

பார்ப்பனரல்லாதார் நடத்திய கல்வி நிலையங்கள் நிலையும் இப்படியே: சென்னை, தொண்டைமண்டல துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளியில் 1935ஆம் ஆண்டு வேலை செய்துகொண்டிருந்த, 52 ஆசிரியர்களில் 40 பார்ப்பனர்கள்; 12 பேர்களே மற்ற

வர்கள். சென்னை முத்தியாலுப்பேட்டை சற்று பரவாயில்லை. 57 ஆசிரியர்களில் 34 பார்ப்பனர்கள். சென்னை பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் சிறிதளவு முன்னேற்றம். 30 ஆசிரியர்களில் 17 பேர்களே பார்ப்பனர்கள்.

அப்புறம் திருச்சி தேசிய உயர்நிலைப் பள்ளியில், 39 ஆசிரியர் களில் 5 பேர்களே பார்ப்பனரல்லாதார் என்பதைப்பற்றியோ, சென்னை தியலாஜிகல் உயர்நிலைப் பள்ளியில், 46 ஆசிரியர்களில் 7 பேர்களே பார்ப்பனரல்லாதார் என்பதைப்பற்றியோ, சுட்டிக் காட்டி கண்டிக்க அன்று 'எவர் இருந்தார்? பெரியாரும் அவ ருடைய கட்சியும் இயக்கமும் தொடர்ந்து நடத்திய போராட்டத் தால், அது உருவாக்கிய சூழ்நிலையால் அல்லவா இன்று இத்தனை தமிழர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் உள்பட, பல நிலை, பலவகைப் பதவிகளுக்கும் வர முடிந்தது?

பார்ப்பனரல்லாதாருடைய பங்கு எந்த அளவு பறிக்கப்பட்டது என்பதற்கு மற்றோர் எடுத்துக்காட்டை பாருங்கள்: தஞ்சை மாவட்ட உயர்நிலைப் பள்ளிகளில் 1936ஆம் ஆண்டின் தொடக் கத்தில், மொத்தம் 632 ஆசிரியர்கள் பணிபுரிந்தார்கள். அவர் களில் 449 பேர், பார்ப்பனர்கள். பாக்கியுள்ள 183 பேர்களே பார்ப்பனரல்லாதார்.

அம் மாவட்டத்தில் தனியார் நிர்வாகத்தில் இருந்த உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் எல்லோருமே பார்ப்பனர்கள். பொதுத்துறை உயர்நிலைப் பள்ளிகளில் 36 தலைமை ஆசிரியர்கள் இருந்தார்கள். அவர்களில் 24 பேர்கள் பார்ப்பனர்கள். 12 பேர் களே பார்ப்பனரல்லாதார்.

முன்னர் கூறியபடி, பெரியார், 'சுயமரியாதை சமதர்மத் திட்டத்தை' காங்கிரசுக்கும் நீதிக் கட்சிக்கும் அனுப்பிவைத்தார். எந்தக் கட்சி அத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளுகிறதோ அந்தக் கட்சிக்கு சுயமரியாதை இயக்கத்தின் ஆதரவு கிடைக்குமென்றும் அறிவித்தார். காங்கிரசால் அதை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. நீதிக் கட்சி 1935இல் ஏற்றுக்கொண்டது. எனவே தன்மான இயக்கத்திற்கும் நீதிக் கட்சிக்கும் இடையே ஏற்பட்டிருந்த நல்லுறவு வலுப்பெற்றது.

அரசியலிலும் 1930இல் நீதிக் கட்சி அமைச்சரவை மீண்டும் பதவி ஏற்றது. அது 1937ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் வரை தொடர்ந்தது. நீதிக் கட்சியின் அமைச்சரவை பெரியாரின் ஆதரவைப் பெற்றது. இருப்பினும் 1937இல் நடந்த பொதுத் தேர்தலில், நீதிக் கட்சி தோற்றது; காங்கிரசு வென்றது. திரு.

சி. இராசகோபாலாச்சாரியார் தலைமையில் அமைச்சரவை அமைந்தது.

பார்ப்பனரல்லாதாரில் மேல் படிக்கட்டுகளில் உள்ளவர்கள், கல்வி பெற்றுப் போராடி பார்ப்பனரின் பதவி ஏகபோகத்திற்கு ஓரளவு இடையூறாகிவிட்ட நிலை, பிரதமர் இராசகோபாலாச்சாரியாரின் நெஞ்சில் உறுத்திக்கொண்டிருந்தது.

**கட்டாய இந்தி திணிப்பு**

இந்நிலையில், பின்தங்கியவர்களில் ஏராளமானவர்கள், உயர் நிலைப் படிப்பைப் பெற்றுவிட்டால், போட்டி அதிகரிக்கும்; பங்குச் சண்டை முற்றும்; பார்ப்பனர்களுக்கு ஒதுக்கப்பட்ட பங்கு குறையும். ஆகவே உயர்நிலைப் பள்ளிகளில் படிப்போர் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவது, போட்டியைக் குறைக்கும் என்று அவர் எண்ணியிருக்கக்கூடும். படிப்புப் பெருக்கைக் குறைக்க கட்டாய இந்தியை கருவியாகக்கொண்டார். கட்டாய இந்தியை எதிர்த்து நடந்த நீண்ட இந்தி எதிர்ப்புப் போரைப்பற்றி பின்னர் கவனிப்போம்.

பெரியாரும் தமிழ் மக்களும் கட்டாய இந்தியை எதிர்த்து நீண்ட போராட்டத்தை நடத்தினர். அப்போது கட்டவிழ்த்துவிடப்பட்டிருந்த அடக்குமுறைகளும் சிறைக் கொடுமைகளும் மக்கள் மனதில் பெரும் கொந்தளிப்பை உண்டாக்கின. அந்நிலையில், சென்னையில், 1938ஆம் ஆண்டு டிசம்பர் 29,30,31 நாட்களில், நீதிக் கட்சியின் பதினான்காவது மாநாடு கூடிற்று. அம் மாநாட்டில் அய்ம்பதாயிரத்திற்கு மேலான மக்கள் கூடியிருந்தார்கள். இம் மாநாட்டுத் தலைவராக இந்திப் போராட்டத் தலைவர் பெரியாரை ஒருமனதாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டார்கள். ஆனால், மாநாட்டின்போது, பெரியார் சிறைப்பட்டிருந்தார். நீதிக் கட்சியின் வரலாற்றில் அம் மாநாடே தலைசிறந்தது.

**நீதிக் கட்சியின் தலைமை**

மாநாட்டுப் பந்தலில் பெரியார் உருவம் நாற்காலியில் வைக்கப் பட்டது. வழக்கம்போல், பெரியாரைத் தலைவராக இருக்கும்படி முன்மொழிதலும் வழிமொழிதலும் ஆன சடங்கு நடந்தது. பெரியார் சிறைபுகுமுன்பே எழுதி அனுப்பியிருந்த தலைமையுரையை சர். பன்னீர்செல்வம் படித்தார். அப்போது பன்னீர் செல்வம் கழுத்தில் போடப்பட்ட மாலையை அவர் பெரியாரின் உருவச்சிலையின் பாதத்தில் படைத்தார். மாநாட்டில் கூடியிருந்த அனைவரும் எழுந்து நின்று,

'எங்கள் மாபெரும் தலைவரே! உங்கள் உடல் சிறைப்படுத்தப் பட்டிருந்தாலும் உங்கள் வீரத் திருவுருவத்தின்முன், நாங்கள் அனைவரும் எழுந்து நின்று ஒன்றுபட்டிருக்கிறோம்.

'உங்கள் தலைமையில், நாங்கள் அனைவரும் சொல்வழிநின்று, கட்சி வளர, மக்கள் வாழ, குறிக்கோள் நிறைவேற, ஓயாது உழைத்து வெற்றிபெறுவோம் என உறுதி கூறுகிறோம்' என்று தமிழிலும் தெலுங்கிலும் உறுதி எடுத்தனர்.

பகுத்தறிவுப் பெருஞ்சுனையாம் பெரியார் ஈ. வே. ராமசாமி, நீதிக் கட்சியின் 14ஆவது மாநாட்டுக்கு அனுப்பிய தலைமை உரையில், 'உலக ஒற்றுமையை நான் வெறுப்பவனல்ல. உலக மக்கள் சமதர்ம வாழ்வை மேற்கொள்வதை வேண்டாமென்று கூறவில்லை. மக்கள் யாவரும் விகிதாசாரம் உழைத்து அவ்வுழைப்பின் பயனை விகிதாசாரம் பகிர்ந்து, தத்தம் தகுதிக்கும் தேவைக்கும் அவசியமான அளவு அனுபவிப்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் தேசியம் என்றும் தேச சேவை என்றும் தேச பக்தி என்றும் தேச விடுதலை என்றும் தேச ஒற்றுமை என்றும் ஆத்மார்த்தம் என்றும் பிராப்தம் என்றும் பலபல சொற்களைக் காட்டி, மெய் வருந்தி பாடுபட்டுப் பொருளீட்டும் பொதுமக்களை, கட்டின ஆடை கசங்காமல், மெய்யில் வெய்யில் படாமல், வாழ்க்கை நடத்தும் ஒரு சிறு கூட்டத்தார் வஞ்சித்து, ஏமாற்றி,வயிறு வளர்ப்பதை, ஏன்? உழைப்பாளிகளைவிட அதிக சுகமான வாழ்வு வாழ்வதை அடியோடு ஒழிக்கவேண்டுமென்று சொல்லுகிறேன்.

'நம் நாட்டுத் தொழிலாளர்கள், பார்ப்பனரல்லாதார் இயக்கம் வேறு; தொழிலாளர்கள் வேறு என்று கருதிக்கொண்டிருக்கிறார்கள். இக் கருத்து மாறி, இரண்டும் ஒன்றுதான் என்ற உண்மையான எண்ணமும் உணர்ச்சியும் ஏற்படும்வரை இரண்டும் உருப்படா என்பதே எனது அபிப்பிராயம். பார்ப்பனரல்லாதவர்கள் என்கிற வார்த்தையும்மக்களும்தொழிலாளர் என்ற வார்த்தையும் மக்களும் ஒன்றே என்பதை நாம் மறக்கவேகூடாது' என்று தெளிவுபடுத்தினார்.

மேலும்,'தமிழ்நாடு' தமிழருக்கேஎன்று ஏற்கெனவே 11-9-38இல் திருவல்லிக்கேணி கடற்கரையில், இந்தி எதிர்ப்புப் படை வரவேற்பு பொதுக் கூட்டத்தில் முதல் முதல் எழுப்பிய முழக்கத்தைத் தலைமையுரையாய் வலியுறுத்தினார். இம் முழக்கம் தென்னாட்டு மக்கள் அனைவரையும் அணைத்துக்கொள்ளும் வகையில் 1939இல் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று உருப் பெற்றது.

பெரியார் நீதிக் கட்சியின் தலைவராவதற்கு முன்பு அக்கட்சியின் அரசியல் குறிக்கோள் 'குடியேற்ற நாட்டு நிலைபெறுவது' என்ப

தாக இருந்தது. அது, இந்த மாநாட்டில், முழுத் தன்னாட்சி பெறுவதே நோக்கம் என்று திருத்தப்பட்டது.

உலகப் போர் பற்றி தந்தை பெரியார் தலைமையில் இயங்கிய நீதிக் கட்சி என்ன நிலை எடுத்தது? இட்லர் வெற்றி பெற்றால், அன்னிய ஆட்சிக் கொடுமை பன்மடங்கு அதிகமாகிவிடும். இந்தியா உள்ளிட்ட உலக நன்மையைக் கருதினால், இட்லர் தோற்க வேண்டும்; பிரிட்டன் வெல்லவேண்டும். இது பெரியாரின் தொலை நோக்கால் பிறந்த முடிவு; இதுவே கட்சியின் முடிவு.

இரண்டாவது உலகப் போரின்போது பெரியார், நேசக் கட்சியை ஆதரித்தது, எவ்வித தன்னலம்பற்றியும் அல்ல. பெரியாருக்கு தென்னாட்டில் உள்ள பெரும் செல்வாக்கை உணர்ந்த ஆங்கில அரசு 1940இலும் 1942இலும் இருமுறை கவர்னர் ஜெனரல்களை யும் கவர்னர்களையும் அனுப்பி, சென்னை மாகாண ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்படி அவரை வேண்டிற்று. பெரியாரிடம் தனிப் பட்ட முறையில் நேசமும் மதிப்பும் கொண்டிருந்த இராச கோபாலாச்சாரியாரே நேரில் வந்து, ஆட்சிப் பொறுப்பை ஏற்கு மாறு பெரியாரைக் கேட்டுக்கொண்டார். தான் ஆதரவு கொடுப்ப தாகவும் கூறினார். பெரியார் பதவிப் பற்று அற்றவர். தான் ஏற்றுக்கொண்டுள்ள சமூக இழிவு ஒழிப்புப் பணிக்கு பதவி ஏற்பு இடையூறாகும் என்று கருதினார். மேலும் மற்றவர் தயவில், ஆட்சியில் இருக்க மனம் ஒப்பாதவர். எனவே, வலிய வந்த பதவியைப் புறக்கணித்துவிட்டார்.

ஆனாலும் ஆங்கிலேயருக்கு ஆதரவு தரும் முயற்சிகளில் ஈடு பட்டார். வழக்கம்போல் சமுதாய ஆதிக்கக் கூட்டம், பெரியார் மேல் வசைமாரி பொழிவதற்கு இம்முடிவை, சாக்காக்கிக் கொண்டது. எதையும் பொருட்படுத்தாது, உலகப் போரில் ஆங்கி லேயருக்கு ஆதரவு கொடுத்து வந்தார்.

1940ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பெரியார் ஈ. வே. ராமசாமி, வடநாட்டுச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். அப்போது, 8–1–1940இல், முஸ்லீம் லீக் தலைவர் ஜனாப் முகமதலி ஜின்னா வைக் கண்டு உரையாடினார். அவரிடம் தாம் மேற்கொண்டுள்ள தனித்திராவிட நாடுகோரிக்கைபற்றிபெரியார் விளக்கிக் கூறினார். பின்னர், அதே ஆண்டு மார்ச்சு திங்களில் கூடிய முஸ்லீம் லீக் இஸ்லாமியர்களுக்குத் தனி நாடு வேண்டுமென்று கோரி முடிவு எடுத்தது. அதற்கு முன்பு, அது இஸ்லாமியக் கலாச்சார பாது காப்பு இயக்கமாகவும் பதவிகளில் நியாயமான விழுக்காட்டில் பங்கு கேட்கும் அரசியல் கட்சியாகவுமே இருந்தது.

வட இந்தியாவில் ஜின்னா முஸ்லீம்களுக்குத் தனி நாடு கேட்டது போல், இங்கே, பெரியார், தென்னிந்தியர்களுக்காக, திராவிட

நாடு கேட்டார். அதை ஆதரித்து பிரச்சாரம் செய்தார். இணைந்த இந்தியாவில் இருக்கக்கூடியதைவிட பிரிந்த திராவிட நாட்டில் சமதர்ம முறை வெற்றிபெறுவதற்கும், சாதி ஏற்றத் தாழ்வு ஒழிவதற்கும் ஆதரவான சூழ்நிலையும் வாய்ப்பும் அதிகமாக இருக்கும் என்பது பெரியாரின் மதிப்பீடு.

இதைப்பற்றி சர் சி. பி. ராமசாமி அய்யர் வெளியிட்ட கருத்தினைக் காண்போம்: 'ஈ. வே. ராமசாமி அவர்கள் வெகுவாக மதிக்கப்படுகின்ற ஒரு பார்ப்பனரல்லாத தலைவர். இந்நாட்டின் பிறபகுதிகளிலிருந்து தமிழ் நாட்டைத் தனியாகப் பிரித்துவிட வேண்டுமென்பதை பகிரங்கமாகவே சொல்லி வருகிறார் . . . இன்றைய நிலையை அடிப்படையாகக்கொண்டு பார்த்தால், பாகிஸ்தானத்தில் முதலமைச்சராக இருப்பதற்கு ஜின்னாவிற்கு எவ்வளவு உரிமை உண்டோ, அவ்வளவு உரிமை தமிழ்நாட்டின் தனி ஆட்சியில் ஈ. வே. ராமசாமி அவர்களுக்கு உண்டு.'

1940இல் திருவாரூரில் கூடிய நீதிக் கட்சியின் மாகாண மாநாட்டில், திராவிட நாட்டைப் பிரித்துக் கொடுக்கவேண்டும் என்று முறையாக முடிவுசெய்யப்பட்டது. அதுவே பல மாவட்ட, வட்ட மாநாட்டு முடிவுகளாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், ஜின்னாவின் குரலுக்குப் பின்னால் போதிய ஜனக்கட்டு இருந்தது. எனவே, ஜின்னா கேட்ட பாகிஸ்தானைப் பிரித்துக் கொடுக்க வேண்டியதாயிற்று. பெரியாரின் பின்னால், தெளிவும் போராட்ட குணமும் தியாகத் துடிப்பும் உள்ளவர்கள் நாட்டைப் பிரிப்பதற்கு வேண்டிய அளவுக்கு இல்லை. பெரியார் கேட்ட 'திராவிட நாடு' பலிக்கவில்லை.

4–8–1940 திருவாரூரில் கூடிய நீதிக் கட்சியின் மாகாண மாநாட்டின், முடிவுகளில் சில வருமாறு: ஆதி திராவிடர் சமுதாயத்திற்கு சர்க்காரால் அளிக்கப்பட்ட தனித் தொகுதி காப்புமுறை பூனா ஒப்பந்தத்தால் அழிக்கப்பட்டு, அச்சமுதாயத்துக்குச் சரியான பிரதிநிதி வரமுடியாமல் செய்யப்பட்டுவிட்டதால், இனி வரும் தேர்தல்கள் யாவற்றிற்கும் தனித் தொகுதி முறையையே ஏற்படுத்தவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

ஆதி திராவிட மக்களுக்கு உரிமைகள் அளிக்கும் விஷயத்தில் மற்றும் உள்ள குறைகள் நீங்கும் விஷயத்திலும் அவர்களுக்குத் தக்க சலுகை காட்டவேண்டுமென்றும் இம் மாநாடு சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது என்று முடிவுசெய்யப்பட்டது.

தற்போதுள்ள வகுப்புவாரி பிரதிநிதித்துவ எண்ணிக்கை திராவிடர்களுக்கும் ஆதி திராவிடர்களுக்கும் மிகவும் குறைவாக

இருப்பதால் மக்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப அவ்விகிதங்கள் ஏற் படுத்தப்பட வேண்டுமென்றும் அவ்விகிதப்படி உத்தியோகங்கள் அடையும்வரை அதிகமாகப் பிரதிநிதித்துவம் அடைந்திருக்கும் கூட்டத்தாருடைய நியமனம் நிறுத்திவைக்கப்பட வேண்டு மென்றும் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறது என்பது திருவாரூர் மாநாட்டின் மற்றொரு முடிவு ஆகும்.

தன்மான இயக்கமும் நீதிக் கட்சியும் பார்ப்பனர்கள், மற்ற வர்களை வேறாகக் கருதி நடத்துவதை மட்டும் கண்டிக்கவில்லை. எல்லா சாதி வேற்றுமைகளுக்கும் எதிராகப் போராடி வந்தன.

திருவாரூர் நீதிக் கட்சி மாநாட்டில், 'ஆரிய சூழ்ச்சியாலும் ஆரிய சமய ஆதாரங்களாலும் திராவிட சமூகத்திடை நுழைக்கப்பட்ட சமுதாய உயர்வு—தாழ்வு வேற்றுமைகளை வேரோடு களைந் தெறிய வேண்டுமென்றும் திராவிடர்களுக்குள்ளாகவே இன்று காணப்படும் உயர்வு தாழ்வுகளும் நீக்கப்பட வேண்டுமென்றும் இந்த வேற்றுமைகளை ஒழிப்பதற்காக தக்க வழிகளை வகுத்துக் கையாளத் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டு மெனவும் இம் மாநாடு வற்புறுத்தியது.

மீண்டும் 27–8–44இல் சேலத்தில் பெரியார் ஈ. வே. ராமசாமியின் தலைமையில் நடந்த சேலம் மாநாட்டு முடிவுகளில், மக்கள் பிறவி யினால் சாதி பேதம் கற்பிக்கப்பட்டிருப்பதையும், அவற்றுள் உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டிருப்பதையும் இக் கழகம் மறுப்ப தோடு அவைகளை ஆதரிக்கிற, போதிக்கிற, கொண்டிருக்கிற மதம், சாஸ்திரம், ஸ்மிருதி, புராணம், காவியம் என்பவை முதலாகிய எவையும் பொதுமக்களும், குறிப்பாக நம் கழகத்தவர் களும் பின்பற்றக் கூடாதென்று முடிவு செய்வதோடு அவைகள் நம் மீது சுமத்தப்படாமல் இருக்கவேண்டிய காரியம் தீவிரமாய்ச் செய்யவேண்டுமென்று இம் மாநாடு முடிவு செய்தது.

### திராவிடர் கழகம் பிறப்பு

'இந்த மாநாடானது, ஜஸ்டிஸ் கட்சி என்று அழைக்கப்படும் இக் கட்சிக்குள்ள தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற பெயரை "திராவிடர் கழகம்" என்று மாற்ற தீர்மானிக்கிறது' என்று சேலம் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. இப் பெயர் மாற்றம் 13–2–1944இல் சென்னையில் சி. என். அண்ணாதுரை தலைமை யில் நடந்த நீதிக் கட்சி மாநாட்டில் சேலம் மாநாட்டிற்கு பரிந் துரையாக முடிவு செய்யப்பட்டது.

**திராவிட நாடு கோரிக்கை**

மற்றொரு முடிவு: 'அதன் (திராவிடர் கழகத்தின்) முக்கிய கொள்கைகளில், திராவிட நாடு என்ற பெயருடன் நம் சென்னை மாகாணம், மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கம் இல்லாததும், நேரில் பிரிட்டிஷ் செக்ரட்டரி ஆப் ஸ்டேட்டின் நிர்வாகத்திற்குக் கட்டுப்பட்டதுமான ஒரு தனி நாடாகப் பிரிக்கப்பட வேண்டியது என்ற கொள்கை முதற் கொள்கையாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று இந்த மாநாடு தீர்மானிக்கிறது' என்பதாகும்.

மேலே கண்ட தன்மைகளை நீதியாகக்கொண்ட அரசியல் சட்டங்களையும் மாற்றி அமைக்க முயற்சிக்க வேண்டுமென்று இம் மாநாடு முடிவெடுத்தது.

வருணாசிரம தர்மம் என்கிற கொள்கையையும் அதன் பேரால் ஏற்படுத்தப்பட்ட பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்கிற பிரிவினையையும் இக்கழகம் ஒப்புக்கொள்வ தில்லை என்பதோடு, அக்கொள்கைகள் எந்த முறையில் இருந் தாலும் ஒழிக்கப்பட வேண்டியவைகள் என்றும் இம் மாநாடு முடிவு செய்தது.

மனிதனை மனிதன் தீண்டாமை, பார்க்காமை, ஒன்றாயிருந்து உண்ணாமை, தொழுகாமை முதலிய தன்மைகளை ஒழிக்க வேண்டுமென்ற முடிவுக்கு இம் மாநாடு வந்தது.

மக்கள், தங்கள் பெயர்களுக்குப் பின்னால் சாதிப் பிரிவைக் காட்டும் சொற்களையும் மற்றும் குறிகளையும் விட்டுவிட வேண்டு மென்று இம் மாநாட்டினர் முடிவு செய்தனர்.

இந்த கடைசி முடிவும் முதல் மாகாண சுயமரியாதை மாநாடு முதல் எல்லா மாநில மாநாடுகளிலும் மாவட்ட, வட்ட மாநாடு களிலும் ஏற்கப்படும் முடிவேயாகும்.

29–9–45இல் திருச்சியில் பெரியார் ஈ. வே. ராமசாமியின் தலைமையில் கூடிய 17ஆவது திராவிடர் கழக மாநாட்டில், இந்த மாகாணத்திலே, சில கோயில்களிலே, ஆதி திராவிடர்களை அனுமதித்து சில கோயில்களில் அனுமதிக்காமலும் இருக்கும் போக்கை இம் மாநாடு கண்டிப்பதோடு மாகாணத்திலுள்ள எல்லாக் கோயில்களிலும் ஆதி திராவிட மக்கள் செல்ல அனுமதிக்க வேண்டும் என்னும் முடிவிற்கு வந்தார்கள்.

அடுத்து, திராவிடர் கழகத்தின் 18ஆவது மாகாண மாநாடு 8, 9–5–48 நாட்களில் தூத்துக்குடியில் நடைபெற்றது. அதில் ஒன்பதாவது முடிவாக, சாதிகள் என்பவையே, இந்நாட்டிலிருந்து

ஒழிக்கப்படும் வரை, சாதி வாரி பிரதிநிதித்துவ முறை அரசாங்க அலுவல்களில் நிரந்தரமாக இருந்து வரவேண்டுமென முடிவு எடுத்தார்கள்.

இப்போது நீதிக் கட்சி பெரியார் தலைமையில் எடுத்த அரசியல் சார்பான முடிவுகளைக் காண்போம்:

பெரியாரும் அவருடைய தலைமையில் இயங்கிய நீதிக் கட்சியும் இரண்டாவது உலகப் போரில் பிரிட்டன் நேசக் கட்சிக்கு ஆதரவு தந்ததை முன்னரே குறிப்பிட்டோம். இது ஒருதலைக் காதலாக வளர்ந்தது. ஆங்கில அரசு, தங்களுக்குத் தொல்லைக் கொடுத்த வர்களைச் சரிகட்டுவதிலேயே அக்கறை காட்டிற்று.

வருங்கால இந்திய அரசியல் அமைப்பைப்பற்றி, பிரிட்டிஷ் அரசுக்குப் பரிந்துரை கூற நியமிக்கப்பட்ட சர் ஸ்டாபோர்ட் கிரிப்சின் தலைமையிலான குழு, இந்தியாவிற்கு வந்தபோது, நீதிக் கட்சியின் தலைவர், பெரியார் ஈ. வே. ராமசாமி, அக்குழுவைக் கண்டு திராவிட நாடு பிரிவினையை வலியுறுத்தினார். ஆனால், கிரிப்சு, அதற்குரிய கவனத்தைச் செலுத்தவில்லை.

மேற்கூறிய போக்கு, நீதிக் கட்சியினிடையே ஏமாற்றத்தை உண்டாக்கியது; அவர்களுடைய தன்மானத்திற்கு அறைகூவ லாகக் கருதப்பட்டது. எனவே 1944இல் நடந்த சேலம் மாநாட்டில், நீதிக் கட்சியினரின் உணர்வுகளைக் காட்டும் தீர்மானத்தை அறிஞர் அண்ணா கொண்டுவர, அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. அம் முடிவின் சுருக்கம் வருமாறு:

நம் சமுதாயத்தின் எதிர்கால நலனைக் கோரியும், நம் கட்சியின் தன்மானத்தைக் கருதியும் நமது கட்சியின் பேரால், இதுவரை நமக்கும் சர்க்காருக்கும் இருந்து வரும் போக்கை மாற்றி அமைத்துக்கொள்ளவேண்டிய நிலைமைக்கு நாம் தள்ளிக் கொண்டு போகப்பட்டுவிட்டோம்.

இந்திய அரசியல், சமூக இயல், சம்பந்தமான பேச்சு வார்த்தை களில் சர்க்கார் நம் கட்சியையும் நம் இலட்சியமாகிய திராவிட நாட்டுப் பிரிவினையையும் அலட்சியம் செய்து வருகிறார்கள்.

நம் கட்சியிலிருக்கும் அங்கத்தினர்களும் இனியும் வந்து சேர இருக்கும் அங்கத்தினர்களும் சர்க்காரால் மக்களுக்கு அளிக்கப் பட்ட எந்தவிதமான கவுரவப் பட்டங்களையும் உடனே சர்க்காருக்கு வாபஸ் செய்துவிட வேண்டும்; இனி ஏற்றுக் கொள்ளவும் கூடாது.

அதுபோலவே, அவர்கள் யுத்தத்திற்காகவும் மற்றும் சர்க்கார் காரியங்களுக்காகவும் மத்திய சர்க்காராலோ, மாகாண சர்க்கா

ராலோ, எந்த விதமான கமிட்டியில் எப்படிப்பட்ட கவுரவ ஸ்தானம், அங்கத்தினர் பதவி, ஆலோசகர் பதவி அளிக்கப் பட்டிருந்தாலும் அவைகளையெல்லாம் உடனே இராஜினாமா செய்துவிட வேண்டும்.

தேர்தல் அல்லாமல், ஸ்தல ஸ்தாபனம் அதாவது ஜில்லா போர்டு, பஞ்சாயத்து போர்டு ஆகியவற்றின் தலைவர், உப தலைவர், அங்கத்தினர் ஆகிய சர்க்கார் நியமனம் பெற்றோ அல்லது நியமனம் பெற்ற அங்கத்தினர்களால் தேர்தல் பெற்றோ இருக்கிறவர்கள் எவரும் தங்கள் தங்கள் பதவிகளை உடனே இராஜினாமாச் செய்துவிட வேண்டும்.

சர்க்காரால் தொகுதி வகுக்கப்பட்ட எந்த விதமான தேர்தலுக் கும் கட்சி அங்கத்தினர்கள் நிற்கக் கூடாது. இதை ஏற்று ஒரு வாரத்தில் இதன்படி கட்டுப்பட்டு நடக்காதவர்கள் எவரும் தங்களுக்கு இக்கட்சியில் இருக்க இஷ்டமில்லை என்று கருதி, கட்சியை விட்டு நீங்கிக்கொண்டவர்களாகக் கருதப்பட வேண்டிய வர்கள் ஆவார்கள்.

சேலம் மாநாட்டை அடுத்து 1945இல் திருச்சியில் நடந்த மாகாண மாநாட்டில் சேலம் முடிவுகளை ஏற்றுக்கொள்வதாக முடிவு செய்யப்பட்டது. மேலும்,

*(1)* திராவிட நாடு (சென்னை மாகாணம்) சமுதாயம், பொரு ளாதாரம், தொழில் துறை, வியாபாரம் ஆகியவற்றில் பூர்ண சுதந்திரமும் ஆதிக்கமும் பெறவேண்டும்.

*(2)* திராவிட நாடும் திராவிட நாட்டு மக்களும் திராவிட நாட்டவர் அல்லாத, அன்னியர்களின் சுரண்டல்களில் இருந்து, ஆதிக்கத்திலிருந்து விடுபடுத்தப்பட்டு, காப்பாற்றப்பட வேண்டும்.

*(3)* திராவிட நாட்டிலுள்ள மக்கள் யாவரும் சாதி, வகுப்பு, அவை சம்பந்தமான உயர்வு தாழ்வு இல்லாமல், சமுதாயத்திலும் சட்டத்திலும் சம உரிமையும் சம சந்தர்ப்பமும் பெற்று சம வாழ்வு வாழச் செய்ய வேண்டும்.

*(4)* திராவிட நாட்டு மக்களுக்கு சமயம், சமயாச்சாரம், பழக்க வழக்கம் என்பவைகளின் பேரால், இருந்து வரும் பேத உணர்ச்சி, மூட நம்பிக்கைகள், ஆகியவைகள் மறையச் செய்து, அவர்களை தாராள நோக்கமும் நல்ல அறிவு வளர்ச்சியும் பெற்ற ஒன்றுபட்ட சமுதாய மக்களாகச் செய்ய வேண்டும்.

இவைகள் வெற்றி பெறுகிறவரை சாதி, சமய வகுப்பு பேதம் ஆகியவை உள்ள மக்களுக்கு நம்மிடம் முழு நம்பிக்கையும் நல்லெண்ணமும் ஏற்பட்டு, மேற்கண்ட முயற்சிகளுக்கு நம்மோடு

8

களங்கமற்று ஒத்துழைக்கவேண்டிய அவசியத்திற்காக அவர்களுக்கு முக்கியமான துறைகளில் எல்லாம் பிரதிநிதித்துவம் கிடைக்கும் படிச் செய்யவேண்டும்.

இவைகளுக்கு வேண்டியதும் மற்றும் இவைபோன்ற இலட்சியங் களுக்கு வேண்டியதுமான காரியங்களை நிறைவேற்ற வேண்டிய தற்கு அவசியமான திட்டங்களை வகுத்துக்கொள்ளவேண்டும்.

திராவிட நாட்டுப் பிரிவினைச் சட்டத்தையும் திராவிடர் கழக சமுதாயக் கொள்கைகளையும் ஒப்புக்கொள்ளாத எந்த அரசியல் சக்திகளோடும் திராவிடர் கழகம் தொடர்பு வைத்துக்கொள்ளக் கூடாது என்றும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

### மத போதனை எதிர்ப்பு

அம் மாநாட்டின் பள்ளிகளில் சமய போதனைபற்றிய முடிவும் கவனிக்கத்தக்கது. மத போதனைகள் ஆரம்பப் பள்ளிகளில் வைக்கக் கூடாதென்று திருவாங்கூர் சர்க்கார் செய்திருக்கும் முடிவை இம் மாநாடு வரவேற்கிறது. அவ்விதத்திலேயே எவ்வித மத போதனையும் பள்ளிகளில் வைக்காமலிருக்க சென்னை சர்க்கார் தீர்மானித்து உத்திரவிட வேண்டுமாய் இம் மாநாடு வேண்டுகிறது.

கல்வி ஏகபோகத்தை உயிர்ப்பிக்க நடந்த முயற்சிகள்பற்றி எடுத்த முடிவு வருமாறு: மேன்மை, திறமை, ஆகியவற்றின் பேரால், தற்பொழுது அய்க்கோர்ட் ஜட்ஜு முதல் சாதாரண பிராமணன் வரையில் ஆரியர் அத்தனை பேரும் மேன்மையும் திறமையும் உடையவர்கள் என்கிற சாக்குச் சொல்லி, பிராமணப் பிள்ளை களுக்கு மட்டும் கல்வி வசதி செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் புதிதாகக் கல்லூரிகளை ஏற்படுத்த நடத்திவரும் முயற்சிகளை இம் மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. பார்ப்பனர்களால் திரட்டப்படும் நிதிக்குப் பொருளுதவி செய்யக்கூடாது என்று பார்ப்பனரல்லாத செல்வந்தர்களைக் கேட்டுக்கொள்கிறது.

திருச்சி மாநாட்டில்தான் இப்போது பட்டொளி வீசிப் பறக்கும் 'திராவிடர் கழகக் கொடி' உருவாக்கப்பட்டது. இக்கொடியின் அளவு மூன்றுக்கு இரண்டு என்னும் விகிதத்தில் அமைந்துள்ளது. நடுவில் வட்டமான சிவப்பாகவும் மற்ற பாகம் முழுவதும் கறுப்பு நிறமாகவும் அமைந்திருப்பது திராவிடர் கழகக் கொடி ஆகும்.

இதன் உட்கருத்து என்ன? கறுப்பு, திராவிடர்களைக் கவ்வியுள்ள பல்வகை இழிவுகளையும், இருளையும் குறிப்பதாகும். நடுவில் அமைந்த சிவப்பு, இழிவையும் இருளையும் பொசுக்க எழும் புரட்சி யின் மலர்ச்சியைக் காட்டுவதாகும்.

திருச்சி மாநாட்டில் 'கறுப்புச் சட்டைத் தொண்டர் படை' ஒன்று அமைப்பதென முடிவு எடுக்கப்பட்டது. அத்தகைய படையொன்று தமிழகமெங்கும் உருவாயிற்று.

1946ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாள் மதுரையில் கருஞ் சட்டைப் படை மாநாடு நடந்தது. முதல் நாள் நிகழ்ச்சிக்குப்பின், மாநாட்டுப் பந்தல் எதிரிகளின் தீயிடுதலுக்கு உள்ளாக்கப்பட்டது. இதுவும் திராவிடர் கழகத்தவர்களை அச்சுறுத்தவில்லை. வீறு கொண்டு பணியினைத் தொடர்ந்தார்கள். வெகுண்ட சுதந்திர ஆட்சி, 2-3-48இல் கருஞ்சட்டைத் தொண்டர் படையைத் தடை செய்தது. 1948ஆம் ஆண்டு மே திங்கள் 8, 9 நாட்களில் தூத்துக்குடியில் திராவிடர் கழக மாகாண மாநாடு நடந்தது. இயக்க வரலாற்றில் குறிப்பிடத்தக்க அளவு மக்கள் வெள்ளம் பெருக்கெடுத்த மாநாடாக அது அமைந்தது. அம் மாநாட்டில், திராவிட நாட்டைத் தனி சுதந்திர நாடாக்குவதே, திராவிட மக்களின் முடிவான அரசியல் கோரிக்கை, என்பது வலியுறுத்தப் பட்டது.

இந்திய அரசியல் நிர்ணய சபை என்கிற பெயரால் தில்லியில் கூடியிருக்கும் சபை திராவிட மக்களின் பிரதிநிதித்துவம் பெற்ற தல்ல என்றும், திராவிட மக்களை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்றும் இம் மாநாடு தீர்மானிக்கிறது.

திராவிட நாட்டிலுள்ள பிரஞ்சுப் பகுதிகள், திராவிட நாட்டுப் பிரிவினை ஏற்படும்போது, திராவிட யூனியனில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டுமென்று, பிரஞ்சு இந்திய திராவிட மக்கள் 18ஆவது திராவிடர் கழக மாகாண மாநாட்டைக் கேட்டுக்கொள் கிறது என்று பிரஞ்சு இந்திய திராவிடர் கழகம் தெரிவித்துக்கொள் கிறதென்று வந்துள்ள செய்தியைக் கண்டு, இம் மாநாடு பிரஞ்சு இந்திய மக்களுக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறது.

பெரும்பான்மை மக்கள் படித்திராத நாட்டில் ஜனநாயகம் நிலவுவது என்பது கூடாத காரியம் ஆதலாலும், படித்திராத மக்களுக்கு ஓட்டுரிமை அளிப்பது, வெறும் வேடிக்கைக் கூத்தாகவும் ஜனநாயகமென்பது, வெறும் கானலாகவும் இருக்குமென்றும் ஆகவே, திராவிட நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் கட்டாய ஆரம்பக் கல்வி அளிப்பதற்கான நடவடிக்கைகளை உடனே இந்திய யூனியன் அரசாங்கமும், மாகாண அரசியல் அதிகாரமும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இம் மாநாடு தீர்மானிக்கிறது என்பது எடுக்கப்பட்ட முடிவுகளில் ஒன்றாகும்.

சில தினங்களுக்குப் பிறகு, நடைபெற்ற ஈரோட்டு மாநாட்டில் தமிழ்நாட்டின் தொழில் வளம் வளர்ச்சி பெறமுடியாத நிலையில்

மத்திய சர்க்காரின் தொழில் திட்டங்கள் அமைந்திருப்பதால், இந்நாட்டு மக்களின் எதிர்கால வாழ்வு செம்மையாக்கப்பட, திராவிட நாடு தனி நாடாகப் பிரிந்தாக வேண்டுமென்னும் திராவிடர் கழகத்தின் அடிப்படைத் திட்டத்தை கழகம் வலியுறுத்தியது.

இம் மாநாட்டில் இனாம் ஒழிப்பிற்கும் ஒரு மசோதா விரைவில் கொண்டுவர வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்ளும் முடிவொன்று செய்யப்பட்டது.

## கல்வித் துறையில் வகுப்புரிமை

நீதிக் கட்சியும் பெரியாரும் பல்லாண்டுகள் தொடர்ந்து போராடியும் ஒரு சிறுபான்மையோரின் ஆதிக்கம், நெடுநாள் விடுதலை பெற்ற பின்னரும் தொடர்ந்தது.

இதோ அரசாங்க கல்வித் துறையின் இலட்சணம் பாரீர்:

1915 முதல் 1950 வரை சென்னை மாகாணத்தில் கல்வித் துறையில் மொத்தம் 518 பதவிகள் இருந்தன. அதில் பார்ப்பனர்களுக்கு 400 பதவிகள்; பார்ப்பனரல்லாதாருக்கு 18 பதவிகளே; மற்ற நூறு முஸ்லீம், கிறுத்தவர், ஆங்கிலோ–இந்தியர்; ஐரோப்பியர் ஆகியோருக்கு.

இதன் விளைவு, கல்லூரிகளில் பார்ப்பனர்களுக்கே தாராளமாக இடம் கிடைத்தது.

1949–50ஆம் ஆண்டு சேர்க்கப்பட்ட மாணாக்கர் பட்டியல் காண்க:

| | | மொத்த சேர்க்கை | பார்ப்பனர் |
|---|---|---|---|
| இன்டர்மீடியட் | .. | 13,117 | 4,422 |
| பி.ஏ., பி.காம். | .. | 3,610 | 1,394 |
| பி.எஸ்ஸி. | .. | 1,791 | 837 |
| பி.ஏ., பி.எஸ்ஸி. ஆனர்ஸ் | .. | 656 | 318 |

பார்ப்பனர்கள், தங்கள் மக்கள் தொகைப்படி பெறவேண்டியதைப்போல் 12 முதல் 17 விழுக்காடு வரை பிடித்துக்கொண்டார்கள். இருப்பினும் 1918ஆம் ஆண்டில் பார்ப்பனரல்லாதாருக்கு 14 விழுக்காடு இடம் கிடைத்தது மாறி, 1949–50இல் 64 விழுக்காடாக உயர்ந்தது, பெரியாரின் போராட்டத்தின் விளைவு அல்லவா?

மருத்துவக் கல்லூரிகளின் சேர்க்கை எப்படி?

1950ஆம் ஆண்டு, சென்னை மாகாண மருத்துவக் கல்லூரிகள் அனைத்திலுமாக 309 பேர்கள் சேர்க்கப்பட்டார்கள். அதில்

பார்ப்பனர்கள் 77 பேர்கள். அதாவது, 25 விழுக்காட்டுக்குக் கிடைத்தது. எண்ணிக்கை அடிப்படையில் கிடைக்கவேண்டியதைப் போல் 9 பங்கு கிடைத்தது.

இப்படி, அவர்கள் அதிகமாகப் பெறும் இடங்கள், யார் பங்கிலிருந்து எடுக்கப்படுகின்றன? பார்ப்பனரல்லாதார், தாழ்த்தப்பட்டோர், முஸ்லீம் ஆகியோரின் பங்குகளிலிருந்தே.

அப்படியும் நிறைகொள்ளவில்லை பார்ப்பனர்கள்.

இதுவும் முழுமையாகச் செயல்பட முடியாதபடி செய்துவிட்டார்கள்! எப்படி? மருத்துவம், பொறியியல், கால்நடை மருத்துவம், பயிரியல், சட்டம், ஆசிரியப் பயிற்சி பயில்வதில் பார்ப்பனரல்லாதாரையும் தாழ்த்தப்பட்டவர்களையும் போதிய அளவு சேர்க்காமல் தட்டிக் கழித்தார்கள். எடுத்துக்காட்டாக, 1928—29ஆம் கல்வியாண்டில் மூன்று ஆதி திராவிட மாணவர்களே மாநிலக் கல்லூரியில் படித்தார்கள். ஆனால், அன்று அவர்கள் சமுதாயத்தில் பதினைந்து விழுக்காட்டினர் ஆவார். எனவே, தொழிற் கல்விக்கு மாணாக்கரைச் சேர்ப்பதிலும் வகுப்புரிமைப்படி ஒதுக்கும் ஆணை பிறந்தது.

நண்டைச் சுட்டு நரியைக் காவல் வைத்தால்?

சேலம் மாவட்டத்தில், 1944—45இல் ஒரே ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி இருந்தது. அதற்கு நாற்பது பேர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதில் நான்கு இடம் 'தாழ்த்தப்பட்டோருக்கு' ஒதுக்கப்பட்டிருந்தது. 1942—43இலும், 1943—44இலும் ஆண்டுக்கு இரு தாழ்த்தப்பட்டவர்களே மனுப் போட்டிருந்தார்கள். கல்வி அதிகாரி 'சாது'வாகக் காட்டிக்கொண்டு, ஒவ்வோர் ஆண்டும் இரு மாணவர்களையும் ஏதோ நுணுக்கக் குறை சொல்லித் தள்ளிவிட்டார். இப்படியே எங்கும். அவர்களைச் சொல்லுவானேன்?

நீதிக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளான சாதி உயர்வு தாழ்வு உணர்ச்சியைப் போக்குதல், அது கைக்கூடும்வரை வகுப்புரிமைக்குப் பாடுபடல் ஆகிய இரண்டையும் நீதிக் கட்சித் தலைவர் பெரியார் கருத்தில்கொண்டு கடைசி மூச்சுவரை அவற்றின் வெற்றிக்காகப் பாடுபட்டு வந்தார். இவ்விரு இலட்சியங்களை அடைவதற்காகப் பெரியார் கோரிய திராவிட நாட்டுப் பிரிவினை முன்னேறாவிட்டாலும் சாதி இறுமாப்பு விரைந்து முனை மழுங்கி வருகிறது; வகுப்புரிமை பெருமளவு செயல்படுகிறது.

சாதி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய பெரியார், மொழி ஆதிக்கத்தை எதிர்த்தும் அடுத்தடுத்துப் போராட நேர்ந்தது. அதில் ஒவ்வொரு முறையும் வெற்றி பெற்றார்.

# 7

# கட்டாய இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள்

**1937** ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடந்தது. அத்தேர்தலில், அன்றைய சென்னை மாகாணத்தில், காங்கிரசுக் கட்சி, பெரும் பான்மையான இடங்களைப் பிடித்தது. அமைச்சரவையை ஏற் படுத்தி, சென்னை மாகாணத்தை ஆட்சி செய்யும் பொறுப்பு, காங்கிரசின் கைக்கு வந்தது. சிறிது, 'பிகு' பண்ணிய பிறகு, திரு. சி. இராசகோபாலாச்சாரியார் பிரதமரானார். அவர் தலைமை யில் அமைச்சரவை இயங்கிவந்தது. முதல் காங்கிரசு அமைச்சரவை, தூங்கிக்கிடந்த தமிழர்களைத் தட்டி எழுப்பும் ஆணையொன்றை பிறப்பித்தது. அது என்ன?

## இந்தி திணிப்பு

இந்தி மொழியை கட்டாயப் பாடமாக்கும் ஆணையை வெளியிட் டது. காங்கிரசு கட்சி ஆட்சி செய்த, பிற மாநிலங்களில், இந்தி கட்டாயமாக்கப்படவில்லை. அப்படியிருந்தும், சென்னை மாகா ணத்திற்குமட்டும் கட்டாய இந்தியை புகுத்த முனைந்தனர். எவ ருக்குக் கட்டாயம்? ஆறு, ஏழு, எட்டாம் வகுப்புகளில் படிக்கும் உயர்நிலைப் பள்ளி மாணாக்கருக்கு இந்தி கட்டாயப் பாடமாக்கப் பட்டது. இம்மொழியில் தேர்ச்சி பெற்றால்தான், கீழ் வகுப்பி லிருந்து மேல் வகுப்புக்குப் போகமுடியும் என்பது ஆணை. இது தேர்தல் அறிக்கையில் சொல்லிய திட்டமா? இல்லை. பொதுத் தேர்தலில் அறிவிக்காத இத்திட்டத்தைத் திணிப்பானேன்?

'இந்தி மொழி, இந்திய ஒருமைப்பாட்டுக்குத் துணை செய்யும்; இந்திய அரசின் வேலைகளில் நுழைய உதவும்.' இப்படிச் சொல்லப் பட்டது. இது மாய்மாலம்.

ஆறு முதல் எட்டுவரை படித்து முடிப்போருக்கு அனைத்திந்திய வேலைகளில் அமரும் வாய்ப்புகள் அதிகமாக இருக்குமா? ஒன்பது முதல் பதினோராம் வகுப்புவரை படித்தவர்கள் அத்தகைய பணி களில் இடம்பெறுதல் அதிகமாக இருக்குமா? பட்டம் பெற்றவர்கள் இந்திய அரசின் அலுவல்களில் சேர்வது அதிகமாக இருக்குமா? மூன்று பிரிவுகளாக்கி சிந்தித்துப் பாருங்கள். அனைத்திந்திய

அரசின் ஊழியங்களில் சேரும் வாய்ப்பும் இந்தியைப் பயன்படுத்தும் வாய்ப்பும், மிகக் குறைவாகப் பெறக்கூடியவர்கள், எட்டாவதோடு நின்றுவிடுபவர்களே. இதைக்கூடத் தெரிந்துகொள்ள முடியாத குழப்பவாதியா பிரதமர் இராசகோபாலாச்சாரியார்? இல்லவே இல்லை. தெரிந்திருந்தும் எவருக்கு இந்தி மொழி, மிக மிகக் குறைவாகப் பயன்படுமோ, அத்தகையோர் தலையில் இந்திச் சுமையை வைப்பானேன்? பொதுமக்களுடைய பிள்ளைகள், தொடக்கக் கல்வியோடு நின்றுபோகட்டும் என்னும் எண்ணமே, இந்தித் திணிப்பிற்குக் காரணம்.

அக்காலத்தில், கல்வி வளர்ச்சி, இன்றைக்கிருப்பதுபோல், பெரிதாக, இருந்ததா? இல்லை. தொடக்கப் பள்ளிகள்கூட இல்லாத சிற்றூர்கள் ஆயிரக்கணக்கில். உயர் தொடக்கப் பள்ளிகளின் இடைவெளி பல காதம். உயர் தொடக்கப் பள்ளிகள் அனைத்தும் அக்காலத்தில் ஆங்கிலம் கற்றுக்கொடுக்கவில்லை. கற்றுக் கொடுத்தாலும் ஆங்கிலத்தில் தேர்வுக்கு அனுப்புவதில்லை. ஆங்கிலத்தில் போதிய மதிப்பெண்கள் பெறத் தவறிவிட்டால், அது மொத்த தேர்ச்சியைக் குறைத்துவிடும். தேர்ச்சி குறையக் கூடாது என்பதற்காக மாணவர்களை ஆங்கிலம் தவிர பிற பாடங்களுக்கே தேர்வு எழுத வைப்பார்கள்.

உயர்நிலைப் பள்ளிக்கூடங்கள் நிறைய இருந்தனவா? இல்லை. சிறு நகரங்களில் ஒன்றிரண்டு; பெரு நகரங்களில் பல; ஆனால், நாட்டுப்புறங்களில் அரிதினும் அரிது. பல வட்டத் தலைநகர்களிலும் உயர்நிலைப் பள்ளி கிடையாது. உயர்நிலைப் பள்ளிப் படிப்பு, நகரத்தவர்கள் அனைவருக்குமாகிலும் கிடைத்ததா? இல்லை. ஏன்? அப்போது இலவசக் கல்வி இல்லை. அநேகமாக எல்லோருமே சம்பளம் கட்டிப் படிக்கவேண்டிய நிலை. எவருக்கும் முழுச் சம்பளத் தள்ளுபடி கிடையாது. எனவே, 1930களில், உயர் கல்வி என்பது அநேகமாக மேட்டுக் குடிகளின் கல்வியாகவே இருந்தது. அந்நிலையில் நாடார், வன்னியர், முக்குலத்தோர், ஆகியோரில் பலர், விழிப்படைந்து, தொழிலிலும் கல்வியிலும் முன்னேற முயன்றுகொண்டிருந்தார்கள். அவர்களும் உயர்நிலைப் பள்ளிக் கல்வியின்மேல் நாட்டஞ் செலுத்தியது புலனாயிற்று.

ஏற்கனவே, பார்ப்பனரல்லாதாரில் மேல் படிக்கட்டுகளில் உள்ளவர்கள், கல்வி பெற்றுவிட்டுப் போராடி, பார்ப்பனரின் பதவி ஏக போகத்திற்கு ஓரளவு இடையூறாகிவிட்ட நிலை இராசகோபாலாச்சாரியாரின் நெஞ்சில் உறுத்திக்கொண்டிருந்தது.

'ஆறாம் வகுப்பில் சேரும் குழந்தைகளுக்கு இந்தியைக் கட்டாய பாடமாக்கி அதிலும் போதிய மதிப்பெண் பெற்றால்தான் தேர்வு

என்று செய்துவிட்டால், சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த பலர், 'எட்டாவதுவரைகூட எட்டிப் பார்க்கமாட்டார்கள். உயர் நிலைப் பள்ளி மாணாக்கர் எண்ணிக்கை பழையபடி மட்டமாகவே இருக்கும்; போட்டி அதிகம் ஆகாது.' இது அவர் நினைப்பு.

**திணிப்பின் பின்னணி**

பொதுமக்களின் பொதுக் கல்வி வளர்ச்சிக்குத் தடைபோடும் வழிகளில் ஒன்றாக, கட்டாய இந்தியை முதல் மூன்று படிவங்களில் திணிக்க ஆணையிட்டார். அதுபோக,

இந்தியை எதிர்க்காமல் படிக்கமுயன்றால், பெரும்பாலான பார்ப்பனரல்லாத பிள்ளைகள் தோல்வி கண்டு, படிப்பை எட்டு வகுப்புக்குள் முடித்துக்கொள்ள நேரிடும்.

இந்தியை எதிர்த்தால், அது போராட்டமாக உருவாகும். அப் போது தன்மான இயக்கத்தின் கடவுள் மறுப்பு சாதியொழிப்புப் பணி குறையக்கூடும். அதோடு, உதய ஞாயிறாகக் கிளம்பிய சமதர்மத் திட்டத்தைப் பரப்புவதில் உள்ள முனைப்பு குறைய லாம். 'இந்தி எதிர்ப்பு' என்னும் சொற்றொடர், வட இந்திய சமதர்மவாதிகளையும் சாதி ஒழிப்பாளர்களையும் தென்னகத்து சமதர்மவாதிகளோடும் சாதி ஒழிப்பாளர்களோடும் சேரவொட்டா மல் பகையாக்கிவிடும். இவை இராசகோபாலாச்சாரியாரின் மதிப்பீடு.

இந்தப் பின்னணியைப் புரிந்துகொண்டால்தான், சென்னை மாகாணத்திலும் தமிழ்நாட்டிலும் நடந்த, நடக்கிற, இந்தி எதிர்ப் பைப் புரிந்துகொள்ளமுடியும்.

பல்லாயிரம் ஆண்டு தற்குறித் தன்மைக்குப் பிறகு, ஊருக்கு இரண்டுபேர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு வருவதையே பொறுக்கா மல், அதைத் தங்கள் ஆதிக்கத்தை தகர்க்கக்கூடிய ஆபத்தாக எண்ணி, இந்தியை, சிறு பிள்ளைகளுக்குக் கட்டாயப் பாடமாக்கி னார்கள்.

ஈ. வே. ராமசாமி, 1926ஆம் ஆண்டு முதலே, இந்தியைத் தனி ஆட்சி மொழியாக்குவதை எதிர்த்துவந்தார். சி. இராசகோபாலாச் சாரியாரின் ஆணை தூங்கிக்கிடந்த தமிழர்களை தட்டி எழுப்பியது போல் ஆயிற்று. பண்டிதர்களும் சாதாரண மக்களை மதித்து, அவர்களோடு சேர்ந்து, கட்டாய இந்தியை, நடுநிலைப் பள்ளி கட்டாய இந்தியை எதிர்த்தார்கள். நாடு முழுவதும் கொந்தளிப்பு. நாளிதழ்களில் பல, கட்டுப்பாடாக, மக்கள் உணர்ச்சியை குறைத் துக் காட்டியும் மறைத்துவைத்தும், இந்தி எதிர்ப்பை அடக்க முடியவில்லை.

காஞ்சிபுரத்தில் முதல் மாநில இந்தி எதிர்ப்பு மாநாடு நடந்தது. இந்தியைக் கட்டாய பாடமாக்குவதை கைவிட்டுவிடும்படி வேண்டிக்கொள்ளும் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். ஆங்காங்கே தமிழர் மாநாடுகள் நடந்தன. கட்டாய இந்தியைக் கைவிடும்படி வேண்டுதல் தீர்மானங்கள் நிறைவேறின. அவற்றை ஆதரித்து எண்ணற்ற பொதுக்கூட்டங்கள், முடிவுகள், நடந்தவண்ணம் இருந்தன.

ஆனல் அரசு அடம் பிடித்தது. முன்னர் அறிவித்தபடியே 1938–39ஆம் கல்வியாண்டில் 150 உயர்நிலைப் பள்ளிகளில் இந்தி கட்டாயப் பாடத்தை நடைமுறைப்படுத்தியது. அடுத்து வரும் ஆண்டுகளில், மற்ற பள்ளிகளிலும் இந்தியைக் கட்டாயமாக்குவதாகத் திட்டம்.

ஈ. வே. ராமசாமி இந்தி எதிர்ப்புப் போரை தொடங்கவேண்டிய நெருக்கடிக்குத் தள்ளப்பட்டார். அப்போது பிரதமர் என்றழைக்கப்பட்ட முதலமைச்சர் இராசகோபாலாச்சாரியார் வீட்டின்முன், தோழர் பல்லடம் பொன்னுசாமி என்பவர் கட்டாய இந்தியை எதிர்த்து உண்ணாவிரதம் தொடங்கினார். அவர் கைது செய்து தண்டிக்கப்பட்டார். திரு. ஸ்டாலின் ஜகதீசன் என்பவர், 'சாகும்வரை' உண்ணா நோன்பு தொடங்கினார். இதனால் இந்தி எதிர்ப்பு வலுவடைந்தது. ஆனால் பல நாட்களுக்குப் பிறகு, அவர் உண்ணாவிரதத்தை கைவிட்டார். இருப்பினும் இந்தி எதிர்ப்பு தணியவில்லை.

சென்னையில் தியலாஜிகல் உயர்நிலைப் பள்ளியின் முன்பு, ஒவ்வொரு நாளும் சில தொண்டர்கள், 'கட்டாய இந்தியை எதிர்த்து முழங்குவது' என்பது திட்டம். அந்த மறியல் தொடங்கிற்று; மறியல் தொண்டர்கள் கைது செய்யப்பட்டார்கள்; சிறைக்கு அனுப்பப்பட்டார்கள். அடக்குமுறை, வீறினை வளர்க்கும். இந்தி எதிர்ப்புப் போரில் அதையே கண்டோம். 'எப்பக்கம் வந்து புகுந்துவிடும்? இந்தி எத்தனை பட்டாளம் கூட்டி வரும்?' என்ற வீர முழக்கம் எங்கும் ஒலித்தது.

'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை' என்று ஆண்களோடு போட்டியிட்டுக்கொண்டு தாய்க் குலமும் மறியல் களத்தில் இறங்கியது. மாற்றான் முகம் பார்த்துப் பேசி அறியாத குடும்பப் பெண்கள், சில வேளை, தங்கள் மழலைகளோடு, மறியல் செய்து சிறைப்பட்ட காட்சி, நெஞ்சை உருக்கும் காட்சி.

இந்திப் போரில் சிறைப்பட்டிருந்த தாலமுத்து, நடராசன் என்னும் இருவர் சிறையிலேயே நோய்வாய்ப்பட்டு இறந்ததும் தமிழ் மக்களுக்கு அச்சமூட்டவில்லை.

இந் நிலையில் திருச்சியிலிருந்து நூறு பேர்கள்கொண்ட ஒரு இந்தி எதிர்ப்புப் படை புறப்பட்டு கால்நடையாக சென்னை நோக்கி வந்தது. 'நகர தூதன்' என்னும் அருமையான வார இதழின் ஆசிரியராக இருந்த மணவை ரே. திருமலைசாமி என்பவரால் அமைக்கப்பட்ட இப்படைக்கு இராவ் சாகிப் அய். குமாரசாமி என்பவர் தலைமை தாங்கி வந்தார். திருமலைசாமி, பட்டுக்கோட்டை அழகிரிசாமி, திருப்பூர் மொய்தீன், பாலசுந்தரம் இராமாமிர்தத்தம்மையார் ஆகியோர் படையில் சேர்ந்து வந்தனர். வழி நெடுகிலும் பொதுக் கூட்டங்கள் நடத்தி, கட்டாய இந்தியால் விளையக்கூடிய தீமைகளை எடுத்துரைத்தார்கள். தமிழ் மக்களுக்கு விழிப்பூட்டுவதில் இப் படை வெற்றி கண்டது.

சென்னை வந்தடைந்த இப் படைக்கு, சென்னை கடற்கரையில் எழுபதாயிரம் மக்கள் கூடி வரவேற்பு அளித்தார்கள். அதுவரை அவ்வளவு பெரிய பொதுக் கூட்டத்தை சென்னை கண்டதில்லை.

## தமிழ்நாடு தமிழருக்கே

இந்தி திணிப்பு எதிர்ப்புக் கூட்டத்தில் பெரியார் வீர முழக்கம் செய்தபோது 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று முதன்முறையாக முழங்கினார். அதுவே தமிழர்களின் கொள்கையாகவும் நீதிக் கட்சியின் கொள்கையாகவும் பின்னர் திராவிடர் கழகக் கொள்கையாகவும் ஆயிற்று.

பல மாதங்களுக்குப் பிறகு, ஈ. வே. ராமசாமியும் நவம்பர் 1938இல் கைது செய்யப்பட்டார். குற்றஞ்சாட்டப்பட்டார்; 'பெண்களை இந்தி எதிர்ப்பு மறியல் செய்யத் தூண்டினார்' என்பது குற்றச்சாட்டு; அது சட்ட மீறலாகும் என்பது அரசின் வாதம். பெரியார் தண்டிக்கப்பட்டார்; சிறைக்கு அனுப்பப்பட்டார். இதோ வழக்கின் முடிவு:

'இவர் செய்த குற்றங்கள் இரண்டு. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோராண்டு கடுங்காவல்; ஒவ்வோராயிரம் ரூபாய் அபராதம்; அபராதம் செலுத்தாவிடில் மீண்டும் அவ்வாறு மாதம் தண்டனை. இரண்டு தண்டனைகளையும் இரண்டு தனித்தனி காலத்தில் அடையவேண்டும்.'

பெரியார் காங்கிரசைவிட்டு விலகின, 1925இல் நடந்த, காஞ்சிபுரம் மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய திரு. கலியாணசுந்தரனாரே, பின்னர், 1938ஆம் ஆண்டு பெரியார் இந்தி எதிர்ப்பிற்காக சிறைப்பட்டபோது, தமது 'நவசக்தி'யின் தலையங்கமாக நெஞ்சுருகி எழுதியதைப் பார்ப்போம்:

'திரு. ஈ. வே. ராமசாமி, கடுங்காவல் தண்டனை ஏற்று சிறைக் கோட்டம் நண்ணினர். வெள்ளிய தாடி அசைய, மெலிந்த தோல் திரங்க, இரங்கிய கண்கள் ஔிர, பரந்த முகம் மலர, கனிந்த முதுமை ஒழுக ஒழுகத் தாங்கிய தடியுடன் அவர் சிறை புகுந்த காட்சி, அவர் தம் பகைவர், நொதுமலர், நண்பர், எல்லார் உள்ளத்தையும் குழையச் செய்திருக்குமென்பதில் ஐய்யமில்லை.

'முதுமைப் பருவம்! காவல்! கடுங்காவல்! என்னே! இந் நிலையை உன்ன உன்ன உள்ளம் உருகுகிறது. திரு. ஈ. வே. ராவுடன் மிக நெருங்கிப் பழகிய சிலர் மந்திரிப் பதவியில் வீற்றிருக்கின்றனர். அவர் தம் மனதும் கசிந்தேயிருக்கும். வயதின் முதிர்ச்சி எவரையும் அலமரச் செய்யும்.

'நண்பர் ஈ. வே. ராவுக்குச் சிறைவாசம் பழையது; மிகப் பழையது; புதியதன்று. முன்னே, அவர் ஒத்துழையாமையில் ஈடுபட்டும் தீண்டாமையை முன்னிட்டும் சமதர்மத்தைக் குறிக் கொண்டும் பலமுறை சென்றுள்ளனர். இம் முறை அவர் இந்தி எதிர்ப்புக் காரணமாகச் சிறை நுழைந்திருக்கின்றனர். சிறைக் கோட்டம் அவருக்கு ஒருவிதத் தவக் கோட்டம் ஆயதுபோலும்.

'சிறைப் பறவையாகிய ராமசாமி வரலாற்றை விரித்துக் கூற வேண்டுவதில்லை.

'அவர் தம் வரலாற்றில் அறியக் கிடக்கும் நுட்பங்கள் பல உண்டு. அவைகளில் சிறப்பாகக் குறிக்கத்தக்கன, இடையறாச் சேவை, சமத்துவ நோக்கம், சுதந்திர உணர்ச்சி, நட்புரிமை, தாட்சண்ய மின்மை, உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசாமை, அஞ்சாமை, ஊக்கம், சோர்வின்மை, சலிப்பின்மை, எடுத்த வினையை முடிக்கும் திறன், கரவு—சூழ்ச்சியின்மை முதலியன. இவைகள் அவர் தம் வாழ்வாக அரும்பி, மலர்ந்து, காய்ந்து, கனிந்து நிற்கின்றன. இந் நீர்மைகள் அவரை அடிக்கடி சிறைபுகச் செய்கின்றனபோலும். முதுமைப் பருவத்திலும் அவர் தலை சாய்த்துப் படுக்கையில் கிடந்து காலங் கழித்தாரில்லை. அவர் தமிழ் நாட்டின் நாலா பக்கமும் சுழன்று சுழன்று இரவு பகல் ஓயாது கர்ச்சனை செய்து வந்தார். ஓய்வு என்பதை அறியாது வீர கர்ச்சனை புரிந்து வந்த கிழச் சிங்கம் இப்பொழுது ஓய்வு பெற்றிருக்கிறது. சிறையில் தலை நிமிர்ந்து கிடக்கிறது.'

கிழச் சிங்கமாம் பெரியார் ஈ. வே. ராமசாமியை தமிழர்கள் ஏற்கனவே தம் இதயங்களில் சிறைப்படுத்தி வைத்துப் பல் லாண்டுகள் ஆயின. இதை அறியாத ஆட்சி அவரைச் சிறைக்குள் தள்ளிப் பார்த்தது.

அதை அறிய, அத் திங்களில் ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. சென்னையில், 1938ஆம் ஆண்டு டிசம்பர் 29, 30, 31ஆம்

நாட்களில், நீதிக் கட்சியின் 14ஆவது மாநாடு கூடிற்று. அதன் தலைவராக, சிறைக்குள் இருந்த பெரியார் தேர்ந்தெடுக்கப் பட்டார். குழுமியிருந்த அய்ம்பதாயிரத்துக்கு மேலான மக்கள் ஒவ்வொருவர் நெஞ்சத்திலும் பொங்கிக்கொண்டிருந்த உணர்ச் சிகள் எவை?

தமிழர் உரிமைப் போர்பற்றிய கிளர்ச்சி; பெரியார் சிறைக் கோட்ட வாழ்வைப்பற்றிய நினைவு; காங்கிரசு அடக்கு முறையில் வெறுப்பு; இந்தியை எவ்வாற்றானும் ஒழித்தே தீர்வதென்னும் உறுதி.

சிறைப் பறவையாகிய ஈ. வே. ராமசாமிக்கும் பெல்லாரி சிறை ஒத்துவரவில்லை. ஏன்? சிறை விதிகளையும் கட்டுப்பாடு களையும் கடைப்பிடிப்பதில் தந்தை பெரியாருக்கு ஈடு பெரியாரே. அவர், எவ்விதச் சலுகையும் எதிர்பார்ப்பதில்லை; ஏற்றுக் கொள்வதுமில்லை. சிறையில் இருந்த பெரியார், வயிற்று நோயால் மிகவும் துன்புற்றார். தாலமுத்துவை, நடராசனைப் போலவே காண நேரிடுமோ என்று தமிழ் மக்கள் கலக்கம்கொண்டனர்; கட்சி பேதமின்றி பெரியாருக்கு ஏதும் நேரிட்டுவிடக் கூடாதே என்று எண்ணி ஏங்கினார்கள். திடீரென 22-5-1939 அன்று பெரியார் விடுதலை செய்யப்பட்டார். மற்ற இந்தி எதிர்ப்பு வீரர்கள் சிறையிலே இருந்தார்கள்.

விடுதலையான மறுநாள், மாலை, ஈரோட்டில் நடந்த வரவேற்புக் கூட்டத்தில் ஈ. வே. ராமசாமி, 'மீண்டும் சிறை செல் வதற்காகவே நான் விடுதலை செய்யப்பட்டிருக்கிறேன். நான் இங்கு எதைப் பார்க்கிறேன்? என்னுடன் சிறை சென்ற தமிழர் களைப் பார்க்க முடியவில்லையே! நான் சிறையிலே இறந்திருக்க வேண்டுமென்று கருதுகிறேன். அப்படி நான் இறந்திருப்பேனே யானால் நமது இயக்கம் மிகவும் ஓங்கி உச்சநிலை அடைய வழி ஏற்பட்டிருக்கும்' என்று பேசியது நெஞ்சை நெகிழ வைத்தது; கட்டாய இந்தி எதிர்ப்பு போராட்டம் இன்னும் ஓய்ந்தபாடில்லை என்பதைத் தெளிவாக்கிற்று.

படித்தால் கேடு; படிப்பில் முன்னேற முடியாத கேடு; படிக்கா விட்டால், பகை; வட நாட்டோடு பகை; அதனால், பகுத்தறிவு சமதர்ம இயக்கம் நாடு தழுவிய இயக்கமாக முடியாத கேடு. இருவகையிலும் கேடு பயக்கும் சிறுவருக்கான கட்டாய இந்தியை மட்டுமே, நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் எதிர்த்தார்கள். ஆட்சியோ, அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டது. அடக்கு முறை, இரு தமிழ் இளைஞர்களின் உயிர்களைக் குடித்தது, தமிழ்த் தாய்க் குலத்தை சிறையிலடைத்துப் பார்த்தது. தமிழர் தம் தனிப்பெருங்காவலராக விளங்கிய தந்தை பெரியாரை

சிறையில் தள்ளிப்பார்த்தது. இந்தி எதிர்ப்புப் போர் தணியவில்லை. சிறையில் நோய்வாய்ப்பட்டிருந்த பெரியாரை திடீரென விடுதலை செய்ததைக் கண்டு தமிழர்கள் ஏமாறவில்லை. கட்டாய இந்தி பாடம் அடுத்த கல்வியாண்டிலும் தொடர்ந்ததால், போராட்டமும் தொடர வேண்டியதாயிற்று.

அந்நிலையில் 1939 செப்டம்பரில் கொடுங்கோலன் இட்லர், இரண்டாவது உலகப் போரைத் தொடங்கிவிட்டான். பிரிட்டனின் பிரதமர், அம்மூர்க்கனை, சமாதானப்படுத்த, அடுத்தடுத்து முயன்றது வீணாகிவிட்டது. உலகப் போர் மூண்டதும், பிரிட்டிஷ் ஆட்சியால் இயக்கப்பட்ட இந்திய அரசு, இந்திய நாடும், இட்லருக்கு எதிராக, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நேசக் கூட்டுக்கு ஆதரவாக நிற்கும் என்று அறிவித்துவிட்டது. அப்போது பல இந்திய மாநிலங்களில், காங்கிரசு அமைச்சரவைகள் ஆட்சி நடத்தி வந்தன. இந்தியப் பொதுமக்களின் கருத்தறியாமல் தன்னிச்சையாக இந்திய அரசு பிரிட்டனுக்குப் போர் ஆதரவு அறிவித்ததை எதிர்த்து, காங்கிரசு அமைச்சரவைகள் பதவிகளை விட்டுவிடவேண்டும் என்று அனைத்திந்திய காங்கிரசு முடிவு செய்தது. அதையொட்டி, சென்னை மாகாணத்தில், இராசகோபாலாச்சாரியார் அமைச்சரவை, பதவியைத் துறந்தது. அது, நம்மைக் கட்டாய இந்தித் தொல்லையிலிருந்து விடுவித்தது. கட்டாய இந்திப் பாடத்தை எடுத்துவிட்டதாகவும் விரும்புகிறவர்கள் மட்டும் படிக்கலாமென்றும் ஆளுநர் ஆணை பிறப்பித்தார்.

### மீண்டும் இந்தி திணிப்பு

1947 ஆகஸ்ட் 15ஆம் நாள் இந்தியா விடுதலை பெற்றது. அதை பெரியார் விடுதலையாக ஏற்றுக்கொள்ளவில்லை. 'பொதுமக்களுக்குக் கெடுதலையாகவே முடியும். தாழ்த்தப்பட்டவர்களும் பார்ப்பனரல்லாதாரும் தொடர்ந்து துன்பப்பட நேரிடும்' என்பது பெரியாரின் கருத்து. 'வெள்ளிப்பூண் பூட்டிய பழைய அடிமை விலங்கு மாற்றப்பட்டு, தங்கப்பூண் பூட்டிய புது விலங்கு பூட்டப்பட்டது' என்பது பெரியாரின் முடிவு. முப்பதாண்டு தன்னாட்சி நடைமுறை அதை மெய்ப்பித்துவிட்டது.

விடுதலை பெற்ற இந்தியாவில், 1948–49ஆம் கல்வியாண்டில் இந்திய அரசின் தூண்டுதலின் பேரில், மீண்டும் இந்தி கட்டாய பாடமாக நுழைந்தது. அதே நிலை மாணாக்கர் தலையில் திணிக்கப்பட்டது. உயர்நிலைப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை எல்லா மாணாக்கரும் இந்தியைக் கட்டாயம் படிக்கவேண்டும்; போதிய . மதிப்பெண்கள் பெற

வேண்டுமென்று மாகாண காங்கிரசு ஆட்சி ஆணையிட்டது. இது ஏட்டிக்குப் போட்டியாக, பந்தயம் போட்டுக்கொண்டு, கெட்டுப் போகும் நடவடிக்கையாகும். கட்சிக் கட்டுப்பாடு என்னும் பேராலே, இந்திய அரசியலில் விளைவித்த கொடுமைகளில் ஒன்று கட்டாய இந்தி பாடம்.

கட்டாய இந்தியை எதிர்க்காமல் இருக்க முடியுமா? இருந்தால், ஏழை எளியோர் பிள்ளைகள், ஐந்தாவது வகுப்புப் படிப்போடு முடங்கிக் கிடக்க அல்லவா நேரிடும்? எனவே மீண்டும் தமிழர்கள் போர் முரசு கொட்ட நேரிட்டது. தந்தை பெரியாரின் வழி காட்டலில் திரு. சி. என். அண்ணாதுரையை 'சர்வாதிகாரி' யாகக்கொண்டு, கட்டாய இந்தி பாட எதிர்ப்புப் போர் நடத்தப் பட்டது. ஏறத்தாழ ஈராண்டு காலம் போராடி, நூற்றுக்கணக் கானவர்களை சிறையில் வாடவிட்ட பிறகு, தமிழர்கள் ஓரளவு வெற்றி கண்டார்கள். 'இந்தியை ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளியிலும் கற்றுக் கொடுக்க வேண்டும்; விரும்புகிறவர்கள் படிக்கலாம்; விரும்பாதோர், இந்தி பாட நேரத்தில், மற்றொரு பள்ளிக்கூட நடவடிக்கையில் ஈடுபடலாம்' என்று அரசின் ஆணை மாற்றப்பட்டது. ஆனாலும் ஏறத்தாழ இரண்டு ஆண்டு களில் இந்தி திணிப்பு வேறு இடங்களில் தலைகாட்டிற்று.

1952 பொதுத் தேர்தலில் மிகப் பெரிய வெற்றியை பெற்று மத்திய ஆட்சி அமைத்த காங்கிரசு, இந்தி மொழியை பரப்புவதில் முனைப்புக் காட்டியது. இரயில்வே நிலையங்கள், அஞ்சல் நிலையங்கள், மற்றும் மத்திய அரசு அலுவலகங்கள், ஆகியவற்றின் பெயர்ப் பலகைகளில் இந்திக்கு மேலிடம் தரப்பட்டது. இதற்கு எதிர்ப்பினை தெரிவிக்கும் வகையில் தமிழகமெங்கும் உள்ள பெயர்ப் பலகைகளில் இந்திப் பெயரைத் தார்கொண்டு அழிக்கும் கிளர்ச்சியினை பெரியார் மேற்கொண்டார். 1952ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் தேதி நடந்த இக் கிளர்ச்சியில் பெரியாரோடு குத்தூசி குருசாமியும் பல்லாயிரக்கணக்கான திராவிடர் கழகத் தாரும் கலந்துகொண்டனர். அடுத்த ஆண்டு, அதே நாளில் அடையாள இந்தி பெயர் அழிப்பு நடந்தது. 1954 ஆகஸ்ட் முதல் நாளும் இத்தகைய கிளர்ச்சி நடந்தது. ஒவ்வோர் ஆண்டும் பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள், அமைதியான முறையில் பங்குகொண்டார்கள்.

அடுத்து அனைத்திந்திய கல்விக் கொள்கைகள் என்னும் பேரால், இந்தியை மீண்டும் தேர்வுப் பாடமாகத் திணிக்கும் சூழ் நிலை 1955இல் உருவாயிற்று. அதைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு, 17-7-1955இல் திருச்சியில் கூடிய, திராவிடர் கழக நிர்வாகக் குழு, தேசியக் கொடியை 1-8-55இல் எரிப்பதென்று

முடிவுசெய்தது. பெரியார் அறிக்கைவிட்டார். பெரும் படை ஆயத்தமாயிற்று.

கோடி கோடி மக்கள், நெடுங்காலமாகத் தாங்கிக்கொண்டிருக்கும் கொடுமைகளைப்பற்றி, பெரியார் பேசினால், அவற்றை இருட்டடிப்புச் செய்தே நிறைவுகொண்ட செய்தித்தாள்கள், கொடி எரிப்பு அறிவிப்பை மறைக்க முடியவில்லை. அச்செய்தியை பரவலாக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. எங்கும் எவரும் இதுபற்றியே பேசவேண்டிய நிலை, பல நாட்கள் வரை நீடித்தது.

பிரதமர் ஜவகர்லால் நேருவின் கவனத்தைக் கவர்ந்தது, இச்செய்தி. பிரதமருக்குக் கோபம் கொப்பளித்தது. நேரு அப்போதைய சென்னை மாநில முதல் அமைச்சர், கர்மவீரர் காமராசரிடம் இதுபற்றி பேசினார்.

'இம் முதியவர் (பெரியார்) இப்படிச் செய்யப் பர்ர்த்துக்கொண்டிருக்கலாமா?' என்று படபடப்போடு கேட்டார்.

மலை குலைந்தாலும் நிலை குலையாத, பெருந்தலைவர் காமராசர், இந்நாட்டுச் சாதிமுறைக் கொடுமைகளை நேரில் கண்டவர்; அவற்றால் பொதுமக்கள் ஏற்கும் இழிவுகளை நேரில் உணர்ந்தவர்; வைக்கம் போராட்டத்தில் பங்குகொண்ட தொண்டர். ஆகவே, பெரியாரின் உணர்வுகளை அவரால் நன்றாகவும் புரிந்துகொள்ள முடிந்தது.

'பெரியார் ஈ. வே. ராமசாமியைப்பற்றி உங்களுக்கும் எனக்கும் முழுமையாகத் தெரியாது. உங்கள் தந்தை, மோதிலால் நேரு இருந்தால், சரியான மதிப்பீடு செய்யமுடியும். பெரியார்தான், தமிழ்நாட்டில் காங்கிரசுக் கோட்டையைக் கட்டிக் கொடுத்தவர். அனுபவிக்காமல், கோபித்துக்கொண்டு போய்விட்டார். ஏன்? இன்னமும் கோபந் தணியவில்லை என்பதை நாமே சிந்திக்க வேண்டும்' என்று ஏழைப் பங்காளர் காமராசர் பதில் சொர்ன்னார்.

அது, அனைத்திந்திய காங்கிரசின் மேலிடத்தைச் சிந்திக்க வைத்தது. பழிவாங்கும் நடவடிக்கையோ, அடக்கி ஒடுக்கும் நடவடிக்கையோ, மேற்கொள்ளாதபடி தடுத்து நிறுத்தியது. முதலமைச்சர் காமராசர், மாநில, மைய அரசுகளின் சார்பில், 'இந்தி பேசாத மக்களின் நலன்களை பாதிக்கக்கூடிய எந்த நடவடிக்கையையும் இந்திய அரசோ, மாநில அரசோ, எடுத்துக் கொள்ளமாட்டார்கள் என்று உறுதி கூறுகிறேன்' என்று அறிவித்தார்.

உடனே பெரியார் பின்வரும் அறிக்கையை வெளியிட்டார்:

'ஆகஸ்டு 1-ந் தேதி இந்திய யூனியன் கொடி கொளுத்தப்படும் என்கின்ற திராவிடர் கழக தீர்மானம் சம்பந்தமாக சென்னை

அரசாங்க முதல் மந்திரி திரு. காமராசர் அவர்களது அறிக்கையை பார்த்தேன்.

'அவ்வறிக்கையானது நான் விரும்பியபடி மத்திய அரசாங்கத்திற்கு ஆகவும், சென்னை அரசாங்கத்திற்கு ஆகவும், வெளியிடப்பட்ட அறிக்கை என்ற பொருள் தரும்படியாக விடப்பட்டிருக்கிறது.

'அதிலிருந்து தமிழ்நாட்டவர்மீது இந்தி கட்டாயமாகத் திணிக்கப் படமாட்டாது என்று அரசாங்கம் வாக்குறுதி கொடுத்து கொடியைக் கொளுத்தவேண்டாம் என்று விரும்புவதாக உணருகிறேன். ஆகவே நான், எனது தீர்மானம் அமுல் செய்யப்படாமல் இருக்க வேண்டும் என்று, சர்க்கார் விரும்பினால், எப்படிப்பட்ட வாக்குறுதி அளிக்கவேண்டுமென்று எதிர்பார்த்தேனோ அப்படிப்பட்ட வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறது.

'ஆனால் நடைமுறையில் இந்த வாக்குறுதியை அமுல் நடத்துவதில் அரசாங்கத்தாரால் இந்தி கட்டாயப்படுத்தப்படவில்லை என்பதாக மக்கள் தெளிவாகக் கருதும்படி நடந்துகொள்ளுமா அல்லது இவ்வளவு நாள் நடந்துகொண்ட மாதிரி ஒன்றுக்கொன்று (அறிக்கைக்கும் செய்கைக்கும்) சம்பந்தமில்லாத மாதிரி நடந்து கொள்ளுமா என்பதை நடைமுறையில் தெரிந்துகொள்ள வேண்டியிருப்பதால், முதல் மந்திரியாரின் விருப்பத்திற்கு ஏற்ப கொடி கொளுத்துவதை தற்காலிகமாகவே ஒத்தி வைத்து, திராவிடர் கழகத்தாரையும், மற்றும் இதில் ஈடுபட இருக்கிற பொதுமக்களையும் ஆகஸ்டு 1-ந் தேதியன்றைக்கு கொடியைக் கொளுத்தாமல் இருக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.'

கொடி எரிப்பைக் கைவிட்டார் பெரியார் ராமசாமி.

சில ஆண்டுகளுக்குப் பிறகு, அனைத்து அரசியல் கட்சிகளின் ஒப்புதலோடு நடைமுறைக்கு வந்த புதிய கல்வித் திட்டத்தில், இந்தி பாடமொழியாக இருந்தபோதிலும் கட்டாய மொழியாக இல்லை; இந்தி படிக்க விரும்பாதோர் வேறொரு மொழியைப் படிக்கலாம் என்று மாற்றுக் கதவு திறக்கப்பட்டது. மூன்றாவது மொழி, தேர்வு மொழியாக இருந்தபோதிலும் தேர்ச்சிக்கு அதில் வாங்கும் மதிப்பெண்ணைக் கவனிக்கமாட்டோம் என்று மக்கள் உணர்ச்சியை மதித்த சென்னைப் பல்கலைக்கழகம் முடிவு செய்தது.

1967இல் அறிஞர் அண்ணாதுரை தலைமையில் திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை அமைந்தது. தி.மு.க. ஆட்சியில் பொதுமக்கள்—சிறப்பாக மாணவர்கள்—விருப்பத்தையொட்டி, சென்னை சட்ட மன்றம் மூன்றாவது மொழிப் பாடத்தை உயர்நிலைப் பள்ளிகளில் கைவிட முடிவுசெய்தது.

எனவே தமிழும் ஆங்கிலமும் கற்பிக்கும் இரு மொழிப் பாடத் திட்டம் நடைமுறையில் உள்ளது.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு தேவையில்லாத நேரத்தில், தேவையில்லாத நிலை மாணாக்கருக்கு இந்தியைக் கட்டாய பாடமாக்கச் செய்த முயற்சி, வெடிக்க வைத்த இந்தி எதிர்ப்பு உணர்ச்சி, இதுவரை சூடு தணியவில்லை. இன்னும் பல்லாண்டுகளுக்குத் தணியாது.

8

# பெண்ணுரிமைப் பணி

, தந்தை பெரியார், சாதி ஏற்றத் தாழ்வுகளைத் தகர்த்து சமத்துவத்தை நிலைநாட்ட முயன்றதுபோல், பணக்காரர் ஏழைத் தன்மைகளை அழித்து சமதர்மத்தைத் தழைக்கச் செய்வதற்கு பாடுபட்டதுபோல், ஆணுக்குப் பெண் அடிமை என்னும் முறையையும் அடியோடு மாற்றி, இரு பாலாரையும் ஒரு நிலை மக்களாக வாழவைப்பதற்கு வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார். பெரியார் பொது வாழ்க்கைக்கு வந்த காலத்தில், பெண்கள் நிலை என்ன? நம் சமுதாயத்தில் பாதிப் பேர்களாகிய பெண் இனம், பன்னெடுங்காலமாக உரிமை இழந்து, கல்வி வாய்ப்புகளை இழந்து, சொத்துரிமையின்றி ஆணினத்திற்கு அடிமைப்பட்டு வாழும் முறையைப் பின்பற்றி வந்தது. இக்கொடிய முறைக்கு ஆதாரமாக சாத்திரங்கள் காட்டப்பட்டன.

### மனுவில் பெண்கள்

மனு சாத்திரம் பெண்களை இப்படி நடத்தச் சொன்னதாகக் கேள்வி:

'சிறு வயதில், பெண்கள் பெற்றோர்க்கு அடிமை. பெண்களை பூப்படைவதற்கு முன்பே திருமணஞ்செய்து கொடுத்துவிடவேண்டும். பத்து வயதுக்குள் திருமணம் நடத்திவைப்பது உத்தமம். பன்னிரண்டு வயதுக்கு மேலும் திருமணஞ் செய்யாமல் வைத்திருப்பது பாபம். திருமணமான பெண், கணவனுக்கு அடிமை. கணவனுக்குப்பின் மகன்களுக்கு அடிமை. பிள்ளையில்லாத விதவை, மறைந்த கணவனுடைய மூத்த உறவினருக்கு அடிமை. வாழ்நாள் முழுவதும் அடிமையாக வாழவே, பெண்கள் படைக்கப் பட்டிருக்கிறார்கள். அப்படி வாழ்வதின் வழியாகவே, பெண்கள் பிறவிப் பயனை அடையமுடியும்.' இவை, சாத்திரத்தின் சாரம் என கருதப்பட்ட நடைமுறையின் படப்பிடிப்பு.

### குழந்தை மணம்

முற்காலத்தில் குழந்தை மணமே இந்துக்களிடையே பரவலாக இருந்த நடைமுறை. பச்சைக் குழந்தைகள், சிட்டுக்குருவிகள்

போல் கள்ளமின்றித் திரிந்து பறந்துவரும் பறவைகள். மல்லிகை மலர்போல சிரித்துக் களிப்பூட்டும் சிறார்கள். ஓர் உயிருக்கும் இன்னோருயிருக்கும் வேற்றுமை தெரியாத பிள்ளைகள். இவர்களுக்கு விளையாட்டே உலகம். குதித்துக் குதித்துச் செல்லும் சிட்டுக்குருவியைப் பார்த்துப் புன்னகை புரிவதே வேலை.

திருமணம் என்பது, பெரியவர்கள், சிறுவனையும் சிறுமியையும் வைத்து விளையாட்டுக் காட்டுவது; பணத்திமிரைக் காட்டுவது. அய்ம்பது ஆண்டுகளுக்கு முன்புவரை, பெண் பருவம் அடையும் வரையில் திருமணத்தைத் தள்ளிப்போடுவது அரிது. பெற்றோர் மடியில் தூங்கும் வயதுக் குழந்தைகளுக்கே திருமணம் செய்து வைத்து மகிழ்வார்கள். இந்த பொம்மை விளையாட்டு மூன்று நாட்களாவது நடக்கும். கடன்பட்டாகிலும் தடபுடலாக, 'பந்து மித்திரர்களுக்கு விருந்து வைத்து அனுப்பினால்தான் திருமணம்.'

குழந்தை மணங்களை மிகப் பொறுப்போடு நடத்துவார்கள். சாதகப் பொருத்தம் பார்த்தே ஒப்புதல் அளிப்பார்கள். ஒருவருக்கு நால்வரிடம் சாதகங்களைக் காட்டி, அவர்கள் சரியென்று சொன்ன பிறகே முடிவுசெய்வார்கள். எத்தனை பொறுப்பான பெற்றோர்கள்! திருமண நாளை, நேரத்தை, வருவோர்க்கு வசதி பார்த்தா குறிப்பார்கள். இல்லை, நல்ல நாளாக, நல்லவேளையாகப் பார்த்தே திருமணம் நடக்கும். திருமண மேடையில் கடவுளைச் சாட்சிக்கு அழைப்பார்கள். முன்னதாக, நீத்தார், குலதெய்வம், அப்போது புகழடிக்கும் தெய்வம், இத்தனைக்கும் வழிபாடு செய்துவிட்டே, பக்தியோடு திருமணத்தை நடத்திவைப்பார்கள். திருமணத்தில், 'தேவமொழி'யிலேயே மந்திரங்களைப் பொழிவார்கள். இத்தனைப் பாதுகாப்புகளோடு திருமணஞ் செய்தாலும் எத்தனை விதவைகள்! அறுபதில் எழுபதில் விதவைகளானவர்களா? ஒரு வயதில், இரு வயதில் விதவைகளானவர்கள் எண்ணற்றோர்.

### குழந்தை விதவைகள்

குழந்தைகளைப் பிடித்திழுத்துத் திருமணம் என்ற ஒன்றை பல பேர் முன்னிலையில் நடத்திவிடுகிறார்கள். ஆண் குழந்தை இறந்துவிட்டால் மனைவியாகிய பெண் குழந்தை விதவையாம். இக்கொடுமையின் பரப்பைக் காணுங்கள்:

| வயது | விதவைகள் எண்ணிக்கை |
|---|---|
| 1-க்குள் | 497 |
| 1 முதல் 2 வரை | 494 |
| 2 முதல் 3 வரை | 1257 |

| வயது | விதவைகள் எண்ணிக்கை |
|---|---|
| 3 முதல் 4 வரை | 2,837 |
| 4 முதல் 5 வரை | 6,707 |
| 5 முதல் 6 வரை | 11,892 |
| 6 முதல் 10 வரை | 85,037 |
| 10 முதல் 15 வரை | 2,32,147 |
| 15 முதல் 20 வரை | 1,74,20,820 |

இவை 1921ஆம் ஆண்டின் அனைத்திந்திய குடிக் கணக்கு காட்டும் தகவல்கள்; கோரச் செய்திகள்; வேதனையால், வெட்கத்தால் தலை குனியவேண்டிய புள்ளி விவரங்கள். குழந்தை விதவைகள், அக்கால இந்தியாவின் கொடிய வடுக்கள்.

'என்ன செய்ய; அவர்கள் விதி அப்படி! அடுத்த பிறவியிலாகிலும் சுமங்கலிகளாக இருக்க கருணையங்கடல் அருள்பாலிக்கட்டும்' என்பதே நம் பதில்!

இதில் மட்டுந் தாமரை இலைத் தண்ணீர் மனப்பான்மை. இத்தீமைக்கு வழிகாண முனைப்பே ஏற்படாது. மனைவி இறந்த மறுமாதமே, பெண் தேடுவான், ஆண் பிள்ளை. ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி. இதை இருபாலாரும் ஒப்புக்கொண்டார்கள். முணுமுணுப்பின்றி, கண்ணீர் சிந்தி சிந்தி, சிறுகச் சிறுக, அணு அணுவாக நலியும் விதவைப் பெண்ணினம்.

குழந்தை மணம், முன்னர் இந்துக்களிடையே பரவியிருந்த கொடுமை. குழந்தை விதவைகள், இக்கொடுமையின் தீய விளைவுகள். இது, ஈ. வே. ராமசாமியின் குடும்பத்திலும் தலைகாட்டியது.

### குடும்பத்தில் புரட்சி

ஈ. வே. ராமசாமியின் தங்கை பொன்னுத்தாய் என்பவருக்கு ஒரு பெண் இருந்தது. அப்பெண் அம்மாயி அம்மாளுக்கு ஒன்பது வயதிலேயே திருமணம் செய்துவிட்டார்கள். மாப்பிள்ளைக்கு வயது பன்னிரெண்டு. இத்திருமணம் 1909ஆம் ஆண்டு நடைபெற்றது. திருமணமான முப்பதாம் நாள், மாப்பிள்ளையை காலரா நோய் தாக்கிற்று. அதனால் அவர் மாண்டார். ஒன்பது வயதுப் பெண் விதவையானாள்.

அவ்விதவைக் குழந்தை அலறி அழுதது.

'மாமா, நான் திருமணம் வேண்டுமென்று கேட்டேனா? என்னை ஏன் இக்கதிக்குத் தள்ளிவிட்டீர்கள்?' என்று புலம்பியது, ஈ. வே. ராமசாமியின் நெஞ்சை நெகிழ்வித்தது; புரட்சி எண்ணம் மின்னிற்று; வெளியில் யாரிடமும் சொல்லாமல் வைத்திருந்தார்.

அந்த விதவைக் குழந்தை, பூப்படைந்தது. அப்பெண்ணைத் திருமணஞ் செய்துகொள்ள, ஓர் இளைஞனை ஏற்பாடு செய்தார். யாருக்கும் தெரியாமல், தன் மைத்துனர், அப்பெண், நம்பிக்கையுள்ள ஓர் அம்மையார் ஆகிய மூவரையும் சிதம்பரத்திற்கு அனுப்பிவைத்தார். திருமணஞ் செய்துகொள்ள இசைந்த இளைஞனை அச்சகத்திற்குப் பொருள்கள் வாங்கும் சாக்கில், சென்னைக்கு அனுப்பிவைத்தார். அவர் சென்னையிலிருந்து சிதம்பரம் போய்ச் சேரவேண்டுமென்பது ஏற்பாடு. ஈ. வே. ராமசாமியோ, அப்போது, ஈரோட்டிலேயே தங்கிவிட்டார். எனவே, யாரும் எவ்வித அய்யமும் கொள்ளவில்லை.

முன்னேற்பாட்டின்படி, சிதம்பரத்தில் இருந்த, ஈ. வே. ராமசாமியின் நண்பர் இல்லத்தில் திருமணம் நடந்தது. அந்த நண்பர், அங்கு, காவல் துறை ஆய்வாளராக இருந்தார். எனவே, பல பெரிய மனிதர்கள், அத்திருமணத்திற்கு வந்தார்கள்.

மணமக்கள், ஈரோட்டுக்கு வந்தபோது, அவர்களை வரவேற்க ஈ. வே. ராமசாமி, புகைவண்டி நிலையத்திற்குச் சென்றார். ஊரில் இச்செய்தி, காட்டுத் தீபோல் பரவிற்று.

ஈ. வே. ராமசாமியின் தந்தை, 'பெரிய அவமானம்' வந்துவிட்டதாக எண்ணி, தலையில் கைவைத்து உட்கார்ந்துவிட்டார். ஈ. வே. ராவின் தாயார், சின்னத்தாய் அம்மாளோ, தூக்கில் தொங்கவே போய்விட்டார்கள். இந்நிலையில் உறவினர்கள் கூடினார்கள்; மூன்று வீட்டாரை, ஆறு ஆண்டுகளுக்கு சாதியிலிருந்து தள்ளி வைப்பதாக ஒருமனதாக முடிவு எடுத்தார்கள். உறவினர்கள் ஈ. வே. ராமசாமியின் குடும்பத்தோடு தொடர்பினை விலக்கிக் கொண்டார்கள்.

தொடர்பு மீண்டும் வந்ததா? வந்தது. எப்போது? ஈ. வே. ராமசாமி, ஈரோடு நகராட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டபோது. தேர்தல் முடிவு தெரிந்ததும் பல்வேறு சாதியாரும் ஈ.வே. ராமசாமியார் வீட்டிற்கு சீர்வரிசைகளோடு வந்து பாராட்டினர்.

ஈ. வே. ராமசாமியின் உறவினர் இரண்டொருவர், 'நம்ம சாதிக்காரர் நகராட்சித் தலைவராக உள்ளார். யார் யாரோ பாராட்டிவிட்டு வரும்போது, நாம் மட்டும் சும்மாவிருக்கலாமா?' என்று எண்ணி, ஈ. வே. ராமசாமியைப் பாராட்ட வந்தார்கள். அவர்களுக்கு, ஈ. வே. ரா. வீட்டில் காப்பி கொடுத்தார்கள்; அதை மறுக்காமல், உறவினர்கள் அருந்தினார்கள். அடுத்து பல உறவினர்களும் வந்து பாராட்டிவிட்டு, காப்பி அருந்திச் சென்றார்கள். இப்படித்தான் உறவினர் விலக்கம் ஒடிந்தது.

பழமைப் பாறையாகிவிட்ட நம் சமுதாயத்தில், இச்சிறு மாற்றத்திற்காக எத்தனை தொல்லைகளைத் தாங்க வேண்டியிருந்தது பாருங்கள். அத்தகைய தியாகத்திற்கு துணியாவிட்டால் சமுதாய மாற்றம் பெயரளவோடு நிற்குமென்பதை இளைஞர்களுக்கு நினைவூட்டல் என் கடமையாகிறது.

விதவைகள் படும் துயரத்தைத் துடைக்கப்பாடுபட்ட பெரியார், தன் உறவினராகிய விதவைப் பெண்ணுக்குத் திருமணஞ்செய்து வைத்ததை மேலே கண்டோம். குழந்தை மணத்தை எதிர்த்து, பெரியாரின் தன்மான இயக்கம், தொடக்க காலம் முதல் குரல் எழுப்பியது. குழந்தை மணம் சட்டத்தின்மூலம் தடை செய்யப்படும்வரை ஒவ்வொரு மாநாட்டிலும் குழந்தை மணத்தை எதிர்த்து தீர்மானம் போடப்பட்டது.

**பெண்ணுரிமை கோரிக்கை**

எடுத்துக்காட்டாக, செங்கற்பட்டு, முதல் சுயமரியாதை மாநாட்டில், '16 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கே மணம் செய்விக்கப்படவேண்டுமென்றும், பெண் விதவைகளுக்கு மறுமண உரிமை தேவையென்றும், பெண்களுக்கு மணவிலக்கு உரிமை வேண்டுமென்றும்' செய்யப்பட்ட முடிவு அக் காலகட்டத்தில் புரட்சிகரமானது ஆகும்.

'பெண்களுக்கு ஆண்களைப்போலவே சமமாக, சொத்துரிமைகளும் வாரிசு பாத்தியதைகளும் கொடுக்கப்பட வேண்டுமென்றும், பெண்களும் ஆண்களைப்போலவே, எந்தத் தொழிலையும் நடத்திவருவதற்கு அவர்களுக்கு சம உரிமையும் வாய்ப்பும் கொடுக்கப்படவேண்டுமென்றும்,

'பள்ளிக்கூட ஆசிரியர்கள் வேலையில் பெண்களே அதிகமாக நியமிக்கப்படுவதற்கு தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், தொடக்கக் கல்வி கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் வேலைக்குப் பெண்களையே நியமிக்க வேண்டுமென்றும்' முடிவு செய்யப்பட்டது.

10–5–1930இல் ஈரோடு சுயமரியாதை பொது மாநாட்டில், 'ஆண்களைப் போன்று, பெண்களுக்கும் சொத்து உரிமை, வாரிசு உரிமை ஆகியவைகளில் சம உரிமை இருக்கவேண்டுமென்றும் எந்தத் தொழிலிலும் ஈடுபடவும் அதைக் கையாளவும் சம உரிமை இருக்க வேண்டுமென்றும் குறிப்பாக தொடக்கக் கல்வி ஆசிரியர்களாக அவர்களை அதிகமாக நியமிக்கவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

பொது மாநாட்டை ஒட்டி நடந்த மாதர் மாநாட்டிலும், 'சொத்தில் உரிமை பாத்தியம், குழந்தைகளுக்குக் கார்டியன்

பாத்தியம், தத்து எடுத்துக்கொள்ளல், இவைகளில் ஆண் பெண் இரு பாலாருக்கும் முழு சம உரிமை இருக்கவேண்டுமென்றும் முடிவு எடுத்தார்கள்.

ஈரோடு சுயமரியாதை மகாநாட்டிற்குத் தலைமை தாங்கிய திரு. M. R. ஜெயக்கர் "திரு. ஈ. வே. ராமசாமியார் சட்டசபைகளைப்பற்றியோ அரசாங்கத்தைப்பற்றியோ கவலை கொள்ளாதவர். அவர் ஏழைகளுக்குத் தொண்டு செய்வதே தம் பிறவியின் பயன் என்று கருதி இருப்பவர். அவர் உங்கள் (சுயமரியாதை) இயக்கத்தில் இருக்கின்றார்.

'உங்களுடைய இயக்கத்தில் ரோமன் கத்தோலிக்கக் கிறுத்தவர்களும் முகமதியர்களும் சேர்ந்திருப்பது சிறப்பாகும். மதத் தலைவர்களும் காங்கிரஸ் தலைவர்களும் செய்யமுடியாத காரியத்தை நீங்கள் செய்திருக்கிறீர்கள்' என்று பாராட்டினார்.

விருதுநகர் மாநாட்டிலும் இதே சம உரிமை கோரி, பொது மாநாடு முடிவுசெய்தது. விருதுநகரிலும் பெண்கள் சுயமரியாதை மாநாடு நடந்தது. மாதர்களும் பெண்களுக்கு ஆண்களைப்போல் சொத்துரிமையில் சமத்துவமளிக்கவேண்டும் என்று முடிவு செய்தார்கள்.

இம்மாதர் மாநாட்டில், 'வர்ணம் அல்லது சாதி ஆஸ்டல்கள் இருந்து வரும் வழக்கத்தை ஆட்சேபிப்பதுடன் அத்தகையவைகள் உள்ள பள்ளிக்கூடங்களுக்கு கிராண்டு முதலானவைகள் கொடுப்பதை மறுக்க வேண்டுமென்று கல்வி அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளுகிறது' என்று முடிவு செய்ததை நினைவில் கொள்வோமாக.

'ஆண்களும் பெண்களும் சாதி பேதமின்றி தங்கள் தங்கள் மனைவி கணவர்களை தேர்ந்தெடுத்துக்கொள்ள முழு உரிமை அளிக்கப்படவேண்டுமென்றும்,

'அதற்கேற்றவாறு திருமணச் சடங்குகள் திருத்தப்படவேண்டுமென்றும், திருமணச் சடங்குகள் சொற்ப பணச் செலவில் நடத்தப்பட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டன.'

### தேவதாசி முறை

இவற்றோடு நின்றதா பெண்களுக்கு இழைத்த அநீதி? இல்லை. விலைமாதர், சமதர்ம நாடுகளுக்கு அப்பால் காணும் கொடுமை; நெடுங்காலமாக வரும் கொடுமை. எந்த நாட்டிலும் இக்கொடுமை சமயத்தோடு தொடர்புபடுத்தப்படவில்லை. எந்த நாட்டுக் கடவுள்களும் தங்களுக்குப் பணிபுரிய என்று, பெண்கள் அணியைத்

தேடவில்லை. இந்தியாவிலும் பிற சமயங்களில் இல்லாத அநீதி, கேவலம், அநாகரீகம், இந்து சமயத்தின்பேரால், இந்து வாழ்க்கை முறையின் இன்றியமையாத பகுதியாக, இருந்து வந்தது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, ஒழுக்கத்தில் நாட்டமுடையவர்கள், காறி உமிழ்ந்து, போராடி ஒழித்திருக்கவேண்டிய இந்து 'பேடண்ட்' முறைக்குப் பெயர், பொட்டுக் கட்டுதல். அப்படியென்றால்?

புத்தி தெரியாப் பருவத்தே, சிறுமி ஒருத்தியை உள்ளூர் அல்லது பக்கத்து ஊர் கோயிலுக்கு 'அடியாளாக'ப் பொட்டுக் கட்டி விடுவது. சாமிக்குப் பொட்டுக் கட்டிவிடப்பட்ட அவள், பின்னர் யாரையும் திருமணஞ் செய்துகொள்ளக்கூடாது. கோயில் பணி விடைகளில் ஈடுபடவேண்டும். இசை, நாட்டியம் முதலியவை களைக் கற்று, கோயில் திருவிழாக் காலங்களில் பாடியும் ஆடியும் ஆண்டவன் தொண்டைச் செய்யவேண்டும். அதனால் சாமி மகிழ்ந்ததாக, மானுடன் எவனுக்கும் தகவல் இல்லை.

ஆனால் ஆசாமிகள் மகிழ்ந்ததாகக் கேள்வி. பாடியவள் வீட்டுக்கு, ஆடியவள் வீட்டுக்குப் போவதில், பெரும் பண்ணையா ருக்கும் சின்ன பண்ணையாருக்கும் போட்டி மூண்டது தெரியும். துணிக் கடைக்காரர்களுக்கும் நகைக் கடைக்காரர்களுக்கும் போட்டி பெருகியதை அறிவோம். இப்போட்டிகள், அவர்களுக் குள் தீராத பகையானதோடு நிற்காமல், உள்ளாட்சி அரசியல் சண்டைகளுக்கும் குழப்பங்களுக்கும் கவிழ்ப்புகளுக்கும் காரணமா யிருந்தது ஏராளம்.

தேவர்க்கு அடியார்களாகப் பொட்டுக் கட்டிவிடப்பட்ட பரிதாபத்திற்குரியவர்கள் யார்? ஆயிரம் சாதிகள் கொண்ட நம் சமுதாயத்தில், சாதிக்கு ஐந்து பேர்களையோ பத்துக் கன்னி களையோ, இப்படிக் காணிக்கை ஆக்கிவிட்டார்களா? இல்லை. இந்த அவமானத்திற்கு, இழிவிற்கு, கொடுமைக்கு, உட்பட வேண்டிய சாதி, தனியாக ஒன்று இருந்தது. நாட்டிலுள்ள கயவர் களுக்கெல்லாம் போக்கிடமாக வேண்டிய மாதர்கள், தனிச்சாதி யைச் சேர்ந்தவர்கள். இம்முறைப்படி, ஒவ்வோர் கோயிலுக்கும் சில பல பொட்டு கட்டிய, அதாவது, பொது மகளிர் இருந்தார்கள். இந்த இழிவைப்பற்றி எந்த ஒழுக்கசீலனும் பொங்கி எழவில்லை. எந்த மகானும் 'வேண்டுதல் வேண்டாமை இலாத நிர்மலனோடு இந்த அசிங்கத்தை இணைக்காதே' என்று அருளுரை வழங்க வில்லை. போராட்டம் நடத்தவில்லை. ஏன்? நம் ஆண்கள் யோக்கி யதை அவ்வளவு கெட்டுக்கிடந்ததுபோலும்! இப்போதைக்கில்லா விட்டால், எப்போதைக்காகிலும் பயன்படாதா என்று எண்ணி னார்களோ என்னவோ? சமய முத்திரையோடு புனிதத் தன்மை என்னும் வெண்குடையின்கீழ், பட்டிமாட்டு ஆண்களின் கொழுப்

பிற்காக, நாடு தழுவிய தேவதாசி முறை கொடிகட்டிப் பறந்தது.

மேற்கூறிய தேவதாசி முறையை ஒழிப்பதற்காகச் சட்டம் செய்ய வேண்டுமென்று, திருமதி டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் சென்னை மாகாண சட்டமன்றத்திற்கு மசோதா ஒன்றை அனுப்பி வைத்தார். அம் மசோதாபற்றி கருத்து தெரிவிக்குமாறு மாகாண அரசு பலரைக் கேட்டது. ஈ. வே. ராமசாமியையும் கேட்டது.

ஈ. வே. ரா. விரிவாகக் கருத்து தெரிவித்தார். அதில் தேவதாசி முறையை ஒழிப்பதற்கு 1868ஆம் ஆண்டு முதல் எடுக்கப்பட்ட முயற்சிகளைச் சுட்டிக்காட்டினார். 1906, 1907ஆம் ஆண்டுகளில் பல மாகாண அரசுகளும் இக்கொடுமையை ஒழிக்க முடிவெடுத்துக் காட்டியதைக் கோடிட்டுக் காட்டினார். 1912ஆம் ஆண்டு இந்திய சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் மாணிக்ஜி தாதாபாய், முதோல்கர், மேட்கித் ஆகியோர் இத்தகைய மசோதாவைக் கொண்டுவந்ததை நினைவுபடுத்தினார். இதைப் பொதுமக்கள் ஆதரித்ததால், இந்திய அரசே 1913ஆம் ஆண்டு செப்டம்பரில் ஒரு மசோதா கொண்டுவந்ததைக் குறிப்பிட்டுக் காட்டிய, ஈ. வே. ரா. அதற்கு பொதுவாக ஆதரவு இருந்தபோதிலும் சில சில்லறை விஷயங்கள்பற்றிய கருத்து வேறுபாடுகளால் தடைப்பட்டது என்று நினைவூட்டினார். மீண்டும் 1922ஆம் ஆண்டு டாக்டர் கோர் கொண்டுவந்த மசோதா 1924ஆம் ஆண்டு சட்டமாக்கப்பட்ட வரலாற்றை நினைவுபடுத்தினார்.

தேவதாசி ஒழிப்பு முயற்சியின் வரலாற்றைப் படம் பிடித்துக் காட்டிவிட்டு, 'இந்த நாள்பட்ட கொடிய சமூகக் கொடுமையை ஒழிக்க யாருக்கும் ஆட்சேபமோ எதிர் அபிப்பிராயமோ இருக்க முடியாது. தேவதாசி என்ற ஒரு வகுப்பு இருப்பது இந்து சமூகத்திற்கே இழிவானதும் அல்லாமல் இந்து மதத்திற்கே பெரும் பழியாகும். ஒரு தனிப்பட்ட பெண்ணுக்கு ஏற்படும் இழிவு பெண்ணுலகத்திற்கே ஏற்பட்டதாகுமாகையால், இவ்வழக்கம் பெண்களின் அந்தஸ்தையும் கவுரவத்தையும் பெரிதும் பாதிக்கக்கூடியதாய் இருக்கின்றது. அன்றியும் ஒரு குறிப்பிட்ட சாதியையோ சமூகத்தையோ விபசாரத்திற்கு அனுமதி கொடுப்பதும் பின்னர் அவர்களை இழிந்த சமூகமாகக் கருதுவதும் பெரும் சமூகக் கொடுமையாகும். சிறு குழந்தைகளில் இருந்து துராச்சார வழிகளில் பயிற்றுவிப்பது ஜன சமூக விதிகளையே மீறியதாகும்' என்று அழுத்தந்திருத்தமாகக் கருத்தினைத் தெரிவித்து, பொட்டுக் கட்டுவதைத் தடுக்கும் சட்டத்திற்கு நாடறிய ஆதரவு கொடுத்தார்.

மேலும், கோவில்களில் கடவுள்கள் பெயரால், பெண்களுக்குப் பொட்டுக் கட்டி அவர்களையே பொது மகளிர்களாக்கி, நாட்டில்

விபசாரித்தனத்திற்குச் செல்வாக்கும் மதிப்பும் சமய சமூக முக்கிய ஸ்தானங்களில் தாராளமாய் இடமும் அளித்துவரும் ஒரு கெட்ட வழக்கம், நமது நாட்டில் வெகு காலமாய் இருந்து வருகின்றது. அன்றியும் நாளாவட்டத்தில் இது ஒரு வகுப்பிற்கே உரியது என்ப தாகி, இயற்கையுடன் கலந்த ஒரு தள்ளமுடியாத கெடுதியாய் இந்த நாட்டில் நிலைபெற்றும் விட்டது. ஒரு நாட்டில் நாகரீகமுள்ள அரசாங்கமாவது அல்லது நாட்டின் சுயமரியாதையையோ, குடிமக்க ளின் ஒழுக்கத்தையோ நலத்தையோ கோரின அரசாங்கமாகவாவது ஒன்றிருந்தால் இந்த இழிவான கெட்ட பழக்கம் கடவுள் பேராலும், மதத்தின் பேராலும், சமூகத்தின் பேராலும், தேசிய வழக்கத்தின் பேராலும் இருந்துவர ஒரு கணநேரமும் விட்டுக்கொண்டு வந்திருக் காது என்றே சொல்வோம்' என்று சாடினார்.

திருமதி டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் கொண்டுவந்த மசோதா, வைதிகர்களின் சலசலப்பைப் பொருட்படுத்தாது, சட்ட மாக்கப்பட்டது. அது செயல் முறைக்கும் வந்தது. அதன் விளை வாக, இந்த அவமானம் ஒழிந்ததோடு, அநீதிக்கு ஆளான அச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள், இழிவிலிருந்து விடுபட்டு, கல்வி கற்று, மற்ற சமூகங்களைப்போன்ற நிலைக்கும் மதிப்பிற்கும் வளர்ந்து வந்துவிட்டார்கள்.

## ஆண் பெண் ஏற்றத்தாழ்வு

சாதி ஏற்றத்தாழ்வைவிட ஆழமாகவும் அகலமாகவும் பரவி யிருப்பது ஆண் பெண் ஏற்றத்தாழ்வாகும். இருவகை ஏற்றத் தாழ்வும் விரைந்து ஒழிக்கப்படவேண்டும். சாதி ஏற்றத்தாழ்வை ஒழிப்பது காட்டாற்றில் எதிர்நீச்சல் போடுவதுபோலாகும். ஆண் பெண் சமத்துவத்தை அடைவது, நெருப்பாற்றில் எதிர்நீச்சல் போடுவதற்கு ஒப்பாகும். எனவே, இதுபற்றி பெரியாரின் கருத்து களைப் படிப்போம், சிந்திப்போம், கற்றபடி நிற்போமாக.

பெரியார், பெண்ணின், பெருமைபற்றி 'பெண்கள் மனித சமுதா யத்தில் சரி பகுதி எண்ணிக்கைகொண்டவர்கள். இரண்டொரு உறுப்பில் மாற்றம் அல்லாமல், மற்றபடி பெண்கள் மனித சமுதாயத்தில் ஆண்களுக்கு முழு ஒப்பும் உவமையும் கொண்ட வர்கள் ஆவார்கள் என்பேன். அவர்களால் வீட்டிற்கு, சமுதாயத் திற்குப் பயன் என்ன? எங்கே கெட்டபேர் வந்துவிடுகிறதோ என்பதுதானே? இன்று பெண்கள் வேலை என்ன? ஓர் ஆணுக்கு ஒரு பெண்ணாய் அமைவது. அது எதற்கு? ஆணின் நலத்திற்குப் பயன்படுவதற்கும், ஆணின் திருப்திக்கும், ஆணின் பெருமைக்கும் பெண் ஓர் உபகருவி என்பதல்லாமல் வேறு என்ன? ஓர் ஆணுக்கு

ஒரு சமையல்காரி, ஓர் ஆணின் வீட்டிற்கு ஒரு வீட்டுக்காரி, ஓர் ஆணின் குடும்பப் பெருக்குக்கு ஒரு பிள்ளை விளைவிக்கும் பண்ணை. ஓர் ஆணின் கண் அழகிற்கும் மனப்புளகாங்கிதத்திற்கும் ஓர் அழகிய அலங்கரிக்கப்பட்ட பொம்மை என்பதல்லாமல், பெண்கள் பெரிதும் எதற்குப் பயன்படுகிறார்கள், பயன்படுத்தப்படுகிறார்கள்?' என்று கேட்டு, நம் சிந்தனையைத் தூண்டிவிட்டார்.

'கற்பு என்பதை சுகாதாரத்தையும் சரீரத்தையும் பொது ஒழுக்கத்தையும் பொறுத்து நான் ஆதரிக்கிறேன். என்றாலும் இன்று அந்த முறையில் கற்பு கையாளப்படுவதில்லை. கற்பு ஆண்களுக்கு வலியுறுத்தப்படுவதில்லை என்பதிலிருந்தே இதை உணர்ந்துகொள்ளலாம்.

'பெண்களுக்குத்தான் கற்பு, ஆண்களுக்கு வலியுறுத்தக்கூடாது என்கிற தத்துவமே தனியுடமைத் தத்துவத்தைப் பொறுத்தது' என்று சுட்டிக் காட்டினார்.

### பெண் விடுதலை

பெண் ஆணுடைய சொத்து என்பதுதான் இன்றைய மனைவி என்பவர்களின் நிலை. ஆதலால், 'ஒரு பிறவிக்கு ஒரு நீதி' என்கிற கற்புமுறை ஒழிக்கப்படவேண்டும். ஆண்கள் திருந்த வேண்டின் இத்தகைய அதிர்ச்சி மருத்துவம் தேவை.

பெண்கள் விடுதலைபற்றி பெரியார் ஒளிவு மறைவின்றி பேசியும் எழுதியும் வந்தார். 'பெண்களுக்கு மதிப்பு கொடுப்பதாகவும் பெண்கள் விடுதலைக்காக பாடுபடுவதாகவும் ஆண்கள் காட்டிக் கொள்வதெல்லாம் பெண்களை ஏமாற்றுவதற்குச் செய்யும் சூழ்ச்சியே ஒழிய வேறல்ல. எங்காவது பூனைகளால் எலிக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது நரிகளால் ஆடு கோழிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது முதலாளிகளால் தொழிலாளிக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது வெள்ளைக்காரர்களால் இந்தியர்களுக்குச் செல்வம் பெருகுமா? எங்காவது பார்ப்பனர்களால் பார்ப்பனரல்லாதவர்களுக்குச் சமத்துவம் கிடைக்குமா? என்பதை யோசித்தால், இதன் உண்மை விளங்கும். அப்படி ஒருகால் ஏதாவது ஒரு சமயம் மேற்படி விஷயங்களில் விடுதலை உண்டாகிவிட்டாலும்கூட, ஆண்களால் பெண்களுக்கு விடுதலை கிடைக்கவே கிடைக்காது, என்பதை மாத்திரம் உறுதியாய் நம்பலாம்' என்று பெரியார் முழங்கினார். இது கசப்பாயிருப்பினும் உண்மைதானே. உரிமை, பரிசுப் பொருள் அல்லவே!

ஆண்கள் பெண்களை நடத்தும் முறைபற்றி 'பெண் மக்களை இன்று ஆண்கள் நடத்தும் மாதிரியானது, மேல்சாதிக்காரன் கீழ்சாதிக்காரனை நடத்துவதைவிட, பணக்காரன் ஏழையை நடத்துவதைவிட, எசமான் அடிமையை நடத்துவதைவிட மோச மானதாகும். ஆண்கள் பெண்களை பிறவிமுதல் சாகும்வரை அடிமையாயும் கொடுமையாயும் நடத்துகின்றார்கள்' என்று பெரியார் படம் பிடித்துக்காட்டி 'தனி உரிமை உலகில், பெண்கள் உரிமை வேண்டுமென்பவர்கள், பெண்களை நன்றாய்ப் படிக்க வைக்கவேண்டும். தங்கள் ஆண் பிள்ளைகளை இலட்சியம் செய்யாமல், பெண்களுக்கே செலவு செய்து படிக்கவைக்க வேண்டும். வாழ்க்கைக்கு ஏதாவது ஒரு தொழில் கற்றுக்கொடுக்க வேண்டும்' என்று அறிவுறுத்தினார்.

மேலும் அவர் கூறுவதாவது: 'இது என்ன நியாயம்? மனித சமுதாயம் தவிர மற்றபடி மிருகம், பட்சி, பூச்சி முதலியவைகளில் வேறு எந்த உயிராவது, "ஆண்களுக்காகவே இருக்கிறோம் நாம்" என்ற கருத்துடன், நடத்தையுடன் இருக்கிறதா?

'இந்த இழிநிலை பெண்களுக்கு அவமானமாய்த் தோன்ற வில்லை என்பதற்காகவே, ஆண்கள் பெண்களை இவ்வளவு அட்டூழியமாக நடத்தலாமா என்று கேட்கிறேன். ஓர் ஆண் ஒரு பெண்ணைத் தனது சொத்து என்று எண்ணுகிறானே—எதனால்? துணியாலும் நகையாலும்தானே!

'நான் பாமர மக்களை மாத்திரம் சொல்லவில்லை. நம் அறிஞர், செல்வர், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர் ஆனவர்கள் என்று சொல்லப்படும் பெரியார்களின் யோக்கியதைகளையும், அவர்கள் பெண்கள் உலகத்துக்கு ஆற்றும் தொண்டுகளைப் பற்றியுமே சொல்லுகிறேன்.

'திராவிடப் பேரறிஞர்களின் மனைவிகள், தங்கை, தமக்கைகள், பெண்கள் எப்படிப் பிறந்தார்கள்? எப்படி வளர்ந்தார்கள்? எப்படித் தகுதி ஆக்கினார்கள்? எப்படி இருக்கிறார்கள்? நகைக் கடைகள், துணிக்கடைகள், ஆகியவற்றில் விளம்பரத்திற்கு வைத் திருக்கும் அழகிய பொம்மைகள் உருவங்கள்போலல்லாமல்—நாட் டுக்கு மனித சமுதாயத்திற்கு பெண்கள் உலகத்திற்கு இவர்கள் என்ன மாதிரியில் தொண்டாற்ற அல்லது தாங்களாவது ஒரு புகழோ, கீர்த்தியோ பெறத்தக்கபடி வைத்தார்களா? இவர்களே இப்படி இருந்தால்—மற்ற பாமர மக்கள், தங்கப்பெட்டியின் உள்ளே, வெல்வெட் மெத்தைபோட்டுப் பூட்டித்தானே வைப்பார்கள்!

'நம் பெண்கள் நகைகள் மாட்டும் ஸ்டாண்டா? இந்தப் பிரபல ஆண்கள் பிறந்த வயிற்றில்தான் இவர்கள் தங்கை, தமக்கையர்

பிறந்தார்கள். இவர்கள் தகப்பன்மார்கள்தான்—அவர்களுக்கும் தகப்பன்மார்கள். அப்படி இருக்க, இவர்களுக்கு இருக்கும் புத்தி, திறமை அவர்களுக்கு ஏன் இல்லாமல் போகும்? இதைப் பயன் படுத்தாதது நாட்டுக்கு, சமூகத்திற்கு நட்டமா இல்லையா?

'நகைக்கும் துணிக்கும் போடும் பணத்தை பாங்கியில் போட்டு குறைந்த வட்டியாவது வாங்கி, குழந்தை பிறந்தவுடன் அதை எடுக்க, அந்த வட்டியில் ஓர் ஆள் வைத்தாவது அதைப் பார்த்துக் கொள்ளச் செய்தால், அன்பு குறைந்துவிடுமா? பெற்ற தகப்பன் குழந்தையைத் தன்னுடன் வைத்துத்தானா அழகு பார்க்கிறான்? அன்பு காட்டுகிறான்? கொஞ்சி விளையாடுகின்றான். ஆகையால், குழந்தையை ஆட்கள் மூலம் வளர்க்கவேண்டும். சமையல் ஆட்கள் மூலம் செய்விக்கவேண்டும். பெண்கள் ஆண்களைப்போல் உயர் வேலை பார்க்கவேண்டும். பொம்மைகளாக நகை மாட்டும் ஸ்டாண்டுகளாகக் கூடாது என்கிறேன்.

'ஆண்கள் பார்க்கும் எல்லா வேலைகளையும் தொண்டுகளையும் பெண்கள் பார்த்துச் செய்யமுடியும் என்பேன். ஆனால் நகைப் பித்து, துணி அலங்காரப் பித்து, அணிந்துகொண்டு சாயல் நடை நடக்கும் அடிமை, இழிவு, சுயமரியாதை அற்ற தன்மைப் பித்து ஒழியவேண்டும்.' இப்படிப் பெரியார் பெண்கள் விடுதலைக்கு வழிகாட்டினார்.

ஒருவருக்கோ ஒரு கூட்டத்துக்கோ விடுதலை கொடுக்கிறோம் என்றால் அவரையோ அக்கூட்டத்தையோ அதற்குத் தகுதியாக்கு தல் முதற்கடமையாகிறது. பாரதிதாசன் கேட்டதுபோல் 'கண் திறக்காதபோது, விடுதலை வாழ்வின் கதவு திறந்தால் பயன் ஏது?'

களைய வேண்டியவற்றைச் சுட்டிக்காட்டிய பெரியார், வளர்க்கவேண்டியவற்றைக் கோடிட்டுக்காட்டத் தவறவில்லை. இதோ பெரியார் உரை:

'ஒன்று, இரண்டு, மூன்றுகூட எண்ணத்தெரியாத நிலையில் உள்ள பெண்களைக் கட்டிக்கொண்டு, அவர்களுக்குச் சுதந்திரம் கொடுப்பது என்றால் எப்படி முடியும் என்று யோசித்துப் பாருங்கள்.

## பெண் கல்வி

'தனி உரிமை உலகில் பெண்களுக்கு சுதந்திரம் வேண்டுமென்ப வர்கள், பெண்களை நன்றாய்ப் படிக்கவைக்கவேண்டும். தங்கள் ஆண் பிள்ளைகளை இலட்சியம் செய்யாமல், பெண்களுக்கே செலவு

செய்து படிக்கவைக்கவேண்டும். வாழ்க்கைக்கு ஏதாவது ஒரு தொழில் கற்றுக்கொடுக்கவேண்டும். தாய் தகப்பன்மார் பார்த்து ஒருவனுக்குப் பிடித்துக்கொடுப்பது என்று இல்லாமல் அது வாகவே—பெண்ணாகவே பார்த்து, தகுந்த வயதும் தொழிலும் ஏற்பட்ட பிறகு—ஒருவனைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும்படி செய்யவேண்டும். சுருக்கமாகச் சொன்னால், கன்னிகாதானம், கலியாணம்—தாரா முகூர்த்தம் என்கிற வார்த்தைகளே மறைந்து—அகராதியில்கூட இல்லாமல் ஒழியவேண்டும். அன்றுதான் பெண்கள் சுதந்திரம் அனுபவிக்க இலாயக்குள்ளவர்கள் ஆவார்கள்.' இப்படிப் பெரியார் கூறும்போது பலருக்குக் குமட்டும்; முகம் சுழிக்கும். இருப்பினும் சிந்தித்துப் பாருங்கள்.

பெண்கள் பொம்மைகளா? விளையாட்டுப் பொருள்களா? நகை தாங்கிகளா? பெண்களைத் தானப் பொருள்களாகக் கருதலாமா? அடிமை வயிற்றில் பிறந்த குழந்தைகளுக்கு அடிமைக் குணம்தானே வரும். உரிமை மக்களின் பிறப்பிடம், உரிமை உணர்வுடைய பெண்களே.

பிறருக்கு உபதேசித்தபடி நடந்துகாட்டுவதில் பெரியார் ஈடு இணையற்றவர். பெண்கள் குடும்ப வாழ்க்கையோடு முடங்கிக் கிடக்காமல் நாட்டின், சமுதாயத்தின் பொது வாழ்க்கையிலும் பங்குகொள்ளவேண்டும் என்பது அவரது குறிக்கோள். அதற் கேற்றபடி தன் மனைவி நாகம்மாளும் தங்கை கண்ணம்மாளும் ஏறத்தாழ அறுபது ஆண்டுகளுக்கு முன்னரே பொது வாழ்க்கையில் மட்டுமல்லாது பொதுக் கிளர்ச்சிகளிலும் ஈடுபட ஊக்குவித்தார். இவ்விருவரும் ஈரோடு கள்ளுக்கடை மறியலில் பங்குகொண்ட தையும், வைக்கம் போராட்டத்தில் கலந்துகொண்டதையும் இரண்டிலும் வெற்றி பெற்றதையும் முன்னரே கண்டோம்.

மேலும் திருமதி நாகம்மையார் தம் வாழ்நாள் முழுவதுமே சுயமரியாதை இயக்க மாநாடுகளில் கலந்துகொண்டு, தமிழ் பெண் களுக்கு வழிகாட்டினார். தன்மான இயக்கத்தைத் தாயாக விளங்கி ஆதரித்து வளர்த்தவர், திருமதி நாகம்மையார் என்பது மிகை யன்று. சுயமரியாதை இயக்கத்தின் தொடக்கக் காலத்தில், முன்னணித் தோழர்கள் தங்கள் குடும்பத்தோடு மாநாடுகளில் கலந்துகொள்வது மரபாயிருந்தது.

திருமதி நாகம்மையார் பெரியார் ராமசாமிக்கு எல்லா வகையா லும் வாழ்க்கைத் துணையாக இருந்தார். 1929இல் அவரோடு மலேயா நாட்டில் சுற்றுப்பயணம் செய்தார்.

9

# அயல்நாட்டுப் பயணங்கள்

**ஈ. வே.** ராமசாமிக்கு, மக்களைக் காண்பதில், அவர்களோடு கலந்துரையாடுவதில், அவர்களை அவர்களுடைய அன்றாட சூழ்நிலையில் காண்பதில் தணியாத ஆர்வம் உண்டு. அது, இருமுறை மலேயப் பயணமாக உருவாகியது. ஒருமுறை அய்ரோப்பியப் பயணமாகியது. ஒருமுறை பர்மியப் பயணமாகப் பரிணமித்தது. மும்முறை வட இந்தியப் பயணமாக விரிந்தது.

**மலேயாவில் பெரியார்**

ஈ. வே. ராமசாமி, அவர் மனைவி நாகம்மையார், தோழர் எஸ். ராமனாதன், அ. பொன்னம்பலனார், சாமி சிதம்பரனார், சி. நடராசன் ஆகியோர் 15–12–1929இல் நாகையிலிருந்து மலேயாவிற்குக் கப்பலேறினர். அதற்குரிய ஏற்பாடுகளைக் கவனிக்க, நாகை காளியப்பன் முன்னரே சென்றிருந்தார். அந் நாட்டில் சில வாரங்கள் பயணஞ் செய்தபின், தாய்நாடு திரும்பி னார்.

மலேயா சுற்றுப்பயணத்தைப்பற்றி 22–12–1929 முதல் 'குடி அர'சில் செய்திகள் வெளிவந்தன. இதுபற்றிய முதல் செய்தியின் தலைப்பில், 'ராமசாமிப் பெரியார் வருகை' என்று குறிக்கப் பட்டிருக்கிறது. செய்திக்குள் இரு இடங்களில் ராமசாமிப் பெரியார் என்று எழுதப்பட்டுள்ளது. அது முதல், ஈ. வே. ரா. என்று அழைக்காமல், ஈ. வே. ராமசாமிப் பெரியார் என்றே பொது மக்கள் அழைக்கத் தலைப்பட்டார்கள்.

தமிழர் தலைவர், ஈ. வே. ராமசாமி, மலேயா நாட்டுத் தமிழர் களின் அழைப்பின் பேரிலேயே அந்நாட்டுக்குச் சென்றார். எதற் காக அழைத்தார்கள்? மலேயா நாட்டில் ஈப்போ நகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தமிழர் சீர்திருத்த சங்க மாநாட்டைத் திறந்து வைப்பதற்காக, ஈ. வே. ராவை அழைத்தார்கள். அதையொட்டி அந்நாடு முழுவதும் சுற்றுப்பயணஞ் செய்வதற்கும் ஏற்பாடு செய் தார்கள்.

அதே நேரத்தில் மலேயாவில் மதத்தின் பேரால் பிழைத்து வந்த சிலர் திகில் அடைந்தார்கள். தங்கள் பிழைப்பில் மண் விழுந்து

விடுமோ என்று கலங்கினார்கள். ஈ. வே. ராமசாமி மலேயாவிற்கு வராமல் தடுக்கும் முயற்சியில் இறங்கினார்கள். என்ன செய்தார்கள்?

'ராமசாமியும் அவர்கள் தோழர்களும் பெரிய புரட்சிக்காரர்கள்; காங்கிரசுக்காரர்கள்; பொதுமக்களைக் கலகம்பண்ணும்படி தூண்டுகிறவர்கள்; அவர்கள் இங்கு வந்தால், அரசாங்கத்திற்கு ஆபத்து. பொதுமக்களிடையே குழப்பம் உண்டாகும். ஆதலால் அவர்களை இந்நாட்டில் இறங்கவிடக்கூடாது. கப்பலில் இருந்தபடியே திருப்பி அனுப்பிவிடவேண்டும்' என்று மலேயா அரசிடம் முறையிட்டார்கள். முறையீடு பலித்ததா? இல்லை. ஆயினும் இக்கூட்டத்தார் சும்மா விடவில்லை.

'தேசத் துரோகிகள் வருகின்றார்கள்; நாத்திகர்கள் வருகின்றார்கள். அவர்களை ஒருவரும் வரவேற்கக்கூடாது. தமிழ் மக்கள் அவர்களுடைய கூட்டங்களுக்குப் போகக்கூடாது. அவர்கள் சொற்பொழிவுகளைக் கேட்கக்கூடாது' என்று நாடு முழுவதும் விளம்பரம் செய்தார்கள். நேர்மாறான பலன் விளைந்தது. இக் காரணத்தால் ஈ. வே. ராவையும் அவருடைய தோழர்களையும் வரவேற்க எண்ணற்ற மக்கள் கூடினார்கள். பினாங்கு துறைமுகத்தில் அய்ம்பதாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கூடி, ராமசாமிப் பெரியாரை வரவேற்றார்கள். இந்துக்கள், இஸ்லாமியர்கள் அனைவரும்கூடி ஏராளமான மாலைகள் சூட்டி, வரவேற்பு இதழ்கள் படித்துக்கொடுத்து, வரவேற்றார்கள். அதுவரை எந்த இந்தியத் தலைவருக்கும் அத்தகைய வரவேற்பு நடைபெற்றதில்லை என்று பினாங்கில் வெளியான எல்லா செய்தித் தாள்களும் குறிப்பிட்டுப் பாராட்டின.

மலேயாவாழ் பாமர மக்கள் பலர் அறியாமையால் ஈ. வே. ராவின் பாதத்தில் விழுந்து வணங்கினர். அவர் நடந்துசென்ற அடிச் சுவட்டை கண்களில் ஒத்திக்கொண்டவர்கள் பலராவர். மனிதர் காலை மனிதர் தொட்டு வணங்கும் காட்டுக் கால உளப்போக்கை மாற்றுவதற்கே வாழ்நாளைச் செலவிட்ட பெரியாரை இப்படிக் கும்பிட்டார்கள், அப்பாவி மக்கள்.

ஈப்போவில் நடந்த தமிழர் சீர்திருத்த மாநாட்டில் தமிழர்கள், மலையாளிகள், தெலுங்கர்கள், யாழ்ப்பாணிகள், இஸ்லாமியர், ஆகியோர் குழுமியிருந்தார்கள். அம் மாநாட்டை ராமசாமிப் பெரியார் தொடங்கிவைத்து உரையாற்றினார். பின்னர் 26–12–1929இல் சிங்கப்பூரில் நடந்த இந்திய சங்க மாநாட்டிலும் ராமசாமிப் பெரியார் கலந்துகொண்டு உரையாற்றினார்.

மலேயாவில் சூறாவளிப் பயணஞ்செய்து, நாள்தோறும் காலை முதல் நள்ளிரவு வரையிலும் அய்ந்தாறு கூட்டங்களில் பெரியார்

உரையாற்றினார். ஒவ்வொரு கூட்டத்திலும் நெடுந்தொலைவிலிருந்து, தோட்டத் தொழிலாளர்களும் பிறரும் வந்து கலந்து கொண்டார். அப்போதுக் கூட்டங்களுக்கு, மலேயாவாழ் சீனர்கள், சப்பானியர், மலேயாக்காரர்கள் ஆகியோரும் திரளாக வந்தார்கள்.

மலேயச் சுற்றுப்பயணத்தின்போது பெரியார், பொதுவாக சுயமரியாதைப் பிரச்சாரம் செய்தாலும் குறிப்பாக இரண்டொரு கருத்துக்களை பொதுமக்கள் முன்வைத்தார்.

'மக்கள் வாழ்வுக்கு இன்றியமையாத உழுதல், நெய்தல், வீடு கட்டல், உடை வெளுத்தல், சவரம் செய்தல், தெருப் பெருக்கல் ஆகிய தொழில்களைச் செய்தவர்களை இழிவாக நடத்துவதால் அல்லவா, இந்தியாவை விட்டு பர்மாவுக்கும், இலங்கைக்கும், மலேயாவுக்கும், இதர நாடுகளுக்கும் தமிழர்கள் இலட்சக்கணக் காகப் போகவேண்டிய நிலை ஏற்பட்டது. வந்த இடத்தில் சாதி ஏற்றத் தாழ்வுகளுக்கு இடம் கொடுக்கக்கூடாது' என்பதை பெரியார் வலியுறுத்தினார்.

தமிழர்கள் கல்வி அறிவு பெறவேண்டுமென்பதை பல கூட்டங்களில் வற்புறுத்தினார். படிப்பு பெறத் தவறிவிட்டதால்தான் எண்ணற்ற தமிழர்கள் வெறும் பாட்டாளிகளாக அவதிப்பட நேர்ந்துள்ளதைச் சுட்டிக்காட்டி, தொழிலாளர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டத் தவறக்கூடாது என்று பெரியார் எடுத்துரைத்தார்.

மலேயாவாழ் தமிழர்கள் தங்களுக்குள் ஒற்றுமையை வளர்த்துக் கொள்ளவேண்டுமென்றும் அந்நாட்டில் வாழும் மற்ற இன மக்களோடு ஒன்றி கலந்து வாழவேண்டியதன் முன்னுரிமையையும் பெரியார் அறிவுறுத்தினார்.

26–12–1929 அன்று சிங்கப்பூரில் நடைபெற்ற மலேயா–இந்திய சங்க மாநாட்டில் உரையாற்றியபோது 'இந்த மாநாடு எங்கள் நாட்டுக் காங்கிரசைப் பின்பற்றாமல், அரசாங்கத்தை உத்தியோகமும், பதவியும் கேட்காமல், நாட்டின் நலனுக்கும் பொதுமக்களின் நன்மைக்குமான முறையில் ஆட்சி செலுத்தும்படி அவர்களைக் கட்டாயப்படுத்தும்படியான முறையில் நடந்து கொள்ளவேண்டும். அதற்கு வழி, மக்களை ஒன்றுபடுத்தி, அவர்களுடைய அறிவையும் சுயமரியாதையையும் உண்டாக்குவதே தவிர உத்தியோகங்களை இந்திய மயமாக்க வேண்டுமென்பதல்ல என்பதே என் கருத்து.

'இந்தியர்கள் என்பவர்களாகிய நாம் ஒரு மதம், ஒரு சாதி, ஒரு வகுப்பு, ஒரு கொள்கை, ஓர் இலட்சியம் என்று சொல்லிக்

கொள்ளக்கூடிய நிலையில் இல்லை. முதலாவது இலட்சியத்தை ஒன்றுபடுத்திக்கொண்டாலொழிய ஒரு காரியமும் செய்யமுடியாது' என்று பெரியார் கூறினார்.

அக்கூட்டத்திற்கு நகரப் பெரியார்களில் ஒருவரான, பார்ஸ்டன் என்னும் ஒரு ஆங்கிலேயர் தலைமை தாங்கினார். அம்மண்டபத்தின் மாடியில் நான்கு பக்கங்களிலும் மக்கள் நிரம்பியிருந்தார்கள். அப் பெருங்கூட்டத்தில் ஈ. வே. ரா. பேசியபோது, அமெரிக்க மாதாகிய மிஸ் மேயோ என்பவர் இந்தியாவைப்பற்றி எழுதியிருக்கும் ஊழல்களைப்பற்றிக் குறிப்பிட்டார். அத்தகைய குறைபாடுகளையெல்லாம் போக்குவதுதான் சுயமரியாதை இயக்கத்தின் நோக்கம் என்று சொல்லிக்கொண்டு வந்தார். அப்பொழுது ஒருவர் கேள்வி கேட்டார். ராமசாமிப் பெரியார் தக்க விடை அளித்தார். அவை வருமாறு:

கேள்வி: மேயோ எழுதியதன் கருத்தென்ன?

பதில்: கருத்து என்னவென்பதை நாம் பிறகு கவனிப்போம். அந்த அம்மாள் எழுதியிருப்பவைகள் உண்மையா? பொய்யா என்று நாம் முதலில் பார்க்கவேண்டும்.

கேள்வி: காந்தியார் அந்தம்மாளைச் சாக்கடைப் பரிசோதகர் என்று சொல்லியிருக்கிறாரே?

பதில்: திரு. காந்தியார் சாக்கடைப் பரிசோதகர் என்று சொல்லியது உண்மையாயிருந்தாலும், சாக்கடை இல்லாத இடத்தையாவது சிங்காரவனத்தையாவது காட்டி, அவைகளைப் பார்க்கச் சொல்லி அந்தம்மாளைக் கூப்பிட்டிருக்கலாம். அப்படிக் காட்டுவதற்கு ஆதாரம் இல்லாததால் தான் காந்தியார் இந்தியர்களைப் பார்த்து,

'மேயோ எழுதிய புத்தகத்தை மறந்துவிடாமல் எப்பொழுதும் ஒரு பக்கத்தில் வைத்திருங்கள்,' என்று சொல்லியிருக்கிறார். இதன் கருத்து, சாக்கடையைச் சுத்தம் செய்யுங்கள் என்பதேயாகும்.

கேள்வி: வேறு பலர் மறுப்பு எழுதியிருக்கிறார்களே?

பதில்: மேயோ சொன்னவற்றை யாரும் முழுதும் மறுக்கவில்லை. மிஸ் மேயோ நாட்டிலும் இவ்விதம் இல்லையா என்று தான் எழுதியிருக்கிறார்கள். நீ மாத்திரம் யோக்கியனா என்றால் இதற்குப் பெயர் மறுப்பு ஆகுமா? ஒப்புக்கொள்வதாகும்.

### சுய மதிப்பீடு

பெரியார் சுங்குரும்பை என்னுமிடத்தில் தமக்கு அளிக்கப்பட்ட தேநீர் விருந்தில் பேசும்போது, தன்னையே எடை போட்டுக் காட்டினார். அம் மதிப்பீடு இதோ: 'நான் அரசியல் புரட்சிக் காரனல்ல, யாருக்கும் கெடுதி செய்தவனுமல்ல. அமைதியுடன் சமுதாயத்தில் இருக்கும் எண்ணற்ற சாதிகளை ஒழிக்கவேண்டு மென்று கூறிவருபவன்.' எவ்வளவு அடக்கமான மதிப்பீடு.

1931 டிசம்பரில் ஈ. வே. ராமசாமி மேற்கத்திய நாடுகளுக்குப் பயணத்தைத் தொடங்கினார். அத் திங்கள் 13ஆம் நாள் சென்னையில் கப்பலேறினார். அவரோடு எஸ். ராமனாதனும் ஈரோடு ராமுவும் உடன் சென்றார்கள்.

### அய்ரோப்பிய நாடுகளில் பெரியார்

ஈஜிப்ட், கிரீஸ், துருக்கி, ஜெர்மனி, ஸ்பெயின், பிரான்சு, இங்கிலாந்து, போர்ச்சுகல், சோவியத் நாடு ஆகிய பல நாடுகளிலு மாக ஏறத்தாழ ஓராண்டு காலம் சுற்றுப்பயணம் செய்தார். அவர், நீண்ட நாள் சுற்றுப்பயணம் செய்தது, சோவியத் நாட்டில்தான். அந்நாட்டின் நாத்திக சங்கத்தார் அழைப்பின் பேரில், அவர்கள் ஏற்பாட்டின்படி, முதல் சமதர்ம நாட்டைச் சுற்றிப் பார்த்து பல வற்றை நேரில் தெரிந்துகொண்டார். தொழிற்சாலைகள், சுவடி நிலையங்கள், நாடக அரங்குகள் ஆகியவற்றையும் அரசாங்க விருந்தினராக இருந்து கண்டு வந்தார். அக் காலகட்டத்திலேயே, சோவியத் நாடு அடையாளம் கண்டு அழைக்கும் அளவுக்கு புகழ் பெற்ற நாத்திகராகவும் சமதர்மவாதியாகவும் முற்போக்கு வாதியாகவும் பெரியார் ஈ. வே. ராமசாமி விளங்கினார் என்பதை மறக்கமுடியுமா?

### இங்கிலாந்தில் வீர முழக்கம்

ராமசாமிப் பெரியார், தமது மேனாட்டுப் பயணத்தின்போது இங்கிலாந்தில் சுற்றுப் பயணஞ்செய்தார். 20—6—1932 அன்று, மேக்ஸ்பரோலேக் பார்க்கில் பெரியாரை வரவேற்க ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் இருபது, முப்பதாயிரம் பேர்கள் கூடி இருந்தார்கள். பிரிட்டிஷ் தொழிற்சங்கத் தலைவர் தோழர் லான்ஸ்பரி அக்கூட்டத்தில் பேசினார். ஈ. வே. ராமசாமி உரை யாற்றும்போது, தமக்கே உரிய, அச்சமற்ற பாணியில், வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்று பேசினார்.

அப்போது,

'தோழர்களே!

இந்தியர்களாகிய எங்களை நீங்கள் ஒரு பரிகசிக்கத் தகுந்த சமூகமாகக் கருதலாம். ஆனால், நாங்கள் பிரிட்டிஷ் தொழில் கட்சியை மிக மிகப் பரிகசிக்கத்தக்க விஷயமாய்க் கருதுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

'ஏனெனில் தொழில் கட்சித் தலைவராகிய தோழர் லான்ஸ்பரி அவர்கள் சிப்பாய்கள் சுடுவதையும் கொல்லுவதையும் தாம் சிறிதும் விரும்புவதில்லை என்று பெருமை பேசிக்கொள்ளுகிறார். ஆனால் எங்கள் கார்வாத் (Gharwath) சேனைகள் நிராயுதபாணி களான மக்களைச் சுடுவதற்கு மறுத்ததற்குத் தோழர் லான்ஸ் பரியின் தொழிற்கட்சி கவர்ன்மென்ட்டானது அந்தச் சிப்பாய் களுக்கு 15 வருஷ கடின காவல் தண்டனை விதித்திருக்கிறது என் பதை ஞாபகப்படுத்துகிறேன்.

'தொழிலாளர் சங்கமாகிய டிரேட் யூனியனை ஆதரிப்பதாகவும், அதில் சேர்ந்து உழைப்பதாகவும் பறைசாற்றுகிறீர்கள். ஆனால், எங்கள் ஏழை இந்திய சுரங்க வேலைக்காரர்களும், மற்ற தொழி லாளிகளும் சேர்ந்து, ஒரே டிரேட் யூனியன் சங்கம் ஸ்தாபித்த தற்காக அதன் அதிகாரிகளையும், அதற்கு உதவிசெய்த பிரிட்டிஷ் தோழர்களையும் வெளியில் இருக்கவிடாமல் உங்கள் தொழில் கட்சி அரசாங்கமானது மீரத்து சிறையில் அடைத்துப் போட்டு விட்டது.

'தோழர் லான்ஸ்பரி அவர்கள் இந்தியர்கள் விஷயத்தில் மிக்க அனுதாபமிருப்பதாகவும், இந்தியர்கள் சுடப்படுவதையும், அடிக் கப்படுவதையும், சிறையில் அடைக்கப்படுவதையும் தாம் விரும்புவதில்லை என்றும் சொல்லிக்கொள்வதாகக் கேள்விப் பட்டேன். ஆனால் தோழர் லான்ஸ்பரியுடைய தொழில் கட்சி அரசாங்க கேபினட்டானது சுமார் 80,000 பேர்வரை இந்திய ஆண் பெண்களை ஜெயிலில் அடைத்திருக்கிறது. ஆயிரக்கணக் கான மக்களைச் சுட்டுத் தள்ளிக்கொண்டிருக்கிறது.

'ஆப்ரிக்க கிராமங்களின்மீது ஆயிரக்கணக்கான தடவை ஆகாயப் படைமூலம் கொடுமை செய்யப்பட்டிருக்கிறது.

'நூற்றுக்கணக்கான பர்மியர்களையும் கிராமத்தாரையும் சுட்டுக் கொன்று இருக்கிறார்கள். இதற்கு என்ன பதில் சொல்லுகிறீர் கள்?

'இந்தியச் சுரங்கங்களில் 10 மணி நேர வேலைக்கு 8 அணா கூலிக்கு இந்தியர்களிடம் வேலை வாங்கப்படுகின்றது. சுமார்

40 ஆயிரம் பெண்கள் தினம் அய்ந்தணா கூலிக்கு பூமிக்குள் வேலை செய்துகொண்டு இருக்கிறார்கள்.

'இந்தக் கொடுமையையும், ஆபாசத்தையும் நிறுத்த தொழில் கட்சி அரசாங்கம் என்ன செய்தது?

'தோழர் லான்ஸ்பரி அவர்கள் இங்கிலாந்தில் தொழிலாளர்களை ஆதரிக்கவேண்டும் என்று பேசுகிறார். ஆனால் இந்தியர் விஷயத்தில் தோழர் காந்தியையும், இர்வின் பிரபுவையும், கொடுமையான வட்ட மேஜை மகாநாட்டையும் ஆதரிக்கிறார். அவ்வளவோடு மாத்திரமல்லாமல் இந்தியாவானது இந்திய அரசர்களும், ஜமீன் தாரர்களும், முதலாளிமார்களும், அய்ரோப்பிய வியாபாரிகளுமே ஆதிக்கம் வகிக்கும்படியானதும் தொழிலாளிகளுக்கும், குடித்தனக் காரர்களுக்கும் பாத்தியமும், பொறுப்பும், இல்லாததுமான ஒரு அரசியல் சபை மூலம் இந்திய நிர்வாகம் நடக்கும்படியான காரியத்திற்கு உதவிசெய்கிறார். இதற்கு என்ன பதில் சொல்லுகிறீர்கள்?

'தோழர் லான்ஸ்பரி அவர்கள் யுத்தத்தையும், யுத்த முஸ்தீபையும் வெறுக்கிறதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் துருப்புக்களையும் பிரிட்டிஷ் வைஸ்ராயையும் திருப்பி அழைத்துக்கொள்ள மறுக்கிறார்.

'கடைசியாக இருந்த தொழிற்கட்சி அரசாங்கமானது இரண்டு வருஷ காலத்தில் அனுப்பிய ஆகாய சண்டைக் கப்பல்களையும், வெடிகுண்டுகளையும், மோட்டார் பீரங்கி வண்டிகளையும், கவசம் செய்த மோட்டார் வண்டிகளையும், யந்திரத் துப்பாக்கி களையும், பிரிட்டிஷ் பட்டாளங்களையும் கணக்குப் பார்த்தால் பால்ட்வின் அரசாங்கமானது தனது 5 வருஷம் ஆட்சியில் அனுப்பப்பட்டதைவிட அதிகமாகவே இருக்கிறது. தோழர் களே! இவற்றிலிருந்து பிரிட்டிஷ் தொழிலாளர் பார்ட்டி என்று சொல்லப்படும் சமதர்ம பார்ட்டியின் யோக்கியதையை அறிந்து கொள்வது என்பது எங்களுக்கு மிகக் கஷ்டமாகவே இருக்கிறது.

'ஆதலால், யார்க்ஷையர் தொழிலாளிகளே! நீங்கள் இந்தப் போலிக் கட்சிகளையும், கொள்கைகளையும் நம்பாமல் மனித சமூக விடுதலைக்கும், சுதந்திரத்துக்கும், சமத்துவத்துக்கும் உண்மையாகவே போராட உலக தொழிலாளர்களின் ஒற்றுமையை எதிர்நோக்கிக்கொண்டிருங்கள்' என்று முழங்கினார்.

இந்தியாவில், நம்முள், எல்லோர்க்கும் சரி பங்கு கேட்டுப் போரிட்டுக்கொண்டிருந்த ஈ. வே. ராமசாமி, பிரிட்டானியரிடையே பேசும்போது, அவர்கள் பொதுவாக இந்தியர்களுக்கும் குறிப்பாக இந்திய தொழிலாளி வர்க்கத்திற்கும் இழைக்

தீங்குகளை பட்டாங்கமாகச் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இது, பெரியாரின் தனிப் பண்பாகும்.

**பர்மாவில் பெரியார்**

இருபத்து இரண்டு ஆண்டுகளுக்குப்பின் பெரியார் மீண்டும் வெளிநாடு சென்றார். 3–12–1954இல் பர்மாவில் நடந்த உலக பவுத்தர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள பெரியார் போயிருந்தபோது, அம்பேத்கார் அவர்கள் பெரியாரைப் பார்த்து, 'என்ன ராமசாமி, நாம் இப்படிப் பேசிக்கொண்டே இருப்பதால் என்ன பலன் ஏற்படமுடியும்? வாருங்கள், நாம் இரண்டுபேரும் புத்த மதத்தில் சேர்ந்துவிடுவோம்!' என்றார்.

பெரியார் 'ரொம்ப சரி; இப்போது முதலில் நீங்கள் சேருங்கள்; நான் இப்போது சேருவது என்பது அவ்வளவு ஏற்றதல்ல. ஏனென்றால், தமிழ் நாட்டில் நான் இப்போது சாதி ஒழிப்பைப் பற்றித் தீவிரமாகப் பிரச்சாரம் செய்துவருகிறேன். இந்துக் கடவுள்கள் எனப்படும் விநாயகர், இராமன் சிலைகளை உடைத்தும், படங்களை எரித்தும் இந்து மதத்திலுள்ள பலவிஷயங்களைப் பற்றியும் மக்களிடம் எடுத்துச்சொல்லி, இப்போது பிரச்சாரம் செய்வதுபோல் அப்புறம் நான் செய்யமுடியாது; ஒரு இந்துவாக இருந்துகொண்டு இப்படிப் பேசுவதனால் என்னை யாரும், 'நீ அதைச் சொல்லக்கூடாது' என்று தடுக்க உரிமை கிடையாது. ஆனால் நான் இன்னொரு மதக்காரனாக இருந்தால், அப்படிப் பட்ட வசதி எனக்கிருக்க முடியாது. ஆகவே, நான் வெளியிலிருந்துகொண்டு புத்த மார்க்கத்தைப் பிரச்சாரம் செய்து வருகிறேன்' என்று பதில் கூறினார்.

# 10

## விழிப்பூட்டும் கிளர்ச்சிகள்

இரண்டாவது கட்டாய இந்திப் போரின் வெற்றியைக் கொண்டாடுவதற்கு முன்பே, பெரியார் மற்றோர் உரிமைப் போராட்டத்திற்கு படை திரட்ட வேண்டியதாயிற்று.

### வகுப்புரிமைப் போராட்டம்

1950ஆம் ஆண்டு ஜூன் திங்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் இருவர் வகுப்புவாரி சேர்க்கை முறையை (Communal G. O.) எதிர்த்து வழக்குப் போட்டனர். அரசியல் சட்ட வரைவுக் குழுவினருள் ஒருவரான சர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், மேற் கூறிய இருவருக்காக வாதாடினார். சென்னை மாகாண மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுத்ததை எதிர்த்து வழக்குத் தொடுத்தனர். இதில் வினோதம் என்னவென்றால், இருவரில் ஒருவருடைய பிள்ளை மனுவே போடவில்லை. இருப்பினும் தத்துவ ரீதியாக தீர்ப்பு கூறப்பட்டது. என்ன தீர்ப்பு? 'சென்னை மாகாண அரசு நடை முறைப்படுத்தி வரும் வகுப்புவாரி ஆணை இந்திய அரசியல் சட்டத்திற்கு முரணானது' என்பது தீர்ப்பு. இம் முடிவு 1950 ஜூலைத் திங்களில் கூறப்பட்டது.

ஆகவே, கல்லூரி சேர்க்கைகளிலும் பதவிகளுக்குத் தேர்ந்தெடுப் பதிலும் பார்ப்பனருக்கு இவ்வளவு, முஸ்லீம்களுக்கு இவ்வளவு, கிறுத்தவர்களுக்கு இத்தனை, பின்தங்கியவர்களுக்கு இந்த விழுக் காடு, தாழ்த்தப்பட்டோருக்கு இத்தனை என்று பங்கு போட்டுக் கொடுத்ததற்குப் பதில், இனிமேல், 'மார்க்கை'ப் பார்த்து, அதிக மதிப்பெண் அதிக தகுதி என்னும் அடிப்படையில் சேர்க்க வேண்டும். அப்படியே ஆட்களை வேலைகளுக்குப் பொறுக்க வேண்டும், என்னும் நிலை உருவாயிற்று. இருபது ஆண்டு கால வகுப்புரிமைக்குப் பிறகும் தாழ்த்தப்பட்டோர், பின்தங்கியோர் தங்களுக்குரிய நியாயமான பங்கை முழுமையாகப் பெற முடிய வில்லை. உள்ள உரிமையை இழந்துவிட்டால், மீண்டும் ஏர் உழவும் வண்டி இழுக்கவும் செக்காட்டவும் பறையடிக்கவும் போக

வேண்டிய நிலைக்குப் பொதுமக்கள் தள்ளப்படுவார்கள். இதை யுணர்ந்த பெரியார், உடனே கிளர்ச்சி செய்யத் தலைப்பட்டார். மீண்டும் சூறாவளிப் பயணத்தில் ஈடுபட்டார்.

**அரசியல் சட்ட முதல் திருத்தம்**

14-8-50இல் நாடெங்கும் வகுப்புரிமை நாள் கொண்டாடும்படி 8-8-50இல் வேண்டுகோள் விடுத்தார். தமிழகம் முழுவதுமே திரண்டு எழுந்தது. பார்ப்பனர் அல்லாத மாணவர்கள், பொது மக்கள், அனைவரும் கட்சி வேறுபாடுகளை ஒதுக்கிவிட்டு, வகுப் புரிமைக் கோரிக்கைக்கு ஆதரவு கொடுத்தார்கள்.

3-12-50இல் திருச்சியில் வகுப்புரிமை மாநாடு ஒன்றை பெரியார் கூட்டினார். அனைத்துக் கட்சியினரும் கலந்துகொண்டனர். வகுப் புரிமை தீர்மானம் நிறைவேறியது.

அது சமயம் இந்திய அமைச்சரவையில் இருந்த சர்தார் வல்ல பாய் பட்டேல் தென்னாட்டுக்கு வந்தார். இங்கிருந்த கொந்தளிப் பின் அளவையும், நியாயத்தையும் சரியானபடி உணர்ந்தார். அவர் இந்திய அமைச்சரவையிலும் நாடாளுமன்றத்திலும் பெரியாரின் கோரிக்கைக்கு வலுவு உண்டாக்கினார். இந்திய அரசியல் சட்டத் தின் விதி 15இல் நாலாவது உட்பிரிவாக ஒரு புதுப் பிரிவை திருத்த மாக கொணரச்செய்தார். அது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அத்திருத்தமாவது, விதி 15 (4) 'குடிமக்களுக்குள் சமூகத்தி லும், கல்வியிலும் பின்தங்கியுள்ள எந்த வகுப்பினருக்கும் அல்லது தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பழங்குடியினருக்கும் அவர்கள் முன் னேற்றம் கருதி அரசு எந்த தனி ஏற்பாட்டினைச் செய்வதையும் இந்த விதியில் ஒரு பிரிவோ அல்லது விதி 29இன் 2ஆவது உட் பிரிவோ தடை செய்யாது' என்பதாகும்.

இந்திய அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்த ஓராண்டு காலத் தில், 1951 பிப்ரவரியில் நிறைவேற்றப்பட்ட இந்த திருத்தமே அரசியல் சட்டத்தில் செய்யப்பட்ட முதல் திருத்தம் ஆகும். இந்த சிறப்பு பெரியாரைச் சாரும்.

இதன் விளைவாக முதலில் தாழ்த்தப்பட்டோருக்கு மட்டுமே இட ஒதுக்கீடு செய்ய உரிமை வழங்கிய அரசியல் சட்டம், பின் தங்கியவர்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யவும் வழி வகுத்தது. அதனைப் பயன்படுத்தி, சென்னை மாநில அரசு, பின்தங்கியவர் களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இட ஒதுக்கீடு செய்து, நலிந்த அப்பிரிவினர்களைக் காப்பாற்ற முடிந்தது.

அரசியல் சட்டத்தைத் திருத்திய பிறகு, இந்திய அரசும், பிற மாநில அரசுகளும் அவற்றின் பதவிகளில் பின்தங்கியவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்து, ஓரளவாவது அவர்கள் அனைத்திந்திய அலுவல்களிலும், மாநில பதவிகளிலும், நுழைய வழி செய்திருக்க வேண்டும். அப்படிச் செய்யவில்லை. மறுபடியும் இந்திய அரசு காகா காலேல்கர் என்னும் காங்கிரசு தலைவரின் தலைமையில் ஒரு பின்தங்கிய வகுப்பார் குழுவை நிறுவிக் காலம் கடத்திவிட்டது. அக்குழு, பின்தங்கியவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்ய பரிந்துரைத்த பிறகும் இந்திய அரசு அதை ஏற்று, இன்றுவரை ஆணை பிறப்பிக்கவில்லை. வட மாநிலங்கள், அண்மைக்காலம் வரையில் பின்தங்கியவர்கள்பற்றி சிறிதும் கவனம் செலுத்தவில்லை. எழுபத்தேழில் நடந்த பொதுத் தேர்தலில், ஜனதா கட்சி, பின்தங்கியவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்வதாக வாக்குக் கொடுத்து, வெற்றி பெற்று, வடக்கே சில மாநில ஆட்சிகளைப் பிடித்தது. அதை ஒட்டி பீகாரிலும், உத்திர பிரதேசத்திலும் பின்தங்கியவர்களுக்கு நூற்றுக்கு இருபது இடங்களை ஒதுக்குவதென்று முடிவு செய்ததால், உள்நாட்டுப் போரையே மேற்குலத்தார் நடத்துகிறார்கள். இதற்குக் காரணமாக இருந்த இரு அரசுகளும் கவிழ்க்கப்பட்டன.

அய்ம்பது ஆண்டுகளாக தமிழ் மாநிலத்திலும் ஏன் தென்னக மாநிலங்களிலும் நடைமுறையாகிவரும் ஒதுக்கீடு முறையை ஓரளவே செயல்படுத்த முயன்றாலே, வட மாநிலங்களில் கலவரம் தொடர்வது ஏன்? அங்கே ஒரு தந்தை பெரியார் இல்லை. மக்களைப் பக்குவப்படுத்தும் தன்மான இயக்கம் இல்லை.

ஆயினும் அண்மைக் காலத்தில் வட மாநில பின்தங்கியவர்களும் விழிப்படையத் தொடங்கியுள்ளார்கள். அரசு அலுவல்களிலும் கல்வி நிலையங்களிலும் தங்கள் பங்கைக் கேட்கத் தலைப்பட்டுள்ளார்கள். பெரியாரைப்பற்றியும் தன்மான இயக்கத்தைப்பற்றியும் அறிந்துகொள்ள முனைந்துள்ளார்கள். எனவே இந்திய அரசு தனது எல்லாத் துறை அலுவல்களிலும் பின்தங்கியவர்களுக்கு உரிய இடங்களை ஒதுக்கீடு செய்வதில் காலந்தாழ்த்தக்கூடாது.

1952இல் நடந்த முதல் பொதுத் தேர்தலின்போது காங்கிரசுக்கு எதிராக அய்க்கிய முன்னணி உருவாயிற்று. சென்னை மாகாணத்தில், காங்கிரசுக் கட்சி தோல்வியடைந்தது. தோற்கடித்ததில் பெரியார் பங்கு பெரியது; அவரே பெருங் காரணமாக விளங்கினார். இருப்பினும் இராசகோபாலாச்சாரியார் காங்கிரசு அமைச்சரவை நிறுவ முடிந்தது. காரணம், அய்க்கிய முன்னணியில் வளர்ந்த கருத்து வேற்றுமை.

## குலக் கல்வி திட்டம்

முதல் அமைச்சர் இராசகோபாலாச்சாரியார் 1953ஆம் கல்வி ஆண்டு முதல், நாட்டுப்புறத் தொடக்கப் பள்ளிகளில், குலக் கல்வி திட்டத்தை செயல்படுத்த ஆணையிட்டார். அப்படி யென்றால் என்ன?

நாட்டுப்புற மாணாக்கர் மற்றவர்களைப்போல, நாளொன்றுக்கு அய்ந்து மணி நேரம் பள்ளியில் படிக்கவேண்டாம். மாறாக மூன்று மணி நேரம் படித்தால் போதும். மற்ற நேரம் வீட்டிலிருந்து குலத் தொழிலைக் கற்றுக்கொள்ளட்டும். ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில், இருமுறை, மூன்று மணிநேரங்கள் வேலைசெய்யவேண்டும்; பழைய ஊதியத்திற்கே. ஏன் இத்திட்டத்தைப் புகுத்தினார்?

'பொதுமக்களுக்கு எழுதப் படிக்கத் தெரிந்தால் போதும். அந்த அளவு கற்றுக்கொண்டு, அவரவர் பரம்பரைத் தொழிலைப் பார்க்கவேண்டும்' என்பது முதலமைச்சரின் கோட்பாடு. இது மேட்டுக் குடிகளுக்குப் பாதுகாப்பு. சாதாரண மக்களை இருந்த நிலையிலே அடைக்கிவைப்பது ஆகும்.

இப்படியொரு விவகாரத்திற்கான கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்தால், அதைப்பற்றிய கருத்து வேறுபாடுகள் வளரும். அக்கருத்து மோதல்களில், காலம் கழியும். கிளர்ச்சி ஏற்பட்டா லும் பரவாயில்லை; அக்கிளர்ச்சிகளை அரசியல் சிக்கல்களாக்கி விடலாம். காங்கிரசைக் கவிழ்ப்பதற்கான சதி என்று திசை திருப்பி விடலாம். காங்கிரசின் பேரால் கழுதையை நிறுத்தினாலும் ஓட்டுப்போடு என்று பொதுமக்களை ஆயத்தப்படுத்தியிருக் கிறோம். கட்சிமேல் இருக்கும் பக்தி காரணமாக, அவர்கள் புத்தி யைப் பயன்படுத்த முயலமாட்டார்கள். ஆகவே, நீண்ட நாளைய கிளர்ச்சியில் நீதிக் கட்சியும் தன்மான இயக்கமும் பெரியாரும் சிக்கிக்கொள்ளலாம். பொது உடமைக் கொள்கையையும் சாதி, மத ஒழிப்புக் கொள்கையையும் பரப்புவதில் இருந்து வேறு பக்கம் திருப்பித் தொலையலாம்.

இப்படி, ஏற்றுக்கொண்டாலும் கெடுதி, எதிர்த்தாலும் கெடுதி என்னும் இருமுனைத் தீங்கான, குலக் கல்வி முறையை, முதல் அமைச்சர் இராசகோபாலாச்சாரியார் திணித்தார். முதலமைச்சர் இத்திட்டத்தை அமைச்சரவையில் வைத்து ஒப்புதல் பெறவில்லை, கல்வி அமைச்சருக்கும் தெரிவிக்கவில்லை. கல்விச் செயலருக்கும், பொது கல்வி இயக்குனர் அரைவேளை படிப்புக்கு ஆணையிட்ட பிறகே தெரியவந்தது. இது காங்கிரசு கட்சியின் திட்டங்களில் ஒன்று அல்ல என்பதையும் இங்கே சுட்டிக் காட்டவேண்டும்.

இந்நிலையில் இராசகோபாலாச்சாரியார் இயக்குனரோடு மட்டும் இரகசியமாகப் பேசிப் படிப்பை பாழாக்கியதின் உள் நோக்கத்தை ஊகிக்கலாம்.

அத்தகைய திட்டத்திற்கு எவ்வித தேவையும் இல்லை. அதனால் நன்மை ஏற்படும் என்று தவறாகக்கூட நினைப்பதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை. ஏன்?

1937இலேயே திரு. சி. ஆர். பிரதமரானபோது, அரைவேளைப் பள்ளி போதுமென்னும் வகையில் புதிய திட்டத்தை அனுப்புமாறு அப்போதிருந்த பொதுக் கல்வி இயக்குநர் திரு. ஸ்டேதமுக்கு, நேர்முக கடிதத்தின் வழியாக ஆணையிட்டார். இயக்குநர், அதை ஒப்புக்கொள்ளவில்லை. அத்தகைய திட்டத்திற்கு தேவையிருப்ப தாகவோ அதனால் நன்மை விளையுமென்றோ உறுதியாகச் சொல் லும் நிலையில் இல்லை. எனவே மாகாணம் தழுவிய அரை வேளைப் படிப்புத் திட்டத்திற்குப் பதில், சோதனையாக, பின் தங்கியவர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் அதிகமாக உள்ள பெரிய குளம் வட்டத்துப் பள்ளிகள் இம்முறையைக் கையாளலாம் என்று மட்டுமே சுற்றறிக்கை அனுப்புவது நல்லது. ஓராண்டிற்குப்பின், அதன் பலனை மதிப்பிட்டு, மேற்கொண்டு எடுக்கவேண்டிய நட வடிக்கையை எடுப்போம் என்று எழுதினார். பிரதமர் இராச கோபாலாச்சாரியார் அதை ஏற்றுக்கொண்டு பெரியகுளத்தில் மட்டும் வெள்ளோட்டம் பார்க்கச் சொன்னார். ஓராண்டு முடிந்த தும், 'இதை மக்கள் விரும்பவில்லை. சிறுவர்கள் வந்தால் முழு நேரம் வருகிறார்கள். இல்லையேல் வருவதே இல்லை' என்று அறிக்கை கொடுத்தார். அதோடு, அம்முறை கைவிடப்பட்டது.

அப்படியிருந்தும், நல்ல நினைவாற்றல் உள்ள இராசகோபாலாச் சாரியார் 1953 ஜூன் முதல் இத்திட்டத்தை மாகாணம் முழுதும் புகுத்தினார்.

ஏழை எளியவர்களின் கல்வி வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதும் பெரியாரின் சமதர்மத் தொண்டு தழைக்காது பார்த்துக்கொள்வ துமே உள் நோக்கம்.

எதிர்பார்த்தபடி பெரியார் கொதித்தெழுந்தார். அறிஞர் அண்ணா பொங்கியெழுந்தார். ஏன்? ஏழைப் பங்காளர் காமராச ரும் 'இந்த பைத்தியக்காரத் திட்டத்தை ஒழித்துக் கட்டிவிட்டே மறுவேலை' என்று செய்தி கேட்டவுடன் முழங்கினார். காங்கிரசு கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களில் மிகப் பெரும்பாலோர், எதிர்ப்பை எழுதிக் கையெழுத்திட்டுக் காமராசரிடம் கொடுத் தார்கள்.

குலக் கல்வி முறைக்கு எதிர்ப்பாக ஊர்தோறும் கண்டனக் கூட்டங்கள்; வட்டங்கள்தோறும் எதிர்ப்பு மாநாடுகள்; ஏடுகள் அனைத்திலும் எதிர்ப்புக் கணைகள்; பள்ளிக்கூடங்களில் வருகைக் குறைவு. நாகையிலிருந்து சென்னை வரை குலக் கல்வி எதிர்ப்புப் படையொன்று நீடாமங்கலம் ஆறுமுகம் தலைமையில் பிரச்சாரம் செய்துகொண்டு வந்தது.

மூதறிஞர் இராசகோபாலாச்சாரியார் மூக்கறுபடக்கூடாது என்னும் ஒரே காரணத்திற்காக, 'அவர் பேரில் நம்பிக்கை இருக்கிறது' என்னும் முடிவை சட்ட மன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றச் செய்தார் காமராசர். இவ்வளவு பெருந்தன்மைக்குக் கிடைத்த கைம்மாறு என்ன? முதல்வர் குலக் கல்வித் திட்டத்தை எடுக்கமாட்டேன் என்று அடம்பிடித்தார். தான் பதவியிலிருந்து விலகிவிடப் போவதாகச் சொல்லிவிட்டு, தன் சார்பில் திரு. சுப்ரமணியத்தை முதல்வராக்கப் பார்த்தார். திரு. சி. சுப்ரமணியம் குலக்கல்வியை ஆதரித்த பிரிவினர். ஆகவே, அவருக்கு எதிராகத் தக்கவரை நிறுத்தவேண்டியதாயிற்று. டாக்டர் சுப்பராயனை முதலமைச்சராகும்படி காமராசர் அழைத்தார். அவர் இசையவில்லை.

காமராசரைத் தவிர வேறு எவர் எதிர்த்தாலும் சி. சுப்ரமணியம் அதாவது இராசகோபாலாச்சாரியார் கட்சி—குலக் கல்வி முறை— வெற்றிபெறும் என்பது எதிர்ப்பாளர்களின் கணிப்பு. எனவே காமராசர் சட்ட மன்ற காங்கிரசு கட்சியின் தலைமைப் பதவிக்குப் போட்டியிட நேர்ந்தது; வெற்றி பெற்றார்; அதே சி. சுப்ரமணியத்தை கல்வியமைச்சராக்கி, அவரைக்கொண்டே குலக் கல்வித் திட்டத்தை எடுக்கச்செய்தார்.

காமராசர் தலைமைப் பதவிக்கு போட்டியிடுவதற்கு முன்பு தந்தை பெரியாரின் ஆதரவை, வாழ்த்தை நாடிப் பெற்றுக்கொண்டார். பொதுமக்கள் அனைவருக்கும் கல்வி மடை திறந்துவிட வாக்களித்தார். காமராசர் முதலமைச்சராக விளங்கிய 9½ ஆண்டுகள், பெரியாரின் பேராதரவுடன், அவ்வாக்குறுதியை நிறைவேற்றினார்.

### கல்விக்கு முதலிடம்

தூங்கிக்கொண்டிருந்த புலியை இராசகோபாலாச்சாரியார் இரண்டாம் முறை இடறியது நல்லதாயிற்று. எப்படி?

தமிழர்கள், காலாகாலமாகக் கல்வியின்மேல் அக்கறை செலுத்தவே இல்லை. தற்குறிகளாக இருப்பது அவமானம் என்று உணரவில்லை. பிள்ளைகளையாவது படிக்கவைக்க வேண்டுமென்றும் உறைக்கவில்லை. 1928—29ஆம் ஆண்டில்கூட போதிய பள்ளி

கள் இல்லை. பள்ளிகள் இருந்த ஊர்களிலும் எல்லோரும் பள்ளி சேரவில்லை; சேர்ந்தவர்களில் சிறுபான்மையினரே ஒழுங்காகச் சென்றார்கள். முதல் வகுப்பில் உள்ளவர்களில் நான்கில் ஒரு விழுக்காட்டினராவது நான்கு, அய்ந்தாம் வகுப்பில் இருந்தால் மட்டுமே அங்கீகாரம், மானிய உதவி; சில ஆதி திராவிடர்களாவது இல்லாத பள்ளிக்கு அங்கீகாரமும் இல்லை, மானியமும் இல்லை. இப்படியான விதிமுறைகள் 1950இன் முடிவு வரையிலும் இருந்தன. இருந்து பயன் என்ன? பல விதிமுறைகளைப் போன்று மேற்கூறிய விதிகள் ஏட்டில் இருந்தன. சிலவேளை, ஆய்வாளர்கள் அவற்றைக் காட்டி பள்ளிக்கூட ஆசிரியர்களை, நிர்வாகிகளை மிரட்டுவதற்குத் துணையாயின. பையன்கள் சேர்க்கையைவிட பெண்கள் சேர்க்கை மிகக் குறைவு.

இப்படிப்பட்ட இருண்ட, இருளைவிட்டு வெளிவர மறுத்த, சூழ்நிலையில், கல்வி வளர்ச்சிக்கு, கல்வித்துறையைவிட, தன்மான இயக்கமே அதிகம் பாடுபட்டு வந்தது.

செங்கற்பட்டில் நடந்த முதல் சுயமரியாதை மாநாட்டிலேயே, பொது நிதியிலிருந்து தொடக்கக் கட்டாயக் கல்வி கொடுக்க வேண்டும். மற்ற வகுப்புப் பிள்ளைகளுக்குச் சமமாக கல்வி அடைகிற வரையிலும் தீண்டாதவர்களுக்கு இலவச பாட நூல்கள், உண்டி, உடை முதலியவற்றை இலவசமாக அளிக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அடுத்து வந்த மாகாண மாநாடுகளிலும் மாவட்ட, வட்ட மாநாடுகளிலும் இத்தகைய முடிவுகள் அடுத்தடுத்து ஏற்கப்பட்டன. இவற்றைத் தன்மான இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், பொது மேடைகளில் விளக்கி, ஆதரவு திரட்டினார்கள். இருந்தும் போதிய பலன் கிட்டவில்லை. ஆங்கிலேயர் ஆட்சியும் கல்வியைப் பரவலாக்கவில்லை. தன்னாட்சி பெற்ற பிறகும் காங்கிரசு ஆட்சி, போதிய, பயனுள்ள, கல்வி வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்தவில்லை.

காமராசர், சென்னை மாநில முதல் அமைச்சரானது பார்ப்பன ரல்லாதாரருக்குக் கல்வியின் பொற்காலமாக அமைந்தது. 'எல்லார்க்கும் கல்வி', 'எல்லார்க்கும் பதவியில் உரிய பங்கு' என்பதில் காமராசர், பெரியாரைப் போன்றே உறுதியாக இருந்தார். அவருடைய பொற்காலத்தில் 16,000 தொடக்கப்பள்ளிகள், 30,000 ஆகப் பெருகின. அவற்றில் படிப்போர்க்கு இலவசக் கல்வி, இலவச உணவு, இலவச சீருடை, இலவச பாட நூல்கள் வழங்கப்பட்டன. ஆசியாவில் முதலாவதாக, உள்ளூர் மக்கள் உதவியோடு பதினைந்து இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசப் பகல் உணவு அளிக்கப்பட்டது.

மேற்கூறிய உதவிகளால் பள்ளிகளில் படிப்போர் எண்ணிக்கை ஏறத்தாழ 20 இலட்சங்களிலிருந்து 48 இலட்சங்களாகப் பெருகியது. புதிதாக 1,700-க்கு மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. உயர்நிலைப் பள்ளிகளில் 3·86 இலட்சம் மாணவ மாணவியர் படித்ததுபோய், 13 இலட்சம் பேர் படிக்கும் நிலை உருவாயிற்று. எல்லோர்க்கும் 11 வகுப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்பட்டது. மடை திறந்த வெள்ளம்போல, குடிசை தோறும் கல்வி பாய்ந்தது. பெரியார் கனவு நனவாயிற்று. தொழிற் கல்லூரிகளிலும், பிற கல்லூரிகளிலும் மேல்பட்டப் படிப்பில்கூட தாழ்த்தப்பட்டோரும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்களும் தாராளமாக இடம்பெறும் நிலை அன்று உருவாகியது.

'தகுதி, திறமையைப் பாராமல், சாதி அடிப்படையில் இடங்களை ஒதுக்குவதால், தரம் குறைந்துவிடும்' என்று, அறுபது ஆண்டு காலமாகக் கத்திக்கொண்டே இருப்பது, தமிழகத்தின் வாடிக்கையாகிவிட்டது.

கர்மவீரர், காமராசர் முதல் அமைச்சராக இருந்தபோது, இது பற்றி ஒரு புயலைக் கிளப்ப முயன்றார்கள்.

'எந்தத் தாழ்த்தப்பட்ட டாக்டர் தவறாக ஊசி போட்டதால், நோயாளி மாண்டுவிட்டார் என்று காட்டுங்கள். எந்தத் தாழ்த்தப் பட்ட பொறியியல் அதிகாரி கட்டிய முறையால் எந்தக் கட்டிடம் இடிந்து விழுந்துவிட்டது என்று காட்டிடுங்கள் பார்க்கலாம். எல்லார்க்கும் அறிவு, திறமை இருக்கிறது. வாய்ப்புக் கொடுத்தால் வளருகிறது' என்று மண்டையிலடித்துப் பதில் கூறினார்.

### சாதி ஒழிப்பு

இத்தகைய உணர்வினையும், சூழ்நிலையையும் தமிழ்நாட்டில் உருவாக்கிய பெருமையில் பெரும்பங்கு பெரியாருடையதாகும்.

அடுத்து சமூக இழிவை எதிர்க்கும் அடையாளக் கிளர்ச்சி ஒன்றைப் பார்ப்போம். 'இந்திய அரசியல் சட்டம், இந்துமதப் பாது காப்பிற்காகச் சூதாகச் செய்யப்பட்டது. இந்துமதப் பாதுகாப்பு என்பது நம்முடைய ''சூத்திரத் தன்மை''யைப் பாதுகாப்பதாகும். அதில் சாதி ஒழிப்புக்கு இடம் வைக்கவில்லை. ஆகவே, இது நம்மை காலாகாலத்திற்கும் சின்ன சாதிகளாக வைத்து, இழிவுபடுத்து வதற்குத் துணை நிற்கிறது. இந்திய நாட்டோடு சேர்ந்திருப்பதால் அல்லவா, இழிவுபடுத்தும் இச்சட்டத்திற்கு நாம் அடங்கிப் போக வேண்டியதாகிறது. இந்தியாவிலிருந்து பிரிந்து போய்விட்டால், எல்லாரும் சமத்துவமாக, சாதி ஏற்றத்தாழ்வு ஒழிந்த சமுதாய

மாக வாழ்வதற்கு வழிவிடும், நமக்கு ஏற்ற, அரசியல் சட்டத்தை உருவாக்கிக்கொள்ளலாம்' என்பது பெரியாரின் கருத்து.

சாதி ஒழிப்புக்கு நம் அரசியல் சட்டம் இடம் வைக்கவில்லை என்ற குறையை பொதுமக்கள் கவனத்திற்குக் கொண்டுவர பெரியார் விரும்பினார். அரசியல் சட்ட எரிப்பை அதற்கு வழியாகக் கொண்டார்.

### சட்ட எரிப்புப் போர்

26–11–1957 அன்று, பெரியார் ஆணைப்படி தமிழகமெங்கும், அரசியல் சட்ட எரிப்புப் போர் நடந்தது. அச்சட்டத்தின் குறைபாடுடைய பகுதியை அச்சிட்டு ஆயிரக்கணக்கில் வழங்கப்பட்டது. ஏறத்தாழ நாலாயிரம் திராவிடக் கழகத்தினர், அரசியல் சட்ட எரிப்பில் பங்குகொண்டு சிறைப்பட்டார்கள். அநேகர் நீண்ட சிறை வாழ்க்கைக்கு ஆளானார்கள்.

அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தை குறிப்பிட்டு, 'இந்தத் தமிழ்நாட்டு வரலாற்றை எடுத்துக்கொண்டாலும் சரி—இந்திய வரலாற்றை எடுத்துக்கொண்டாலும் சரி—சமுதாயப் பிரச்சினைக்காக—சாதி ஒழிப்பிற்காக, ஒரே நாளில் 3,500–4,000 பேர்கள் சிறை சென்றது நமது கழகம் ஒன்றில்தான்' என்று பெரியார் திருச்சியில் பொதுக் கூட்டம் ஒன்றில் பெருமிதத்தோடு முழங்கினார். அவ்வுரையில் 'இன்றுள்ள அத்தனை அரசியல் கட்சிக்காரர்களும் எங்களை ஒழிக்கப் பாடுபடுகிறார்களே தவிர, சாதி ஒழியவேண்டியதற்கான பரிகாரம் என்ன என்பதுபற்றி ஒருவனும் கவலைப்படுவது கிடையாது' என்று பெரியார் அறிவித்தது, மாற்றறியாத உண்மையாகும்.

### பிள்ளையார் சிலை உடைப்பு

தந்தை பெரியார் ஈ. வே. ராமசாமியின் நீண்ட வாழ்நாளில் பற்பல கிளர்ச்சிகள், போராட்டங்கள், முன்னே வந்து மின்னுவதைக் காணலாம். அதிலே ஒன்று கணபதி உருவப் பொம்மை உடைப்பு ஆகும்.

1953ஆம் ஆண்டு மே திங்கள் 27ஆம் நாள் தமிழ்நாடெங்கும் புத்தர் விழா கொண்டாடி அன்று மாலை 6 மணிக்கு, வருணாசிரம நோயை ஒழிக்கக் கடைசி மருத்துவமாக, 'பிள்ளையார் பொம்மையை பொதுக் கூட்டத்தில் உடையுங்கள். அரசு 144 தடை உத்தரவு போட்டால் உருவத்தை உடைப்பதை நிறுத்திவிடுங்கள், அவரவர் வீட்டில் உடையுங்கள்' என்றார்.

'தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில், கணபதி என்றும், பிள்ளை யார் என்றும் காட்டப்படும் உருவம் பழையது அல்ல. இந்தப் பிள்ளையார் சமீப காலத்தில்தான், அதாவது பரஞ்சோதி என்ற சோழ சேனாதிபதி வாதாபி நாட்டின்மீது படையெடுத்து வென்ற போது, பிள்ளையார் உருவத்தை வாதாபியிலிருந்து கொண்டு வந்தார். ஆக, இப்படிக் கடைசியாக வந்த கடவுளை முதலாவ தாக உடைக்க, ஒழிக்க முயற்சிக்கிறோம். இனிமேல் ஒரு புதுக் கடவுள் தோன்றாமல் இருக்க இந்தக் காரியம் பயன்படட்டும்.

'யாரையும் புண்படுத்த வேண்டுமென்பதற்காக பிள்ளையார் உருவம் உடைக்கப்படுகிறது என்று யாரும் கருதவேண்டியதில்லை. நான் கணபதி ஆகவேண்டும் என்பதற்காக இந்தக் காரியத்தை ஏற்பாடு செய்யவில்லை' என்று பெரியார் தெளிவுபடுத்தினார்.

பிள்ளையாரை சொந்த செலவில், களிமண்ணால் செய்து, வருணாசிரம முறையை ஏற்றுக்கொள்ளாமையின் அடையாளமாக அம்முறைக்கு ஆணி வேராக இருந்து தாங்கிக்கொண்டிருக்கும் இந்து சமயத்தை மறுப்பதன் அறிகுறியாகவே இப்பிள்ளையார் உடைப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. இதைத் தூண்டிய பொது நடவடிக்கை என்ன? பெரியாரின் சொற்களால் காண்போம். அது இதோ:

'எந்த நாட்டிலும் இல்லாத, நாட்டு நலனுக்காகவோ, கல்வி நலனுக்காகவோ, ஆட்சி நலனுக்காகவோ அல்லது மக்கள் நலனுக்காகவோ அல்லாமல் பார்ப்பன நலனுக்கும் சர்வ ஆதிக்க நலனுக்கும் ஆகவுமே ஏற்படுத்தப்பட்டு இருந்து வருகிற வருணா சிரம தர்ம புதுப்பிப்புக்காகவே இந்த ''ஜனநாயக ஆட்சி'' என்பதில் செய்யப்பட்டு வருகிறது.

'75 ஆண்டுகள் வாழ்ந்து அண்மையில் சாகப்போகிற நான், 35 ஆண்டுகளாக வீடு, வாசல், செல்வம், தொழில், மனைவி, மக்களைத் துறந்து, சந்நியாசியாக நம் திராவிட மக்களுக்கு இந்தச் சூத்திரப் பட்டம் ஒழியவேண்டுமென்றே பாடுபட்டு வந்த—வருகிற நான், ஆண்டு ஒன்றுக்கு 30 ஆயிரம், 40 ஆயிரம் ஏன் 50 ஆயிரம் கூட வரும்படி உள்ளதான எனது எஸ்டேட்டைப் பாழடைய விட்டுவிட்டு. பரதேசியாய்ப்பிரயாணங்களுக்கும்பிரச்சாரத்திற்கும் பொதுமக்களிடம் செலவு பெற்று வாழ்ந்து வரும் நான்—இதற்கு இந்த வருணாசிரம தர்ம முறை ஒழிப்புக்கு ஏதாவதொரு காரியம் செய்யாமல் என் உயிர் போக, எப்படி என்னால் விட்டுக்கொண் டிருக்க முடியும்?'

பெரியாரின் ஆணைப்படி தமிழ்நாடு முழுவதும் குறிப்பிட்ட நேரத்தில், களிமண்ணால் செய்யப்பட்ட பிள்ளையார் பொம்மை உடைக்கப்பட்டது. திருச்சியில், நகர மண்டபத் திடலில் பெரியார்

தலைமையில், இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கூடியிருந்த பொதுக்கூட்டத்தில், இந்நிகழ்ச்சி வெற்றிகரமாக நடந்தது. சென்னையில் அண்ணாசாலையில் தோழர் குத்தூசி குருசாமியார் தலைமையில் நூற்றுக்கணக்கான பிள்ளையார் பொம்மைகள் உடைக்கப்பட்டன.

## 'இராமன்' பட எரிப்பு

1956ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் முதல் நாள் தந்தை பெரியார் மற்றொரு அடையாளக் கிளர்ச்சியை வெற்றிகரமாக நடத்திக் காட்டினார். அது இராமன் பட எரிப்புக் கிளர்ச்சியாகும்.

திரு. ச. இராசகோபாலாச்சாரியார், 'சக்கரவர்த்தித் திருமகனார்' என்னும் கட்டுரையில் 'இராமன் கடவுள் அல்லன். அவன் ஒரு வீரன்' என்று எழுதியிருப்பதையும் சங்கராச்சாரியாரும் 'இராமன் கடவுள் அல்லன். ஓர் ஆதர்சன புருஷன்; மக்களுக்கு ஒழுக்கத்தை கற்பித்தவன்' என்று கூறியிருப்பதையும் கோடிட்டுக் காட்டினார், பெரியார். கடவுள் அல்லாத இராமனின் முதல் செய்கையும் கடைசி செய்கையும் சாதியைக் காப்பாற்றப் பிறந்து, சாதியைக் காப்பாற்றிவிட்டு செத்ததேயாகும் என்று சுட்டிக் காட்டிய பெரியார், நம் நாட்டில் சமுதாயத் திருத்த வேலையோ, பகுத்தறிவுப் பிரச்சார வேலையோ எந்த ஒரு சிறிய அளவுக்கு நடக்கவேண்டுமானாலும் முதல் இலட்சியச் செய்கையாக, ஸ்லோகக் காரியமாக, துவக்கக் குறியாக, இராமாயணம் இராமன், அழிந்து ஒழிக்கப்பட்டாகவேண்டும்' என்று அறுதியிட்டுக் கூறினார்.

'தமிழனுக்கு இன்று தன்மானம் தான் தேவை. இது தாயினும் (மதத்தினும்), உயிரினும் (கடவுளினும்) சிறந்ததாகும். தாயை வெறுத்தாவது, உயிரைவிட்டாவது, மானத்தை, மனிதத் தன்மையை, ஒழுக்கத்தைக் காப்பாற்றவே, இராமனைக் கொளுத்தச் சொன்னேன்; சொல்கிறேன்' என்று அறிவித்து, குறிப்பிட்ட நாளில் இராமன் படத்தை எரிக்கும்படி திராவிடக் கழகத்தாருக்கு வேண்டுகோள் விடுத்தார். எதிர்பார்த்தபடி இக்கிளர்ச்சியும் வெற்றிகரமாக நடைபெற்றது.

## தேசப் பட எரிப்பு

இளமை தொட்டு, சாதி ஏற்றத் தாழ்வு முறைப்படி நடக்க மறுத்தவர், பெரியார் ராமசாமி. நெடுங்காலமாக, ஆழமாக, வேரூன்றி வளர்ந்து வந்துள்ள சாதி முறையை தன் வாழ்நாளிலேயே ஒழித்துக் கட்டிவிடவேண்டுமென்று பெரியார் போராடினார்.

ஆனால் இந்திய அரசியல் சட்டம் சாதி ஒழிப்பிற்கு இடம் கொடுக்கும் வகையில் அமையவில்லை; மாறாக சாதியை பாது காக்கும் முறையில் இருக்கிறது என்பது பெரியார் முடிவு. தமிழ் நாடு இந்தியாவின் ஒரு பகுதியாக இருக்கும் மட்டும் இச்சட்டத்தி லிருந்து விடுபடவோ அதை மாற்றவோ முடியாது என்று திடமாக நம்பினார். எனவே தமிழ்நாட்டைப் பிரிக்கவேண்டுமென்பதில் முனைப்பாக இருந்தார். அதற்காக அதிர்ச்சி மருத்துவமும் செய்தார். அத்தகைய அதிர்ச்சி மருத்துவங்களில் ஒன்று: 'நாட்டுப் பட எரிப்பு' என்பதாகும். தமிழ்நாடு நீங்கிய இந்திய படத்தை எழுதி, அதை ஊர்தோறும் கொளுத்தும்படி பெரியார் 1960இல் வேண்டுகோள் விடுத்தார்.

பெரியார், குத்தூசி குருசாமி, ஆதித்தனார் போன்ற பலரை, தடுப்புக் காவல் சட்டப்படி முன்னேற்பாடாக சிறைப்படுத்தினார் கள். இருப்பினும், குறிப்பிட்டபடி, தமிழ்நாடு நீங்கிய இந்தியப் படம் பல இடங்களில் எரிக்கப்பட்டது. ஈராயிரம் தொண்டர்கள் பங்குகொண்டார்கள்.

6-4-1965இல் பெரியார் கட்டளைப்படி தமிழ்நாட்டின் பல ஊர்களிலும் கம்பராமாயணத்தை எதிர்த்ததும், 1971இல் சேலத் தில் இராமன் படத்தை இரண்டாம் முறையாகக் கொளுத்தியதும் மக்களை விழிப்பூட்டும் நோக்கத்தோடு செய்யப்பட்ட அதிர்ச்சி மருத்துவமே.

தமிழ்நாட்டு நில உச்சவரம்புச் சட்டம் செல்லுபடி ஆகாதென்று 1964ஆம் ஆண்டு இந்திய உச்ச நீதிமன்றம் முடிவு சொன்னதை யொட்டி பெரியார் தமிழ்நாட்டில் கண்டன நாள் நடத்தியதும் இவ்வகையைச் சாரும்.

நடமாடும்; இல்லை, சூறாவளியெனச் சுழன்ற, பகுத்தறிவுத் தந்தை பெரியார் பெரும் புரட்சியாளர் ஆவார். கிளர்ச்சிகளின் தனிநாயகம் பெரியார். எந்தக் கிளர்ச்சியிலும் எத்தகைய வன்முறையும் வெடிக்காதபடி அடக்கிவைத்திருந்த காந்திய நாயகம் தந்தை பெரியார்.

பெரியார், நடத்திய கிளர்ச்சிகள், போராட்டங்கள், எதுவும் தம்முடைய தனி நலத்திற்காக அல்ல. கட்சியின் பெருமைக்காக வும் அல்ல. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக கொடுமைகளை, இழிவுகளை, ஏற்றுக்கிடந்த—கிடக்கும்—ஊமைகளுக்காகவே—அவர்கள் மற்ற நாட்டவர்களைப்போன்று மதிப்புள்ள மனிதர்க ளாக வாழும் சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்பதற்காகவே பெரியார் நடத்திய அத்தனை கிளர்ச்சிகளும் போராட்டங்களும்.

'இந்தியா விடுதலை பெற்றுவிட்டது என்பது சொல்லளவே; குறிப்பிட்ட காலகட்டங்களில், பொதுத் தேர்தல் நடத்தி, வாக்குரிமைக்கு வாய்ப்பு கொடுப்பதாலேயே நம்முடைய அரசியல் அமைப்பையும் நடைமுறையையும் மக்களாட்சி முறை என்று ஒப்புக்கொள்ளமுடியாது.

'மக்களின் பேரால் யாரோ சிலர், மக்களை ஏமாற்றவும் அடக்கி வைக்கவும் பழைய சாதி வேற்றுமை முதலிய கொடுமைகளை அப்படியே பாதுகாக்கவும் பொதுமக்களைச் சுரண்டவும் உருவாக்கப்பட்ட "அரக்கு மாளிகை" நம் அரசியல் அமைப்பு. தாழ்த்தப் பட்டோரும் நலிந்தோரும் பாட்டாளிகளும் இதனால் நன்மை பெற இயலாது. பழைய விலங்குகள், அநீதிகள், அப்படியே தொடரும்' என்பது பெரியாரின் மதிப்பீடு. இது எண்ணற்ற மக்களின் மதிப் பீடுமாக இருந்தது; இருக்கிறது. ஆனால்?

மற்றவர்கள் நாலுபேர் அறிய சொல்ல அஞ்சின கருத்துக்களை பெரியார் துணிந்து பறைசாற்றினார். 'கொள்கை அளவில் எவ்வளவு உயர்வாகத் தோற்றமளிக்கச் செய்தாலும் நடை முறையில் இந்தியாவின் சூழ்நிலையில் மக்களாட்சி என்பது முட்டாள்களை அயோக்கியர்கள் அடக்கி ஒடுக்கி ஏமாற்றும் திட்ட மாகவே உள்ளது, இதைக் கிலி என்று தள்ளிவிடமுடியாது.

## சமுதாய இழிவு ஒழிப்பு

புரட்சி எரிமலையாக வாழ்ந்த பெரியார், தமது தொண்ணூற்று அய்ந்தாம் வயதில், சென்னையில் தமிழர் சமுதாய இழிவு ஒழிப்பு மாநாட்டைக் கூட்டினார். கருஞ்சட்டைப் படையினர் பெரும் வெள்ளமெனக் குழுமினர். தந்தை பெரியாரின் தலைமை யில் 8, 9–12–73இல் நடந்த அம்மாநாடு, எடுத்த முடிவுகள் பல. அவற்றில் சிலவற்றைக் காண்போம்:

'சாதி என்பது எந்த இடத்திலும் இல்லாது செய்யப்பட வேண்டும். நடப்பிலும் இல்லாது பார்த்துக்கொள்ளப்பட வேண்டும். சாதி உணர்ச்சி அறவே மறையும்படி செய்யவேண்டும். இதனை வெறும் மனமாற்றத்தால் மட்டுமே செய்ய முடியு மென்று தத்துவார்த்தம் பேசி காலங்கடத்தாமல்,

'தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது; அதனை எந்த ரூபத்தில் கடைபிடித்தாலும் அது சட்டவிரோதம்' என்று அரசியல் சட்டத் தில் 17ஆவது விதி கூறுகிறதே! அவ்விதியிலுள்ள 'தீண்டாமை' என்பதற்குப் பதிலாக 'சாதி' என்ற சொல்லை மாற்றி சாதி ஒழிப்பை அரசியல் சட்டமே பிரகடனப்படுத்துவதாக அமைய வேண்டும்.

'சமுதாய இழிவினை மாற்றுகின்ற இக்கோரிக்கையை ஏற்றுக் கொள்ளாமல்; டில்லி அரசாங்கம் மறுக்குமானால் எங்களை சூத்திரர்களாக, இழி பிறவிகளாக, ஆக்கும். இப்படிப்பட்ட ஆட்சியின்கீழ் நாங்கள் குடிமக்களாக இருக்க சம்மதமில்லை என்பதை அறிவிப்பதோடு அதற்கான கிளர்ச்சிகள் நடத்துவதென முடிவு செய்யப்படுகிறது.

'தலைவர் தந்தை பெரியார் அவர்கள் இது குறித்து மத்திய அரசுக்கு ஒரு காலக்கெடு கொடுப்பதுடன் அக்காலக் கெடுவுக்குள் நமக்கு சரியான சமாதானம் தந்து உரிய நடவடிக்கையை மத்திய அரசு எடுக்கத் தவறுமானால், மாபெருங் கிளர்ச்சிக்குத் தங்களை சாந்தமும் சமாதானமுமான வழி முறைகளில் எவ்வித பலாத்கார மான செய்கைகளுக்கும் இடமில்லாமல், மேற்கொள்வதென்று முடிவு எடுக்கப்படுகிறது.

'இதற்கான கிளர்ச்சித் தேதி குறிப்பிடுவதிலும் மேற்கொண்டு காரியங்கள் செய்வதையும் பெரியார் அவர்களுக்கு இம்மாநாடு பொறுப்பளிக்கிறது.'

**மறைவு**

இப்பொறுப்பையேற்று கிளர்ச்சிகளைத் தொடங்குவதற்கு முன்பே பெரியார் 24–12–73இல் மறைந்துவிட்டார்.

# 11

## பெரியாரின் தனித்தன்மை

### புறத் தோற்றம்

சிவந்த மேனி; தடித்த உடல்; பெருத்த தொந்தி; நல்ல உயரம்; வெளுத்த தலை மயிர்; நரைத்த மீசை; நடுத்தரமான தாடி; திரண்டு நீண்ட மூக்கு; அகன்ற நெற்றி; உயர்ந்து மயிரடர்ந்த புருவங்கள்; ஆழமான கண்கள்; முதுமையிலும் ஒளிவிடும் விழிகள்; மெதுவான உதடுகள்; செயற்கைப் பற்கள்; ஒரு சாதாரண மூக்குக் கண்ணாடி.

பெசன்ட் அம்மையாரின் தலை மயிர்; பர்னாட்ஷாவின் தாடி; தாகூரைவிட அழகான மூக்கு; இவர்கள் மூவரையும்விட அழகான உருண்டை முகம்; ஒரு தனியான முகவெட்டு.

பளிங்குபோன்ற உண்மையின் கவர்ச்சி.

இது பெரியாரின் புறத் தோற்றம். அடுத்து அகத் தோற்றத்தைக் காண்போம்.

தன்மான இயக்கத் தந்தையை அவருடைய இயற் பெயர் கொண்டு அழைப்பது அரிது. அய்ம்பது ஆண்டுகளாக அவரைப் பெரியார் என்று அழைப்பது நடைமுறை.

### பெரியார்

பெரியார் மலேயா சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளுவதற்கு முன்பே, 1928இல் ரசிகமணி என்றழைக்கப்படும் திரு. டி. கே. சிதம்பரநாதர், ஈ. வே. ராமசாமியை 'பெரியார்' என்று முதன் முதலாக அழைத்தார்.

ஒரு பெரியாருக்கு இருக்கவேண்டிய தன்மைகளை அவர் பின்வருமாறு சுட்டிக்காட்டினார்:

1. அவரைப்பற்றி உலகத்தார் தப்பபிப்பிராயம் கொள்ள வேண்டும்.

2. அவரது கொள்கைகள் எங்கும் கண்டிக்கப்படவேண்டும்.

3. அவர் கடுமையாக வையவும் சபிக்கவும்படவேண்டும்.

இத்தகைய மூன்று தன்மைகளையும் பெற்றவர் ஈ.வே.ராமசாமி என்று, அவரது திருவுருவப் படத்தை திருநெல்வேலியில் திறந்து வைத்தபோது, உண்மையிலேயே இவர்தான் பெரியார் என்றழைத் தார்.

ஈராயிரம் ஆண்டுகளாக மக்களைச் சிறுமைப்படுத்திவரும் சாதி ஏற்றத்தாழ்வு, அதன் தீய விளைவுகளாகிய தீண்டாமை, நெருங்காமை, உடனிருந்து உண்ணாமை ஆகிய கொடுமைகளுக்கு எதிரான மெய்யான ஆற்றல்வாய்ந்த அணுக்குண்டான தன்மான இயக்கத்தை தமிழ்நாடு தழுவிய இயக்கமாக்கிய சாதனை செயற் கரியதே. அதைச் செய்த சிங்கத்தை ராமசாமிப் பெரியார் என்று பெருமிதத்தோடு அழைக்காமல் எப்படி அழைப்பார்கள்? ஏறத் தாழ ஒன்பதாண்டு காலம் பொதுமக்கள் ராமசாமிப் பெரியார் என்று அழைத்துப் போற்றிய பிறகு, தமிழினத்தின் தாய்க்குலம் 13–11–1938இல் சென்னையில் 'தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடாகக்கூடி அம்மாநாட்டில் ஈ.வே. ராவின் பெயருக்குமுன் 'பெரியார்' என்னும் அடைமொழி கொடுத்து அழைக்கவேண்டு மென முடிவு செய்தது.

தளபதி சி. என். அண்ணாதுரையை தமிழ் மக்கள் பல்லாண்டு காலம் அறிஞர் என்று அழைத்த பிறகுதானே, அண்ணாமலை பல்கலைக் கழகம் அதற்குரிய 'டாக்டர்' பட்டத்தைக் கொடுத்தது. தமிழர்கள், அடையாளங் கண்டு உரியபடி போற்றுவதற்குள் பொழுது சாய்ந்துவிடுவது, பழைய கதை; தொடர் கதை.

**கருமியல்ல, சிக்கனமானவர்**

பெரியார் சிக்கனத்திற்குப் பெயர் பெற்றவர். அவர் தன் னுடைய செலவைப் பொருத்துமட்டும் சிக்கனத்தை கடைப்பிடிக்க வில்லை. பிறர் தனக்கு செலவு செய்தபோதும் அதே துலாக் கோலைப் பயன்படுத்தினார்.

மண்ணோடு மண்ணாக, கண்டவர்களுக்கெல்லாம் மண்டியிட்டுக் கிடந்த தமிழ்ச் சமுதாயத்தை அடி தெரியக் கலக்கிய, தன்மான இயக்கத்தின் தந்தை ஈ. வே. ராமசாமியை 1935இல் நான் தற் செயலாகக் காண நேர்ந்தது.

திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில் 403 எண் வீட்டில் குடியிருந்த நண்பர், குத்தூசி குருசாமியைக் காணச்சென்றேன். வழியில் கண்ட நண்பரொருவர், ராமசாமிப் பெரியார் அவ்வேளை அங்கு இருப்பதாகக் கூறினார். அருகில் இருந்த பழக்கடைக்குச் சென்றேன். நாலணா கொடுத்து ஆஸ்திரேலிய ஆப்பிள் பழம்

ஒன்றை வாங்கிக்கொண்டு, குருசாமி வீட்டுக்குப் போனேன். குருசாமி என்னை பெரியாருக்கு அறிமுகப்படுத்தினார். பெரியார் எழுந்து நின்று கை குலுக்கினார். பழத்தை பெரியாரிடம் கொடுத்தேன். வாங்கிக்கொண்டதும், 'என்ன மணம்' என்று பாராட்டினார். அடுத்த நொடி,

'என்ன விலைங்க அய்யா' என்று அவருக்கே உரிய அடக்கத்தோடு கேட்டார்.

'அதிகம் இல்லை' என்றேன். விடவில்லை. மூன்றுமுறை கேட்ட பிறகு, 'நாலணா' என்றேன். பெரியாருக்கு சினம் பொங்கிற்று.

'என்ன ஐம்பம்; நாலணாவுக்கு ஒரு பழம். அந்தப் பணத்துக்கு இரண்டு சீப்பு வாழைப் பழம் வாங்கியிருக்கலாம். இத்தனை பேருக்கும் கொடுத்திருக்கலாம். ஒரு பழத்திற்கு நாலணா என்ன அநியாயம்' என்று பெரியார் கடிந்துகொண்டார். அதிர்ச்சியடைந்தேன்; ஆனால் அடங்கியிருந்தேன். ஏன்? அவருடைய சிந்தனை ஓட்டத்தின் சிறப்பு புரிந்தது. அது என்ன?

'இருப்பது சிறிதே ஆயினும் அதை எவ்வளவு அதிகமானவர்களுக்குப் பயன்படுத்த முடியுமோ அந்த வகையில் செலவிட வேண்டும்' என்பது பெரியாருடைய எண்ணம். அது நொடியில் எனக்கு விளங்கிவிட்டது. அப்புறம் அதே தவறைச் செய்யவில்லை.

அடுத்து 1940ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 25ஆம் நாள், செல்வி காந்தம்மாவும் நானும் எங்கள் திருமணத்தை பதிவு செய்வதைப் பார்க்க, பெரியார் சென்னைக்கு வந்திருந்தார். பெரியார், பதிவாளர் அலுவலகத்திற்கு எங்களுடன் வந்தால், அங்கே கூட்டம் கூடிவிடுமென்று இயக்கத் தோழர்கள் கூறியதால், பெரியாரை திருவல்லிக்கேணியில் என் மாமனார் திரு. சுப்ரமணியம் இல்லத்திலேயே இருக்கும்படி வேண்டிக்கொண்டோம். பெரியார் பெருந்தன்மையோடு இசைந்தார்.

திருமணத்தைப் பதிவு செய்தபின், நாங்கள் இருவரும் மட்டும், வழியில் புகைப்படம் எடுக்கும் நிலையத்திற்குச் சென்றோம். புகைப்படம் எடுப்பதில் சற்று காலதாமதம் ஆயிற்று. காலந்தாழ்த்தி வீட்டிற்குத் திரும்பிய எங்களைப் பார்த்து, பெரியார், 'ஏன் இவ்வளவு நேரம்? புது மணமக்கள், எங்கே போய்விட்டீர்கள்' என்று கேட்டார்.

புகைப்படம் எடுத்துக்கொள்ளக் காலதாமதம் ஆனதைக் கேள்விப்பட்ட பெரியார், 'புகைப்படம் எடுக்க என்ன கட்டணம்?' என்று கேட்டார்.

நான் 'மூன்று ரூபாய்கள்' என்றேன். 'எத்தனைப் படங்களுக்கு' என்று கேட்டார் பெரியார்,

நான் 'ஒரு படத்திற்கே' என்றதும் பெரியார் வெகுண்டார்.

உடனே அவர் 'ரூபாய்க்கு மூன்று படம் கொடுக்கிற கடைகள் ஏராளம் இருக்கையில், எப்படி ஒரு படத்திற்கு மூன்று ரூபாய்கள் கொட்டிக் கொடுக்கலாம்?' என்று கனல்கக்கக் கேட்டார்.

பதில் சொல்ல விரும்பாது திகைத்தேன். உடனிருந்த பொன்னம் பலனார், 'இவ்வளவு சிக்கனமாகத் திருமணஞ் செய்துகொண்ட அத்தான் மூன்று ரூபாய்கள்தானே பாழாக்கிவிட்டார். நீங்கள் செலவு செய்ய முன்வந்த ஈராயிரம் ரூபாய்களை மிச்சப்படுத்தி விட்டாரே அய்யா!' என்று சொல்லவும் பெரியாரின் சினம் தணிந்தது.

பொதுநலம்பற்றி சிறியோர் சொல்லினும் பொறுமையோடு கேட்டு விளக்கம் கூறும் இயல்பு பெரியாருக்கு இருந்தது. எடுத்துக் காட்டாக, 1941ஆம் ஆண்டு கோடைக்காலம். நானும் என் மனைவி காந்தம்மாளும் தஞ்சை கணபதி நகரில் புதுக் குடித்தனம் கட்டியிருந்தோம். உதவிக்காக என் மாமியார் திருமதி தங்கம்மா வந்திருந்தார். அவருடைய மாமிச சமையல் பெரியாருக்கு மிகப் பிடிக்கும்.

## பெருந்தன்மை

அவ்வமயம் தஞ்சைக்குப் பொதுக்கூட்டத்திற்கு வந்த பெரியாருக்கு என் வீட்டில் உணவுக்கு ஏற்பாடு செய்யும்படி பூவாளூர் அ. பொன்னம்பலனார் எழுதியிருந்தார். அப்படியே செய்யப் பட்டது. பொதுக்கூட்டம் முடிந்த பிறகு, ஒற்றை மாட்டு வண்டியில் பெரியார் வந்து சேர்ந்தார்.

அப்போது பெரியாருக்கு நல்ல காய்ச்சல்; வயிற்றுக் கோளாறு. மருத்துவர் சொன்னதையும் கேளாது, மருந்து சாப்பிட்டுக் கொண்டே திருச்சியிலிருந்து பொதுக்கூட்டத்திற்கு வந்து, வழக்கம் போல நீண்ட நேரம் பேசினார். எங்கள் வீட்டிற்கு வந்தபோது களைப்புற்று இருந்தார்.

உடல் நலமற்று இருப்பதை உடன் வந்த தோழர்கள் தெரிவித்தார்கள். உடனே, பெரியாரிடம் வேண்டினேன்: 'அய்யா! மருத்துவர் சொற்படி நொடிப்பொழுதில் கஞ்சி வைத்துக்கொடுக்கச் சொல்கிறேன். தயவு செய்து அதைக் குடித்துவிட்டு, ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள்.

'தங்களுக்கு விருந்து கொடுத்தேன் என்னும் பெருமையைவிட, தங்கள் உடல் நலம் கெடாதிருக்க உதவி செய்தேனென்பதையே நான் விரும்புகிறேன். தயவு செய்து இன்று கஞ்சி குடியுங்கள்' என்றேன். பெரியார் ஒப்புக்கொண்டார்.

உடன் வந்தவர்கள், உணவு அருந்தினார்கள். பெரியார் பக்கத்தில் நான் உடகார்ந்திருந்தேன்.

நான் பெரியவர்களிடமிருந்து ஒதுங்கி ஒதுங்கிப்போவதைப் பலர் தவறாகக் கருதுகிறார்கள்—இறுமாப்பு என்று எண்ணுகிறார்கள். உண்மையான காரணம் என்ன? எவ்வளவு பெரியவரோடு பேச நேர்ந்தாலும், குழைந்து பேசாமல் உள்ளதை உள்ளபடியே உளறிவிடும் குறை உடையவன், நான். அன்று பெரியாரோடு பேசும் போது அக்குறை வெளிப்பட்டது.

'அய்யா! நீதிக் கட்சிக்கு நல்ல தலைவர் தேவை. அதேபோல, தன்மான இயக்கத்திற்கும் ஒருவர் தேவை. முந்தியதற்கு, சில பேர்களாவது நினைவுக்கு வரும். தன்மான இயக்கத்திற்கு, சாதி ஒழிப்பு இயக்கத்திற்கு, குருட்டு மூட நம்பிக்கையைத் தகர்க்கும் இயக்கத்திற்கு, ஈராயிரத்து அய்ந்து நூறு ஆண்டுகளுக்குப் பிறகு, தாங்கள் ஒருவரே கிடைத்திருக்கிறீர்கள். புரட்சிக்கு தலைமை தாங்கவேண்டிய தாங்கள் ஒரு கட்சிக்குத் தலைவரானது எனக்குப் பிடிக்கவில்லை. தன்மான இயக்கத்தின் வேலை சூடு பிடிக்காது என்று அஞ்சுகிறேன்' என்றேன். நொடியும் தயங்காது,

'அய்யா சொல்வது, தப்பல்ல. அப்படித்தான் நானும் நினைக்கிறேன். நான் என்ன செய்யட்டும்? நான் சிறையில் இருந்தபோது, இப்படிச் செய்துவிட்டார்கள்.

'சர் பன்னீர்செல்வம், தாழ்த்தப்பட்டவர் முன்னேற்றத்திற்கும் நம் இயக்கத்திற்கும் பெரும் ஆதரவு கொடுத்தவர். அப்படிப்பட்டவர்களின் முடிவை தட்டிவிட வெளியிலா இருந்தேன்? மெல்ல, நீதிக் கட்சியை நம் வழிக்கு மாற்றுவோம். இல்லாவிட்டால், சரியான தருணம் பார்த்து, வேறொருவரிடம் ஒப்படைத்துவிடுவோம்' என்றார்.

உணவருந்திக்கொண்டிருந்த எஸ். வி. லிங்கமும் பொன்னம் பலனாரும் பெரியாரிடம் வந்தபோது, 'அத்தான் ஏதோ சொல்லிக்கொண்டிருந்ததைக் கேட்டோம்' என்றார்கள். பெரியார் அப்போதாவது வெகுளுவாரென்று எண்ணி ஏமாந்தேன். வெகுளாமல், 'அவர் சொல்வது, தன்னுடைய ஆதாயத்துக்கு இல்லையே. மக்கள் நன்மையைக் கருதியே சொல்லுகிறார், அதில் பொருள் இருக்கிறது' என்றார்.

பதின்மூன்று ஆண்டுகளுக்குப்பின் பொதுக் கல்வி இயக்குநரானேன். பதின்மூன்று ஆண்டுகள் மாநிலத்தின் பெரிய அதிகாரியாக இருந்தேன். தந்தை பெரியார், ஆண்டுக்கு இரண்டொருவருக்குப் பரிந்துரை கொடுத்தால் பெரிது. அப்பரிந்துரைக் கடிதங்களை அவருடைய நம்பிக்கைக்கு உரிய தோழர் குத்தூசி

குருசாமிக்கே அனுப்புவார். 'முடிந்தால் அருள்கூர்ந்து கவனிக்கச் சொல்லுங்கள்' என்றே பெரியார் எழுதுவார். குத்தூசியார் அவற்றை என்னிடம் காட்டிவிட்டுக் கொண்டுபோய் விடுவார். அப்பரிந்துரைகள் பலித்தனவா? அய்ந்தில் இரண்டு பழுதில்லை எனலாம். அவ்வளவே!

### பரிந்துரையில் செம்மை

தன்னேரில்லாத தலைவராக விளங்கிய பெரியார் தன் செல்வாக்கை மனம்போனபடி பயன்படுத்தவில்லை.

ஒருமுறை, கல்வித்துறையில் கல்லூரி ஆசிரியர் பணியில் இருந்த ஓர் இயக்கத் தோழர், பெரியாரிடம் சென்றார். தனக்கு மாற்றுதலுக்குப் பரிந்துரைக்கக் கோரினார். பெரியார், அப்படியே என்னிடம் காட்டும்படி, குருசாமிக்கு பரிந்துரைக் கடிதம் எழுதினார். அதற்கு மறுநாள், பெரியாருக்குப் பிறந்த நாள். அன்று திருச்சியில் தங்கியிருந்தார். அதே ஆசிரியர், பெரியாருக்கு வாழ்த்துச் சொல்லும் சாக்கில் மீண்டும் சென்றார். வாழ்த்து சொல்லிவிட்டு, மாலைக்குப் பதில் என்று சொல்லி, அய்ந்து ரூபாய்களைக் கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்ட பெரியார், 'இருங்கள் அய்யா' என்றார். சில மணித்துணிகளில் எல்லோருக்கும் 'கேக்' பரிமாறப் பட்டது. பெரியார் கலகலப்பாக இருந்ததைக் கண்ட ஆசிரியர்,

'அய்யா! ஓய்ந்தபோது, நெ. து. சு.வுக்கு தொலைபேசியில் ஒரு சொல் சொல்லுங்கள்; மாறுதல் கிடைத்துவிடும்' என்று ஆசிரியர் கூறினார். பெரியார் என்ன செய்தார்?

'மன்னிக்கணும்! டைரெக்டருக்கு போனில் சொல்லும் அளவுக்கு என் நிலை உயர்ந்துவிடவில்லை; யாரிடம் எவ்வளவு மரியாதையோடு நடக்கவேண்டுமென்று தெரிந்துகொள்ளுங்கள்' என்று சொல்லியபடியே, ஆசிரியர் கொடுத்த அய்ந்து ரூபாய் நோட்டை அவரிடமே திணித்துவிட்டார்.

பிறகு, உரிய காலத்தில் மாறுதல் கிடைத்தது. அப்போது அவ்வாசிரியரே, என்னிடம் மேற்கூறிய நிகழ்ச்சியைச் சொல்லி, நன்றி பாராட்டினார்.

### நன்றி எதிர்பாராத உதவி

பிறர்க்கு உதவுதல் பெரியார் இயல்பு. அதேபோல் நன்றியை எதிர்பாராமையும் அவருடைய தனி இயல்பு ஆகும்.

ஒருமுறை பெரியாரை நான் கண்டபோது, இயக்கத்தில் பெரியாருக்கு நெருக்கமான ஒருவர் அவருடன் இருந்தார். பேச்சு எங்கெங்கோ சென்றது.

அப்போது, உடனிருந்த தோழர்,

'அய்யா! தாங்கள் தொடர்ந்து போராடவில்லை என்றால், வகுப்புரிமை ஆணையாகி இராது, அதை தமிழர்கள் நினைக்கா விட்டாலும் உங்களிடம் நேரில் வந்து பரிந்துரை வாங்கிப் போகிறார்களே, அவர்களாகிலும் நினைக்கிறார்களா? ஓர் நாளைக்கு இருபது பேராவது பரிந்துரைக் கடிதம் பெற்றுக் கொண்டு போகிறார்கள். அதில் ஒன்றாகிலும் பலித்திருக் காதா? ஆனால் பத்து நாளைக்கு ஒருவர்கூட நன்றி சொல்ல வருவதைப் பார்க்கவில்லையே!' என்று அங்கலாய்த்தார்.

பளிச்சென்று பெரியார், 'போ! இவ்வளவுதான் உனக்குத் தெரிந்தது! நான் தண்ணீர்ப் பந்தல் வைத்து நடத்துகிறேன், தாகம் தீர்ந்ததும் நகர்ந்து போகாமல், நன்றி சொல்லிக் கொண்டிருந்தால், மற்றவர்களுக்கு தண்ணீர் ஊற்றுவது தவக்கப் படும்' என்று, குறையேதும் இழையாமல், வெற்றியை அறிவிப்பது போல் மகிழ்ச்சியோடு பதில் உரைத்தார். இவர் அல்லவா தலைவர்? பெரியார்?

பெரியாரின் விருத்தோம்பல் உண்மையிலேயே ஒரு தனித் தன்மை வாய்ந்தது. நாலணாவிற்கு ஆப்பிள் வாங்கிக் கொடுத்து 'டோஸ்' வாங்கிக்கொண்ட நான், 1942இல் பயிற்சி பெறும் மாவட்டக் கல்வி அதிகாரியாக ஈரோட்டுக்குச் சென்றேன். வெறுங் கையோடு சென்றேன். நானும் என் மனைவியும் பெரியார் வீட்டில் மூன்று நாட்கள் தங்கினோம். அப்போது கண்ட தென்ன?

## விருந்தோம்பலில் சமத்துவம்

பெரியார் வீடு, சத்திரம்போல இருந்தது. தன்மான இயக்கத் தோழர்கள் மட்டுமா? முன்னர், பெரியாரோடு, காங்கிரசு இயக்கத்தில் தொண்டாற்றிய தொண்டர்களுக்கும் அது உணவுக் கூடம். சாப்பாடு எப்படி? இரண்டொரு பதார்த்தங்களோடு நல்ல சாப்பாடாகவே இருக்கும். ஆனால் ஒன்று, மாவட்ட அதிகாரியோ அதற்கு மேற்பட்டவர்களோ வந்துவிட்டால், அவர் களுக்கு ஒருவகை சாப்பாடும், உதவி தேடிவரும் மாணவர்களுக்கு ஒருவகை உணவும் பெரியார் வீட்டில் இல்லை. முதலாளித்துவ சூழ்நிலையில் வளருகிற பல 'பெரிய மனிதர்'களுக்கு தங்களுக்

கென்று ஒன்றும் செய்யவில்லையே என்று குறை ஏற்படும். அவர்கள், 'பெரியாரா? அவர் கருமியாயிற்றே' என்பார்கள்.

## துல்லிய கணக்கு

உண்மை என்ன? காங்கிரசில் இருந்த காலத்திலும் சரி, பிந்திய நீண்ட பொது வாழ்க்கைக் காலத்திலும் சரி, நாள்தோறும் பல பேர், பெரியார் வீட்டில் உண்டு போவதோடு நிற்கவில்லை. அவர்களிலே பல பேர்கள் பண உதவியும் பெற்றுப் போவார்கள்.

எத்தனை ஆயிரம் கூட்டங்களுக்கும் மாநாடுகளுக்கும் இயக்கப் பேச்சாளர்களை தன் சொந்தச் செலவில் அழைத்துக்கொண்டு போய் இருந்தார்; அனுப்பி வைத்திருக்கிறார்.

கிட்டத்தட்ட பதினைந்து ஆண்டு காலமாகினும் பெரியார், பெரிதும் தன் பணத்தைச் செலவு செய்து இயக்கம் நடத்திய பிறகே, பொதுக் கூட்டங்களுக்கு அழைப்போர், பயணச் செலவை ஏற்கும் நிலை ஏற்பட்டது என்பதை நினைவுறுத்துவது என் கடமை. பெரியார், சிக்கனக்காரர் ஆக இல்லாமல், ஓட்டைக் கையராக இருந்திருந்தால், தன்மான இயக்கம், அய்ந்தாறு ஆண்டுக்குள், நிதி வசதியில்லாமல், கூட்டம் நடத்த முடியாமல் மறைந்துபோயிருக்கும்.

குறைந்தது ஆண்டுக்கு ஆயிரம் கூட்டங்களிலாவது, பெரியார் பங்குகொண்டார். பிற்காலத்தில் கூட்டந்தோறும் மாலைக்குப் பதில் சிலரோ, பலரோ, சிறு தொகையோ, பெருந்தொகையோ அளித்தது உண்மை. அய்ம்பது காசு கொடுத்திருந்தாலும் அதை அப்போதைக்கப்போது குறித்து வைத்து, ஒழுங்காகப் பணத்தைக் காத்து, கணக்கோடு பொதுத் தொண்டிற்கு விட்டு வைத்தவர் பெரியார்.

## கல்லூரிக்கு நன்கொடை

தமது குறிக்கோளை அடைவதற்குத்தக்க விலை கொடுக்க பெரியார் தயங்கியதில்லை.

பார்ப்பனர் அல்லாதார் கல்லூரிக் கல்வி பெற வேண்டு மென்பதில் பெரியார் முனைப்பாக இருந்தார்.

எனவே, பெரியார், திருச்சியில் கலைக் கல்லூரி ஒன்றைத் தொடங்குவதற்காக, அய்ந்து இலட்சம் ரூபாய்களை அரசுக்கு நன்கொடையாக வழங்கியது நாடறிந்த செய்தியாகும்.

உயர் கல்வி இயக்குனர் என்ற முறையில் இதைப்பற்றி கவனிக்கும் பொறுப்பு என்னுடையதாக இருந்தது.

பெரியார், ஈரோடு சிக்கைய்யாவை டாக்டர் இலட்சுமணசுவாமியிடம் அழைத்துச் சென்றார். தனியார் கல்லூரி தொடங்க ஏற்பாடு செய்துவிட்டார். அய்ந்து இலட்சம் மூலதனம் எடுத்து வைக்கவும் ஒப்புக்கொண்டு வந்தார். இச் செய்தி என் காதுக்கு எட்டியது.

'அய்யாவுக்கோ உடன் இருப்பவர்களுக்கோ கல்லூரி நடத்தும் தொல்லை வேண்டாம். தங்கள் சார்பில் நடத்தும் கல்லூரியில், பார்ப்பனரல்லாத ஆசிரியர்களையே நியமிப்பார்கள். நம்மவர், நாலுபேர், நான்கு திங்கள் ஒற்றுமையாக இருக்கமாட்டார்கள். குழுச் சண்டை, நிர்வாகத்தோடு மோதுதல் நாள்தோறும் நடக்கும்; இயக்க வேலையைப் பாதிக்கும். அய்யா! கல்லூரி நடத்தவேண்டாம்' என்று பெரியாருக்குச் சொல்லி அனுப்பினேன்.

'அதுவும் சரி! டாக்டர் இலட்சுமணசுவாமி முதலியார் என்ன நினைப்பார்? அய்ந்து இலட்சம் கட்டுவதற்கு அஞ்சி, ஒதுங்கி விட்டேனென்று நினைப்பாரே! சொன்ன அய்ந்து இலட்சத்தைக் கொடுத்து விடுகிறேன். அரசே, கல்லூரி நடத்த ஏற்பாடு செய்யமுடியுமா?' என்று பெரியார் கேட்டார். இதற்கு ஏற்கெனவே முன் எடுத்துக்காட்டு இருந்தது.

முதல் அமைச்சர் மீ. பக்தவத்சலம் பெரியார் விருப்பத்திற்கு இணங்கினார். அதைப் பெரியாருக்குத் தெரிவித்தேன். திருச்சியிலிருந்த பெரியார் தானே தொலைபேசியில் பேசினார். அய்ந்து இலட்ச ரூபாய்க்கு காசோலையை எனக்கு அனுப்புவதாக கூறினார். பெரிய தொகையைக் கொடுப்பதால், அய்யாவே முதல் அமைச்சரிடம் காசோலையைக் கொடுப்பது நல்லது என்றேன். தயங்கினார். இருமுறை வற்புறுத்தினேன்; இசைந்தார்.

குறிப்பிட்ட நாள், பெரியார் மீ. பக்தவத்சலத்தை அவர் இல்லத்தில் கண்டு, காசோலையை வழங்கினார். பெற்றுக் கொண்ட முதல் அமைச்சர், 'அய்யா, விரும்புகிற பெயரை கல்லூரிக்கு இடலாம்' என்றார்.

'மன்னிக்கணும், என் பெயர் வைப்பதற்காக இதைக் கொடுக்கவில்லை' என்று பெரியார் பதில் சொன்னார்.

'தங்கள் பெயர் வேண்டாமென்றால் வேறு எவருடைய பெயரை வேண்டுமென்றாலும் மெதுவாகச் சொல்லி அனுப்புங்கள், அப்படியே போட்டுவிடுவோம்' என்று திரு. பக்தவத்சலம் மீண்டும் சொன்னார்.

'மன்னிக்கவேண்டும்; தேவைப்பட்டால், இன்னும் பணம் கொடுக்கலாம்' என்று சொல்லிவிட்டு, பெரியார் விடைபெற்றுக் கொண்டார்.

**பெரும் வாய்ப்பு இழப்பு**

திரும்பிப் போகும்போது, என்னை தன் வண்டியில் வரும்படி அழைத்தார். அதில் இருவரும் பயணம் செய்யும்போது, 'மதுரைப் பல்கலைக் கழகம் அமைப்பதற்கு இடையூறு இல்லாதபடி திருச்சியிலும் ஒரு பல்கலைக் கழகம் நிறுவுவதானால், இருபத்தைந்து இலட்சம்போல் நான் கொடுக்கலாமென்று முதல் அமைச்சரிடம் தனியாகச் சொல்லுங்கள்' என்று பெரியார் கட்டளையிட்டார். அச் செய்தியை உரியவரிடம் சேர்த்துவிட்டேன். மீண்டும் சில ஆண்டுகளுக்குப்பின், இதே செய்தியை பெரியார் சார்பில் கொண்டுபோய்ச் சேர்த்தேன். பயன்படுத்திக்கொள்ளவில்லை. தமிழர்கள், தும்பைவிட்டு வாலைப் பிடிப்பதில், உலகப் பரிசுக்கு உரியவர்கள் ஆயிற்றே!

சிக்கனக்காரராகிய பெரியாரின் நிதி உதவி கல்லூரி அமைக்க மட்டுமே என்று எண்ணிவிடக்கூடாது. சமூக வளர்ச்சிக்கும் கை கொடுத்தது.

திருச்சி பொது மருத்துவ மனையில் குழந்தைகள் பகுதிக்குக் கட்டடம் அமைக்க, பெரியார் ரூபாய் ஒரு இலட்சம், நன்கொடை வழங்கினார். அவர், ஈரோடு, அரசினர் மருத்துவ மனையில், புது கட்டடம் கட்டவும் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கினார்.

எத்தனைக் கலப்புத் திருமணங்களுக்கு சீர்திருத்தத் திருமணங்களுக்கு பெரியார் பணஉதவி செய்துள்ளார்! பெரியாரால் அல்லவா பல்லாயிரம் புரட்சியாளர்கள் தலை நிமிர்ந்து நடக்கிறார்கள் என்பதை, நன்றியோடு நினைப்போர் ஏராளம்.

என் ஒருவனுக்கே, பெரியார் தம் பணத்தில், 'நெ. து. சுந்தர வடிவேலு பகுத்தறிவுப் பரிசு'க் கட்டளையை ஈரோடு சிக்கையா கல்லூரியில் நிறுவியதை எண்ணினால், உள்ளம் உருகுகிறது.

தந்தை பெரியார் தன்னலமின்றி வாழ்நாள் முழுவதும் பொது நலம் பேணும் தலைவராக விளங்கினார். அரசியல் நாகரிகத்திற்கு தலை சிறந்த எடுத்துக்காட்டாக மிளிர்ந்தார். வன்முறைக்கு இடம்கொடாது பொது நலம் பேணினார்.

**தன்னைப்பற்றி**

1948ஆம் ஆண்டு, சென்னை மாகாணத்தை காங்கிரசு அமைச்சர்கள் ஆட்சி புரிந்தார்கள். அப்போது, இரண்டாவது முறையாக, ஆறு முதல் எட்டு வகுப்புகள் வரை, இந்தி கட்டாய பாடமென்று திணிக்கப்பட்டது. எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் என்று ஆணையிட்டது, காங்கிரசு ஆட்சி. இதை முன்னரே குறித்துள்ளோம். பெரியாருக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் அவருடைய இயக்கத்திற்கும் பற்பல தொல்லைகளைக் காங்கிரசு ஆட்சி கொடுத்தது; தடைகளை விதித்தார்கள். அன்னிய ஆட்சியோ பார்ப்பன ஆட்சியோ, கொடுக்காத தொல்லைகளை, பார்ப்பனரல்லாதாரை முதல்வராகவும் பெரும்பாலான அமைச்சர்களாகவும் கொண்ட ஆட்சி செய்வதை நாடறியச் செய்யவும் தம்முடைய நிலையை விளக்கவும் அதை நல்ல வாய்ப்பாகப் பெரியார் பயன்படுத்திக்கொண்டார்.

'நான் யார்' என்ற தலைப்பில், தந்தை பெரியார், 1948ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 'விடுதலை' நாளேட்டில் பின்வருமாறு எழுதினார்.

'அன்புள்ள திராவிட மந்திரிமார்களே!

நான் யார்?

உங்கள் சொந்த எதிரியா?

உங்கள் இன எதிரியா?

உங்கள் உத்யோகம் பதவிபற்றி பொறாமைப்படுகிறவனா?

அல்லது இந் நாட்டை அன்னியனுக்குக் காட்டிக் கொடுப்பவனா?

அப்படிச் செய்தாவது ஏதாவது பயன் பெறவேண்டும் என்கிற ஆசையிலோ நிலையிலோ, உள்ளவனா?

இதுவரை

என் பொது வாழ்வின் பயனாக நான் ஏதாவது பலன் பெற்றவனா?

அல்லது எனது வாழ்க்கைத் தரத்தையாவது உயர்த்திக் கொண்டவனா?

உண்மையில்

நான் பார்ப்பன துவேஷியா?

எந்தப் பார்ப்பனருக்காவது நான் சொந்தத்தில் எதிரியா?

'டாக்டர் சி. இராசகோபாலாச்சாரியாருக்கு நாளைக்கும் கறுப்புக்கொடி பிடிக்கச் செய்யவேண்டியவனாக நான் ஆனாலும் அவரிடத்தில் சொந்தத்தில் சிறிதாவது வெறுப்போ, தோஷமோ அல்லது அன்புக்குறைவோ, மதிப்புக்குறைவோ எனக்கு உண்டு என்று அவராவது வேறு யாராவது சொல்லமுடியுமா? இன்றுதா னாகட்டும். எனது அரசியல் கொள்கை என்பதுகூட திராவிடநாடு, வடநாட்டான் ஆதிக்கத்திலிருந்து அரசியலிலும் பொருளாதாரத்தி லும் பிரிந்து, பர்மா, சிலோன்போல, ஒரு தனி சுதந்திர நாடாக இருக்கவேண்டுமென்பதைத் தவிர மற்றபடி காங்கிரசு அரசியல் கொள்கையில், திட்டத்தில் நான் எதற்கு விரோதி?

'இந்த திட்டத்திலும் என்னிடம் இரகசிய முறை இருக்கிறதா?

என் விஷயத்தில் இதுவரை பார்ப்பன ஆதிக்க மந்திரிகளால் செய்யப்படாத காரியங்களை நீங்கள் செய்தீர்கள். அவர்கள் அனுமதித்துவந்த காரியங்களை நீங்கள் தடுத்தீர்கள். அவர்கள் காட்டிய சலுகையைக்கூட நீங்கள் காட்ட மறுக்கிறீர்கள்?'

இது ஒளிமறைவில்லாத உண்மையான ஊடுருவியப் படப்பிடிப்பு ஆகும்.

பெரியார் தனிப்பட்டமுறையில் எவருக்கும் பகைவரல்லர்; எவரிடமும் வெறுப்பு உடையவர் அல்லர்; இரகசியத் திட்டம் தீட்டு பவர் அல்லர்; நாட்டை அன்னியனுக்குக் காட்டிக் கொடுத்தவர் அல்லர்; இப்படிப்பட்ட பெரியார், ஏன் நாள்தோறும் மணி தோறும் பகைப் புயலை, தூற்றல் மண்மாரியைக் கடக்க நேர்ந்தது?

பெரியார் சொற்களாலேயே விளக்கம் பெறுவோம்:

'சகோதரிகளே! நமது கொள்கை வருணாச்சிரம தர்மத்திற்கும், முதலாளி தத்துவத்திற்கும் விரோதமானதேயாகும். மேலும், அவற்றிற்கு அனுகூலமாயிருக்கும் கடவுள், மதம் என்பனவாகிய வற்றிற்கும் விரோதமேயாகும். இன்னும் எங்குபோய் நிற்கும் என்று என்னாலேயே சொல்லமுடியாது. ஆகவே, நீங்கள் எதற் கும் உங்கள் பகுத்தறிவை தைரியமாய் உபயோகியுங்கள்' என்று பெரியார் தெளிவுபடுத்தியதை 11-10-1931 நாளைய 'குடி அரசில்' காணலாம்.

மற்றோர் சமயம் தந்தை பெரியார் கூறியவற்றைப் படிப்போம்:

'ஈ.வே.ராமசாமி என்கின்ற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி, உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப்போல், மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற் போட்டுக்கொண்டு அதே பணியாய் இருப்பவன்.

'அத்தொண்டு செய்ய எனக்கு ''யோக்கியதை'' இருக்கிறதோ இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணி செய்ய யாரும் வராத

தினால் நான் அதை மேற்போட்டுக்கொண்டு தொண்டாற்றி வருகிறேன்.'

'இதைத் தவிர வேறு பற்று ஒன்றும் எனக்கு இல்லாததாலும் பகுத்தறிவையே "அடிப்படையாகக்கொண்டு" கொள்கைகளையும் திட்டங்களையும் வகுப்பதினால் நான் அத்தொண்டுக்குத் தகுதி உடையவன் என்றே கருதுகிறேன். சமுதாயத்தொண்டு செய்பவனுக்கு இது போதும் என்றே கருதுகிறேன்.'

**திராவிடர்**

திராவிட சமுதாயம் என்பதுபற்றி பெரியார் கண்ணோட்டத்தில் ஒரு விளக்கம். தென்னகத்தில் உள்ள பார்ப்பனர்கள் தங்களை, ஆரியர்கள் என்று உண்மைபற்றியோ, உரிமைபற்றியோ இரண்டும் இல்லாமலோ நெடுங்காலமாக அழைத்து வருகிறார்கள்; மற்ற இந்துக்களை அவர்கள் 'சூத்திரர்' என்றே அழைத்து வந்தார்கள். ஏதோ கிராமப் புரோகிதனோ அர்ச்சகனோ இப்படிச் சொன்னார்கள் என்று அலட்சியப்படுத்தமுடியாத நிலையே நீடித்து வந்தது. பார்ப்பனர்கள் எவ்வித முற்போக்கு வாதிகளானாலும் தனி வாழ்க்கையில் பூணூலை நீக்கிவிட்டு, கலப்புத் திருமணத்தைச் செய்து பார்த்து மகிழ்ந்த பெரியவர்கள் ஆனாலும், பார்ப்பனரல்லாதாரை 'சூத்திரர்' என்று கருதுவதும் சொல்லுவதும் தங்களுடைய இரண்டாவது இயற்கையாக இருந்த நிலை, நேற்று வரை தொடர்ந்தது.

பார்ப்பனர்கள், 'சூத்திரர்கள்' என்று எவருக்குப் பட்டம் சூட்டி வந்தார்களோ அவர்களைப் பெரியார் 'திராவிடர்' என்று அழைத்தார்! இப்பட்டியலில் சேர மறுத்தால் தாங்கள் சூத்திரப் பட்டியலில்தான் இருக்கவேண்டும். எனவேதான், 'மனித இன'ப்பற்று மட்டுமே பகுத்தறிவு வாதிகளுக்கு இருக்கலாம் என்று சொன்ன பெரியார், நம்மை நடைமுறை விவகாரங்களுக்கு திராவிடர் என்று அழைத்தார். எனவே நாம் தமிழர்களா? திராவிடர்களா? என்னும் குழப்பம் தேவையில்லை.

பெரியாரின் சமூக இழிவு நீக்கப் பணியை காமராசரும் வெளிப்படையாகப் பாராட்டினார்:

தன்னாட்சி இந்தியாவில், சென்னை மாகாணத்தின் முதல் அமைச்சராக இருந்து திரு. சி. இராசகோபாலாச்சாரியார் ஈராண்டு ஆட்சி செய்தார். அப்போது, மதுரையில் டி. வி. எஸ். நிறுவனத்தின் பெருவிழாவொன்று நடந்தது. அதில் கலந்து கொண்டவர்களில், முதல் அமைச்சர் இராசகோபாலாச்சாரியார், தமிழ்நாட்டுக் காங்கிரசின் தலைவர் கு. காமராசரும் இருந்தார்கள்.

முதலமைச்சர் பேசும்போது, 'காலம் மாறிவிட்டது. நிறைய சூத்திரர்கள் படித்து பட்டம் பெற வந்துவிட்டார்கள்' என்று சொல்லிவிட்டார்.

அடுத்து பேசிய காமராசர், 'இராஜாஜி போன்ற பெரியவர்களே ''சூத்திரர்'' என்னும் சொல்லை இன்னும் பயன்படுத்தும்போது, பெரியார் கட்சி வளராமல் என்ன செய்யும்?' என்று இடித்துரைத்தார்.

தந்தை பெரியார் ஈ.வே. ராமசாமி, அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக, பொதுச் செல்வமாக விளங்கினார். சமத்துவச் சுனையாக, பொங்கும் பெருஞ் சுனையாக, இருந்து வாழ்வித்தார். புத்தருக்குப் பிறகு, 'புத்தியைப் பயன்படுத்து' என்று அறிவுறுத்திய பகுத்தறிவு இயக்கத்தின் பகலவனாக ஒளிவிட்டார். இருப்பினும் ஈ. வே. ராமசாமி என்பவர் தனி மனிதராயிற்றே! தன்னேரிலாத, ஈ. வே. ராமசாமி என்னும் தனி மனிதரின் தனித் தன்மைகள், அவற்றின் சிறப்புகள் சிலவற்றை இங்கே குறிப்பிடுதல் நலம். ஏன்? அவற்றைக் கருதக் கருதக் கல்லும் கரையும்; உள்ள உள்ள ஊனும் உருகும். நினைக்க நினைக்க நியாய உணர்வு நிலைக்கும்.

### பதவிக்கு உரிய மதிப்பு

பெரியாரின் போற்றுதற்குரிய மற்றொரு தனித்தன்மை பதவிக்கு உரிய மதிப்பையும் சிறப்பையும் யார் வகிக்கின்றார்கள் என்பதை முன்னிருத்தாமல், அளிக்க முதுமைப் பருவத்திலும் தவறாமையாகும்.

1965இல் பாக்கிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையே போர் மூண்டது. இந்திய மக்கள், பல்வேறு வேற்றுமைகளை மறந்தார்கள்; ஒன்று பட்டார்கள்; ஆதரவைத் திரட்டினார்கள். பாதுகாப்பு நிதிக்கு பொன்னையும் பணத்தையும் அள்ளி அள்ளி வழங்கினார்கள். பேரூர்களிலும் சிற்றூர்களிலும் பாதுகாப்பு முயற்சிகளுக்கு ஆதரவுக் கூட்டங்கள் நடந்தன. அனைத்துக் கட்சியினரும் அவற்றில் கலந்துகொண்டார்கள்.

திருச்சி நகரில் அத்தகைய கூட்டமொன்று நடந்தது; புனித யோசப் கல்லூரி விளையாட்டு அரங்கில் நடந்தது. தந்தை பெரியார் ஈ.வே.ராமசாமியும் அதில் உரையாற்றினார். பெரியார், வழக்கம்போல், கூட்டம் தொடங்குவதற்கு சில மணித் துளிகள் முன்னதாகவே, மேடைக்குவந்து, முன் வரிசையில் குறிப்பிட்ட இடத்தில் அமர்ந்துவிட்டார்.

குறித்த நேரத்தில், அந்நாள் முதல் அமைச்சர், மாண்புமிகு மீ. பக்தவத்சலம் காரில் வந்து இறங்கினார். பொத்தானை

அழுத்தியதுபோல், தந்தை பெரியார், கைத்தடியை ஊன்றிக் கொண்டு எழுந்து, நின்றார். பக்கத்தில் இருந்தவர்கள் குறுக்கிட்டார்கள். 'தள்ளாத வயதில், தாங்கள் உட்கார்ந்திருப்பதை எவரும் தவறாகக் கருதமாட்டார்கள். தயவுசெய்து உட்காருங்கள்' என்று வேண்டினார்கள். பலிக்கவில்லை.

'மன்னிக்கவேண்டும்; மன்னிக்கவேண்டும்' என்று பெரியாரின் திருவாய் மலர்ந்தது. முதல் அமைச்சர் ப்க்தவத்சலம் பல படியேறி, மேடைக்கு வரும்வரை, பெரியார், தடியூன்றி நின்ற காட்சி, எவர் நெஞ்சை நெகிழ வைக்காது? பக்தவத்சலம் பெரியாரை அணுகியதும் உருகிப்போனார். 'தாங்கள் நிற்கலாமா? தயவுசெய்து உட்காருங்கள்' என்று பக்தவத்சலம் வேண்டினார். பெரியார் அப்போதும் மசியவில்லை.

'முதல் அமைச்சருக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையைக் குறைக்கலாங்களா?' என்று கூறிக்கொண்டே நின்றார். முதல் அமைச்சர் தன் இருக்கையில் அமர்ந்த பிறகே, பெரியார் உட்கார்ந்தார். அப்போது, தொண்டு செய்து பழுத்த பழமாக விளங்கிய பெரியாருக்கு வயது என்ன? எண்பத்தேழு.

அடுத்த நாள். முதல் அமைச்சர் பக்தவத்சலம் என்னை தொலைபேசியில் கூப்பிட்டார். தன் பங்களாவிற்கு வரும்படிச் சொன்னார். ஏதோ, என்னவோ என்ற பதைபதைப்போடு சென்றேன்; முதல் அமைச்சரைக் கண்டேன்.

பக்தவத்சலம் முகத்திலும் பாசத்தின் பரிவின் ஒளியைக் கண்டேன். மேற்படி நிகழ்ச்சியை விவரித்துவிட்டு, தழதழத்த குரலில், 'பெரியார் என்றால் பெரியார்தான். அவருடைய பெருந்தன்மை யாருக்கு வரும்', 'பொதுக் கல்வித்துறையை இரண்டாகப் பிளந்து, உங்களை உயர் கல்வி இயக்குநராக மாற்றிவிட்டதைப்பற்றி எவ்வளவு கோபப்பட்டார்! நாள் தவறாமல், என் செயலைக் கண்டித்து, மணிக்கணக்கில் பேசிவருகிறார். இதை எதிர்த்து, மாநிலம் தழுவிய கிளர்ச்சி செய்யப்போவதாகவும் அதற்கு விரைவில் நாள் குறிக்கப்போவதாகவும் எல்லோரும் ஆயத்தமாகும்படியும் அவர் கைப்படவே அறிக்கைவிட்டு, அதிக நாட்கள் ஆகவில்லை. அந்தப் பெரியார், இவ்வளவு மரியாதை காட்டியதை நினைத்தால் பரவசமாகிறது' என்று நெகிழ்ச்சியோடு கூறினார்.

திரு. பக்தவத்சலத்தை அதுவரை—முப்பத்தைந்து ஆண்டு தொடர்பில்—அவ்வளவு நெகிழ்ச்சியில் நான் கண்டதில்லை. திரு. பக்தவத்சலமே, தந்தை பெரியாரைப் புகழ்ந்தபோது, என் உள்ளத்தில் பொங்கிய மகிழ்ச்சிக்கோர் எல்லையேது! தந்தை

பெரியார், உலகப் பெரியாரே என்னும் உணர்வோடு, பெருநடையோடு, வீடு திரும்பினேன்.

பெரியவர்களை மட்டுமா பெரியார் மதித்தார்? இல்லை. எல்லோரையும் மதித்தார். அரும்புமீசை மாணவர் நெருங்கினாலும் எழுந்துநின்று வரவேற்பதும், போகும்போது, மீண்டும் எழுந்துநின்று வழியனுப்புவதுமான பெருந்தன்மை பெரியாரின் தனிச் சிறப்பாகும்.

வைதீகர்கள், வெல்லக்கட்டியைக் கிள்ளி, வெல்லப் பிள்ளையாரைச் செய்துவைப்பார்கள். மீண்டும் கொஞ்சம் வெல்லத்தைக் கிள்ளி, அதே வெல்லப் பிள்ளையாருக்குப் படைப்பார்கள். அதேபோல, தந்தை பெரியார், எங்கெங்கோ இருந்த, எண்ணற்றவர்களை தன்மானமுள்ள, பகுத்தறிவைப் பயன்படுத்தும் தொண்டு செய்யும் மனிதர்களாக்கினார். அவர்களுக்குப் பெருமை செய்து மகிழ்ந்தார், மானுடத்தின் பக்தராகிய, தந்தை பெரியார் ஈ.வே.ராமசாமி.

செட்டி நாட்டரசர், டாக்டர் எம். ஏ. முத்தையாவிற்கு மணிவிழா. வைதீக முறைப்படி 2–8–1965 அன்று செட்டி நாட்டில் சிறப்பான விழா எடுத்தார்கள். பல்லாயிரவர் கண்டு மகிழ்ந்தார்கள். அதில் நானும் ஒருவன். சில நாட்களுக்குப்பின் 11–8–1965 அன்று மாலை மணிவிழாவையொட்டி, சென்னை செட்டிநாடு மாளிகையில், தேனீர் விருந்து நடந்தது. எத்தனை ஆயிரம் பேர்கள் உண்டு மகிழ்ந்தார்கள் என்ற கணக்கு எளிதில் பிடிபட்டிருக்காது. அவ்வளவு பெருங் கூட்டம்.

தந்தை பெரியார் ஈ. வே. ராமசாமியும் அவர் துணைவியார் மணியம்மையும் தொடக்கத்திலேயே—அய்ந்தரை மணிக்கே வந்து கலந்துகொண்டார்கள்.

என் மனைவி காந்தம்மாவும் நானும் ஆறு மணிபோல் காரில் செட்டிநாட்டு மாளிகைக்குள் நுழைந்தோம். உள்ளே நுழையும் நெடுவழியில், பாதியில் சக்கர வண்டியில் தந்தை பெரியார் அமர்ந்து காத்துக்கொண்டிருந்தார். அருகில் திருமதி மணி அம்மையாரும் சில தோழர்களும் இருந்தார்கள். பெரியாரின் ‘வேன்னை’ எதிர்பார்த்து காத்துக்கொண்டிருந்தார்கள்.

பெரியாரைக் கண்டதும் என் காரை சட்டென்று நிறுத்தச் சொன்னேன். அவருக்கு அய்ந்தாறு மீட்டர் தொலைவில், நான் காரைவிட்டு இறங்கி, நடந்தேன். இல்லை, பசுவைக் கண்ட கன்றைப்போல் ஓடினேன். அதற்குள், மணியம்மையார், பெரியார் இடம் காதில் ‘நம்ம டைரெக்டர் வருகிறார்’ என்று சொன்னார்கள். அதுவும் என் காதில் வீழ்ந்தது. அடுத்த நொடி, பெரியார்

தடியை ஊன்றிக்கொண்டு, எழுந்து நின்றார். நான் பதறிப் போனேன். வீழ்ந்தடித்துச் சென்றேன்.

'அய்யா! நான் உங்கப் பையன். என்னைக் கண்டு தாங்கள் நிற்கலாமா?' என்று பதைப்போடு உருகினேன்.

'சுந்தரவடிவேலு நம்ம பிள்ளை. டைரெக்டருக்கு என்ன மரியாதை கொடுக்கவேண்டுமென்று மற்றவர்களுக்குத் தெரிய வேண்டாமா?' என்று பதில் கூறினார். கையைப் பிடித்துக் குலுக்கினார். இதற்குள் கூட்டம் கூடிவிட்டது. மெல்ல, பெரியாரை நாற்காலியில் அமரச்செய்தோம். 'வேன்' வந்ததும் பெரியாரை அனுப்பிவைத்தோம்.

வாழ்நாள் முழுவதும் புரட்சி சிந்தனைகளிலும் கிளர்ச்சிகளிலும் ஈடுபட்டிருந்த பெரியார் சட்டம் ஒழுங்கைக் காப்பதிலும் முன்னின்றார்.

அறிஞர் அண்ணா மறையவும் 'ஒன்றை நினைக்கின் அது ஒழிந்து மற்றொன்று ஆகும்' என்னும் நிலை உருவாயிற்று.

அய்ந்தாண்டில் தமிழ்நாட்டு முதியோர் அனைவரையும் எழுத் தறிவு உடையவர்களாக்கிவிடவேண்டும்; மாணவர்களும் ஆசிரியர் களும் தீவிர அரசியலில் ஈடுபடக்கூடாது. இவ்விரு கொள்கைக்கு ஆதரவான சூழ்நிலையை உருவாக்கவேண்டும். இவ்விரண்டு பணிகளுக்காக, பெரியார் விரும்பியபடி, முதல் அமைச்சர், பேரறிஞர் அண்ணாதுரை புதுதில்லி, இந்திய கல்வி அமைச்சகத்தில் பணிபுரிந்துகொண்டிருந்த என்னை, தமிழ்நாட்டு அரசின் முதன் மைக் கல்வி ஆலோசகனாக அழைத்துவந்தார். அவர் மறையவும் நான் சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக வேண்டிய நிலை வந்தது. தந்தை பெரியாரின் ஆணைக்குக் கட்டுப்பட்டு அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.

நான் துணைவேந்தராக இருந்தபோது, ஈரோடு சிக்கைய கல்லூரியில் சங்கடமான நிலையொன்று உருவாயிற்று. அது என்ன?

தற்காலிகமாக நியமிக்கப்பட்ட ஆறு, ஏழு துணைப் பேராசிரியர் களின் பணி, அடுத்த கல்வியாண்டில் தேவையில்லை என்று, அவர் களுக்கு வேலை நீக்க அறிவிப்பு கொடுக்கப்பட்டது. அவர்கள் கொதித்தார்கள். பல்கலைக் கழகத்திற்கு எழுதினார்கள். வேலை நிறுத்தம் தொடங்க நேரிடும் என்பதும் புலனாயிற்று.

வேலை நீக்க அறிவிப்பு சரியா தப்பா என்று பல்கலைக் கழகம் முடிவு சொல்லவேண்டும். அதற்குமுன், கல்லூரி நிர்வாகத்தின் வாதத்தைக் கேட்கவேண்டும். இது விதிமுறை.

கல்லூரி நிர்வாகக் குழுவின் தலைவர் தந்தை பெரியார்; தாளாளர் திரு. கோவிந்தராசன். 'தன்னை எந்த நிர்வாகக் குழுக் கூட்டத்திற்கும் எதிர்பார்க்கக்கூடாது; தன்னிடம் நன்கொடை எதிர்பார்க்கக்கூடாது' என்னும் இரு நிபந்தனைகளின்பேரில், தந்தை பெரியார் குழுத் தலைவராக இருந்தார். ஒரு குழுக் கூட்டத்திற்கும் பெரியார் சென்றதில்லை. பெரியாருக்கும் மேற் கூறிய வேலை நீக்கத்திற்கும் தொடர்பு இல்லை என்பது எனக்குத் தெரியும். மேலும், எல்லாக் கடிதப்போக்குவரத்துகளும் தாளாள ரோடுதான் என்பது விதிமுறை. இருப்பினும், பெரியாருக்கு நியாயத்தைப் புரியவைப்பது எளிது என்பது என் அனுபவம். எனவே, திருச்சியில் தங்கியிருந்த தந்தை பெரியாரிடம் தொலை பேசியில் பேசினேன்.

'ஈரோடு சிக்கைய்யா கல்லூரியில் ஆறேழு துணைப் பேராசிரியர் களுக்கு வேலை நீக்க அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். அது பெரிய சிக்கலை எழுப்பியுள்ளது. நான், நான்கு நாட்களில் திருச்சி வரவேண்டும். அப்போது தங்களோடு நேரில் பேசுகிறேன். அதுவரை தாளாளர் மேற்கொண்டு ஒன்றும் செய்யவேண்டா மென்று சொல்லுங்கள்' என்று கேட்டுக்கொண்டேன்.

'வைஸ்சான்சலர் அய்யா என்னைத்தேடி வரவேண்டாம். நானே தங்களைப் பார்க்கவருகிறேன். அதற்குள் கோவிந்தராச னோடு பேசிவிட்டு, தகவல்களோடு வருகிறேன்' என்றார் பெரியார்.

'தகவல்களைச் சேகரித்துக்கொள்ளுங்கள். நான் வரும்போது உதவியாக இருக்கும். தயவுசெய்து தாங்கள் வரவேண்டாம்' என்று வேண்டினேன். பெரியார் திட்டவட்டமான பதில் சொல்ல வில்லை.

மூன்றாம்நாள் மாலை, அய்ந்தரை மணியளவில், விடுதலை அலுவலக நிர்வாகி, திரு. நா.ச. சம்பந்தம் என்னோடு தொலை பேசியில் பேசினார்.

'அய்யா திருச்சியிலிருந்து இப்போதுதான் வந்துள்ளார்கள். தாங்கள் வீட்டிலிருக்கிறீர்களாவென்று விசாரிக்கச் சொன்னார்' என்றார்.

நான் 'இங்கே வருவதற்காக அப்படிக் கேட்டிருக்கலாம். தயவு செய்து, பெரியாரிடம் தகவல் கொடுக்காமல் பத்துப் பன்னிரெண்டு மணித் துளிகள் தப்பிவிடுங்கள். நான் அதற்குள் அங்கு வந்து விடுகிறேன்' என்றேன்.

திரு. சம்பந்தம் 'மன்னிக்கணும். அய்யா கோபப்படுவார்'

என்றார். நான் அடம் பிடித்தேன். அவரும் கட்டுப்பட இசைந்தார்.

நான் விரைந்து சென்றேன். பெரியார் அறை திறந்து இருந்தது. கட்டிலில் அய்யா உட்கார்ந்திருந்தார். நான் சட்டென்று உள்ளே நுழைந்துவிட்டேன்.

என்னைக்கண்ட பெரியார், எழுந்தபடியே, கைகூப்பி வணங்கிக் கொண்டே, 'சம்பந்தம்! சம்பந்தம்' என்று உரத்துக் கூப்பிட்டார்.

சம்பந்தம் மெதுவாக, உள்ளே காலடி எடுத்து வைத்தார். அவ்வளவுதான். பெரியார் அவரிடம்:

'உனக்கு இவ்வளவுக்கு ஆய்விட்டதா? என்.டி.எஸ். அய்யா ஊரில் இருக்கிறாரா என்று கண்டுபிடி என்றால், நேராக அவரிடமா தெரிவிப்பது? அவரை இங்கேயா வரவழைப்பது.' இன்னும் சில சூடான சொற்களைக் (கொச்சை இல்லை) கொட்டினார்.

நான் தலையிட்டேன். சம்பந்தம்பேரில் குற்றமில்லை. நான் வெளியே புறப்படும் நேரம் மணியடித்தது. நானே எடுத்து விட்டேன். என் வற்புறுத்தலினால் அவர் இருதலைக்கொள்ளி எறும்பானார்' என்று விளக்கினேன். எனக்காகக் கோபத்தை அடக்கிக்கொண்டார். அப்புறம்?

எல்லோரையும் வெளியேபோகச் சொன்னார். பெரியார், கோவிந்தராசன், நான் மூவர் மட்டுமே இருந்தோம். பெரியார் கண்சாடை காட்டினார். கோவிந்தராசன் கதவை மூடிவிட்டு வந்தார்.

'வேலை நீக்க அறிவிப்பு எப்படி வந்தது என்று ''அய்யாவுக்கு விளக்கு'' என்று பெரியார் கோவிந்தராசனுக்கு ஆணையிட்டார்.'

'கோவிந்தராசன் பதவிகள் காலியாகும்போது, அவ்விடங்களுக்கு, முதலில் ஒராண்டிற்கு, ஆட்களை நியமிப்போம். ஆண்டு முடிவதற்குமுன், கல்லூரி முதல்வரின் கருத்தைக் கேட்போம். அவர் கருத்தில் எவர் எவருடைய பணி சரியாக இருக்கிறதோ, அவர்களைத் தொடர்ந்து ஒழுங்காக வேலையில் அமர்த்திக்கொள் வோம். அவருக்கு திருப்தியில்லாதவர்களை, அறிவிப்புக் கொடுத்து நிறுத்திவிடுவோம். இதோ பாருங்கள்' என்று சொல்லிக்கொண்டே ஒரு காகிதத்தை நீட்டினார். அது என்ன? ஒரு பட்டியல். என்ன பட்டியல்? முந்தைய ஆண்டுகளில் இப்படி நீக்கப்பட்டவர்கள் பட்டியல். முந்தைய ஆண்டுகளில், எந்த ஆண்டும் இருவருக்குமேல் நீக்கப்படவில்லை. அதைப் பார்த்ததும் முன்பு நீக்கப்பட்டவர்கள் இடங்களில் யாருடைய பரிந்துரையின் பேரில் ஆசிரியர்களை நியமித்தீர்கள் என்று கேட்டேன். கல்லூரி

முதல்வர் பரிந்துரையின்பேரில், நியமித்தோம் என்று கூறி, பட்டிய லைத் தந்தார். முகவரிகளும் இருந் தன.

நான், 'இப்போது வேலை நீக்கம் செய்யப்போகிறீர்களே! அவர்களுக்குப் பதில் எவர்களையாவது நியமித்துவிட்டீர்களா?' என்று கேட்டேன்.

'சில இடங்களுக்கு நியமித்துவிட்டோம். மூன்று இடங்களுக்கு இனியே நியமிக்கவேண்டும்' என்றார். கோவிந்தராசன் அத்தகவல் களையும் காட்டினார். என் மனதில் கருத்தொன்று பளிச்சென்று மின்னிற்று.

'சம்பந்தப்பட்ட துணைப் பேராசிரியர்களைப்பற்றி முதல்வர் எழுத்தில் புகார் செய்தாரா?' என்று வினவினேன். குழுக் கூட்டத்தில் வாயால் கூறுவார் என்பது பதில். 'நீங்களாவது அவர்களிடம் விளக்கம் கேட்டதுண்டா?' இல்லை என்ற பதில் வந்தது.

'அய்யா! நான் மட்டும் தங்களோடு தனியாகப் பேசலாமா?' என்று தயங்கித் தயங்கிக் கேட்டேன்.

உடனே கோவிந்தராசன் எழுந்து போய்விட்டார்.

'அய்யா! நான் தாளாளர் கோவிந்தராசனையும் முதல்வரையும் நம்புகிறேன். கல்லூரியின் நலத்திற்காகவே இதுவரை இப்படி நடந்திருக்கலாம். வழக்கு வந்தபிறகு, வழிமுறைகளைக் கவனிக்க வேண்டிய நெருக்கடி ஏற்படுகிறது. முதல்வரிடம் எழுத்துமூலம் புகார்களை வாங்கியிருக்கவேண்டும். அதன்பேரில் அவர்களுடைய விளக்கங்களைப் பெற்று குழுவின்முன் வைத்திருக்கவேண்டும். விளக்கங்களை ஒப்புக்கொள்வதற்கு இல்லை என்று குழு கருது மானால், அம்முடிவைக் கூறி அறிவிப்புக்கொடுத்திருந்தால் சரி. அப்படிச் செய்யாததால், நடவடிக்கை சரியல்ல' என்று நான் கூறிமுடிப்பதற்குள், பெரியார் 'அப்படித்தான் நினைத்தேன். திருச்சியிலிருந்து வரும்போதே, அவரிடம் சொல்லிவிட்டேன்; எல்லோரையும் வேலைக்கு வைத்துக்கொள்ளுங்கள் என்று. இன்னும் ஏதாவது செய்யணுங்களா?' என்று பெரியார் கேட்டார்.

'அவர்கள் எடுத்த நடவடிக்கையின் நியாயத்தைக் குறைசொல்வ தாக நினைக்கவேண்டாம். வழிமுறை சரியில்லை என்பதற் காகவே, தங்கள் முடிவுப்படி நடக்கவேண்டியதாகிறது' என்றேன்.

'அது சரி' என்று சொல்லிவிட்டு, கோவிந்தராசனை அழைத் தார்.

'அய்யாவும் நான் சொன்னபடியே நினைக்கிறார்கள். ஊருக்குப் போனதும் வேலை நீக்க அறிவிப்பை இரத்து செய்துவிடு' என்றார்.

கோவிந்தராசன் புன்முறுவலோடு,

'அப்படியே ஆகட்டுங்கள்' என்று சொல்லி ஓரடி, எடுத்து வைத்தார்.

'அப்போது பெரியார், ''ஏன்? நான் சொன்னபடி சந்தானத்தைக் காரியங்களைக் கவனிக்கச் சொல்'' என்று கூறி விடை கொடுத்தார்.'

கோவிந்தராசன் சென்ற பிறகு, 'அவர் தாளாளர் பதவியை விட்டுக்கொடுத்துவிட்டார்; சந்தானத்தைத் தாளாளராகப் போட்டுவிட்டேன்' என்று பெரியார் விளக்கம் சொன்னார். பதறிப்போனேன்.

'அது எதற்கு அய்யா? கோவிந்தராசனே தொடர்ந்து இருக்கலாமே' என்று நான் சொன்னபோது,

'என்ன இருந்தாலும் இருதரப்பாரும் மனிதர்களே; அவநம்பிக்கையோடே எதையும் பார்ப்பார்கள். புதியவர் வந்தால் புதிய கண்ணோட்டம் வரலாம். 'பாருங்கள்—சம்பந்தம் பண்ணிய தப்பு ''அய்யா'' வரும்படி ஆயிற்று. மன்னிக்கணும்' என்றார், உலகப் பெரியார் ராமசாமி.

இந்த மன்னிப்பு கேட்க, முந்நூற்று இருபது கிலோ மீட்டர் தூரம், வேன் இல்லாததால், காரில், கடும் வெய்யிலில் வந்த முதியவருக்கு ஆசிரியர் சமுதாயம் எப்படி நன்றிசெலுத்தப் போகிறதோ!

## இந்திய அரசுக்கு ஆதரவு

திராவிட நாட்டுப் பிரிவினைக்குப் போராடிய பெரியார், அப்போராட்டங் காரணமாக பல்முறை சிறை வாழ்க்கையும் 'பூம்பூம்' மாட்டுத் தமிழர்களின் எதிர்ப்பு அலைகளையும் தாங்கிக்கொள்ள நேர்ந்தது வரலாற்று உண்மைகளாகும். அத்தகைய தந்தை பெரியார் ராமசாமி விடுதலை பெற்ற இந்தியா சிக்கிக் கொண்ட எல்லாப் போர்களிலும் இந்திய அரசுக்கு ஆதரவாகவே நின்றார்; எழுதினார்; பேசினார்.

பிரிவினைவாதியாம் தந்தை பெரியார் எவ்வளவு இந்தியப் பற்றாளராக விளங்கினார் என்பதை உணரும் அரிய வாய்ப்பு ஒருமுறை எனக்குக் கிட்டியது.

1971ஆம் ஆண்டு நவம்பர் திங்கள், கடைசி வாரம், பெரியார், சென்னைக்கு வந்து சில நாட்கள் தங்கியிருந்தார். அப்போது நான், சோவியத் நாட்டில் பதினைந்து நாட்கள் சுற்றுப் பயணஞ்

செய்து, நட்புறவு கூட்டங்களில் கலந்துகொண்டு, சென்னைக்குத் திரும்பிவந்தேன்.

பெரியார், சென்னையில் இருப்பதைக் கேட்டு, அவரைப் பார்க்கச் சென்றேன். என்னை அன்பொழுக வரவேற்ற பெரியார், தனக்கு அருகில் கட்டிலின்மேல் உட்காரச் சொன்னார், கீழ்ப் படிந்தேன்.

பயணத்தைப்பற்றி சில மணித் துளிகள் பேசினார். அடுத்து, மிகுந்த கவலையோடு, 'இன்னும் பதினைந்து நாட்களில் பாக்கிஸ்தான் நம்மோடு சண்டைக்கு வந்துவிடும். அப்போது இரஷ்ஷிய உதவி, உடனே கிடைக்குமா? உதவி உடன்படிக்கை காகிதத்தோடு நிற்குமா? இரஷ்ஷிய உதவி கிடைத்தால் பிழைத் தோம். இல்லாவிட்டால்...' சொற்றொடரை முடிக்கவில்லை. அக்கறை தோய்ந்த கவலை தெரிந்தது.

எத்தனை கொடுமைகளுக்கு ஆளானபோதிலும் இந்திய நாடு தோற்க வேண்டுமென்று எண்ணாத பெரியாரை, வெற்றி பெற்று வாழவேண்டுமே என்று ஏங்கிய பெரியாரை அன்று புதுக் கோணத் தில் புரிந்துகொண்டேன்.

கொலைக் குற்றம் சாட்டப்பட்டிருப்பவருக்காக வாதாடும் வழக் கறிஞர், கொலைப் பெருக்கத்துக்கு ஊற்றுக்கால் என்று நினைப்பது தவறல்லவா? சட்டம், ஒழுங்கு, அமைதி கெடச் செய்பவர் என்று கருதுவது நியாயமாகுமா?

சூத்திரர் என்று குற்றம்சாட்டப்பட்ட கோடிக்கணக்கான வர்களை அப்பொய்க் குற்றச்சாட்டிலிருந்து விடுவித்து ஆக வேண்டுமென்னும் பெருந்துடிப்பில், திராவிட நாடு பிரிந்தால் அங்கே சமதர்மப் பொருளியல் முறையையும் சமுதாய சமத்து வத்தையும் நடைமுறையாக்குவது எளிதாகும் என்று சரியாகவே கணக்கிட்டார் பெரியார். எனவே, திராவிட நாட்டை பிரித்து விடுங்கள் என்று உரத்து வாதாடினார். பெரியார் கருத்துக்களை எதிர்த்து அரை நூற்றாண்டை வீணாக்கிய பிறகே மக்களுக்குத் தெளிவு ஏற்படும். எனவே இதில் பொதுமக்கள் போதிய ஆதரவு காட்டவில்லை. திராவிட நாட்டுக்காக வாதாடிய பெரியார் எவ்வளவு இந்திய பற்றாளர் என்பதை அவ்வேளை உணர்ந்தேன்.

**உண்மை என்றால் நூற்றுக்கு நூறு உண்மை**

வைக்கம் போராட்டத்தின்போது உண்மை என்றால் நூற்றுக்கு நூறு உண்மையே இருக்கவேண்டும் என்று அறிவித்த பெரியார்,

அதை எவ்வளவு விழிப்பாகப் பின்பற்றினார் என்பதைக் காட்டும் நிகழ்ச்சி இதோ:

1973ஆம் ஆண்டு ஜூன் திங்கள்; தந்தை பெரியார் திருச்சியில் தங்கியிருந்த நாள், வந்த பல பார்வையாளர்களில், டாக்டர் சற்குருதாஸ் ஒருவர். அவர், திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியின் முதல்வராக இருந்தவர்.

டாக்டர் தாசை, தமக்கே உரிய தனிப் பாசத்தோடு, தந்தை பெரியார் வரவேற்றார். சில மணித் துளிகள் இருவர் நலம்பற்றி பேச்சு. பிறகு, டாக்டர் தாஸ், பெரியாரிடம் ஒரு சீட்டைக் கொடுத்தார். பெரியார் அதை நொடியில் படித்து முடித்தார்.

படித்து முடித்ததும், தாஸ் பெரியாரைப் பார்த்து, 'அய்யா, இந்த பெண் என் மகள். மருத்துவக் கல்லூரிக்கு மனுப் போட்டிருக்கிறாள். அய்யா பார்த்து, சொல்லவேண்டியவர்களிடம் ஒரு சொல் சொன்னால், அவளுக்கு இடம் கிடைத்துவிடும். அவள் எதிர்காலம் ஒளிமயமாகிவிடும். எங்களைப் போன்றவர்களுக்கு அய்யாவே அடைக்கலம்' என்று வேண்டிக்கொண்டார்.

இதற்கு 'இந்த அம்மாள் வாங்கியிருக்கிற மதிப்பெண்ணுக்கு தானாகவே இடம் கிடைக்கவேண்டும். முந்தி வந்திருந்தால், எவ் வித தயக்கமும் இல்லாமல், சொல்லியிருக்கலாம்.' 'என் யோக்கிய தைக்கு நான் சொல்கிற பரிந்துரைக்காக, ஆண்டுக்கு இரண் டொரு இடம் கொடுப்பார்கள். ஏற்கெனவே, அதற்குமேல் சொல்லிவிட்டேன். இதையும் நான் சொல்லி, இவ்வளவு மதிப் பெண் பெற்றவருக்கு இடம் தவறிவிடக்கூடாதே' என்பதே என் கவலை. 'நிறைய மதிப்பெண் இருப்பதால், வேறு எவர் வழியாக வாகிலும் ஒரு பரிந்துரையைப் பெறுங்கள்; இடம் உறுதியாகக் கிடைக்கும்' என்று பெரியார் பதில் அளித்தார்.

நம்பிக்கையுடைய கிறுத்தவராகிய டாக்டர் சற்குருதாஸ், 'அய்யா தங்கள் வாழ்த்து பலிப்பது உறுதி. எதற்கும் இச்சீட்டு தங்களிடமே இருக்கட்டும்' என்று சொல்லிவிட்டு, விடைபெற்றுக் கொண்டார்.

சில வாரங்களுக்குப் பிறகு, எங்கெங்கோ பயணம் செய்துவிட்டு, தொண்டு செய்து பழுத்த பழமாகிய பெரியார், திருச்சிக்குத் திரும்பினார். சிறிது நேரத்தில், டாக்டர் சற்குருதாஸ், திருமதி சற்குருதாஸ், செல்வி சற்குருதாஸ் ஆகிய மூவரும் பெரியார் மாளிகைக்கு சென்றார்கள்: வெறுங்கையோடா? இல்லை,

பெரிய மாலையும் தட்டு நிறையப் பழங்களும் கொண்டு போனார்கள். பெரியாருக்குக் காணிக்கையாக்கினார்கள்.

பெரியார், 'இந்த அம்மாளுக்கு நான் பரிந்துரைக்கவில்லை. அவர்கள் வாங்கிய மதிப்பெண்ணே இடம் தேடித் தந்திருக்கும். இல்லையென்றால் வேறு எவரோ உதவியிருக்கலாம். என்னாலே இடம் கிடைக்கவில்லை' என்று, குழந்தைகளுக்கே இயல்பான தன்மையில் உண்மையை வெளியிட்டார்.

'இருந்தால் என்ன அய்யா! அப்போதே சொன்னேனே அய்யா! தங்கள் வாழ்த்தே பலிக்குமென்று. தாங்கள்தானே எங்களைப் போன்றவர்களுக்கு ஆதரவு, பாதுகாவல், நம்பிக்கை, வாழ்வு.' நெஞ்சுருகக் கூறினார், டாக்டர் சற்குருதாஸ்.

இந்நிகழ்ச்சியை 6-1-'74 அன்று திருச்சியில் நடந்த பெரியார் இரங்கல் பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டார், டாக்டர் தாஸ். 'மற்றவர்களைப்போல, அமுத்தலாக இருந்திருக்கவில்லை, பெரியார். எப்படியோ கிடைத்த வெற்றிக்கு தான் பொறுப் பில்லை என்று நன்றி சொல்லும் எங்களிடமே சொல்லத் தேவை யில்லை. உண்மை; முழு உண்மையில் பெரியாருக்கு இருந்த பற்றல்லவா அவரை அப்படிச் சொல்லச் செய்தது? பெரியாரின் வாய்மையை, நிகழ்ச்சியை நினைக்குந்தோறும் உள்ளம் உருகு கிறது' என்று உருக்கத்தோடு உரையாற்றினார். நேரில் கேட்ட என் போன்ற பல்லாயிரவர் கண்கள் குளமாயின.

## இராசாசியின் பாராட்டு

எப்போதோ ஒருமுறை பெரியாரைப் பார்த்த திரு. சற்குருதாஸ் மட்டுமா பெரியாரின் உண்மைத் தன்மையைக் கண்டு உருகினார்? பொது வாழ்க்கையின் தொடக்கக் காலத்தில் ஈ. வே. ராவின் குருவாய், நண்பராய் தோழராய் விளங்கியவரும், பின்னர் பல்லாண்டு காலம் எதிரும் புதிருமாக விளங்கியவருமான மூதறிஞர் இராசகோபாலாச்சாரியாரும் பெரியாரிடம் அத்தகைய சிறப்பினைக் கண்டார்.

காந்தி நூற்றாண்டு விழாவையொட்டி தென்னிந்திய வர்த்தக சபை நடத்திய கூட்டத்தில் பேசிய இராசகோபாலாச்சாரியார் 'பெரியார் யோக்கியமானவர், நாணயமானவர் என்றே நான் நினைக்கிறேன். அவருடைய சிலைக்கு அடியில் என்ன எழுதப் பட்டுள்ளனவோ அவற்றை பலபேர் ஆட்சேபிக்கின்றனர். ஆனால் நான் ஆட்சேபிக்கவில்லை. ஒருவர் எந்தவிதமான மனிதரோ அதையும் நாம் அறிந்துகொள்வது நல்லதே' என்று குறிப் பிட்டார்.

இத்தகைய இழையளவு பொய்யும் கலவாத உண்மை உணர்வு அல்லவா பெரியாரை, காங்கிரசின் வாய்ப்புகளை நொடியில் உதற

வைத்தது? சாதியை ஒழிக்க வாழ்நாள் முழுதும் போராடச் செய்தது? ஆண் பெண் ஒரு நிலை சமுதாயத்தை உருவாக்க அறுபது ஆண்டு உழைக்க வைத்தது? கடவுள் நம்பிக்கையைத் தகர்க்க இயக்கம் நடத்த வைத்தது? பெரியாரின் இப் போராட்டங்களில் எது அவருக்கு தனிப்பட்ட முறையில் ஆதாயம்? இல்லாத புகழைச் சேர்த்தது?

### அஞ்சாமை

உண்மையை நிலைநாட்ட அஞ்சாமை தேவை: பெரியார், அஞ்சாமையின் பேருருவாக விளங்கினார். மனித வாழ்க்கையின் பல்வேறு பகுதிகளில், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக, புனிதமாக, கேள்விக்கு இடம் இல்லாதவைகளாகக் கருதப்பட்டு வந்த கருத்துகளை, கொள்கைகளை, நடைமுறைகளை தலைகீழாகத் தூக்கிப் போட்டு, அத்தகைய செயலால் தமக்கோ, தன்னைச் சேர்ந்தவர்களுக்கோ, எவ்வித கேடும் விளையவில்லை என்பதை மெய்ப்பித்துக் காட்டியவர், புரட்சிச் சிந்தனையாளராம், தந்தை பெரியார் ஈ. வே. ராமசாமி. அரை நூற்றாண்டு காலம், பலன் கருதாது, அத்தகைய பெருந் தொண்டினை, சலிப்பின்றி, ஆற்றி வந்த பெரியாரின் அஞ்சாமை ஈடு இணையற்றது. அதைபற்றி, தமிழ்த் தென்றல், 'நவசக்தி' ஆசிரியர், தொழிற்சங்க முன்னோடி, திரு. வி. கல்யாணசுந்தரனார் கூறுவதைக் காண்போம்:

'ஈ. வே. ராவிடம் ஒருவித இயற்கைக் கூறு அமைந்துள்ளது. அதனின்றும் அவரது தொண்டு கனிந்தது. அஃதென்ன? அஃது அக உணர்வு வளர்ந்து செல்லும் பேறு. அப்பேறு பலருக்கு வாய்ப்பதில்லை. மிகச் சிலர்க்கே வாய்க்கும்.

'அகவுணர்வு வளர்ச்சிக்கு ஊற்று எது? அஞ்சாமை. அஞ்சாமைக்குத் தோற்றுவாய் எது? உரிமை வேட்கை.

'உரிமை வேட்கை ஓங்க ஓங்க அஞ்சாமை எழுந்து பெருகும். அஞ்சாமை பெருகப் பெருக அகவுணர்வு வளர்ந்துகொண்டே போகும். அகவுணர்வு வளர்ச்சியினூடே பிறங்கி வருவது உண்மையும் வாய்மையும் மெய்மையும் செறிந்த அறத் தொண்டு.

'உரிமை வேட்கை, அஞ்சாமை முதலியன ஈ. வே. ராவின் தோற்றத்திலேயே பொலிதல் வெள்ளிடை மலை.

'அறத்தொண்டு கனிந்த வாழ்வினர் இன்னாரென்று எப்படி அறிதல் கூடும்? அதற்குச் சில அறிகுறிகள் உண்டு. அவை, நட்பிடைக் குய்யம் வையாமை; கருத்து வேற்றுமை காரணமாகக் காழ்ப்புக்கொண்டு பகைமை கொள்ளாமை; வருங்கால

முணர்ந்து கடனாற்றல்; காலத்துக்கேற்ற சீர்திருத்தஞ் செய்ய முனைதல்—முதலியன.'

அறத்தொண்டு கனிந்த வாழ்வினர் ஈ. வே. ரா. என்பதற்கான அறிகுறிகள் அனைத்தையும் நாம் கண்டோம்.

'ஈ. வே. ரா. நட்புத் திறனுடையார் என்பதும், கருத்து வேற்றுமைக்கு மதிப்பளிப்பார் என்பதும் விளங்குதல் காண்க.'

பெரியாரின் அஞ்சாமை இயல்புக்கு சான்றாக, திரு. வி. கல்யாணசுந்தரனார், காட்டிய நிகழ்ச்சி இதோ:

1924இல் ஈ. வே. ரா. மயிலாப்பூர் மந்தைவெளியில் ஒரு சொற்பொழிவு ஆற்றினார். அதற்காக, அவர்மேல், 124 ஏ பிரிவின்படி 'அரச வெறுப்பு' வழக்கு தொடரப்பட்டது. வழக்கு விசாரணையின் பொருட்டு அவர் ஈரோட்டிலிருந்து சென்னைக்கு வந்திருந்தார். நாளை வழக்கு விசாரணை. எத்தனை ஆண்டுகள் தண்டனை விதிக்கப்போகிறார்களோ என்ற கவலை எனக்கு. இரவு உண்டிக்குப்பின், பாலசுப்ரமணிய பக்த ஜன சபையின் வெளித் திண்ணையில் நானும் ஈ. வே. ராவும் படுத்திருந்தோம். இரவு முழுவதும் எனக்குத் தூக்கமில்லை. ஈ. வே. ரா. கவலையின்றிக் குறட்டை விட்டுக்கொண்டு தூங்குகிறார். நடு இரவில் விடா மழை பெய்தது. குளிர் காற்றும் வீசிற்று. நான் எழுந்து உட்கார்ந்துகொண்டேன். ஈ. வே. ரா. அப்பொழுதும் கவலையின்றி உறங்குவதைக் கண்டேன். அவருடைய மனம் இரும்பு மன்ம் என்று நினைத்தேன். காலையில் எழுந்ததும் 'இரவு மழை பெய்தது தெரியுமா?' என்றேன். 'தெரியாது; நன்றாய்த் தூங்கி விட்டேன்' என்றார். அப்பொழுதுதான் ஈ. வே. ராவின் அஞ்சா நெஞ்சத்தை அறிந்தேன். துன்பத்தைப்பற்றிக் கவலைப்படாத வீரத்தையும் உணர்ந்தேன்.

**பண்பாளர்**

தந்தை பெரியார் ஈ. வே. ராமசாமி என்றால், நாத்திகர் என்னும் காட்சியே முதலில் மின்னும். அது தவறும் அல்ல. அந்த நாத்திகர், கடவுள் நம்பிக்கையாளரிடம் எவ்வளவு பண்போடு நாகரீகத்தோடு நடந்துகொண்டார் என்பதை வெளிப்படுத்தும் மூன்று நிகழ்ச்சிகளைக் காண்போம்.

பல்லாண்டுகளுக்கு முன்பு, தமிழ்நாட்டில், பள்ளியின் பொற்காலம் நிலவியது. ஊர்தோறும் குழு அமைத்து, பணம் திரட்டி, பள்ளிகளில் நடுப்பகல் உணவைக் கொடுத்தார்கள். பள்ளிக்கூட பகல் உணவுத் திட்டம் படிப்புக்குத் துணை நின்றதோடு, எல்லாச்

சாதிப் பிள்ளைகளும் ஒன்றாக, உட்கார்ந்து உண்ணும் பழக்கத்தை யும் வளர்த்தது. அதோடு நிற்காமல், பள்ளிகளைச் சீரமைப்பதற்கு வேண்டிய தளவாடங்கள், துணைக் கருவிகள், பாட நூல்கள், விரிந்த படிப்பிற்கான நூல்கள், பலவேளை பள்ளிக் கட்டடங் களையும் உள்ளூர் மக்கள், தனித்தனியாகவோ, கூட்டாகவோ, கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதில், போட்டி போட்டுக்கொண் டிருந்த காலம் அது.

அப்போது சேலம் மாவட்டம் தாரமங்கலத்தில், பள்ளிச் சீரமைப்பு மாநாட்டுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அக்கால கட்டத்தில், இந்தியப் பேரரசில், இரயில்வே இராச்சிய அமைச்ச ராக இருந்த திரு. எஸ். வி. ராமசாமி, இந்தியப் பேரரசின் கல்வி அமைச்சராக இருந்த டாக்டர் ஸ்ரீமாலி என்பவரை அம் மாநாட்டுக்கு அழைத்துவந்தார். சென்னை மாநிலக் கல்வி அமைச்சர் திரு. சி. சுப்ரமணியமும் அம் மாநாட்டில் பங்குகொண் டார். எனவே, பொதுக் கல்வி இயக்குநராக இருந்த நானும் அவர்களோடு மாநாட்டுக்குச் சென்றேன்.

தாரமங்கலத்திற்குப் புறப்படுவதற்குமுன், சேலம் சந்திப்பில், இரயில்வே அமைச்சரின் தனிப் பெட்டியில் கூடினோம். அப்போது சேலம் காங்கிரசார் பலர், அங்கு வந்து அமைச்சர்களுக்கு மாலை சூட்டினார்கள்.

சேலம் நகராட்சி மண்டபத்தில் முதல் அமைச்சர் காமராசரின் படத்தைத் திறந்து வைத்த நிகழ்ச்சி நன்றாக நடந்ததா என்று கல்வி அமைச்சர் சி. சுப்ரமணியம் கேட்டார்.

வந்தவர்கள்: 'வெகு சிறப்பாக நடந்தது. திருவுருவப் படத் தைத் திறந்து வைத்த பெரியார் அருமையாகப் பேசினார். பெரியாரை அழைத்தவுடன் இசைவு தந்தார்.' அழைப்பிதழ் அச்சிட்டபோது, வழக்கம்போல, நிகழ்ச்சி நிரலில் 'கடவுள் வாழ்த்து' என்று முதலில் குறித்திருந்தார்கள். அழைப்பினைப் பெற்ற ஒரு நண்பர், நகராட்சித் தலைவரிடம், 'பெரியார் கலந்து கொள்ளும் இந்நிகழ்ச்சியில் கடவுள் வாழ்த்து வைத்திருக்கிறீர் களே! பெரியார் கோபப்பட்டு, கடவுள் மறுப்புப் பேச்சாகவே முழு வதும் பேசிவிட்டால் என்ன செய்வது?' என்று அச்சுறுத்தினார்.

விழாவிற்கு ஏற்பாடு செய்தவர்கள், கலந்து பேசினார்கள். பெரியாரை, நகரமன்றத் தலைவர் அறைக்கு அழைத்துப்போய் உட்கார வைத்துவிடுவோம். விழா மண்டபத்தில் கடவுள் வாழ்த்து பாடிய பிறகு, பெரியாரை மண்டபத்திற்கு அழைத்து வருவோ மென்று முடிவு செய்தார்கள். தந்திரம் பலிக்கவில்லை.

வழக்கம்போல, பெரியார், சில மணித் துளிகள் முன்னதாகவே வந்துவிட்டார். நகரமன்றத் தலைவரின் அறைக்குச் சென்றார். குறித்த நேரத்திற்கு மூன்று மணித் துளிகள் இருக்கும்போது, பெரியார் எழுந்து விழா மண்டபத்தை நோக்கி நடந்தார். மேடையில் அமர்ந்ததும், அங்கிருந்த நிகழ்ச்சி நிரலைப் பார்த்துவிட்டு, தடியூன்றி எழுந்து நின்றார். கடவுள் வாழ்த்து என்று இவரே அறிவித்துவிட்டார்.

கடவுள் வாழ்த்து முடியும் மட்டும் பெரியார் நின்றுகொண்டிருந்தார். தமது பேச்சில் கடவுள் பக்கமே வரவில்லை. காமராசரின் கல்விச் சாதனைகளைப்பற்றி பிரமாதமாகப் பேசினார். எல்லோர்க்கும் சொல்லமுடியாத மகிழ்ச்சி என்று அறிவித்தார்கள்.

கல்வி அமைச்சர் சி. சுப்ரமணியம் மேற்கூறியவற்றைக் கேட்டுவிட்டு, 'பெரியாரால் தாக்கப்படாத புனிதமான கருத்துக்கள் எதுவும் இல்லை. எவ்வளவு பெரிய மனிதராயினும் ஒவ்வொரு இந்தியத் தலைவரும் அவரால் ஒரு முறையாவது தாக்கப்பட்டிருப்பார். எதிர்ப்புக் கடலுக்கிடையில், அவர் குலைக்கமுடியாத செல்வாக்கோடு பொது வாழ்வில் இருப்பதற்குக் காரணமே நீங்கள் சில நாட்களுக்குமுன் கண்ட அவருடைய தன்னடக்கமும் பண்பாடும் கட்டுப்பாடும் ஆகும்' என்று சொன்னார்.

அடுத்து, 1966ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் ஈரோடு சிக்கைய்யா கல்லூரி நாள். சிறப்புரையாற்ற நான் இசைந்தேன். அதைக் கேள்விப்பட்ட பெரியார்—கல்லூரி நிர்வாகக் குழுத் தலைவர், அதுவரை கல்லூரிக் கூட்டங்களில் கலந்துகொள்ளாதவர்—தானே விழாவிற்குத் தலைமை தாங்குவதாக எழுதிவிட்டார். அப்படியே வந்து தலைமை ஏற்றார். அவ்விழாவிலும் முதல் நிகழ்ச்சி, 'கடவுள் வாழ்த்து' என்று குறிக்கப்பட்டிருந்தது. குறித்த நேரத்தில் விழாவைத் தொடங்கிய பெரியார், எழுந்து நின்று, 'கடவுள் வாழ்த்து' என்று அறிவித்தார். கடவுள் வாழ்த்து பாடினார்கள். பெரியார் பொறுமையாக இருந்தார்; பின்னர் அதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. கல்விபற்றியே பேசினார்.

ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, தந்தை பெரியாரை, திருச்சியில் பெரியார் மாளிகையில் நான் காண நேர்ந்தது. அவர் கொடுத்த சிற்றுண்டியை உண்டபடியே, அய்யாவோடு பேசிக்கொண்டிருந்தேன். கூட்டுப் பாட்டு காதில் வீழ்ந்தது. பாட்டு முடியும் மட்டும் பொறுத்திருந்தேன்.

முடிந்ததும் நான் 'அய்யா, நம் அனாதை இல்லப் பிள்ளைகள், ''கடவுள் வாழ்த்து'' என்று ''நீராடும் கடலுடுத்த'' என்னும் பாட்டைப் பாடுகிறார்களே!' என்று வியப்போடு கேட்டேன்.

அதற்குப் பெரியார், 'ஆதரிக்க ஆள் இல்லாத குழந்தைகள் இவை. சோறு போட்டுக் காப்பாற்றுகிறேன் என்பதற்காக, நாத்திகத்தை அவர்கள் தலையில் திணிக்கலாமா? வயது வந்தால், அவர்களாகப் படித்துத் தெரிந்துகொள்வார்கள். தங்கள் சிந்தனையின் விளைவாக நாத்திகர்கள் ஆனால் அது சரி!' என்று அமைதியாகக் கூறினார்.

கடவுள் வாழ்த்து காதில் வீழ்வதால், தன்னுடைய நாத்திகக் கற்புக்குப் பழுது ஏற்பட்டுவிட்டதாகக் கருதவில்லை, பெரியார். என்னே அவரது பெருந்தன்மை; தாராள மனப்பான்மை; பொறுமை.

### மாற்றாரை மதித்தல்

நாணயமாகப் பொதுத் தொண்டு ஆற்றுபவர்கள், கருத்தில் தனக்கு எதிர்கோணத்திலிருந்தாலும் அவர்களிடம் பெரியார் நட்பும் பாசமும் கொண்டிருந்தார்.

மூதறிஞர் இராசகோபாலாச்சாரியார் மறைவதற்கு முந்திய நாள் மாலை, நான், தந்தை பெரியாரை சென்னையில் பெரியார் திடலில் கண்டேன். சோகமே உருவாகக் காணப்பட்டார் பெரியார்.

நான் அவரிடம், 'அய்யா! உடம்புக்கு என்ன? இவ்வளவு சோகமாக, தாங்கள் எப்போதும் இருந்ததில்லையே!' என்று கேட்டேன். பெரியார் நேராகப் பதில் சொல்லவில்லை. என்னைப் பார்த்து, 'பத்திரிகை விற்பனை அதிகமாகட்டும் என்று அப்படிப் போடுகிறார்களா? அல்லது உண்மையிலே, ஆச்சாரியாரின் உடல்நிலை கவலைக்கிடமாக இருக்கிறதா?' என்று ஏக்கத்தோடு கேட்டார்.

நான் 'செய்தி பொய்யல்ல அய்யா! இராஜாஜி மெய்யாகவே உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கிறார்' என்றேன்.

அதற்கு அவர், 'ஏனுங்க அப்படி! ஆச்சாரியாரை உலகத்தில் எங்கே தெரியாது? எங்கிருந்து வேணுமானாலும் மருந்தும் மருத்துவரும் பறந்து வரக்கூடுமே. அப்படிக் கொண்டுவந்து காப்பாற்றக்கூடாதா?' என்று கவலைத் தோயக் கேட்டார்.

'முடிந்ததெல்லாம் செய்து பார்க்கிறார்கள், இருந்தாலும் . . .' என்று நான் இழுத்தேன்.

'என்னங்க அநியாயம்! அவர் என்னைப்போல கண்டதை உண்ணமாட்டார். எல்லாம் அளவோடு இருக்கும். நேராநேரத்தில் உண்பார்; உறங்குவார். அவ்வளவு ஒழுங்கா இருக்கிறவராயிற்றே! இன்னும் நான்கைந்து ஆண்டு இருக்கலாமே!' என்று பெரியார் ஆற்றாமைப்பட்டார்.

ஆச்சாரியாரோடு, பலமுறை, பொதுமக்கள் நலனுக்காகப் போராடியவர், பெரியார். அவருக்குக் கறுப்புக் கொடி காட்ட வைத்தவர் பெரியார். அவர், முதல் அமைச்சர் பதவியிலிருந்து விலகவேண்டிய நெருக்கடியை உருவாக்கியவர் பெரியார். கடுமையான கருத்து வேறுபாட்டின் காரணமாகவும் காழ்ப்பு கொள்ளாதவர்; பகையை வளர்க்காதவர்; பண்பாளர் பெரியார்.

ஆச்சாரியாருக்கு இறுதி வணக்கம் செலுத்தும் பொருட்டு சென்னை கிருஷ்ணாம்பேட்டை மயானத்திற்குச் சென்று காத்திருந்தார், தந்தை பெரியார். தனது சக்கர வண்டியில் அமர்ந்திருந்தார். அப்போது, குடியரசுத் தலைவர், திரு. வி.வி. கிரியும், ஆளுநர் ஷாவும் அங்கு வந்து சேர்ந்தார்கள். மயானத்தில் நாற்காலியா போட்டு வைப்பார்கள்? குடியரசுத் தலைவர் ஒரு பக்கமாக நின்றார். இதைப் பெரியார் பார்த்துவிட்டார். நொடிப்பொழுதில், அருகிலிருந்த தோழர்கள் உதவியால், சக்கர வண்டியிலிருந்து இறங்கி, கீழே உட்கார்ந்துகொண்டு, வண்டியை திரு. கிரி அவர்கள் நின்றுகொண்டிருந்த இடத்திற்குத் தள்ளிக்கொண்டு போகச் செய்தார். திரு. கிரி அவர்கள் உட்கார ஏற்பாடு செய்தார், தனிப்பட்ட பற்றால் அல்ல; அவரிடம் எந்தத் தயவையும் எதிர்பார்த்தல்ல; முன் ஏதோ உதவியைப் பெற்றதற்காக நன்றிக்கடனா? இல்லை. குடியரசுத் தலைவருக்கு உரிய மரியாதையைக் காட்டவேண்டுமென்பதற்காக, பார்ப்பனராயிருந்ததையும் பொருட்படுத்தாது, திரு. கிரி அவர்களுக்கு தன்னுடைய இருக்கையைக் கொடுத்த பெரியார், பார்ப்பன வெறுப்பாளர் என்று யார் யாரோ திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். பெரியாரின் பண்பை எத்தனை பெரியவர்களிடம் காணமுடிகிறது!

### குழந்தைகள் கல்வி

வயது ஏற ஏற, சிந்தனை தேங்கிவிடுவது இயல்பு. ஆனால் பெரியார் இதற்கு விதிவிலக்காக விளங்கினார். ஐன்ஸ்டீன், இரஸ்ஸல், பெர்னார்ட்ஷா ஆகியவர்களைப்போன்று பெரியாரும் சூழ்நிலைக்கேற்ற புதுக் கருத்துகளை அளித்துக்கொண்டிருந்தார்.

தமது தொண்ணூறாவது வயதில் பாலர் பள்ளிகளின் (நர்சரி, கிண்டர் கார்டன் பள்ளிகளின்) இன்றியமையாமையை உணர்ந்து வலியுறுத்தினார்.

அய்ந்து வயது முடிந்த பிறகே, சிறுவர் சிறுமியரைப் பள்ளியில் சேர்க்கும் பழக்கம், நம் சமுதாயத்தில் தொன்றுதொட்டு வருவதாகும். அறிவுத் தூண்டுதல்கள் குறைந்திருந்த அக்காலத்திற்கு இது போதுமானது. வானொலி, தொலைக் காட்சி, செய்தித் தாள்கள், பருவ இதழ்கள் வந்து மோதும் இன்றைய சூழ்நிலையில்

குழந்தைகளின் கல்வியை அய்ந்தாவது வரையில் தள்ளிப்போடுவது தீங்கானது; குழந்தைகளின் வளர்ச்சியைக் குறைக்கக்கூடியது.

இதைச் சுட்டிக்காட்டி, தமிழ்நாட்டில் மூன்று வயது முடிந்த எல்லாக் குழந்தைகளும் சேரும் வகையில் ஒவ்வோர் தொடக்கப் பள்ளியோடும் பாலர் பகுதிகள் இணைக்கப்படவேண்டும்; செல்வந்தர் வீட்டுக் குழந்தைகள் பெறும் இவ்வாய்ப்பு ஏழைகள், தாழ்த்தப்பட்டோர், நாட்டுப்புற மக்கள் ஆகியோருக்கே அதிகம் தேவை; எனவே உள்ளூரில் உள்ள படித்த பெண்களைக்கொண்டு, அவர்களுக்குச் சிறு பயிற்சி கொடுத்து, எளிய செலவில் பதினாயிரக் கணக்கில் நர்சரி பள்ளிகளை நடத்தும்படி தமிழக அரசுக்கு விரிவான ஆலோசனை கூறும் 'விடுதலை' தலையங்கத்தை பெரியார் தீட்டி, தன் கையெழுத்தோடு வெளியிட்டார்.

தமது தொண்ணூற்று நான்காம் வயதில் பெரியார் நாட்டின் நலத்திற்கும் பொதுமக்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கும் இன்றிமையாத மற்றோர் சிறந்த கருத்தினை வெளியிட்டார். அது என்ன? முதியோர் எழுத்தறிவை உடனடியாக வளர்க்கவேண்டும் என்பதாகும்.

## முதியோர் கல்விக்கு முதலிடம்

நம் சமுதாயத்தில் ஏராளமானவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதிருப்பது வேதனையாகவும் வெட்கமாகவும் இருக்கிறது என்று பெரியார் முழங்கினார். 'எழுத்தறிவு பெற ஆயிரக் கணக்கான சொற்கள் தேவையில்லை; பெரும் பெரும் கணக்குப் பயிற்சி வேண்டாம். அன்றாட வழக்கிலுள்ள சில நூறு சொற்களை எழுதப் படிக்கத் தெரிந்துகொண்டால் போதும். வீட்டுக் கணக்குப் போடத் தெரிந்துகொண்டால் இப்போதைக்குப் போதும். இவற்றை கற்றுக்கொடுக்க, மாதக் கணக்கில் காலத்தை நீடிக்கவேண்டாம். ஒரு சில மாதங்களில் செய்து முடிக்கலாம் என்பதைச் சுட்டிக்காட்டினார். அம்முறையில் உடனடியாகத் தொடங்கி, விரைந்து செயல்பட்டு, ஓராண்டு காலத்தில் முதியவர் அனைவருக்கும் கண் திறந்துவிடவேண்டும் என்று பெரியார் துடித்தார்.

முதியோர் எழுத்தறிவுச் சாதனைக்குத் தவணை ஆறாண்டுகளாக இருப்பினும், படிப்புக் காலம் பத்து திங்களாக இருப்பினும் இப்போது இந்திய அரசு அறிவித்துள்ள தேசிய முதியோர் கல்வித் திட்டம் பெரியாரின் கருத்துக்கு வெற்றியாகும்.

'எத்தனையோ திட்டங்களில் இதுவும் ஒன்று' என்று இந்திய அரசும், தமிழக அரசும் முதியோர் எழுத்தறிவு இயக்கத்தை ஒதுக்கி

விடாமல், போதிய ஆர்வத்தையும் ஆற்றலையும் செலுத்தி வெற்றிபெறச் செய்தல், பெரியாருக்குப் பெருமை சேர்ப்பதைப் போலவே, நாட்டுமக்களின் எதிர்காலத்தை மாற்றி, வளர்க்கும் நல்வாய்ப்பாக, பெரும் வாய்ப்பாக, விளங்குமென்பது உறுதி.

**மதிப்பிடுவதில் கைதேர்ந்தவர்**

பெரியார் மனிதர்களையும் சூழல்களையும் துல்லியமாக மதிப்பிடு வதில் கைதேர்ந்து விளங்கினார். இயற்கை மதிநுட்பத்தோடு ஆழ்ந்த அனுபவம் பெற்ற பெரியாரின் மதிப்பீடு எவ்வளவு துல்லிய மானது என்று பார்ப்போம்.

இரண்டாவது உலகப்போர் நடந்துகொண்டிருந்த காலம். சென்னை மாகாணத்தில், நேசக் கட்சியின் வெற்றிக்கு ஆதரவு திரட்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழுவில் தந்தை பெரியார் உறுப்பினராக இருந்தார்.

அவ்வமயம், சீனாவின் அதிபர் சாங்கேஷேக், இந்தியாவிற்கு வந்தார். சென்னை நகரத்திற்கும் வந்தார். அதையொட்டி ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் சாங்கேஷேக் உரையாற்றினார். பெரியாரும் பேசினார்.

கூட்டம் முடிந்தபின், பெரியார் தம் இல்லத்தில் கட்சித் தோழர்களோடு பேசிக்கொண்டிருந்தார். நானும் உடன் இருந் தேன். பெரியார் உரையாடலின்போது, ‘இந்த சாங்கேஷேக்கிற்கு சீன மக்களிடம் செல்வாக்கு இல்லை. அமெரிக்கர்கள் இவரை உயர்த்தி நிறுத்தி ஆட்டிவைக்கிறார்கள். சீன மக்களின் தலைவ ராக இவர் நெடுங்காலம் இருக்கமுடியாது’ என்று கூறினார்.

நொடிப்பொழுது தோழர்களுக்கு அதிர்ச்சி. அடுத்த நொடி, ஒன்று புலனாயிற்று. அது என்ன? பொதுக்கூட்டத்தில் ஆங்கிலே யருக்கு ஆதரவு கொடுக்கவேண்டியதன் இன்றியமையாமையைப் பற்றி பேசிய பெரியார், சாங்கேஷேக்கைப்பற்றி, மக்கள் எதிர் பார்த்த அளவு, புகழாததற்குக் காரணம் விளங்கிவிட்டது.

காந்தியாரின் உண்மைச் சீடர்களில் ஒருவராக விளங்கிய பெரியார், பின்னர் அவரோடு கருத்து வேற்றுமைகொண்டார். அவ்வேற்றுமை, எதில் முளைத்தது? காந்தியார், சாதியொழிப் பின்மேல் நாட்டம் செலுத்தவில்லை. சாதி வேற்றுமைகளுக்கு ஆணிவேராகிய பார்ப்பனீயத்தைத் தாக்க வரவில்லை. மாறாக, வருணாசிரம தர்மத்திற்கு புது விளக்கம் சொல்லி, அதை உயிர்ப் பிக்க முனைந்தார். இவை நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் தீங்கானவை என்பது பெரியார் முடிவு. எனவே காந்தியத்தின் எதிரியாகிவிட்டார்.

ஒரு சமயம் பெரியார், காந்தியாரைப்பற்றி எழுதும்போது, 'என்றைக்கு காந்தியடிகள் தீண்டாமை ஒழிப்பிற்கும் சாதி சமத்து வத்திற்கும் பாடுபட முனைகிறாரோ, அன்று முதல் பார்ப்பனர்கள் காந்தியாரின் மகாத்மாத் தன்மையை அழித்துவிடுவார்கள்' என்று எழுதினார். இதைப் படித்துவிட்டுப் பதறிய பல நல்லவர்களை நான் அறிவேன். ஆனால், பிற்காலத்தில் நடந்தது என்ன? காந்தியாரின் தொண்டு சமுதாய மாற்றத்தின்பால் சாய்வதைக் கண்டதும், மகாத்மா தன்மையை அல்ல, 'மகாத்மா'வையே ஒழித்துக்கட்டிவிட்டார்களா? இல்லையா?

மற்றோர் கணிப்பு. 1963ஆம் ஆண்டு, முதல் அமைச்சர் காமராசர், தமது பதவியைத் துறந்துவிட்டு, அனைத்திந்திய காங்கிரசின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ளப்போவதாகச் செய்தி வெளியாயிற்று. உடனே பெரியார், காமராசருக்குத் தந்தி அடித்தார்.

'நீங்களாகவோ அல்லது மற்றவர்களின் ஆலோசனைப்படியோ முடிவு செய்திருந்தாலும் முதல் அமைச்சர் பதவியை விடுவது, தங்களுக்கும் தங்கள் கட்சிக்கும் தமிழ்நாட்டுக்கும் தற்கொலை யாக முடியும்' என்பது பெரியாரின் தந்தி.

பெரியாரின் கணிப்பு நூற்றுக்கு நூறு சரியென்பதை பிந்திய வரலாறு மெய்ப்பித்துவிட்டது.

### விஞ்ஞானப் போக்கின் மதிப்பீடு

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு, மக்களினம் நினைத்துப் பார்க்க முடியாதவை இப்போது நிகழ்ச்சிகளாகவே இருப்பதைக் காண் கிறோம். விஞ்ஞான வளர்ச்சியும் விஞ்ஞான ஆய்வுப்பெருக்கமும் எண்ணற்ற விந்தைகளைச் செய்துகாட்டுகின்றன.

பள்ளிப் படிப்பையும் முடிக்காத பெரியார், உலகப் பட்டறிவில் சிறந்து விளங்கினார். மக்கள் போக்கையும் விஞ்ஞான போக்கை யும் கூர்ந்து கவனித்து வந்தார். அதன் விளைவு? விஞ்ஞானிகளும் துணிந்து சொல்ல முன்வராத கருத்தை பெரியார் வெளியிட்டார்.

1943ஆம் ஆண்டில், திருமண நிகழ்ச்சியொன்றில், உரையாற்றும் போது அறிவியல் வளர்ச்சியின் விளைவை நினைவுபடுத்திவிட்டு, 'மக்கள் இனப்பெருக்கிற்கு ஆண் பெண் சேர்க்கை என்பது நீக்கப் பட்டுவிட்டு, செயற்கை முறையில் ஊசிபோட்டு, வீரியத்தை பெண்கள் உடலில் விட்டு நல்ல குழந்தைகளைப் பிறக்கச் செய்யப் படும். ஆண் பெண் சேர்க்கைக்கும் குழந்தை பெறுவதற்கும் சம்பந்தமில்லாமல் செய்யப்பட்டுவிடும்' என்று கோடிட்டுக் காட்டினார்.

அந்நிகழ்ச்சியில், பெரியாரோடு கலந்துகொண்டு உரையாற்றிய அறிஞர் அண்ணா, பெரியாரின் உரையைக் குறிப்பெடுத்து, பெரியாரிடம் காட்டி, தெளிவுபடுத்தி, தமது 'திராவிட நாடு' ஏட்டில் 'இனி வரும் உலகம்' என்னும் தலைப்பில் பெரியார் எழுதுவது என்ற குறிப்போடு 21–3–1943, 28–3–1943 நாட்களில் வெளியிட்டார்.

பின்னர் அது 'குடி அரசு' வெளியீடாக, சிறு நூலாக, வெளியிடப் பட்டது. அப்போதே, அந்நூலின் அட்டைப் படத்தில் சோதனைக் குழாயிலிருந்து குழந்தை தலை நீட்டுவதாகப் படம்போடப்பட்டிருக்கிறது.

பெரியார் கணிப்பிட்டு முப்பதாண்டுகள் ஓடிய பின்னர், அக்கணிப்பு வென்றது. சோதனைக் குழாய்களில் விந்துகளைச் செலுத்தி, கருத்தரிப்பு நிகழ்ந்த பிறகு, பெண்ணின் கருப்பைக்குள் அக்கரு செலுத்தப்படுகிறது. அப்படிச் செலுத்தப்பட்டு, செயற்கைக் குழந்தை ஒன்று பிரிட்டனில் 1974இல் பிறந்தது உலகறிந்த செய்தியாகும்.

உடலியல் அறிஞரோ, உயிரியல் வல்லுனரோ அல்லாத பெரியார் தமது ஊடுருவும் அறிவுக் கண்களால் குழந்தை பிறப்பைப்பற்றி உணர்ந்து, பல்லாண்டுகளுக்கு முன்னரே அறிவித்தது, பலித்து வருவதுபோல், அவருடைய பிற கருத்துகளும் கால நீளத்தில் பலிக்குமென்பது உறுதி.

### தியாக உணர்வு

தந்தை பெரியார் ஈ. வே. ராமசாமிக்கு தியாக உணர்வு இயற்கையாக அமைந்துவிட்டது. கொழுத்த வருமானம், நகராட்சித் தலைவர் பதவி முதல் இருபத்தொன்பது பொதுப் பதவிகள் ஆகியவற்றைத் தயங்காமல் உதறிவிட்டு, காங்கிரசே எல்லாம் என்று ஏறத்தாழ ஏழாண்டு காலம் ஓய்வின்றி அரும்பாடுபட்டார். பிறகு தமிழ்நாட்டு காங்கிரசின் தலைவர், அனைத்திந்திய காங்கிரசுக் குழு உறுப்பினர், நாளையொரு நாள் அனைத்திந்திய காங்கிரசுத் தலைவராகவே வரக்கூடிய வாய்ப்பு, இவை தரும் பெரும் புகழ் இத்தனையும் பெற்ற நிலையில், அவ்வியக்கம் தாழ்த்தப்பட்டோருக்கும் சமுதாயத்தின் எளிய மக்களுக்கும் பயன்படாது என்று உணர்ந்ததும் பெரியார் நொடியில் காங்கிரசை விட்டு வெளியேறியது மற்றோர் பெரிய தியாகமாகும்.

பெருந் தியாகியாகிய ஈ. வே. ராமசாமி, பிறர் தியாகத்தைத் தக்கபடி போற்றத் தவறியதில்லை. வீரர் பகத்சிங் அவர்களை

தூக்கிலிட்டதுபற்றி, நம் நாட்டுச் செய்தித் தாள்களில் பல, ஊமைகளாகி விட்டபோது, பெரியார் தமது வார இதழாகிய, 29-3-1931 நாளிட்ட குடியரசு தலையங்கத்தில் 'ஒரு மனிதன் தன் கடமையைச் செய்தானா, இல்லையா என்பதுதான் கேள்வியே தவிர, பலன் என்ன ஆச்சுது என்பது இங்கு நமது கேள்வியல்ல. என்றாலும், அக்கடமைகளைக் காலமறிந்து, இடமறிந்து செலுத்த வேண்டும் என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோமெனினும் பகத்சிங் கொள்கைக்குக் காலமும் இடமும் நடப்பும் விரோதமாயில்லை என்றும், பொறுத்தமாயுள்ளது என்றும் சொல்லுவோம்.

உண்மையிலே பகத்சிங் அவர்கள் தனது கொள்கைகள் முழுவதையும் சரியென்று மனப்பூர்த்தியாய் நிச்சயித்துக்கொண்டு, அதை நிறைவேற்ற அவர் நடந்துகொண்ட மாதிரிகள்தான் சரியான மார்க்கம் என்று அவர் முடிவும் செய்துகொண்டு, இருந்திருப்பாரேயானால், கண்டிப்பாக அவர் நடந்துகொண்டபடியே நடந்திருக்க வேண்டியதென்று நாம் சொல்லுவதோடு அந்தப்படி அவர் நடக்காமல் இருந்திருந்தால், அவர் யோக்கியமான மனிதரென்று சொல்லமுடியாது என்றும் சொல்லுவோம்' என்று எழுதினார்.

## சொல்லாற்றல்

ஈ. வே. ராமசாமியின் சொல்லாற்றல் தனிச் சிறப்புடையது ஆகும். அவருடைய சொற்பொழிவுகளை பலமுறை நேரில் கேட்ட கல்கி கிருஷ்ணமூர்த்தி அதைப் பாராட்டி 'ஆனந்தவிகடனில்' பின்வருமாறு எழுதினார்.

'சாதாரணமாக இவருடைய (ஈ. வே. ரா.) பிரசங்கங்கள் மூன்று மணி நேரத்திற்குக் குறைவது கிடையாது. ராமசாமியார் பழங்கதை தொடங்குவதில்லை. எவ்வளவுதான் நீட்டினாலும் அவருடைய பேச்சில் அலுப்புத் தோன்றுவது கிடையாது. அவ்வளவு ஏன்? தமிழ்நாட்டில் ராமசாமியாரின் பிரசங்கம் ஒன்றை மட்டுந்தான், என்னால் மூன்று மணி நேரம் உட்கார்ந்து கேட்க முடியுமென்று தயங்காமல் கூறுவேன்.

'அவர் (ஈ. வே. ரா.) உலகானுபவம் என்னும் கலாசாலையில் முற்றுணர்ந்த பேராசிரியர் என்பதில் சந்தேகமில்லை. எங்கிருந்துதான் அவருக்கு அந்தப் பழமொழிகளும் உபமானங்களும் கதைகளும் கற்பனைகளும் கிடைக்கின்றனவோ நான் அறியேன்.

'தாம் உபயோகிக்கும் சொற்கள் எல்லாம் சொந்தத் தமிழ்ப் பதங்கள் தாமாவென்று அவர் சிந்திப்பதில்லை. எழுவாய் பயனிலைகள், ஒருமை பன்மைகள், வேற்றுமையுருபுகள் முதலிய

வைகளைப்பற்றியும் அவர் கவலைப்படுவதில்லை. ஆனால் தாம் சொல்ல விரும்பும் விஷயங்களை மக்களின் மனதைக் கவரும் முறையில் சொல்லும் வித்தையை அவர் நன்கறிவார். அவர் கூறும் உதாரணங்களின் சிறப்பையோ சொல்லவேண்டுவதில்லை.

'ராமசாமியாரின் பிரசங்கம் பாமர ஜனங்களுக்கே உரியது என்று ஒரு சிலர் கூறக்கேட்டிருக்கிறேன். பாமர ஜனங்களை வசப்படுத்தும் ஆற்றல் தமிழ்நாட்டில் வேறெவரையும்விட அவருக்கு அதிகம் உண்டு என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இதிலிருந்து அவருடைய பிரசங்கம் படித்தவர்களுக்கு இரசிக்காது என்று முடிவு செய்தல் பெருந்தவறாகும். என்னைப்போன்ற அறைகுறை படிப்புக்காரர்களேயன்றி, முழுதும் படித்துத் தேர்ந்த பி.ஏ., எம்.ஏ. பட்டதாரிகளுங்கூட, அவருடைய பிரசங்கத்தைக் கேட்டு மகிழ்ந்திருக்கிறார்கள். அவருடைய விவாதத் தன்மை அபாரமானது. ''இவர் மட்டும் வக்கீலாயிருந்தால் நாமெல்லாம் ஓடு எடுத்துக்கொள்ளவேண்டியது தான்'' என்று ஒரு பிரபல வக்கீல் மற்றொரு வக்கீல் நண்பரிடம் கூறியதை நான் ஒரு சமயம் கேட்டேன்.'

பொது வாழ்க்கையில் காலடி எடுத்து வைத்ததிலிருந்து வாழ்நாள் முழுவதும் பெரியாரிடம் ஒளிவிட்ட சிறப்புகளில் ஒன்று கூட்டங்களில் கேள்வி கேட்பதை வரவேற்பதாகும். பல பேச்சாளர்கள், அவையோர் கேட்கும் கேள்விகளால் எரிச்சல் அடைவார்கள். கேள்விகளைப் பொருட்படுத்தாமல், ஒதுக்கப் பார்ப்பார்கள். பெரியாரின் போக்கு இதற்கு முற்றிலும் மாறானது.

எவராகிலும் கேள்வி கேட்டுவிட்டால், பெரியாருக்குக் குஷி. அவருடைய பேச்சு விறுவிறுப்பாகும். அதில் சூடு சேருவதோடு தெளிவும் ஒளிவிடும். கேள்வி கேட்டலை தாம் விளக்கம் சொல்வதற்கு நல்வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்வார். கேள்வி கேட்டவர் பேரில் வெகுண்டெழ மாட்டார். சிலவேளை, எக்காரணம் பற்றியாவது பெரியார் பேச்சு எடுப்பாக இல்லாமல் இருக்கும் போது, அவருடைய தோழர்களே, ஏதாவதொரு கேள்வியை எழுதி அனுப்புவார்கள். மேடையில் பேசிக்கொண்டிருக்கும் பெரியார் அக்கேள்வியை அவை அறியப் படித்துவிட்டு, அதற்கு பதில் கூறுவார். அப்போது அவருடைய பேச்சு நீர்வீழ்ச்சிதான்! அறிவு வெள்ளந்தான். இத் தன்மைக்கு எண்ணற்ற எடுத்துக்காட்டுகள் உண்டு.

1928ஆம் ஆண்டு தன்மான இயக்கத்தின் இளமைப் பருவம்; அப்போது ஈ. வே. ரா, சிதம்பரத்தில் பொதுக் கூட்டமொன்றில் பேசினார். அவ்வுரையில் மதத்தைப்பற்றியும் அதிலுள்ள ஊழல்களைப்பற்றியும் அதனால் விளையும் தீமைகள்பற்றியும் விரித்

துரைத்துக்கொண்டிருந்தார். அப்போது அங்கிருந்த பார்ப்பனர் ஒருவர் குறுக்கிட்டு ஒரு கேள்வியைக் கேட்டார்.

'நீங்கள் சாமியைக் கல் என்று சொன்னீர்களே! இது சரியா?' என்பது கேள்வி.

பெரியார் நொடியில் பளிச்சென்று பதில் சொன்னார். 'ஆம்! வேண்டுமானால் எல்லோரும் என்னோடு வாருங்கள், காட்டுகிறேன்' என்று பதில் கூறிக்கொண்டே, ஈ. வே. ரா. கோயிலுக்குப் போக, கைத்தடியைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டார். எல்லோரும் கை கொட்டிச் சிரித்தார்கள்.

மற்றொருவர் தலையிட்டு 'ஆனால் அந்தக் கல்லுக்கு மந்திர உச்சாடனம் செய்யப்பட்டிருக்கிறது' என்றார்.

மின்னல் பாய்ச்சலில், ஈ. வே. ரா. 'அப்படியானால் மொட்டைப் பாறையில் உடைத்த கல்லுக்குச் செய்த உச்சாடனத்துக்கு உண்மையில் சக்தி இருக்குமானால், இதோ எதிரில் இருக்கும் உயிருள்ள மனிதருக்கும் கொஞ்சம் அதே மந்திரத்தை உபதேசம் செய்து, அவரை அந்தக் கல்லுச்சாமிக்குப் பக்கத்திலிருந்து பூசனை செய்யும்படியாகவாவது செய்யக்கூடாதா?' என்றார்.

முதலாவது கேள்வி கேட்டவர் 'இந்து மதம்' என ஒன்று இல்லையென்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். 'நீங்களாவது ஒரு புது மதம் சொல்லக்கூடாதா?' என்றார்.

அதற்கு ஈ. வே. ராமசாமி 'நான் புது மதத்தைப் போதிக்க வரவில்லை. ஒழுக்கத்திற்கு விரோதமான கொள்கைகளை மதம் என்றும், சாமி என்றும், புராணம் என்றும் பின்பற்றாதீர்கள். ஒழுக்கமாகவும் உண்மையாகவும் மற்ற மக்களிடத்தில் அன்பாகவும் சம பாவிப்பாகவும் பரோபகார எண்ணத்துடனும் இருந்தால் போதும் என்றுதான் சொல்லுகிறேன். அதற்குத் தகுந்த கொள்கைகள் எந்த மதமானாலும் சரி, அது மதம் இல்லாவிட்டாலும் சரி என்றுதான் சொல்லுகிறேன்' என்றார்.

கேட்டவர்: 'இருக்கின்றதை ஒழிப்பதானால் மற்றொன்றைக் காட்டவேண்டாமா?' என்றார்.

ஈ. வே. ரா.: 'வீட்டிற்குள் அசிங்கம் இருக்கின்றது; நாற்றமடிக்கிறது; எடுத்து எறியுங்கள் என்றால், அதற்குப் பதில் அந்த இடத்தில் என்ன வைக்கின்றது என்று கேட்பது சரியாகுமா? இந்து மதம் என்றால் உலகமெல்லாம் நாறுகின்றதே! அந்தத் துர்நாற்றம் போய்விட்டால் அதுவே போதும்' என்றார்.

சிறந்த சொல்லாற்றலும் கேள்விகளுக்கு உடனுக்குடனே தக்க பதில்களைக் கூறுவதில் தனித்திறனும் பெற்றிருந்தாலும் பெரியார் தன் கருத்தை ஏற்க மறுப்போர் அய்யங்களை எழுப்பும்போது

போற்றத்தக்க பொறுமையைக் கடைப்பிடித்தார். எடுத்துக் காட்டாக:

தன்மான இயக்கத்தின் தொடக்க காலத்தில் மன்னார்குடியில் பெரியதொரு பொதுக்கூட்டத்தில் ஈ. வே. ரா. பேசிக்கொண்டிருந் தார். பார்ப்பனீயத்தால் விளைந்த கேடுகளைப்பற்றி விரித் துரைத்துக்கொண்டிருந்தார். அவர் பேசிய மேடைக்குக் கீழே ஒரு பார்ப்பனர் உட்கார்ந்துகொண்டு, சரமாரியான கேள்விகளை எழுதி, அவரிடம் கொடுத்துக்கொண்டே இருந்தார். ஈ. வே. ரா. அத்தனைக்கும் பொறுமையாகப் பதில் சொல்லிக்கொண்டு வந்தார். கூட்டத்தினர் கடுங்கோபம் கொண்டு, கேள்வி கேட் போரின்மேல் சீறத் துடித்தனர். பெரியார் அவர்களை அடக்கிக் கொண்டே, பதில் அளித்துக்கொண்டிருந்தார். இடையில் கேள்வி எழுதிக்கொண்டிருந்தவரின் பென்சில் உடைந்துவிட்டது. இதை ஈ. வே. ரா. கண்ணுற்றார். அடுத்த நொடி, தன் பேனாவைக் கழற்றி, உரையைப் பின்புறம் போட்டு 'அய்யா! இதனல் எழுதுங்கள்' என்று கொடுத்துவிட்டு உரையைத் தொடர்ந்தார்.

அய்யர் வெட்கிப் போனார்; கேள்வி எழுதக் கையோடவில்லை.

கூட்டம் முடிந்ததும் அவர் பேனாவை ஈ. வே. ராவிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு 'நாயக்கர்வாள்! என்னை மன்னிக்க வேண்டும். எதிரிகள் தங்களைப்பற்றிக் கூறுவது முற்றிலும் தவறு. நீங்கள் மகாப் பெரியவர், நமஸ்காரம்' என்று சொல்லிவிட்டுப் போனார்.

**பிறரை வருத்தாத தன்னிறைவு**

வாழ்நாள் முழுவதையும் போராட்டங்களில் கழித்த தந்தை பெரியார், மாற்றாரையும் நேரில் புண்படுத்த விரும்பியதில்லை.

ஒரு சமயம் பெரியாரும் திராவிடன் ஆசிரியர் தோழர் கண்ணப்பரும் மதுரைக்கு இரயிலில் பயணஞ் செய்துகொண்டிருந் தார்கள். மூன்றாம் வகுப்பு வண்டியில் சென்றார் என்பதைச் சொல்லத் தேவையில்லை. அதே வண்டியில் பயணஞ் செய்து கொண்டிருந்த பார்ப்பனர் ஒருவர் கண்ணப்பரோடு வாதம் புரிந்து கொண்டிருந்தார். கண்ணப்பர் சில கடுஞ்சொற்களை பயன்படுத்தி விட்டார். உடனே பெரியார் இடைமறித்து, அவரை நோக்கி 'ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்? பொறுமையாக கூறினால்தானே அவ ருடைய தப்பெண்ணங்களை மாற்றி அவரைநம் பக்கம் திருப்பலாம். இம் மாதிரியான நல்ல சந்தர்ப்பங்களை வீணாக்கலாமா?' என் றார். அதற்கு அப்பார்ப்பனர் பெரியாரைப் பார்த்து 'பெரியவரே நீங்கள் சொல்வதை இவர் கேட்கமாட்டார். இவர்களெல்லாம்

அந்த ராமசாமி நாயக்கர் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். இப்படித் தான் பேசுவார்கள்' என்றார்.

பெரியார் சிரிப்பை அடக்கிக்கொண்டு, கக்கூசுக்குள் நுழைந்தார். இவற்றைக் கவனித்துக்கொண்டிருந்த ஒருவர் அந்த அய்யரை நோக்கி 'இவர்தான் ராமசாமி நாயக்கர்' என்று அடையாளம் காட்டிவிட்டார். பெரியார் வெளியே வந்தபோது அய்யர் எழுந்து நின்று வணங்கியபடியே 'அய்யா, தங்களை யார் என்று தெரியா மல் பேசிவிட்டேன். மன்னித்துக்கொள்ளுங்கள். தங்களைப்பற்றி அவதூறாகப் பேசுபவர்கள் அனைவரும் பொய்யர்கள். தங்க ளுடைய நற்குணமும், பொறுமையும் எவர்க்கும் வராது' என்று பாராட்டினார். பெரியாரிடம் நேரில் பழகிய அனைவருமே இப் படித்தான் புகழ்வார்கள்.

பெரியார் எவருக்கும் சிறிதும் தனிப்பட்ட முறையில் தொல்லை கொடுக்க விரும்பமாட்டார். ஒருமுறை, சேலத்தில் பொதுக் கூட்டத்தை முடித்துக்கொண்டு சென்னைக்குப் புறப்பட்டுவந்தார். ஆத்தூரை நெருங்கும்போது கடும் புயலும் பெரும் மழையும் வந்தன. 'வேன்'னை ஓட்டமுடியாத நிலை ஏற்பட்டது; மெல்ல ஆத்தூர் பயணிகள் விடுதிக்குள் நுழைந்தது. அவ்வேளை அங்கு இரு அறைகளிலும் யாரோ தங்கியிருந்தனர். அவர்களை எழுப்பி தொல்லை கொடுக்கவேண்டாம் என்று சொல்லிவிட்டு வேனிலேயே புயலையும் கடும் மழையையும் பொருட்படுத்தாது தங்கியிருந்தார். விடியும் வேளை, உள்ளேயிருந்த பயணிகள், தந்தை பெரியார் இப்படி திறந்தவெளியில், புயலின்போது இரவை வெளியே கழித்த தைக் கேட்டு பதறிப்போனார்கள். பெரியாரோ பொறுமையாகவே பதில் சொல்லிவிட்டு சென்னைக்குப் பயணமானார். வாழ்க்கை முழுவதும் புயல்களை சமாளித்தவர் அல்லவா பெரியார்!

### நேரம் தவறாமை

நேரந்தவறாமையிலும் சுறுசுறுப்பிலும் பெரியாருக்கு இணை பெரியாரே! ஒரே நாளில் பல நிகழ்ச்சிகளில் பங்குகொள்ளும் போதுங்கூட கூட்டங்களுக்குக் குறித்த நேரத்தில் போய்விடுவார். காலந்தாழ்த்தி வரும் பேச்சாளர்கள் எவ்வளவு பெரியவர்க ளானாலும் அவர்களைப் பெரியாருக்குப் பிடிக்காது.

மக்களைக் காக்கவைப்பது பெருங் குற்றம் என்பது பெரியாரின் கருத்து. அப்படிக் காக்கவைப்பது, அவையோரை மதியாமையின் வெளிப்பாடு என்பது அவருடைய முடிவு. எனவே நேரங் காத்தலில் பெரியார் முனைப்பாகவும் விழிப்பாகவும் இருந்தார்.

சோம்பல் என்பதையே அறியாத மாமனிதர் பெரியார். ஆறு மணி மட்டுமே அயர்ந்து தூங்கிவிட்டு, மற்ற நேரம் எல்லாம்

என்றும் சுறுசுறுப்பாக இருந்தவர் பெரியார். எந்நேரமும் மக்கள் நலனைப்பற்றிய சிந்தனை அல்லது அதை எடுத்து விளக்கி உரையாற்றல் அல்லது எழுத்தில் வடித்தல் ஆகிய பணிகளில் பெரியார் காலத்தைச் செலவிட்டார். உடலுழைப்பு வேலைக்கும் சுணங்காதவர் பெரியார். தள்ளாமை வரும் வரையில், தன்னுடைய பெட்டி பேழைகளை அவரே தூக்கிக்கொண்டு போவார். எளிய வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய பெரியார், ஒருமுறை பின்வருமாறு எழுதினார்:

'என்னை நான் சின்னவன் என்றும் குறைந்த செலவில் வாழ்வதற்குத் தகுதியுடையவன் என்றும் எண்ணிக்கொண்டிருக்கும் காரணத்தாலேயே நான் என் யோக்கியதைக்கு மீறின மிகப் பெருமையுடையவனாகவும் தாராளமாகச் செலவு செய்பவனாகவும் கருதிக்கொண்டிருக்கிறேன்.

'நான் மூட்டை தூக்குவதில், பாரத்தினால் கஷ்டப்பட்டிருப்பேனேயொழிய, மூட்டை தூக்குவது அவமானம் என்று ஒரு போதும் கஷ்டப்பட்டதில்லை.'

அறிவுக்கு வேலை கொடுக்காதபோது ஏதாவது ஓர் உடல் உழைப்பில் ஈடுபட்டு சுறுசுறுப்பாக விளங்கியது, பெரியாரின் நீண்ட ஆயுளுக்கு வேராக இருந்திருக்கக்கூடும்.

# 12

## பெரியார் பணிகளின் விளைவு

ஏறும்பூரக் கல்லும் தேயும். வேழம் நடந்தால் தேயாமல் இருக்கமுடியுமா? புரட்சி வேழமாக விளங்கிய பெரியார், நாட்டின் நாலா பக்கங்களிலும் உலா வந்து மிளிறியதால் நெடுங்காலமாக உறைந்துகிடந்த பல மூடநம்பிக்கைகளும் பொருளற்ற பழக்க வழக்கங்களும் உடையத் தொடங்கின.

**அறுவடை**

'உயர்வு தாழ்வு என்னும் உணர்ச்சியே, நமது நாட்டில் வளர்ந்து வரும் சாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால் இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென்று எண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வரவேண்டும்' என்னும் தனது குறிக் கோளை அடைய வாழ்நாள் முழுவதும் போராடியவர் பெரியார். அவர் எங்கோ ஒரு பாதுகாப்பான இடத்தில் இருந்துகொண்டு, தம்மை நாடி வந்தவர்களுக்கு மட்டும் புரட்சிக் கருத்துகளை எடுத்துரைப்பதோடு நின்றாரில்லை. மனதில் பட்டதை எழுத்தில் வடித்து, அச்சாக்கி, வெளியிட்டதோடு அமைதி கொள்ளவில்லை பெரியார். தற்குறிகள் நிறைந்த நாட்டில் எழுத்தில் வருவதைப் படிக்கும் ஆட்கள் சிலரே. மாறாக, சிங்கத்தின் குகைக்குள்ளே புகுந்து போராடுவதைப்போல், காலமெல்லாம் செயல்பட்டார் பெரியார். தமிழ்நாட்டில் அவர் கால்படாத இடமே இல்லை என்று சொல்லுமளவிற்கு சூறாவளிப் பயணம் செய்துகொண்டு இருந்தார். புரட்சிக் கருத்துகளை, மணிக்கணக்கில் விதைத்தார். கேள்விக் கணைகளை வரவேற்பதில், அவற்றை கொள்கை விளக்கத்திற்கான நல் வாய்ப்புக்களாகப் பயன்படுத்தி, பதில் சொல்வதில், பெரியார் இணையற்று விளங்கினார். இச் செயல்கள் பேரலைகளை எழுப்பின.

ஏமாந்த காலத்தே ஏற்றங்கொண்டோர், வேங்கையெனப் பாய்ந்தனர்; நரிகளென ஊளையிட்டனர்; ஆதிக்கப்புரிகள் ஆட்டங் காண்பதைக் கண்டு அஞ்சி, அப்பாவி மக்களை, ஏவி விட்டனர்.

தன்னலக் கோட்டையைக் காக்க, எத்தனையோ சாகசங்களைக் கையாண்டார்கள். திண்ணைக்குத் திண்ணை தூற்றல்கள். மேடைகளில் அவதூறுகள். ஆசிரியர் கடிதங்களின் வழியாக தூண்டுதல்கள். ஆட்சியாளரை நெருக்கி வழக்குப் போடுதல். இத்தனைக்கிடையிலும் தெளிந்த அறிவுடையோர் முற்போக்குக் கருத்துடையோர், தந்தை பெரியாரையும் அவருடைய இயக்கத்தின் அடிப்படைச் சிறப்புகளையும் அப்போதைக்கப்போது சுட்டிக் காட்டி வந்துள்ளனர். அவற்றில் சிலவற்றைக் கவனிப்போம்.

### ஆக்ஸ்போர்டு அறிஞர் பாராட்டு

ஈரோட்டில் பெரியாரைக் கண்டு உரையாடிய ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திரு. பெசில் மாத்யூஸ் என்பவர் 'புறத் தோற்றத்தில் மட்டும் அல்ல, உள்ளுணர்ச்சியிலும் தோழர் ஈ. வே. ராமசாமி வில்லியம் மாரிஸ் போன்றவரே' என்பதை அவருடன் நான் பேசிக்கொண்டிருந்த 2, 3 மணி நேரத்திற்குள் கண்டுகொண்டேன். பொருளற்ற எந்தப் பழைய சமுதாயக் கட்டுப்பாடுகளையும் அடியோடு தகர்த்து எறியவேண்டும் என்றும், அந்த துடிதுடிப்பு, காலத்திற்கு ஒவ்வாத பழக்க வழக்கங்களையும் பழமைப்பாசி படர்ந்துவிட்ட கருத்துக்களையும் உடைத்தெறிய வேண்டும் என்னும் அந்த நெஞ்சழுத்தம், 'புதியதோர் உலகு செய்வோம்' என்னும் அந்த உறுதிப்பாடு, இவை அத்தனையிலும் தோழர் ஈ.வே.ரா. வில்லியம் மாரிஸேதான். ஆம், அவர் 20ஆம் நூற்றாண்டின் வில்லியம் மாரிஸ். மாரிசைப்போலவே ஈ.வே.ராவும் மிக எளிய வாழ்க்கையே வாழ்கின்றார் . . .

'சொந்த அச்சகத்தின் வாயிலாகவே, சொந்த கருத்துக்களை பொதுமக்களுக்கு உரைக்கிறது வில்லியம் மாரிசுக்கும் ராமசாமிக்கும் உள்ள வியக்கத்தக்க இன்னொரு ஒற்றுமை என்பதையும் கண்டேன்.

தோழர் ஈ.வே. ரா. நடத்துகின்ற ஆங்கில வார இதழ் இருக்கிறதே, அதன் பெயராகிய புரட்சி (Revolt) என்பதை அவருடைய வாழ்க்கை வரலாற்றிற்கே பெயராய் சூட்டிவிடலாம். அது மிகப் பொருத்தமாகவும் இருக்கும்' என்று பெரியாரின் உண்மையான உருவத்தைக் காட்டினார்.

### பனகல் அரசர்

சென்னை மாகாணத்தின் முதல் அமைச்சராக விளங்கிய, பனகல் அரசர், சர். பி. ராமராய நிங்கவாரு, 1928இல் ஈ.வே.

ராமசாமியைப்பற்றி 'மதிப்பு வாய்ந்த எனது நண்பர் தோழர் ஈ.வே.ராமசாமி தற்காலத்தில் பெரிய சமூக சீர்திருத்தக்காரர் ஆவார். அவர் சமூக சீர்திருத்தத்தை மிகவும் புனிதமாகக் கருது கிறார். தம் கருத்தை நிறைவேற்றுவதில் அவர் எத்தகைய தியாகமும் செய்யத் தயாராயிருக்கிறார். எந்த ஒரு கொள்கையை தாம் நேர்மையானதாக எண்ணினாரோ, அதற்காக அவர் பல தடவை சிறை சென்றதும் உங்களுக்குத் தெரியும். சமூக சீர்திருத்தக் கொள்கை முன்னேற இன்னும் எத்தனை தரம் வேண்டுமானாலும் சிறைக்குப்போகவும் மற்றும் தமது உயிரையே கொடுக்கவும் தயாராயிருக்கிறார்.

'சமூக சீர்திருத்தத் துறையில் பலர் அநேக ஆண்டுகள் பாடு பட்டுப் பயன் பெறாமற்போன வேலையைச் சில ஆண்டுகளில் இவர் பயனளிக்குமாறு செய்துவிட்டார்' என்று உரைத்தார்.

பிற்காலத்தில், சென்னை மாகாணத்தில் ஆளுநரான சர். கே. வி. ரெட்டி நாயுடு 1928இல் பெரியாரை எப்படி மதிப்பிடுகிறார் என்று பார்ப்போம்.

'தனக்கு ஒன்றை உரியதாக்கிக்கொண்டு, அதையே தம் முழு வேலையாகவும் கொண்டு, பல்லாண்டுகளாக வேலை செய்கிற ஒருவருக்கு இரண்டு அல்லது மூன்று சிறப்பான குணங்கள் அமைய வேண்டும். அவ்விதக் குணங்கள் அமைந்தவர்கள் இத் தென்னிந் தியா முழுவதும் தேடினாலும் நமது நாயக்கரைத் தவிர, வேறு யாரையும் கண்டுபிடிக்க முடியாது. அத்தகைய குணங்கள் எவையெனில், முதலாவது தைரியம்; இரண்டாவது தியாகம்; மூன்றாவது தம்முடைய வேலையை எவ்வாறு நடத்தி அனுபவத் திற்கு கொண்டுவருவது என்பது.

'தோழர் ராமசாமி உண்மையான சிங்கம்! சிங்கத்தின் இருதயத்தை பெற்றிருக்கிறார். வாழ்க்கையில் அச்சமென்பது அவருக்கு இன்னதென்றே தெரியாது. அத்தகைய அச்சமின்மை இருந்தாலொழிய இத்தகைய காரியங்களில் யாரும் வேலை செய்யமுடியாது.

'அவர் எவ்விதத் தியாகமும் செய்யத் தயாராயிருக்கிறவர்.

'பழைய காலத்து வீரர்கள் தங்கள் ஆயுதத்தைப் பயன்படுத்தி யதுபோல, தோழர் ராமசாமி தமது பேனாவை அச்சமின்றி எங்கும் செலுத்துகிறார்.'

தன்மான இயக்கத்தின் பகுத்தறிவு ஒளி தமிழ்நாட்டோடு நிற்க வில்லை. அது பிற மாநிலங்களிலும் தொடக்க காலத்திலேயே பரவிற்று. 'இந்த இயக்கமானது மக்களின் பேதத்தையும் அறியாமையையும் உயர்வு தாழ்வையும் ஒழிப்பதற்கு ஏற்பட்ட

தாகும். இவைகள் ஒழிந்தால் தானாகவே சுயமரியாதை உதயமாகிவிடும். இவ்வியக்கம் நாட்டில் எவ்வளவு பரவி யிருக்கிறதென்பதற்கு பம்பாய் முதலிய வெளி மாகாணங்களில் சுயமரியாதை மாநாடுகள் கூடுவதும் அவைகளில் செய்யப்படும் தீர்மானங்களும் போதிய சான்றாகும்' என்று 20–7–1929இல் திருநெல்வேலியில் நடந்த, மாவட்ட இரண்டாவது சுயமரியாதை மாநாட்டில், அம் மாநாட்டை திறந்துவைத்த எஸ். குமாரசாமி ரெட்டியார் விளக்கினார்.

பெரியாரோடு சேர்ந்து காங்கிரசு தொண்டாற்றி, கதரைப் பரப்புவதில் துணை நின்று, பின்னர், வகுப்புரிமைக்குப் போராடும் பொருட்டு, காங்கிரசை விட்டு பெரியாரோடு வெளியேறியவர், எஸ். இராமநாதன், எம்.ஏ.,பி.எல். ஆவார். அவர் தன்மான இயக்கத்தில் பல்லாண்டு, பெரியாருக்குத் துணையாக விளங் கியவர். அவர் பெரியாரைப்பற்றி கூறும்போது, 'வைக்கம் வீரர் என்பவர் ஒரு மனிதரல்லர். அவர் எனக்கு ஒரு மனிதராகத் தோன்றவில்லை. ஒரு கொள்கையாகவே தோன்றுகிறார். உலகத்தில் எந்தெந்த நாடுகள் முன்னேறியிருக்கின்றனவோ அந்தந்த நாடுகளில் இவரது கொள்கை நிலைக்கக் காணலாம். மற்றும் தீவிரமாக எந்த மக்கள் உரிமைப் போராட்டம் புரிகின்றாரோ அந்த மக்கள் இந்தக் கொள்கையையே கொண்டிருப்பதையும் காணலாம்.'

## கலப்புத் திருமணம்

பகுத்தறிவுப் பகலவன், தன்மான இயக்கத் தந்தை, பெரியார் ஈ. வே. ராமசாமி அரை நூற்றாண்டுக்கு மேலாக அயராது பாடு பட்டதன் விளைவாகக் கலப்புத் திருமணங்கள் சர்வ சாதாரண மாகிவிட்டன. இயக்கத்தின் ஆதரவிலும் இயக்கத்திற்கு அப்பா லும் எண்ணற்ற கலப்புத் திருமணங்கள் ஆண்டுதோறும் நடை பெறுகின்றன. எல்லாச் சாதிகளிலும் எல்லாப் பெரிய குடும்பங் களிலும் பிற சாதிக் கலப்பு மணம் நடைமுறை வாழ்க்கையாகி விட்டதைக் காண்கிறோம். சாதிக்குள்ளேயே திருமணம் என்பதை அநேகமாக, சமுதாய ஏணியின் கீழ் படிக்கட்டுகளிலும், பொருளிய லில் அடிமட்டத்திலும் இருப்போர் மட்டுமே பின்பற்றி வருகிறார் கள்.

புரோகிதமற்ற திருமணங்கள், அய்ம்பதாண்டு காலத்தில், இலட்சக்கணக்கில் நடந்துள்ளன. 'இராகு கால' திருமணங்களும் எண்ணற்றன. 1967ஆம் ஆண்டு சுயமரியாதைத் திருமணச் செல்லுபடி சட்டத்தை முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா நிறை

வேற்றி வைத்தது, தன்மான இயக்கத்திற்குப் பெரும் வெற்றி யாகும். புரோகிதர்களை, சடங்குகளை, நீக்கிவிட்டுத் திருமணம் செய்துகொண்டோர், வைதீக முறையிலேயே திருமணம் செய்து கொண்டவர்களைவிட அதிக சிறப்போடு வாழ்வதைக் காணும் இளைஞர் உலகம், அடுத்த படிக்கு முன்னேறுவதாக; பதிவுத் திருமணங்களை சிக்கனமாகச் செய்துகொள்ளும் பழக்கத்திற்கு வருவதாக.

## கோயில் நுழைவு

தீண்டாமை ஒழிப்பிற்காகப் போராடிய பெரியார், வைக்கத்தில் வெற்றி கண்டார். கல்பாத்தியில், சுசீந்திரத்தில் அதன் பின் விளைவைக் கண்டார். தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கோயில்களி லும் எல்லாச் சாதியாரும் போகலாம் என்னும் சட்டம் நடை முறையில் இருப்பதை, பெரியார் தம் வாழ்நாளிலேயே கண்டார்.

சமுதாயத்தின் கீழ் படிக்கட்டுகளில் உள்ள பல சாதியார் சமைப் பதை மற்ற சாதியார் ஒன்றாய் இருந்து உண்பதை நடைமுறை யாக்கிவிட்டார். சாதி ஏற்றத்தாழ்வைக் காட்டும் அடையாளமாக, ஓட்டல்களில், 'பிராமணாள்' என்னும் அறிவிப்பு அநேகமாகப் பறந்து போய்விட்டது. பொதுக் குளங்கள், கிணறுகள், வீதிகள் ஆகியவற்றை எல்லோரும் பயன்படுத்தும் நிலை உருவாகி, பல ஆண்டுகள் ஆயின. சிற்சில சிற்றூர்களில், விட்ட குறை தொட்ட குறையாக, சாதி வேற்றுமை பாராட்டப்படுகிறது. அவ்விடங்களி லும் எல்லா வகையிலும் வேற்றுமை அடியோடு தொலைவதற் காகப் பாடுபடவேண்டியது நம் கடமையாகும்.

இன்றைய நடைமுறைப்படி பார்ப்பனர்கள் மட்டுமே தமிழ் நாட்டுக் கோயில்களில் கருவறைக்குள் செல்லலாம். இம்முறை பார்ப்பன அல்லாதாரை இழிவுபடுத்துதலாகும். எனவே கோயில் கருவறைக்குள் எல்லோரும் நுழைவதற்காகக் கிளர்ச்சி செய்ய பெரியார் திட்டமிட்டிருந்தார். அதை நடத்தி வெற்றி பெறுவதற் குள் மறைந்துவிட்டார். பின் தலைமுறைக்கு அத்தொண்டை விட்டு விட்டு போயிருக்கிறார்.

## யாவர்க்கும் 'அர்ச்சகர்' தொழில் உரிமை

சாதி வேற்றுமையின் அடிப்படையில் சிலர்தான் இன்ன தொழிலைச் செய்யலாம் என்றும், மற்றவர்கள் செய்யக்கூடாது என்றும் இருக்கும் முறை அவர்களை இழிவுபடுத்துவதாகும். இந்த இழிவும் நீங்க வேண்டுமென்பதற்காக, எல்லோரும் அர்ச்சகராக லாம் என்று பெரியார் போராடியதும், அதற்கு வழி செய்யும்

சட்டத்தை தமிழக அரசும், சட்டமன்றமும் ஒருமனதாக 12-1-71ல் நிறைவேற்றியதும் உரிமை விவகாரம். அதற்குத் தடையாக அரசியல் சட்டம் என்னும் 'நந்தி' படுத்திருப்பதாக உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பு கூறியுள்ளது. சட்டம், மனிதர்களை வாழவிட வேண்டும்; சரிநிகர் சமானமாக வாழவிடவேண்டும். அதற்கு ஏற்றாற்போல் மாற்றி அமைக்கப்படவேண்டும்.

தீண்டாமை குற்றம் என்று அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ளது. இது பெரியாரின் கொள்கைக்கு வெற்றியாகும். வழக்காடத் துணிவிருந்தால் எவ்வகையில் எவ்வுருவில் தீண்டாமையைக் காட்டினாலும் அவர் தண்டிக்கப்படுவார். அண்மையில் தமிழ்நாட்டில் ஓர் ஊரில், ஆதி திராவிடர் ஒருவருக்கு கொட்டாங் குச்சியில் தேனீர் ஊற்றியதற்காக, ஓட்டல்காரர் தண்டிக்கப் பட்டார்.

### தாழ்த்தப்பட்டவர் வாழ்வில் மறுவாழ்வு

கீழ்வெண்மணி, விழுப்புரம், அரக்கோணம், கூடலூர் ஆகிய ஊர்கள் ஆதி திராவிடர்களுக்கு இழைத்த கொடுமையின் வேதனையின் நினைவாலயங்களாகக் காட்சியளித்தாலும் இன்று ஆதி திராவிடர்களைக் கட்டிவைத்து, அடித்து, சாணிப்பால் ஊற்றமுடியாது. பேருந்துகளில், இரயில் வண்டிகளில், எட்டி உட்காரு என்று எவரையும் நாட்டுப்புறங்களில்கூடச் சொல்ல முடியாது. சிற்றூர்களிலும் உள்ளூர்களிலேயே ஆதி திராவிட ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள். மேட்டுக் குடி மாணவர்கள், அவர்களைக் கண்டால், எழுந்து நின்று, 'வணக்கம் அய்யா' என்று கும்பிடும் நிலை பெருபாலான ஊர்களில் உருவாகிவிட்டது.

நீதிமன்றங்களில் உயர் நீதிமன்றம் உள்பட ஆதி திராவிட நீதிபதிகள் இடம் பெற்றுள்ளனர்; பெரியாரின் தொண்டு அந்த அளவுக்கு வெற்றி கண்டுள்ளது. அந்த நீதிபதிகளை உயர் சாதி இந்துக்கள் பார்ப்பனர்கள் உள்பட 'மை லார்ட்' ('My Lord') என்று அழைப்பதைப் பார்க்கின்றோம்.

எத்தனையோ ஊர்களில், ஊராட்சித் தலைவர்களாக ஆதி திராவிடர்கள் இருக்கிறார்கள். ஊராட்சி மன்றம் முதல் நாடாளு மன்றம்வரை ஆதி திராவிடர்களுக்கு இடம் கிடைத்திருக்கிறது.

### சாதிப் பெயர் மறைவு

சாதிக் குறிகளைப் போட்டுக்கொள்ளக்கூடாதென்று முதல் சுய மரியாதை மாநாட்டிலேயே முடிவு செய்யப்பட்டது. தொடக்கத்

தில் கிண்டல், ஏளனச் சிரிப்பு; ஆனால் கால ஓட்டத்தில் நடைமுறையாகிவிட்டது. வெறும் சந்தானமாக, ஈசுவரனாக, சிவசைலமாக, பக்தவத்சலமாக, நடராசனாக, சாமிநாதனாக, மகாராசனாக, சோமசுந்தரமாக பெயரை மடக்கிக்கொள்வதே இக்கால நாகரீகம்.

துண்டுபோட்டுக்கொண்டு, நாயனம் வாசிக்கக்கூடாதென்று சிவக்கொழுந்துவுக்கு கானாடுகாத்தான் ஆணையிட, அதை எதிர்த்து தன்மான இயக்கத்தின் பீரங்கி அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி போராடிய நிலையிலிருந்து எவ்வளவு தொலைவுக்கு முன்னேறி விட்டோம்! 1971ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் சென்னையில் நடந்த தமிழ் இசை விழாவில், தொடக்க நாளன்று, மேடையில் முன்வரிசையில் அமர்ந்திருந்த அய்வரில் செட்டிநாட்டு அரசர், ஆளுனர் K. K. ஷா தவிர, மற்ற மூவரும் கலைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். அவர்கள் நாயனக் கலைஞர் வீருசாமி, நட்டுவக் கலைஞர் வழுவூர் ராமையா, இசைக் கலைஞர் மதுரை சோமு ஆவார்கள். அம்மூவரும் பளபளக்கும் சொக்காய் போட்டிருந்தார்கள்; அழகிய நீண்ட மேல் துண்டு அணிந்திருந்தார்கள். இவற்றையெல்லாம்விட மேலான பெருமை ஒன்றை உணர்ந்தேன். இம்மூவரில் எவரும் நாற்காலியின் விளிம்பில் உட்கார்ந்துகொண்டு' அரசருக்கு, ஆளுனருக்குச் சமமாக உட்காரலாமா என்று சங்கடப்படவில்லை. அத்தகைய சிறப்புக்கே பிறந்தவர்கள்போல், தன்னம்பிக்கையோடு, அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள்.

வசிஷ்டர் வாயால் பிரம்ம ரிஷிப் பட்டம் என்பது உலக வழக்கு. சுயமரியாதை இயக்கத்தைச் சாடிக்கொண்டிருந்த ஒருவரின் வாயால் சுயமரியாதை இயக்கத்தின் சாதனை உளமாரப் பாராட்டப்பட்டதை நான் நேரில் கேட்டு மகிழும் பேறுபெற்றேன். பெரியார் ஆதரித்த நீதிக் கட்சியைச் சாடுவதையே காங்கிரசுத் தொண்டாகக்கொண்டிருந்த மூத்த தியாகி ஒருவரின் படப்பிடிப்பு இப்போது நினைவிற்கு வருகிறது.

திரு. மீ. பக்தவத்சலம் தமிழ்நாட்டின் கல்வி அமைச்சராக இருந்த காலம். நான், தமிழ்நாட்டின் பொதுக் கல்வி இயக்குநராக இருந்தேன். அலுவல்பற்றி, கல்வி அமைச்சரைக்காண, அவர் இல்லத்திற்குச் சென்றேன். வரவேற்பு அறையில் பலர் காத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் என்னிலும் மூத்தவர். தமிழ்நாட்டு காங்கிரசு வட்டாரத்தில் பெரிய புள்ளி. நான் உள்ளே வருவதைக் கண்டதும் அவர் எழுந்து, முன்னே வந்து, என் கையைப் பிடித்துக் குலுக்கினார்.

'நன்றாக இருக்கிறீர்களா?' என்று நான் அவரைக் கேட்டேன்.

பொங்கும் மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்தவும் முயலாது, 'மிக நன்றாயிருக்கிறேன். ஒரு குறையும் இல்லை. மகாத்மா காந்தி புண்ணியத்தில், நாட்டுக்கிருந்த இழிவு போயிற்று. பெரியார், எங்கள் கோவை செங்குந்தர் (இசை வேளாளர்) சாதிக்கு இருந்த இழிவைப் போக்கிவிட்டார். அதில் உங்களுக்கும் பங்கு உண்டு. அதுபற்றித்தான் உங்களிடம் எனக்குப் பற்று. இரண்டு இழிவுகளும் துடைக்கப்பட்டுவிட்டதை எண்ணி மகிழ்ச்சியோடு வாழ்கிறேன்' என்றார்.

இருவர் கண்களிலும் மகிழ்ச்சிக் கண்ணீர் துளிகள் கரை கட்டின. கோவை சி.பி.சுப்பய்யா இப்படிப் பாராட்டியபோது, நான் பெரியார் கொள்கையாளனாக வாழ்வதைப்பற்றி பரவசமானேன்.

### அரசியல் சூழலில் மாற்றம்

பெரியாரின் வாழ்நாள் போராட்டம் சமுதாய மாற்றத்தோடு நிற்கவில்லை; அரசியல் சூழ்நிலையையே மாற்றிவிட்டது. ஏழைப் பங்காளர் காமராசரும், பேரறிஞர் அண்ணாவும், கலைஞர் கருணாநிதியும் தமிழ்நாட்டில் முதல் அமைச்சர்களாக விளங்கிய சமுதாய நிலையை உருவாக்கியது, பெரியாரின் சமுதாயப் புரட்சி வெற்றிபெற்றதற்கு அடையாளம். திராவிட பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்களும் அதை மதிக்கிறவர்களும்தான் தமிழ்நாட்டை ஆளமுடியும் என்னும் நிலை உருவாகியுள்ளது. இது பெரியார் அளித்த கொடையாகும்.

1925இல் வகுப்புரிமைத் தீர்மானத்தை காஞ்சி மாகாண மகா நாட்டில் வாதிப்பதற்கும் விடவில்லை. ஆனால் அதே காங்கிரசின் சார்பில் திரு. காமராசர் அமைச்சரவை அவ்வகுப்புரிமையைக் கருத்திற்கொண்டு செயல்பட்டது. எல்லா பகுதியினருக்கும் கல்வி நிலையங்களில், அரசு பதவிகளில், உரிய பங்கு கிடைக்கும்படி பார்த்துக்கொண்டது. ஆகவே, வகுப்புரிமைபற்றிய கொள்கையில் பெரியார் வென்றார்.

### இலவசக் கல்வி

கனவிலும் நனவிலும் பார்ப்பனரல்லாதார் அனைவரும் மற்றவர்களுக்குச் சமமாகக் கல்வி அறிவு பெறவேண்டுமென்று பெரியார் நினைத்து வந்தார். அக்கொள்கையும் வெற்றி பெற்றதைக் கண்டோம். நம் மக்கள் உள்ளங்களையும் சமுதாயச் சூழ்நிலையையும் 'எல்லார்க்கும் கல்வி' என்னும் கொள்கைக்கேற்பப் பண்

படுத்தி வந்தார், தந்தை பெரியார். உழுது பரம்படித்து வைத்திருந்த தமிழ்நாட்டு வயல்களில், கல்விப் பயிரைச் செழிக்க வைத்தார், கர்மவீரர் காமராசர். பகல் உணவு என்னும் நீரைப் பாய்ச்சினார்; இலவசக் கல்வி என்னும் உரத்தையிட்டார்; சீருடை என்னும் பூச்சிக்கொல்லியைத் தெளித்து வந்தார்.

எல்லா சாதிப் பையன்களும் பெண்களும் படிக்கப்போனார்கள்; முன்னர் காணாத அக்கறையோடு படித்தார்கள். நன்றாகத் தேர்ச்சி பெறவும் தலைப்பட்டார்கள். இவ்வளர்ச்சி பொதுக் கல்வியோடு, பள்ளிக் கல்வியோடு நிற்கவில்லை. கல்லூரிக் கல்விக்கும் தொழிற் கல்விக்கும் பரவிற்று.

பள்ளி இறுதிவரை இருந்துவந்த இலவசக் கல்வி முறையை 1969இல் புகுமுக வகுப்பிற்கும் விரிவுபடுத்தி முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி ஆணையிட்டார். இது ஏழைகளின் மேல் படிப்பிற்கு தூண்டுகோலாயிற்று. முன்னர், மேல்சாதிக்காரர்களே அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு அலுவல் பற்றி போவார்கள். இப்போது பலசாதிக்காரர்களும் பிற நாடுகளில் பணிபுரிகிறார்கள்.

இன்று தமிழ்நாட்டில் வடமொழி கற்பிக்கும் பள்ளிகள் கல்லூரிகள் நீங்கிய மற்ற எல்லா கல்வி நிலையங்களிலும் 'தாழ்த்தப்பட்டவர்கள்' என்று அழைக்கப்பட்டவர்கள், படிப்பதைக் காணலாம்.

### வடநாட்டில் எதிரொலி

இன்றைக்கும் பீகார், உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் பின்தங்கிய வகுப்பாருக்கு நூற்றுக்கு இருபது இடங்களை கல்லூரிப் படிப்பிலும் வேலை வாய்ப்புகளிலும் ஒதுக்க முனையும் போது சொல்லிமுடியாத கலவரங்கள் நடக்கக் காண்கிறோம். இங்கோ அய்ம்பது ஆண்டுகளுக்கு முன்பே, வகுப்புரிமை விரிந்த அளவில் செயல்பட்டது. புதிய அரசியல் சட்டம் அதை ஓரளவு முடமாக்கியது. இருப்பினும் பெரியார் கிளர்ச்சி செய்து, பின்தங்கியவர்களுக்கும் இடம் ஒதுக்கீடு செய்யலாம் என்னும் திருத்தத்தைக் கொண்டுவரச் செய்து வெற்றிகண்டார்.

### உயர் கல்வியில் முன்னேற்றம்

அதன் விளைவாக, தொழிற் கல்வியிலும் வேலைகளிலும் பின்தங்கியவர்களுக்கும் பெருமளவு நீதி வழங்க முடிந்தது. 1975ஆம் ஆண்டு எம்.ஏ.,எம்.எஸ்ஸி., எம்.காம். சேர்க்கைகளில், தாழ்த்தப்

பட்டவர்களும் பின்தங்கியவர்களும் சேர்ந்து மொத்தத்தில் நூற்றுக்கு எழுபது இடங்கள்போல் பிடிக்க முடிந்தது. பார்ப்பனர் களுக்குப் பத்துப்பதினைந்து விழுக்காடு கிடைத்திருக்கலாம். இந்த சம வாய்ப்புப் பெருக்கு பெரியாரின் இயக்கத்தின் பெரும் பயனாகும்.

ஆண்களுக்குச் சமமாகப் பெண்களும் படிக்கவேண்டும் என்பது பெரியாரின் சூடுதணியாத கொள்கை. இன்னும் அந்நிலை கைகூடாவிட்டாலும் அதை நோக்கி தமிழ்நாடு விரைகிறது. 1978ஆம் ஆண்டு பொறியியல் கல்லூரிகளுக்காக 1055 பேர்களை பொறுக்கியெடுத்தார்கள். அந்தப் பட்டியலில் 196 பெண்கள் இருந்தார்கள். இன்னும் அய்ந்தாண்டுகளில் பெண்கள் எண்ணிக்கை உயர்ந்து மாணவர்களும் மாணவியர்களும் சமமாகி விடுவார்களென்று எதிர்பார்க்கலாம்.

பெண்களை ஆசிரியர் தொழிலுக்கும் மருத்துவத் தொழிலுக்கும் மட்டும் எடுப்பது போதாது. காவல்துறையிலும் இராணுவத்திலும் சேர்க்கவேண்டுமென்று 1931ஆம் ஆண்டு விருதுநகரில் நடந்த இரண்டாவது சுயமரியாதை பெண்கள் மாநாட்டில் முடிவு செய்தார்கள். அண்மையில் சில ஆண்டுகளாக காவல்துறையில் பெண்களைச் சேர்க்கத் தொடங்கியுள்ளார்கள்.

கல்விமுறை, மாணாக்கரின் சிந்தனையைத் தூண்டுவதாக அமையவேண்டும் என்னும் திட்டம் இன்றும் இலட்சியமாகவே இருக்கிறது. இலக்கியப் பகுதி என்னும் பேரால், நாம் தலைமுறை தோறும் மூடநம்பிக்கைப் பகுதிகளை நுழைத்துக்கொண்டும் சொல்லிக் கொடுத்துக்கொண்டும் வருகிறோம். இம் முறையை மாற்றுவது வருங்காலத் தலைமுறையின் பொறுப்பாகும்.

இந்தி எதிர்ப்புக் கொள்கையில் பெரியார் இன்றுவரை வெற்றி பெற்று வந்துள்ளார். பள்ளிகளில் இந்திப் பாடம் எடுக்கப்பட்டு விட்டது. நாளை என்ன ஆகும்?

சமூகவியல், பொருளியல் முறைகளை புதிய கண்ணோட்டத் தோடு கண்டு, அவற்றை அடியோடு மாற்றி அமைக்க அரும்பாடு பட்ட பெரியார், மொழிபற்றியும் புதிய, புரட்சிகரமான கண்ணோட்டம் உடையவராக விளங்கினார்.

### தமிழ்மொழியைப்பற்றிய ஆய்வு

கடவுள், சமயம் ஆகியவற்றிற்கு புனிதத்தன்மை கற்பித்து வந்ததை வன்மையாகத் தாக்கிய பெரியார், நம் தாய்மொழியாம் தமிழ்மொழிக்கு மரபுவழி கூறப்படும் புனிதத்தன்மையை எள்ளி நகையாடினார்.

அதே சமயம் தமிழ்மொழியின் சிறப்பையும் எடுத்துக்காட்டத் தவறியதில்லை. அவரது கூற்றுப்படி தமிழ், நம் நாட்டுச் சீதோஷ்ண நிலைக்கேற்ப அமைந்துள்ளது. இந்திய நாட்டுப் பிற எம்மொழியையும்விடத் தமிழ் நாகரீகம் பெற்று விளங்குகிறது. தூய தமிழ் பேசுவதால்—மற்ற வேற்று மொழிச் சொற்களை நீக்கிப் பேசுவதால் நம்மிடையேயுள்ள இழிவுகள் நீங்குவதோடு மேலும் மேலும் நன்மையடைவோம் என்பதோடு நம் பழக்க வழக்கங்களுக் கேற்ப நம் மொழி அமைந்திருக்கிறது. வேறு மொழியை புகுத்திக் கொள்வதன்மூலம் நம் அமைப்புக் கெடுவதோடு அம்மொழி யமைப்பிலுள்ள நம் நலனுக்கு புறம்பான கருத்துக்கள், கேடு பயக்கும் கருத்துக்கள், நம்மிடைப் புகுந்து நம்மை இழிவடையச் செய்கின்றன.

தென்னாட்டு மொழிகளை ஒப்பிட்டுக் கூறும்போது, அவர் 'என் சிற்றறிவிற்கு, என் அனுபவத்திற்கு, ஆராய்ச்சிக்குத் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கும் தனித்தனி மொழிகளென்றோ அல்லது தமிழ் தவிர மற்ற மூன்றும் தமிழி லிருந்து பிரிந்த மொழிகளென்றோ தோன்றவில்லை. ஒரே மொழி அதாவது தமிழ்தான் நான்கு இடங்களில் நான்கு விதமாக பேசப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டார்.

தமிழ்மொழி வளர்ச்சிக்காக அதில் செய்யப்படவேண்டிய சில சீர்திருத்தங்களைப்பற்றி நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னரே தெளிவுபடுத்தினார். 'தமிழ் மிகுதியும் நம் முற்போக்குக்கு ஏற்ற படி செம்மைப்படுத்தப்பட வேண்டும். மக்கள் கற்க மேலும் இலகு வாக்கப்படவேண்டும். பயனுள்ள பரந்த மொழியாக்கப்பட வேண்டும்.'

ஆகவே, பிறர் சுலபமாகத் தமிழ்மொழியைக் கற்றுக்கொள்ளவும், சுலபமாக அச்சுக்கோக்கவும், தட்டச்சு அடிக்கவும், தமிழ் எழுத்துக் களை மாற்றவேண்டும் எனக் குறிப்பிட்டு, அதற்கு அடிப்படைக் காரணத்தையும் தெளிவுபடுத்தினார். 'மொழி என்பது உலகப் போட்டிப் போராட்டத்திற்கு ஒரு போர்க் கருவியாகும். போர்க் கருவிகள் காலத்திற்கேற்ப மாற்றப்படவேண்டும். அவ்வப்போது கண்டுபிடித்துக் கைக்கொள்ளவேண்டும்.'

### எழுத்துச் சீர்திருத்தம்

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்பற்றி துல்லியமான கருத்துக் கொண்டிருந்தார் பெரியார். ஓர் ஆழ்ந்த ஆராய்ச்சியே நடத்தி யிருப்பதற்கான சான்றுகள் அவர் தரும் முறைகளில் பரவலாகக்

காணப்படுகின்றன. தமிழில் எழுத்துக்கள் அதிகம். ஞாபகத்தில் இருத்தவேண்டிய தனி உருவ எழுத்துக்கள் அதிகம்.

தமிழ் உயிர் எழுத்துக்களில் ஐ, ஔ ஆகிய இரண்டு எழுத்துக்களைக் குறைத்துவிடலாம். இவை இரண்டும் தேவையில்லாதவை. மேலும் இவை கூட்டெழுத்துக்களே ஒழிய தனி எழுத்துக்கள் அல்ல. இப்படிக் குறைப்பதால் மொத்தத்தில் 38 எழுத்துக்கள்—அதாவது உயிரெழுத்து ஐ, ஔ ஆகிய இரண்டும் அவை ஏறும் மெய்யெழுத்துக்கள் $2 \times 18 = 36$ம் ஆக 38 ஞாபகத்திற்கும் பழக்கத்துக்கும் தேவையில்லாத எழுத்துக்கள் ஆகிவிடும். ஐ=அய், ஔ=அவ் என எழுதலாம்.

இவை தவிர, உயிர்மெய் எழுத்துக்களில் தனி மாற்றம் பெற்றிருக்கிற ணு,று,னு ஆகிய மூன்றெழுத்துக்களும் தனி உருவம் தேவையில்லாமல் ணா, றா, னா என்று ஆக்கிவிடலாம்.

மற்றும் மெய்யெழுத்துக்களில் இகரம், ஈகாரம், உகரம், ஊகாரம் ஆகிய நான்கு குறில் நெடில் எழுத்துக்கள் கொண்ட $18 \times 4 = 72$ தனி உருவ எழுத்துக்களை நீக்கிவிட்டு தனிச் சிறப்புக் குறிப்பை உண்டாக்கி உயிர்மெய் 10, மெய் 18, குறில் நெடில் குறிகள் 9, ஆய்தம் 1 ஆகிய 38 தமிழ் எழுத்துக்களாகச் சுருக்கிவிடலாம்.

அடுத்தபடியாக, மெய்யெழுத்துக்களில் ந, ங, ஞ ஆகிய மூன்றையும் எடுத்துவிடலாம். ன்+த=ந, ன்+க=ங, ன்+ச=ஞ என்று ஆக்கிவிடலாம்.

இப்படிச் செய்தால் உயிர் 5, மெய் 15, சிறப்புப்பகுதி 8, ஆய்தம் 1 மொத்தம் 29 உருவ எழுத்துக்களிலேயேகூட தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கையைச் சுருக்கிவிடலாம்.

எப்படியும் தமிழ் எழுத்துக்கள் குறைக்கப்படவேண்டும். கற்கும் குழந்தைகளுக்கு மூன்று மாதங்களில் படிக்கத் துவக்கலாம் என்பதுதான் என் ஆசை என்று தன் உள்ளக்கிடக்கையை வெளியிட்ட பெரியார், இந்த எழுத்துச் சீர்திருத்தம் செய்வதால் தமிழ் மொழிக்கோ, இலக்கணத்திற்கோ எவ்விதக் குறைபாடோ கேடோ விளையாது என்று உறுதி கூறினார்.

எனினும் நினைத்தோம், சொன்னோம், செய்தோம் என்று மின்னல் போக்கில் பெரியார் செயல்படவில்லை. உரியவர்களின் உளப்போக்கை மாற்றி ஒப்புதல் பெறவே முனைந்தார்.

பெரியாரின் முதல் தளபதிகளில் ஒருவராகிய திரு. குருசாமி 1932இல் துறையூரில் நடந்த தமிழர் மாநாட்டின்முன் எழுத்துச் சீர்திருத்தம்பற்றிய தீர்மானம் ஒன்றை வைத்தார். அதை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளாமல் மாநாட்டுத் தலைவர் தள்ளிவிட்டார்.

1933ஆம் ஆண்டின் கடைசியில் சென்னையில் நடந்த தமிழன்பர் மாநாட்டிற்கு எழுத்துச் சீர்திருத்தம்பற்றிய தீர்மானத்தை, திருவாளர்கள் கே. எம். பாலசுப்ரமணியம், திரு. சேலம் ஆர். நடேசன், திரு. சு. குருசாமி, திரு. பூவாளூர் அ. பொன்னம் பலனார், திரு. சாத்தான்குளம் அ. இராகவன் ஆகிய அய்வரும் கையெழுத்திட்டு அனுப்பிவைத்தார்கள். மாநாட்டில் அத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதைப்பற்றி, நுணுக்க மாக ஆய்ந்து கருத்து சொல்ல, பதினோரு பேர்கள் கொண்ட குழு வொன்று அமைக்கப்பட்டது. ஆனால் அக்குழு கூடவேயில்லை.

பெரியார் ஓராண்டு காலம் பொறுத்திருந்துவிட்டு, 1–1–'35 முதல் தமிழ் நெடுங்கணக்கில் பலவற்றை புதிய முறையில் அமைக்கத் தலைப்பட்டார். அவையாவன:

ணா, னா, றா என்னும் எழுத்துக்களை ணா, னா, றா எனவும்,

ணை, னை, லை, ளை என்பவற்றை ணை, னை, லை ளை எனவும்,

ணொ, னொ, றொ என்பவற்றை ணொ, னொ, றொ எனவும் மாற்றி எழுதுதல் ஆகும். பெரியாரின் 'குடி அரசு', 'புரட்சி', 'பகுத்தறிவு', 'விடுதலை' இதழ்கள் இம்முறையைப் பின்பற்றின. 'குடி அரசு' வெளியீடுகள் மேற்கூறிய எழுத்து மாற்றங்களைக் கையாண்டன.

திரு. ஓமாந்தூர் இராமசாமி முதலமைச்சராகவும், திரு. டி.எஸ். அவினாசிலிங்கம் கல்வியமைச்சராகவும் இருந்தபோது தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்பற்றி ஆய்ந்து ஆலோசனை கூற, பல தரப்பினர்களையும் கொண்ட குழுவொன்று நிறுவப்பட்டது. அதில் பன்மொழிப் புலவர் டாக்டர் மீனாட்சி சுந்தரனார், டாக்டர் மு. வரதராசனார், கல்கி கிருஷ்ணமூர்த்தி முதலியோர் இடம் பெற் றிருந்தனர்.

அக்குழு, பெரியார் கையாண்ட எழுத்துச் சீர்திருத்தங்களை ஆதரித்து பரிந்துரைத்தது. அரசு அப்பரிந்துரைகளைப் பார்த்து ஆணையிடுவதற்கு முன், அமைச்சரவையில் மாறுதல் ஏற்பட்டது. புதிய அமைச்சரவை, இதைப்பற்றி முடிவெடுக்காமல், காலங் கடத்திவிட்டது. இப்படி இருபத்து இரண்டு ஆண்டுகள் உருண் டோடின. இதற்கிடையே தமிழக புலவர் குழு, பெரியார் எழுத்து சீர்திருத்தத்தை ஏற்றுக்கொள்வதாக முடிவுசெய்தது.

பின்னர், தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழாவினை ஆண்டு முழுவதும் சிறப்பாகக் கொண்டாடுவதென்று மாண்புமிகு எம். ஜி. இராமசந்திரன் தலைமையில் ஆன அ.இ.அ.தி.மு.க. அரசு முடிவுசெய்து தமிழர்கள் பாராட்டுதலைப் பெற்றது. விழாக் களைத் திட்டமிட ஓர் உயர்மட்டக் குழுவொன்று டாக்டர் நெடுஞ்

செழியன் தலைமையில் நியமிக்கப்பட்டது. அக்குழு, விழாக் கொண்டாட்டங்களுக்கு அப்பால், நிலையாக நிற்கக்கூடிய, பெரியாருக்கு உடன்பாடான, சில ஆலோசனைகளைக் கூறிற்று. அதில் ஒன்று, பெரியார் கையாண்ட தமிழ் எழுத்து முறையைப் பின் பற்றுவது என்பதாகும். ஒருமனதாகக் கூறப்பட்ட இப்பரிந்துரையை தமிழக அரசு உடனடியாகக் கவனித்து, ஏற்றுக்கொண்டு ஆணைப் பிறப்பித்தது, போற்றத்தக்கதாகும்.

பெரியார் கையாண்ட எழுத்து முறைகளில் 'ஐ' என்பதை 'அய்' என்றும், 'ஔ' என்பதை 'அவ்' என்றும் எழுதுவதும் அடங்கும். மேற்படி அரசு ஆணைக்குப் பிறகு இதைப்பற்றி சிலர் சலசலப்பை எழுப்பினார்கள். அரசின் சார்பில் மறு பரிசீலனை செய்வதாக அறிவிக்கப்பட்டது.

'ஐ', 'ஔ' என்பவை ஓரொலி எழுத்துக்கள் அல்ல, ஈரொலிகள் சேர்ந்தவை. அவற்றை பெரியார் கையாண்டபடியே இனிக் கையாளுவதில் குறையேதும் வந்துவிடாது. முதலில் அரசு இட்ட ஆணைப்படியே செயல்படலாம்.

பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம் அவருடைய புரட்சிகரமான சிந்தனையின் வெற்றிக்குச் சான்றாக விளங்குவதோடு, தமிழ் அச்சுக்கும், தட்டச்சுக்கும் உதவியாக அமையும் என்பது உறுதி.

### பெண்களின் திருமண வயது

பெண்களின் திருமண வயது 16-க்கு மேற்பட்டிருக்க வேண்டுமென்று அய்ம்பது ஆண்டுகளுக்கு முன்பு, செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டில் முடிவு செய்தபோது, புருவங்களை நெறித்தார்கள்; வசைமாரி பொழிந்தார்கள். இன்று இது சட்டமாகி விட்டது. நடைமுறையில், எண்ணற்ற பெண்கள், பதினெட்டு இருபது வயது வரை திருமணஞ் செய்து கொள்ளாதிருக்கிறார்கள். பழைய காலத்தில், இது ஓயாத பேச்சுக்கு இடமாகும். இப்போது அப்படியில்லை. ஒவ்வொரு சுயமரியாதை மாநாட்டிலும் பெண்களுக்கு சொத்துரிமை வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது. அதுவும் பலித்துவிட்டது.

ஆண் பெண் இருவருக்கும் ஒரே மாதிரியான சொத்துரிமை என்னும் கொள்கை சட்டமாகிவிட்டது.

பழைய காலம்போல், மூன்று நாள் திருமணம் தேடினாலும் கிடைக்காது. பெரும்பாலான திருமணங்கள் ஒன்றரை நாள் திருமணங்களாகி உள்ளன. புரோகிதம் நீங்கிய திருமணங்கள் ஒரு வேளைத் திருமணங்களாகி உள்ளன. இதில் மேலும் செலவுக் குறைப்புக்கும் காலச் சிக்கனத்திற்கும் இடம் இருக்கிறது.

இத்தகைய சீர்திருத்தங்களை இளைஞர்கள் போதிய துணிவோடு முன்னிலும் அதிகமாக நடைமுறைப்படுத்துவார்களாக.

## குடும்பக் கட்டுப்பாடு

'அளவான குடும்பம் வளமான வாழ்வு' என்னும் கொள்கையை தென்னகத்துப் பொதுமக்களிடையே பரப்பிய முன்னோடி தந்தை பெரியார் ஆவார். அப்போது கிண்டல் செய்தவர்களே, ஆட்சியாளராக மாறியபோது, அதைத் தீவிரமாகச் செயல்படுத்த முனைந்தது, பெரியாரின் மற்றோர் கொள்கைக்கு வெற்றியாகும்.

வெவ்வேறு சமய நம்பிக்கை உடையவர்கள், நம்பிக்கையில்லாதவர்கள் ஆகிய அனைவருக்கும் பொதுவான அலுவலகங்கள், கல்வி நிலையங்கள், பொது அமைப்புகள் ஆகியவற்றில் கடவுள் படங்கள் இருத்தலாகாது, பூசைகள் நிகழ்த்தலாகாது என்று பேரறிஞர் அண்ணாதுரை முதலமைச்சராக இருந்தபோது ஆணையிட்டார். பல பொது இடங்களில் இவ்வாணை செயல்படுத்தப்படவில்லை என்பது வருத்தமூட்டுவதாகும்.

பொதுக்கூட்டங்களின் தொடக்கத்திலாவது முடிவிலாவது அரசு வாழ்த்து, கடவுள் வணக்கம், தலைவர் வணக்கம் பாடக்கூடாதென்ற தன்மான இயக்க முடிவு, அவ்வியக்கத்திற்கு அப்பால் செயற்படவில்லை.

எத்தனையோ சிலை திருட்டுகள் வாரந்தோறும் வெளியாகின்றன. தமிழ்நாட்டு நாத்திகர் எவரும் எந்த சிலைத் திருட்டு குற்றத்திற்கும் ஆளாகவில்லை என்பது, பெரியாருக்குப் பெருமை; பகுத்தறிவு இயக்கத்திற்குச் சிறப்பு. நாத்திகர்கள் மற்றவர்களை விட ஒழுக்கசீலர்களாக, உண்மையாளர்களாக, நேர்மையாளர்களாக இருக்கவேண்டுமென்று, தந்தை பெரியார் கற்றுக்கொடுத்த பாடத்தை தன்மான இயக்கத்தவர்கள், கசடறக் கற்றுக்கொண்டார்கள்; கற்றபடி நிற்கிறார்கள் என்பதற்குச் சான்றாக விளங்குகிறது.

கடவுள் நம்பிக்கை கோயில் வழிபாடு, இவைகளைப் பொறுத்த மட்டில் இலட்சக்கணக்கானவர்கள் இந்நம்பிக்கையிலிருந்து விடுபட்டு வாழ்ந்து வருகிறார்கள். ஆயினும் கோடிக்கணக்கானவர்கள் சமய நம்பிக்கையை விட்டபாடில்லை. சிலை வணக்கத்தை ஒதுக்கியபாடில்லை. இவற்றிற்காக, பொருளையும் நேரத்தையும் சிந்தனையையும் பழையபடியே பாழாக்கி வருகிறார்கள். தாமே, நேரே, பொருள் படாடோபமின்றி, வழிபடும் அளவுக்குக்கூட பெரும்பாலான ஆத்திகர்கள், தெளிவோ, துணிவோ பெறவில்லை.

'ஏட்டிக்குப் போட்டி' மக்கள் பிரிவில் எங்கும் உள்ள மன நோயாகும். தமிழர்களுக்கோ இந்நோய், அளவுக்குமீறி செறிந்துள்ளது. எனவே, பலவேளை, தங்கக் கூரை, வெள்ளித் தேர் போன்ற தேவையற்ற ஆடம்பரங்களில், வழிபாட்டின் பேரால், திளைக்கிறார்கள். இது பெரியாருக்கோ அவரது கொள்கைக்கோ இழுக்கல்ல. தமிழர்களுடைய சிந்தனைப் போக்கிலுள்ள குறைபாடு. தான் வெளிச்சத்தில் இருக்க வேண்டுமென்பதற்காக சமுதாயத்திற்குத் தவறான வழிகாட்டும் 'பெரியவர்களின்' கோணல் புத்தி.

### சமதர்மத் திட்டம்

1932ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 28, 29 தேதிகளில் ஈரோட்டில் சுயமரியாதை தொண்டர்கள் கூட்டத்தைக் கூட்டி அதில் சமதர்ம திட்டம் ஒன்றை முன்வைத்து நிறைவேற்றியதை முன்னரே கண்டோம்.

பொருளியல் அமைப்பை மாற்றும் கொள்கையைப் பெரியார் தீவிரமாகப் பரப்பிவந்தார். இரயில்வேக்கள் நாட்டுடைமையாக வேண்டுமென்பது பெரியார் தீட்டிய சமதர்மத் திட்டத்தின் ஓர் பகுதியாகும். அது பலித்துவிட்டது. சாலைப் போக்குவரத்துகள், நாட்டுடைமை ஆகவேண்டுமென்பது அத்திட்டத்தின் மற்றோர் கிளை. அதுவும் பெருமளவு பலித்துவிட்டது. கப்பல் போக்குவரத்து இனியே நாட்டுடைமை ஆகவேண்டும். விமான போக்குவரத்து நாட்டுடைமையாகிவிட்டது எல்லோரும் அறிந்ததே.

தொழில் துறைகள் போன்ற உற்பத்திச் சாதனங்களின் நிர்வாகத்தையும் அதன் இலாபத்தையும் தனிப்பட்ட மனிதர்கள் அடையாமலிருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசியல் அமைப்புகளின் வழியாகச் செய்ய வேண்டுமென்னும் பெரியாரின் சமதர்மத் திட்டத்தை நீதிக் கட்சி ஏற்றுக்கொண்டது. ஆனால், அதற்குப் பிறகு அக்கட்சிக்கு ஆளும் வாய்ப்பே கிட்டவில்லை.

### அறிஞர் அண்ணாவின் பாராட்டு

ஈராண்டு காலம் தமிழ்நாட்டின் முதல் அமைச்சராக விளங்கிய பேரறிஞர் அண்ணா, பெரியார் பகுத்தறிவுப் பல்கலைக் கழகத்தின் தலை மாணாக்கர் ஆவார். அவர் 'விடுதலை வரலாறு' என்ற நூலில் பெரியாரைப் படம் பிடித்துக் காட்டுகிறார். அது இதோ:

'கல்லூரி காணாத கிழவர்! காளைப் பருவம் முதல் கட்டுக் கடங்காத முரடர்! அரசியல் நோக்கத்துக்கான முறையிலே, கட்சி

அமைப்பு இருக்க வேண்டுமென்று அறியாத கிளர்ச்சிக்காரர். பொதுமக்கள் மனம் புண்படுமே; புண்பட்டவர்கள் கோபத்தால் பேசுவரே! ஏன் வீணாக அவர்களின் ஆத்திரத்தைக் கிளப்ப வேண்டுமென்று யூகமாக நடந்துகொள்ள மறுப்பவர்! யார் யாரைத் தூக்கி விடுகிறாரோ, அவர்களாலேயே தாக்கப்படுபவர்! அவர், யாரைக் காண வேண்டுமோ அதற்கேற்ற கோலம் வேண்டாமா என்ற யோசனை அற்றவர்! தமிழ் ஆங்கில தினசரிகளின் ஆதரவு இல்லாதவர்! ஆரிய மதம், கடவுள் எனும் மூட மந்திரங்களைச் சாடுவதன் மூலம் கேடு வருமென்று எச்சரிக்கும் போக்கினரின் இசைக்குக் கட்டுப்பட மறுப்பவர்...'

மேற்கூறியபடி பெரியாரின் ஆளுமையைக் காட்டிய அண்ணா, அவருடைய சாதனைகளைப்பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

'பெரியார், எந்த நாட்டிலும் இரண்டு நூற்றாண்டுகளில் செய்து முடிக்கக்கூடிய காரியங்களை இருபதே ஆண்டுகளில் செய்து முடித்திருக்கிறார்.

'அய்ரோப்பா கண்டத்தை எடுத்துக்கொண்டால், நாட்டினுடைய விழிப்பினுக்கு அய்ம்பது ஆண்டும் அமைந்த ஆட்சியை மாற்றுவதற்கு, அய்ம்பது ஆண்டுகள் என்ற அளவில், ஒரு பகுத்தறிவு மனப்பான்மையைத் தோற்றுவிப்பதற்காக, ஒரு வால்டேர், ரூசோ, இப்படித் தொடர்ச்சியாக பல பேர் வந்து வந்து இரண்டு மூன்று நூற்றாண்டுகள் பாடுபட்டுத்தான், பகுத்தறிவுப் பாதையில் அந்த நாடுகள் செல்ல முடிந்தது.

'நூற்றாண்டுகளைக் குளிகைக்குள் அடக்குதல்' இது ஆங்கில வழக்கு ஆகும். சில மருந்துகளை உள்ளடக்கி சில மாத்திரைகளில் தருவதுபோல, பல நூற்றாண்டுகளை இருபது ஆண்டுகளில் அடைத்து தம்முடைய வாழ்நாளிலேயே சாதித்துத் தீரவேண்டுமென்று அறிவோடும் உணர்ச்சியோடும் நெஞ்சு ஊக்கத்தோடும் யார் வருகிறார்கள், யார் போகிறார்கள் என்பதைக்கூட இரண்டாந்தரமாக வைத்துக்கொண்டு, எந்த அளவு முன்னேறுகிறோம் என்பதைக் காண்பதிலேயே வாழ்க்கை முழுவதும் போராட்டக் களத்தில் நின்றார் பெரியார்.'

வாழ்நாள் முழுவதும் புரட்சிகரமான போராட்டங்களில் ஈடுபட்டிருந்த பெரியாரும் மனச் சோர்வுகொள்ளும் வேளை இருந்தது. முதலமைச்சர் அண்ணா, கொடும் நோய்க்கு ஆளாகி, மருத்துவத்திற்காக அமெரிக்கா செல்ல நேர்ந்தது, பெரியாரை பெரிதும் உலுக்கிற்று. அப்போது ஏற்பட்ட மனச் சோர்வை, தன் பிறந்த நாள் மலர்க் கட்டுரையில், 'நான் துறவியாகி

விடுவேனோ என்னவோ' என்று வெளிப்படுத்தினார். இதைக் கண்ணுற்ற அறிஞர் அண்ணா, அமெரிக்காவிலிருந்து கவலையோடு 'தங்கள் பணி, மகத்தான விழிப்புணர்ச்சியை சமுதாயத்தில் கொடுத்திருக்கிறது. புதியதோர் பாதை மக்களுக்குக் கிடைத்திருக்கிறது. நான் அறிந்த வரையில், இத்தனை மகத்தான வெற்றி வேறு எந்த சமூக சீர்திருத்தவாதிக்கும் கிடைத்ததில்லை, அதுவும் நமது நாட்டில். ஆகவே, சலிப்போ, கவலையோ கொள்ளத் தேவையில்லை' என்று எழுதினார்.

பெரியார், சமதர்மக் கொள்கையைப் பரப்பி, வளர்த்து, மக்களின் ஆதரவைப் போதிய அளவு பெற்று, 'எல்லார்க்கும் எல்லாம் இருப்பதான திசை நோக்கி' நம் நாட்டை நடத்திச் செல்லும் பணியில் வெற்றிபெறுவதற்கு முன்பே மறைந்து விட்டார்.

ஈராயிரம் ஆண்டுகளாகத் தூங்கிக் கிடந்த தமிழ் மக்களைத் தட்டியெழுப்பியவர் தன்மான இயக்கத் தந்தை பெரியார் ஈ. வே. ராமசாமி ஆவார்.

அடிமையிலும் இழிவிலும் நெடுங்காலம் ஆழ்ந்து கிடந்ததால், தன்மானமே இன்றி, மரக்கட்டைகளாகக் கிடந்த பார்ப்பனரல்லாதாரை உலுக்கி,

'நீ மனிதன், பகுத்தறிவு பெற்ற மனிதன். ஆகவே பகுத்தறிவுக்கே முதல் இடம் கொடு. கடவுளை மற; மனிதனை நினை. பிறப்பால் உயர்வும் இல்லை; தாழ்வும் இல்லை. ஆணும் பெண்ணும் சமம்; மனைவி, மலிவான வேலைக்காரியல்ல; வெறும் விளையாட்டுப் பொம்மையல்ல; நகைமாட்டியல்ல; வாழ்க்கைத் துணை. உயிருள்ள, உரிமையுள்ள வாழ்க்கைத் துணை. எனவே, இருவரும் தோழமையோடு வாழுங்கள்' என்று அய்ம்பது ஆண்டுகள்போல அம்பதாயிரம் கூட்டங்களிலாவது அறிவு புகட்டிய பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் ஆவார்.

'சமதர்ம வாழ்வே மனித வாழ்வு; முழு வாழ்வு; எல்லோர்க்கும் எல்லாம் கிடைக்கச் செய்யும் வாழ்வு. சமதர்ம முறையின்கீழ் மட்டுமே மனிதன் சமத்துவ வாழ்வு வாழ முடியும்' என்பதை நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக விளக்கி விளக்கி ஒளிவிட்ட சமதர்ம ஞாயிறு, தந்தை பெரியார் ஈ. வே. ராமசாமி ஆவார்.

சிந்தனையிலே, பேச்சிலே, எழுத்திலே, கனல் கக்கி, இரும்பாக இருந்தவர்களை உருக்கி, சிந்திக்க வைத்த பெரியாருக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. அது என்ன? பெரியாரின் தொண்டர்கள் எத்தகையோர்? அவர்கள் எத்தகைய தியாகத்திற்கும் தயங்காத

தற்கொலைப் பட்டாளம். அரை நூற்றாண்டு காலம், சாதி வெறி, அதைத் தாங்கிக்கொண்டு வரும் சமயப் பற்று, மூட நம்பிக்கைகள் ஆகியவை சேர்ந்த காட்டு வெள்ளத்தில் எதிர் நீச்சல் போட்டு வரும் பெரும்படை. தன்னேரிலாத புரட்சிப் படையை நாற்பத்து எட்டு ஆண்டுகள் முழுக் கட்டுப்பாட்டில் நடத்தி வந்த படைத் தலைவர் தந்தை பெரியார் ஆவார்.

பெரியார் அரை நூற்றாண்டு காலம் நடத்திய எண்ணற்ற கிளர்ச்சிகளில், மறியல்களில், போராட்டங்களில், எந்த ஒன்றிலும் பொதுச் சொத்துக்கு சேதம் விளைவித்ததில்லை; தனியார் பொருளுக்கு நட்டம் ஏற்படுத்தியதில்லை.

ஒருமுறை 'கத்தி வைத்துக்கொள்ளுங்கள். நாள் குறிப்பேன்; அப்போது என்ன செய்வதென்று சொல்லுவேன்'. என்றும், மற்றோர் முறை 'தீப்பந்தமும் பெட்ரோலும் ஆயத்தஞ் செய்து கொள்ளுங்கள். நான் நாள் குறித்து, என்ன செய்வதென்று ஆணையிடப்போகிறேன்' என்றும் கட்டளையிட்டார். அப்போதும் வன்முறைக்கு இடங்கொடுக்கவில்லை; முன்னரும் இடம் விடவில்லை; பின்னரும் வழிவிடவில்லை, இவ்வளவு புரட்சிகளைப் பொழிந்துகொண்டிருந்த ஒரு தலைவர், இத்தனை நீண்ட காலம் எவருக்கும் எதற்கும் தீங்கு விளையாதபடி தன்னியக்கத்தவர்களைக் கட்டிக் காத்ததில், பெரியாருக்கு இணை எவருமிலர்.

தந்தை ஈ. வே. ராமசாமி வயதில் அறிவில் பெரியார்; சிந்தனையில் பெரியார்; தொண்டில் பெரியார்; சிறைக்கூடத்தை தவக்கூடமாக இருபத்தோறு முறை கொண்ட பெரியார், சாதனையில் பெரியார்.

### குறிக்கோளை நோக்கி பீடுநடை

தந்தை பெரியார் ஈ. வே. ராமசாமி வங்கத்தில் தொண்டாற்றியிருந்தால், இந்நூற்றாண்டின் கார்ல்மார்க்சாக உருவாக்கி மகிழ்ந்திருப்பார்கள். பீகாரிலோ, உத்திரப்பிரதேசத்திலோ, தொண்டாற்றியிருந்தால், இந்திய லெனினாக்கி, சமதர்மத்தை இதற்குள் நிலைநாட்டி நிமிர்ந்து நிற்பார்கள். போயும் போயும் தமிழ்நாட்டுச் 'சூத்திரர்களுக்கு'ப் பாடுபட்டாரே!

தந்தையை நினைப்போம். தொண்டைத் தொடருவோம். சாதியொழிந்த, வறுமையற்ற, எல்லோரும் வாழும், நன்றாக வாழும், ஒன்றாக வாழும் இந்தியாவை உருவாக்குவோம், மக்கள் இனத்தோடு சமமாகக் கலந்துவிடுவோம்.

சிந்தனையில், செயலில், மக்கள் இனத் தொண்டில், சாதனையில், தனக்கென வாழாமையில், உலகப் பெரியாராக விளங்கிய தந்தை பெரியார் ஈ. வே. ராமசாமியை உன்னுந்தோறும் பகுத்தறிவு விளங்குவதாக; சமத்துவ உணர்வு பொங்குவதாக; சமதர்ம உணர்வு கொப்பளிப்பதாக; தொண்டு உள்ளம் வளர்வதாக; துணிவு பெருகுவதாக; பொது நல உணர்வு சுரப்பதாக; எளிமையும் வாய்மையும் ஒளிர்வதாக.

எல்லோரும் வாழ, நன்றாக வாழ, ஒன்றாக வாழ உழைப்போமாக.

# சொல்அடைவு


அச்சகக் கட்டுப்பாடு சட்டம் 30
அடக்குமுறை 81
அண்ணாதுரை சி. என். 110, 112, 126, 128, 155, 166, 181, 208, 212, 221, 222
அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 166
அந்தோனிராஜ் 93
அபிராம சுந்தரி சரித்திரம் 13
அம்பண்ணா 19, 20
அம்பேத்கார் 56, 150
அம்மாயி (ஈ. வே. ரா. தங்கை மகள்) 132
அமிர்தசரஸ் 30, 31
அய்க்கிய முன்னணி 153
அய்யர், வ.வே. சு 35,59
அய்ன்ஸ்டீன் 194
அய்யாமுத்து, கோவை 87
அய்ரோப்பா 221
அய்ரோப்பியர்கள் 22
அர்ச்சகர் 2, 209
அரசியல் சட்ட எரிப்பு 159
அரசியல் விடுதலை 55
அரசினர் மருத்துவமனை, ஈரோடு 174
அரசு பதவிகளின் பகிர்வு 22
அழகிரிசாமி, பட்டுக்கோட்டை 56, 58, 122, 211
அவரித் தொட்டிகள் 17
அறிவியல் வளர்ச்சி 197
அன்னபூரணி ரத்தினசபாபதி 50
அனுமந்தபுரம் 94
அனைத்திந்திய காங்கிரஸ் 29, 198
அனைத்திந்திய காங்கிரஸ் மாநாடு 31
ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் 206
ஆங்கிலேய அரசு 40, 62
ஆங்கிலேயர் 2, 18
ஆத்தூர் 203
'ஆத்மா' 68, 73
ஆதித்தனார் 162
ஆதி திராவிட மாநாடு 56
ஆதிதிராவிடர்கள் 9, 24, 56, 90, 92, 96, 97, 109, 157, 210
'ஆந்திர பிரகாசினி' (தெலுங்கு இதழ்) 100
ஆழ்வார்கள் 69
ஆர். பி. ஏ. 63
ஆள்தூக்கிச் சட்டம் 30
ஆறுமுகம், நீடாமங்கலம் 156
ஆனந்த விகடன் 199
இங்கர்சால் 48
இட்லர் 125
இந்தி எதிர்ப்புப்போர் 106
இந்தி கட்டாயப் பாடம் 125, 175
இந்திய அரசியல் சட்டம் 152
இந்திய சட்டமன்றம் 137
இந்திய யூனியன் கொடி 127
இந்திய லெனின் 213
'இந்து' நாளிதழ் 19
இந்து அறநிலைய பாதுகாப்புச் சட்டம் 43
இந்து முஸ்லிம் ஒற்றுமை 41
இந்து'லா' 52
இர்வின் பிரபு 149
இரட்டை ஆட்சி 43, 100, 102
இரண்டாவது உலகப்போர் 64
இரஷ்யா 83
இரஸ்ஸல், பெட்ரண்ட் 48,194
இராகவன் 217
இராகுகால திருமணங்கள் 208
இராசகோபாலாச்சாரியார் 41, 82, 106, 108, 118, 120, 125, 153, 161, 176, 188, 193
இராமச்சந்திரன் எம். ஜி. 217
இராமசாமி, ஓமந்தூர் 217
இராமசாமி முதலியார், ஆர். 24, 56, 64
இராமநாதபுரம் 92
இராமநாதன், எஸ். 147, 208
இராமலிங்கம் செட்டியார், டி. ஏ. 97
இராமன் பட எரிப்பு 161
இராமாமிர்தத்தம்மையார் 122
இராமாயண ஆராய்ச்சி 87
இராஜநிந்தனை வழக்கு 81
இருகூர் 54
இரும்பு மனிதர் 29
இலட்சுமணசாமி, டாக்டர் 173
இலண்டன் மாநகரம் 73
இலவசக் கல்வி 119, 212
இலவசப் பகல் உணவு 157
இளைஞர் பகுத்தறிவுப்பயிற்சிப்பாசறை 51
ஈப்போ 143
ஈரோடு 1, 15, 28, 33, 43, 47, 67, 77, 82, 92, 115, 133
ஈரோட்டுப் பெருவணிகர் 32
ஈழவப் பெண்கள் 11
ஈஜிப்ட் 147
உண்மை விளக்கம் அச்சகம் 82
உத்தமபாளையம் 90
உத்திரப் பிரதேசம் 223
உமாமகேசுவரம் பிள்ளை 59
உயர் கல்வி 213

உரிமைப் போர் 31
உலகப்போர் 108
எழுத்துச் சீர்திருத்தம் 215
ஒத்துழையாமை இயக்கம் 33,42
ஒப்பந்தக் கூலிகள் 91
ஒடையர் 30
கஞ்சித்தொட்டிகள் 17
கட்டாய இந்தி எதிர்ப்பு 106
கட்டாய இலவசக் கல்வி 43
கடலூர் 57, 83
'கடவுள் வாழ்த்து' 192
கண்ணப்பர், தோழர் (திராவிடன் ஆசிரியர்) 202
கண்ணம்மாள் (ஈ. வே. ரா. தங்கை) 34, 142
கதர் 32
கம்பராமாயணம் 41, 69, 162
கமால் பாட்சா, துருக்கி 95
கமுதி 9
கருணாநிதி, கலைஞர் 212
'கருப்புச் சட்டைத் தொண்டர் படை' 115
கல்கத்தா 21
கல்பாத்தி 95
கல்லூரிக் கல்வி 213
கலப்புத் திருமணங்கள் 208
கல்யாண சுந்தரனார் திரு. வி. 31, 35, 38, 42, 122, 189, 190
கலப்புத் திருமணம் 50
கலையில் தீண்டாமை 57
கள்ளக்குறிச்சி 46
கள்ளுக்கடை மறியல் 33, 34, 142
கன்னிகா தானம் 142
காகா காலேல்கர் 153
காங்கிரசு 28, 40, 41, 86, 93, 127
காங்கிரசு ஆட்சி 83
காஞ்சிபுரம் 121
காந்தம்மாள் 167
காந்தியார் 28, 30, 34, 35, 38, 42, 59, 60, 62, 70, 146, 149, 196
காமராசர், கு. 38, 127, 177, 197, 212, 213
கார்ப்பரல் ஆஷ்போர்டு 19
கார்வாத் 148
கானாடு காத்தான் 57
காஷ்மீர் 11
கிரி. வி. வி 194
கிரிப்ஸ், ஸ்டாபோர்ட் 112
கிரீஸ் 147
கிருஷ்ணசாமி, ஈ. வே. 81
கிருஷ்ணசாமி அய்யர், டி. ஆர். 36
கிருஷ்ணமூர்த்தி அய்யர் பண்ணை 94
கிருஷ்ணமூர்த்தி, கல்கி 199, 217
கிறுத்துவத் திருச்சபை 10
கிறுத்துவ ஆதி திராவிடர்கள் 92
'கிறுத்துவ மதத்தில் தீண்டாமை, 93
கிறுத்துவர் 90, 92, 101
'கீழ்ச்சாதி' 46
குஞ்சிதம் குருசாமி 50, 56
'குடி அரசு' (வார இதழ்) 42, 50, 55, 69, 80, 85, 86, 88, 90, 92, 93, 94, 95, 217
குடும்பக் கட்டுப்பாடு 219
குண்டக்கல் 19
குமாரசாமி, அய். இராவ் சாகிப் 122
குமாரசாமி சாஸ்திரி 30
குமாரசாமி ரெட்டியார், எஸ். 208
குர்ஆன் 71
குருகுலப் போராட்டம் 35
குருசாமி (குத்தூசி), 50, 56, 87, 126, 161, 162, 166, 170, 216, 217
குலக்கல்வித் திட்டம் 154
குழந்தை மணம் 130
குழந்தை விதவை 131
கேசவப்பிள்ளை, குத்தி, 20, 40
கேரளம் 37
கைவல்ய சாமியார் 87, 97
கொங்கு நாடு 4
கொச்சி 36
கொட்டாங் குச்சி 210
கோயில் நுழைவு 209
கோயில் பாதுகாப்பு குழு 28
கோர், டாக்டர் 137
கோவிந்தராசர், தி. 182
கோவிந்தன், எம். 38
கோவை 43, 81
கோவை மாவட்டம் 28
கௌச்மேன், எம். ஈ. 20
சகுனத் தடை 8
சங்கரன் நாயர், சர். 34
சங்கராச்சாரியார் 89,90,161
சட்ட மன்றம் 210
சண்முகம், ஆர். கே. 54,63
சண்முகம், வை. சு. 58
சத்தியாக்கிரகம் 36
'சத்துரு சங்கார' யாகம் 38
சதாசிவ அய்யர், டி. 102
சந்திரசேகர பாவலர் 87
சப்தரிஷி ரெட்டியார் 56
சம்பந்தம், நா. ச. 182
சமதர்ம ஆட்சி 74,78
சமதர்மம் 76
சமபந்தி 35,55
சமய நம்பிக்கை 97
சமுதாய இழிவு 163
சமுதாயச் சூழல் 1
சமூக இழிவு ஒழிப்புப் பணி 108
சற்குருதாஸ், டாக்டர் 187,188
சாங்கே ஷேக் 196
சாட்டர்டன் 18

சாண்டர்ஸ் 75
சாணிப்பால் 94
சாதி இந்துக்கள் 9
சாதி ஒழிப்பு 39,158
சாதிப் படித்துறைகள் 60
சாதிப் பாகுபாடு 3
சாமி இல்லை 53
சாமி சிதம்பரனார் 87,143
சிக்கைய்யா, ஈரோடு 173
சிக்கைய்யா கல்லூரி, ஈரோடு 174,192
சிங்கா நல்லூர் 54
சிங்கப்பூர் 144,145
சிங்காரவேலர், மா. 80
சிதம்பர நாதன், டி. கே. 165
சிதம்பரம் 133,200
சிதம்பரம், வ. உ. 31
சிம்காணா மண்டபம் 18
சிலை எடுப்பு 52
சிலை திருட்டுகள் 219
சிலோன் 176
சிவஞானம், தி. ந. 102
சிவக்கொழுந்து, மதுரை 57,58,59,211
சிவகாமி சிதம்பரனார் 50
சிவகாசி 10
சிவராஜ், என். 39,56
சின்னத்தாயம்மாள் 1
சின்னையா, கார்குடி 59
சீர்திருத்த மாநாடு 66
சீலையம்பட்டு 90
சீனிவாச அய்யங்கார், எஸ். 41,59,60
சீனிவாசன், இரட்டைமலை 56
சீனா 94
சுகதேவ் 75
சுதந்திரம் 70
சுந்தர வடிவேலு 181
சுந்தரி அழகப்பா 50
சுப்பராயலு ரெட்டியார், ஏ. 101
சுப்பராயன், டாக்டர் 45,104,156
சுப்பிரமணியம், சி. 156,167,191,192
சுப்பையா, சி. பி., கோவை 212
சுயமரியாதை 70
சுயமரியாதை இயக்கம் 39,71,83,84
சுயமரியாதை இளைஞர் மாநாடு 50
சுயமரியாதை சமதர்மத் திட்டம் 82,105
சுயமரியாதை மாநாடு 47,61,72
சூத்திரப் பட்டம் 12,160
சூத்திரர் 5,7,15,52,93,177,186
செங்கற்பட்டு 46,49,134
செங்கற்பட்டு சுயமரியாதை மாநாடு 50
செல்லதுரை, எம். 90
சென்னை 94,99,110,123
சென்னை இந்து விநோத சாலை 13
சென்னை உயர்நீதி மன்றம் 151
சென்னை சட்டமன்றம் 39,128
சென்னைப் பல்கலைக் கழகம் 128,181
சென்னை மாகாண சங்கம் 40
சென்னை மாநகராட்சி 43
சென்னை மாநில அரசு 152
சென்னை மாநிலக் கல்லூரி 18
சேதுரத்தினம், எம். ஆர். 104
சேரன் மஹாதேவி குருகுல போராட்டம் 58
சேலம் 41,110,113,203
சையத் தாஜுதின் 59
சொத்துரிமை 134, 218
சோமசுந்தரம் ஜே. பி. 56
சோவியத் நாடு 147,185
சோழ நாடு 4
சௌந்தரபாண்டியன், டபள்யு.பி.ஏ. 56, 92
ஞானியார் சுவாமிகள் 86
டாங்கே, எஸ். ஏ. 68
டார்வின் 48
டிரெவிலியன் சார்லஸ், 11
தங்கம்மா, திருமதி 168
தங்கக் கிண்ணம் 69
தஞ்சை 41,89,168
தடை உத்தரவு 33,144
தண்டபாணி, என். 30
தமிழ் அச்சு 218
தமிழ் இசை விழா 211
தமிழ் எழுத்து சீர்திருத்தம் 217
தமிழ்நாடு காங்கிரஸ் 36, 38,198
தமிழ்நாடு தமிழருக்கே 107,122
தமிழ் மொழியின் சிறப்பு 215
தமிழகப் புலவர்க் குழு 217
தமிழர் மாநாடு 216
தமிழன்பர் மாநாடு 217
தன்மான இயக்கம் 44, 49, 134, 166
தன்னாட்சி உரிமை 21,40
தனித் தொகுதி 62,109,165
தாழ்த்தப்பட்டோர் 12, 24, 56,152
தாரமங்கலம் 191
தாலமுத்து 121,124
திட்டக் குழு 196
தியாகம் 33
தியாகராசன், ஏ. வி. 58
தியாகராய செட்டியார் 24,99,100
திராவிடக் கழகக் கொடி 114
திராவிட நாடு 111, 198
திராவிடநாடு திராவிடருக்கே 107
திராவிடர் கழகம் 99,110,113
'திராவிடன்' நாளிதழ் 88,99,208
திருக்குறள் 7,84
திருக்கோயிலூர் 46
திருச்சி 36,51,111,113,122,152, 160,172
திருச்சி தேசிய உயர்நிலைப் பள்ளி 108
திருச்செங்கோடு 32
திருநெல்வேலி 40,166,208
திருப்பூர் 41

திருமண வயது 218
திருமலைசாமி, ரே. 122
தி. மு. க. ஆட்சி 128
திருவண்ணாமலை 41
திருவல்லிக்கேணி 166
திருவனந்தபுரம் 12
திருவாரூர் 109
திருவிதாங்கூர் 10,37,95
'தீண்டத்தகாதவர்' 46
தீண்டாமை 13,35,46
தீண்டாமை ஒழிப்பு 39,49,61,76,88
துருக்கி 147
துறையூர் 216
தூத்துக்குடி 115
தென்னாப்பிரிக்கா 28,91,94
'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' 99,110
தேசப் பட எரிப்பு 161
தேசியக் கொடி 126
தேவதாசி 135,137
தேவராசன், எம். 93
தொழிற் கல்வி 213
'நகர தூதன்' வார இதழ் 122
நகராட்சித் தலைவர் 29,133
நடராசன் 121, 124
நடராசன், சி. 143
நடேசன், ஆர்., சேலம் 217
நடேசனார், சி., டாக்டர் 24,99
நம்பூதிரி 9,95
நர்சரி பள்ளிகள் 195
'நவசக்தி' 122
நாகம்மையார் 34,142,143
நாகர்கோவில் 10,11
நாகை காளியப்பன் 143
நாத்திகவாதம் 48
நாயர், டி. எம்., டாக்டர் 24,41,99
நாயன்மார்கள் 69
நாயனக்கலை 57
நாயுடு, ஜி. டி. 52
நாராயண நம்பூதிரிபாத் 95
நிறவெறி 18
நீடாமங்கலம் 93
நீதிக் கட்சி 24,40,43,44,59,98,99, 102,103,106,108,117
நீதிக் கட்சி அமைச்சரவை 105
நீதிக் கட்சி மாநாடு 82
நீலகண்ட நம்பூதிரிபாத் 36,37,38
நீலகிரி 19
நீலாவதி ராமசுப்பிரமணியம் 50
நெடுஞ்செழியன், டாக்டர் 217
நெல்லூர் 24
நெ. து. சுந்தரவடிவேலு, 'பகுத்தறிவுப் பரிசு' 176
பக்தவத்சலம், மீ. 173,178,211
பகத்சிங் 75,76,198
பகல் உணவு 213
பகுத்தறிவு 68,82,217
பகுத்தறிவுப் பல்கலைக் கழகம் 220
பஞ்சாப் 66
பத்தடிக்கு அப்பால் 9
பதிவுத் திருமணங்கள் 209
பர்மா 150,176
பரசுராம பாத்ரோ 101,103
பரஞ்சோதி 160
பரிந்துரை 169,170,171
பல்லவ நாடு 4
பன்னீர்செல்வம், சர். 59,106,169
பாக்கிஸ்தான் 109,178
பாதுகாப்புக் குழுக்கள் 28
பார்ப்பனர் 2,7,22,41,54,59,64,94, 116,210
பார்ப்பனரல்லாத இந்துக்கள் 22,23
பார்ப்பனரல்லாதார் 12,14,40,41,44, 59,60,94,101,103,105,116
பார்ஸ்டன் 146
பாரத ஆட்சி 87
பாரதிதாசன் 68,80,141
பாரதியார் 4
பாலசுந்தரம் 122
பாலசுப்பிரமணியம், கே. எம். 217
பிராங்கிளேடன், ஐ. சி. எஸ். 20
பிராமணாள் மாத்திரம் 93
பிரான்ஸ் 125,147
பிரிட்டன்,125
பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் இயக்கத்தவர் 78
பிரிட்டிஷ் பேரரசு 21
பிரேமையா, ஜி. ஆர். 93
பினாங்கு 144
பிஜி (தீவுகள்) 91
பீகார் 57,223
புத்தமதம் 150
புத்தர் விழா 159
'புரட்சி' (வார இதழ்) 81,206,217
புரோகிதமற்ற திருமணங்கள் 208
பூசாரி 16,47
பூ. எப். சி. எம். உயர்நிலைப் பள்ளி 13
பூணூல் 8,96
பெசன்ட் அம்மையார் 165
பெண் கல்வி 141
பெண்களுக்கு அநீதி 10
பெண் விடுதலை 39
பெர்னார்ட்ஷா 165,194
பெரிய தம்பி, என். 91
பெரிய புராண ஆராய்ச்சி 87
பெரியார்: பார்க்க: ராமசாமி, ஈ.வே.
பெரியாரின் போர்வாள் 86
பைபிள் 71
பொட்டு கட்டுதல் 136
பொது மகளிர் 136
பொது உடைமை 76

பொதுத் தேர்தல் 43
பொருளாதார நிலை 15
பொன்னம்பலம், பூவாளூர் 56,143, 168,169,217
பொன்னுசாமி, பல்லடம் 121
பொன்னுத்தாய் (ஈ. வே. ரா. தங்கை) 132
போர்ச்சுகல் 147
மக்கள் இனப்பெருக்கம் 197
மஞ்சுளாபாய், வை. சு. 50
மண விலக்கு 134
மதம் 10,48,49,114
மதுரை 10
மதுரை சோமு 211
மதுரைப் பல்கலைக் கழகம் 174
மதுவிலக்கு 33
மதுவிலக்குப் போராட்டம் 34
மயிலாப்பூர் 190
மரகதவல்லி முருகப்பா 50
மருத்துவக் கல்லூரிகள் 116
மருத்துவ மனை, திருச்சி 174
மலேயா 91,142,143
மலையாள நாடு 70
மறைமலையடிகளார் 87,88
மன்னார்குடி 202
மனுதர்ம சாஸ்திரம் 41
மாகாண காங்கிரசு மாநாடு 40
மாகாண சட்ட மன்றம் 43
மாணிக்ஜி தாதாபாய் 137
மாத்யூஸ், பெசில் 206
மாரிஸ், வில்லியம் 206
மிஸ் மேயோ 146
மீரத் கம்யூனிஸ்ட் சதி வழக்கு 79
மீனாம்பாள் சிவராஜ் 56
மீனாட்சிசுந்தரனார் தெ.பொ. டாக்டர் 217
முத்துலட்சுமி, டாக்டர் 137, 138
முத்துவேலு 90
முத்தையா, எம்.ஏ. டாக்டர் 180
முத்தையா, எஸ் 104
முதல் கலப்புத்திருமணம் 50
முதல் சுயமரியாதை மாநாடு 44,45
முதியோர் கல்வி 195
முதோல்கர் 137
முரளீஸ் கபே 65
முருகேச பாகவதர், மதுரகவி 56
முஸ்லீம்லீக் 108
மேட்கித் 137
'மை லார்ட்' [My Lord] 210
மொய்தீன், திருப்பூர் 122
மோதிலால் நேரு 31, 127
'யூம்' 21
ரங்கசாமி அய்யர் 93
ராகவன், சாத்தான் குளம் 87
ராசன், பி.டி. 45,56
ராமச்சந்திரன், சிவகங்கை 56

ராமசாமி, ஈ.வெ.
பிறப்பு 1
மாணவன் 25
பள்ளிக்கூடத்தில் பாகுபாடு 27
பொது வாழ்வு 28
காந்தியால் ஈர்க்கப்பட்ட இரும்பு மனிதர் 29
ரௌலட் சட்டம் எதிர்ப்பு 30
ஒத்துழையாமை இயக்கம் 31
மது விலக்கு 33
குருகுலப் போராட்டம் 35
வைக்கம் போர் 36
இராமாயணம், மனுதர்ம சாஸ்திரம் எதிர்ப்பு 41
நீதிக் கட்சிக்கு ஆதரவு 44
தீண்டாமை ஒழிப்பு 49
கலப்புத் திருமணம் 50
கடவுள் மறுப்பு 51
கலையில் தீண்டாமை 58
தாழ்த்தப்பட்டோர் மாநாடு 61
வகுப்பு பேதத்தை ஒழிக்க மறியல் 65
சமதர்ம இயக்கம் 73
நீதிக் கட்சியின் தலைமை 106
திராவிட நாடு பிரிவினை 112
இந்தி எதிர்ப்பு—சிறைவாசம் 122
'கிழச் சிங்கம்'—நவசக்தி 123
கொடி எரிப்பைக் கைவிடல் 128
குழந்தை விதவை மறு திருமணம் செய்துவைத்தல் 132
தேவதாசி ஒழிப்பு 137
அயல் நாட்டுப் பயணம் 143
மிஸ்மேயோ புத்தகம்பற்றி 146
அய்ரோப்பிய நாடுகள் பயணம் 147
பர்மாவில் 150
குலக் கல்வித் திட்டம் எதிர்ப்பு 155
சட்ட எரிப்புப் போர் 159
இராமாயணப் பட எரிப்பு 161
மறைவு 164
'பெரியார்' பட்டம் 166
கல்லூரிக்கு நன்கொடை 172
முதலமைச்சருக்கு மரியாதை 179
இந்திய அரசுக்கு ஆதரவு 185
திரு.வி. க. வுடன் ஈ.வே.ரா. 190
குடியரசுத் தலைவருக்கு மரியாதை 194
விஞ்ஞானப் போக்கின் மதிப்பீடு 197
பொதுப் பதவிகள் 198
நேரம் காத்தல் 203
ஆக்ஸ்போர்டு அறிஞர் பாராட்டு 206
யாவர்க்கும் அர்ச்சகர் தொழில் 210
தமிழ் மொழி ஆய்வு 215
பெரியார்பற்றி அண்ணா 221

ராமசாமி, எஸ்.வி. 191
ராமசாமி, ஓமந்தூர் 35,217
ராமசாமி அய்யர், சி.பி. 109
ராமராய நிங்காரு, ராஜா, (பனகல் அரசர்) 101,102,206
ராமு, ஈரோடு 147
ராமையா, வழுவூர் 211
ராய், பி.சி. 94
ரானடே மண்டபம் 94
ராஜகுரு 75
ரூசோ 49,94,221
ரெட்டி கே.வி. 101,102,207
ரௌலட் சட்டம் 30
லான்ஸ்பரி 147,148
லிங்கம், எஸ்.வி. 169
'லிட்டரரி கைய்ட்' 63
வகுப்புரிமை 40,151
வகுப்புவாரி பிரதிநிதித்துவம் 40,109
வர்ணாசிரமம் 77
வரதராசனார், மு. டாக்டர் 217
வரதராசுலு டாக்டர் 35,58,59
வரலாற்றின் திருப்புமுனை 104
வால்டேர் 49,94,221
விக்டோரியா மகாராணியார் 11
விக்டோரியா மாணவர் விடுதி 15
விசுவநாதம், கி. ஆ. பெ. 56
விடயபுரம் 51
'விடுதலை' 50,85,175,195,227
'விடுதலை வரலாறு' 220
வியாசர்பாடி சமதர்ம இளைஞர் கழகம் 93
விருதுநகர் 49,63,77,135
விருதுநகர் சுயமரியாதை மாநாடு 49
விருந்தோம்பல் 172
விழுப்புரம் 57
விஜயராகவாச்சாரியார், சேலம் 33
வீராசாமி, வீ. 56
வீருசாமி 211
வேங்கடப்பர் 1,25
வேதம் 52
வேதாசலம் டி.பி. 56
வேலூர் 51,83
வைக்கம் 36,38,39,186
வைக்கம் போர் 35,142
'வைக்கம் வீரர்' 38
ஸ்ரீமாலி, டாக்டர் 191
ஸ்ரீ லெட்சுமி விலாச நாடக சபை 13
ஜவஹர்லால் நேரு, பண்டித 70,127
ஜனதா கட்சி 153
ஜஸ்டிஸ் கட்சி 110
ஜார் அரசாங்கம் 74
ஜார்ஜ் ஜோசப் 36
ஜாலியன் வாலாபாக் 30
ஜின்னா முகமதலி 108,109
ஜெயகர், எம்.ஆர். 47,135
ஜெயப்பிரகாச நாராயண் 82
ஜெர்மனி 147
ஜேக்சன் ஜி.எச்.பி. 20
ஜோதிர்மாயி கங்குலி 66
ஸ்டாலின் ஜகதீசன் 121
ஸ்டேதம் 155
ஸ்பெயின் 147